216 625

# தமிழ்நாடு

## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு.

மார்ச் 31, 1997 தொகுதி 26
எண் 2.

J
V 211, 31 N97
N97.26.2
? R25

வெளியீடு 13-5-98 Issued 13-5-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 31, 1997 - தொகுதி 26- எண் 2

Monday the 31st March, 1997 - Volume 26 - No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...tive Assembly Secretariat, Fort St. George,

Chennai-600 009

[Price Rs. 3.00

1363

98

31-3-1997

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 337-375 |
| (ஆ) குறுகிய கால வினா | 375-376 |
| 2. அனுமதி மறுத்த பொருள் பற்றி அவையில் எழுப்ப முற்படுதல். | 376,378 |
| 3. சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| ஈரோட்டில் டி.டி.எஸ். என்ற தனியார் துறை பேருந்து நிறுவனத்தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தமும், அதனால் ஏற்பட்ட பாதிப்பும். | 376,378-387 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| கோவை மாநகர் வார்ப்பட சாலைகளை உயர் நீதிமன்றத் தீர்ப்பினடிப்படையில் மூட வேண்டியுள்ளமை. | 387-392 |
| 5. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள் நிருவாகம். | 392-483 |
| (ஆ) கோரிக்கை எண் 6—ஆவணப் பதிவு | |
| (இ) கோரிக்கை எண் 47—ஊரகத் தொழில்கள் | |
| (ஈ) கோரிக்கை எண் 60—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | |

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

| | |
|---|---|
| *மாண்புமிகு திரு. இ. பெரியசாமி | 393, 395, 398, 400, 402, 407, 459-478 |
| *திரு. என். ஆர். அழகராஜா | 402-410 |
| திரு. கு. மனோகரன் | 410-415 |
| திரு. ந. பூ. இராமஜெயம் | 415-419 |
| *திரு. பி. என். வல்லரசு | 419-424 |
| திரு. வ. அன்பழகன் | 424-432 |
| திரு. ஏ. எம். ராமசாமி | 432-433 |
| திரு. ஆர். ஆர். சேகரன் | 434-438 |
| திரு. குழந்தை. தமிழரசன் | 438-444 |
| திரு. ஜி. கே. மணி | 444-449 |
| *திரு. நா. பெரியசாமி | 449-454 |
| திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் | 454-459 |

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 484



ஆவணக் காப்பக நூலகம் 216825 சென்னை-600 008

Y21,S'1097 1997.26.2


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 18, தாது - திருவள்ளுவர் ஆண்டு 2028**

**1997 மார்ச் 31, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்."

தாமே தொழில் செய்து ஊதியம் பெற்று உண்ணும் இயல்புடையவர், பிறரிடம் சென்று கையேந்த மாட்டார். தம்மிடம் வேண்டி நின்றவர்க்கும் ஒளிக்காமல் வழங்குவார்.

### 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள்

வினா எண்கள் 361 மற்றும் 362 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். வினா எண் 363, திரு. மீ. அ. வைதியலிங்கம். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**363—**

**சமையல் கலைஞர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை**

***6090—திரு. மீ. அ. வைதியலிங்கம் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவியற் கல்லூரிகளில் பயிற்சி பெற சமையல் கலைஞர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வாழ்வில் மிகவும் நலிந்திருக்கின்ற சமையல் கலைஞர்கள், தங்களுடைய எதிர்காலச் சந்ததியினராவது அதனை மிகச் சிறந்த முறையிலே பயில வேண்டும் என்று விரும்புவதால், அவர்களுக்கு ஏதாவது சதவீத அடிப்படையிலாவது இடங்களை ஒதுக்கித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமையற் கலைக் கல்லூரிகள் இரண்டு இப்போது நடைபெற்று வருகின்றன. அந்த இரண்டும், மத்திய அரசும் மாநில அரசுமாக இணைந்து, மத்திய மாநில அரசு அலுவலர்கள் பொறுப்பேற்று நடத்தப்படுவனவாகும். இவற்றிலே இதற்கான நுழைவுத் தேர்வுகள் நடத்தப்பட்டு, நுழைவுத் தேர்வுக்குப் பின்னர் அவர்களுக்கு நேர்முகத் தேர்காணல் நடைபெற்று, அந்த அடிப்படையிலேயும், மதிப்பெண் அடிப்படையிலேயும், இனச் சுழற்சி முறையிலேயும், மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். அதிலே, சமையற் கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை; செய்வதற்கு வாய்ப்பும் இல்லை.

**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நம்முடைய அரசு முதன்முதலில் பட்டதாரியாகின்றவர்களுக்கு மதிப்பெண்களிலே சலுகை வழங்குவதைப் போல, இவற்றிலும் குறைந்தபட்சம் 5 மதிப்பெண் சேர்த்து, அவர்களுக்குச் சலுகை வழங்க முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்தினை உருவாக்கினாலும் கூட, மத்திய அரசு அலுவலர்கள் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அவர்களுடைய விதிமுறை இடம் தரவேண்டும். இரண்டாவது, பழைய சமையலுக்கும், புது சமையலுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 364. திரு. இ. ஏ. பி. சிவாஜி. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**364—**

**கலைக் கல்லூரியில் அறிவியல் துறைகள் ஏற்படுத்துதல்**

***6640—திரு. இ. ஏ. பி. சிவாஜி :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அரசினர் கலைக் கல்லூரியில் புதிய அறிவியல் துறைகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. இ. ஏ. பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அரசினர் கலைக் கல்லூரி தொடங்கி கால் நூற்றாண்டுக் காலம் ஆகியும், அந்தக் கல்லூரிக்குச் சொந்தமாக 40 ஏக்கர் நிலம் இருந்தும் அங்கே இளங்கலைப் பட்டப் படிப்பிற்கான அறிவியல் வகுப்புகளோ, முதுகலைப் பட்டப் படிப்பிற்கான வாய்ப்போ இல்லை. எனவே, அருள்கூர்ந்து, இந்த அரசு அதற்கு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள முதல்வர், அவற்றினுடைய தேவையை விளக்கி, அதற்கான புதிய செலவு என்ற அடிப்படையில், செலவுக்கு

அவசியமில்லையென்பதையும் எடுத்துக் காட்டுவாரேயானால், அவை ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு மேலும் நிதி தேவையெனில் அரசு அவ்வப்போதுள்ள நிதிநிலைமைக்கு ஏற்ப அதைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

**டாக்டர் இ. எஸ். எஸ் இராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பதியிலுள்ள வெங்கடேஸ்வரா தேவஸ்தானத்திலே, அவர்கள் செலவிடுகின்ற தொகையிலே, ஒரு கணிசமான தொகையை கல்விக்குப் பயன்படுத்துகிறார்கள் குறிப்பாக எஸ்.வி. யுனிவர்சிட்டி என்பது, திருப்பதிக்குப் பெருமையினைத் தரக்கூடிய ஒரு பல்கலைக்கழகமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. தமிழ்நாட்டில் இருக்கின்ற அறு திருக்கோயில்களிலே உண்டியல் வசூலிலே மூன்றாவது இடத்தினை வகிக்கின்ற திருத்தணி கோவிலின் வருமானத்திலிருந்து, இந்த அறிவியல் பாடங்களை அங்கே ஏற்படுத்துவதற்கான செலவினத்தை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறங்காவலர் குழுவே சில கல்லூரிகளை நடத்தி வருகின்றது. இதுகுறித்து அறங்காவலர் குழு அப்படிப்பட்ட ஆலோசனையைத் தருமேயானால், அதை ஏற்றுக்கொள்ள கல்வித் துறை முன்வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 365, திரு. ஆர். தமிழ்ச்செல்வன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**365—**

### இரவு நேரங்களில் மருத்துவர் தங்கி பணிபுரிதல்

***3140—திரு ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

கிராமப்புறங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரவு நேரங்களில் ஒரு மருத்துவர் தங்கி, பணிபுரிய அரசு நடவடிக்கை எடுக்குமா ?



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். 24 மணி நேரமும் பிரதான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படவேண்டுமென அரசு ஆணை எண் (டி) 745, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை, நாள் 27-6-1996 மற்றும் அரசு ஆணை (நிலை) எண் 400, நாள் 23-8-1996-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி 24 மணி நேரமும் ஆரம்ப சுகாதார நிலையம் தொடர்ந்து செயல்பட மருத்துவ அலுவலர்கள் சுழல் முறையில் பணிபுரிய வேண்டுமென திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது 124 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

முற்பகல் 9-35

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல ஆரம்ப சுகாதார நிலையங்களில் பகல் நேரங்களிலேயே மருத்துவர்களும், செவிலியர்களும் சரிவர வருவதில்லை. உதாரணமாக, என்னுடைய அரக்கோணம் தொகுதியிலே காவனூர் என்கிற இடத்தில் உள்ள மருத்துவமனை கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பூட்டி வைக்கப்பட்டுள்ளது. மருத்துவர் இரண்டு மாதத்திற்கு ஒரு முறைதான் வருகிறார். அதேபோன்று, புளியமங்கலம் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செவிலியர்கள் மூன்று வாரங்களுக்கு ஒருமுறை, அல்லது நான்கு வாரங்களுக்கு ஒருமுறை தான் வருகிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகள் பகல் நேரங்களிலே இருப்பதால், இரவு நேரங்களில் செயல்படுகின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் சரிவர வருகிறார்களா என்பதைக் கண்காணிக்க கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்படுமா, 24 மணி நேரமும் அவசர சிகிச்சைப் பிரிவு செயல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கும் என்பது தமிழ்நாட்டில் உள்ள 1,419 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அல்ல. 385 ஆரம்ப சுகாதார நிலையங்களிலே இப்படிப்பட்ட வசதிகளைச் செய்யலாம் என்று முடிவு எடுத்து, முதலிலே 124 இடங்களிலே அப்படி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எந்தவொரு மருத்துவமனையிலாவது மருத்துவர்களோ, செவிலியர்களோ இல்லையென்றால், அது என்னுடைய கவனத்திற்குக் கொண்டு

வரப்பட்டால் உடனடியாக அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அந்தந்தத் தொகுதியிலே உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், வட்டார மருத்துவ மனைகளுக்கும் ஆலோசனைக் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்படுகிற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. கோபால்

**திரு. பா. கோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஒன்றியத் தலைநகரங்களான கொளத்தூர் மற்றும் நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றியத்தினுடைய தலைநகரங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிச்சயமாக 24 மணி நேர மருத்துவமனைகளாக மாற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ. தமிழ்மணி

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேரமும் செயல்படக் கூடிய வகையில் நான்கு டாக்டர்களை நியமித்து, 8 மணி நேரம் அவர்கள் சுழற்சி முறையில் பணியாற்றக் கூடிய வகையில் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். ஆனால், பெரும்பான்மையான மருத்துவமனைகளில் டாக்டர்கள் வெளியிலிருந்து பணிக்கு வருவதாலும், மேலும் அவர்கள் விடுப்பு எடுத்துக்கொண்டு சென்று விடுவதாலும், அவைகள் 24 மணி நேரமும் இயங்குவது கிடையாது. எனவே, அதற்காக, டாக்டர் ஒருவரைக் கூடுதலாக நியமித்து, சுழற்சி முறையில் அந்த மருத்துவமனைகள் இயங்கி, அங்கே 24 மணி நேரமும் டாக்டர்கள் இருப்பதற்குத் தக்கவாறு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் இப்போது 4 டாக்டர்கள் நியமிக்கப்பட்டு 8 மணி நேரம் சுழற்சி முறையிலே ஒரு டாக்டர் இருக்கவேண்டும் என்றும், அந்த 3 டாக்டர்களில் யாராவது ஒருவர் ஓய்வு எடுத்துக்கொண்டால் அல்லது விடுப்பில் சென்றால், அந்த



இடத்திலே நான்காவதாக உள்ள டாக்டர் பணியாற்ற வேண்டும் என்றும் அரசு முடிவு எடுத்திருக்கிறது. ஐந்தாவது டாக்டர் ஒருவரை நியமிக்க அரசு பரிசீலனை செய்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்

**திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டினம் தலைநகரத்திலே 24 மணி நேரமும் இயங்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று இருக்கிறது. அங்கே மருத்துவர்கள் தங்கி மருத்துவம் பார்ப்பதற்கான வசதி வாய்ப்புகள் இல்லை. ஆகவே, மருத்துவர்கள் அங்கு தங்குவதற்காகத் தனியாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக, தமிழ்நாட்டில் உள்ள எல்லா மருத்துவ மனைகளுக்கும் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பணி முடிந்தவுடன், அடுத்த கட்டமாக டாக்டர்கள் குடியிருப்பு கட்டுவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் 124 இடங்களில் மட்டும் தற்போது ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்கும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படி 24 மணி நேரமும் இயங்கக்கூடிய 124 ஆரம்ப சுகாதார நிலையங்கள் எவையெவை என்றும், 24 மணி நேரமும் அவை வேலை செய்யும் என்கிற வகையில் ஒரு போர்டை அந்த இடங்களிலே டிஸ்ப்ளே பண்ணுவதற்கும் அரசு ஆவன செய்யுமா? இல்லையென்று சொன்னால், இருக்கக்கூடிய அத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களையும் 24 மணி நேர மருத்துவமனைகளாக ஆக்கிவிட்டு, இப்போது வேலையில்லாமல் இருக்கக்கூடிய மருத்துவர்களை கான்டிராக்ட் முறையிலே மருத்துவர்களாக நியமித்து, நீங்கள் முழுமையாக எப்போது ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிக்கப் போகிறீர்களோ அதுவரையில் கான்டிராக்ட் முறையிலே மருத்துவர்களாக அவர்களை நியமித்து 24 மணி நேரமும் எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களும் பணியாற்றக்கூடிய ஒரு நிலையை உருவாக்கித் தர அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[1997 மார்ச் 31

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு. நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 1,419 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் 24 மணி நேரமும் இயங்கும் நிலையங்களாக மாற்றுவதற்குக் குறைந்தபட்சம் இன்னும் 1,000 கோடி ரூபாய் இந்த மருத்துவத் துறைக்கு வேண்டும். ஆகவேதான், ஒவ்வொரு ஒன்றியத்தினுடைய தலைநகரத்திலுள்ள 385 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். தற்போது 124 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் செயல்படுகின்றன. இந்த ஆண்டு மேலும் 250 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 24 மணி நேரமும் செயல்பட நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆகவே தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேரமும் பணியாற்றக்கூடிய திட்டம் கொண்டு வர இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. சு. திருவேங்கடம்

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ அதிகாரிகளை நியமனம் செய்தாலும், பெரும்பாலான மருத்துவ அதிகாரிகள் அங்கு வந்து சேருவதில்லை. அந்தச் சூழ்நிலையில்தான் பல ஆரம்ப சுகாதார நிலையங்களில் இன்று கூட டாக்டர்கள் இல்லாத குறைபாடு நீடிக்கிறது. அரசாங்கம் எதிர்காலத்தில், ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றக்கூடிய மருத்துவ அதிகாரிகளுக்கு, எம்.எஸ்., எம்.டி., போன்ற பட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கின்றபோது கிராமப்புறங்களில் பணியாற்றுகின்றவர்களுக்கு சிறப்பு மார்க்குகளை வைத்து, அந்தச் சிறப்பு மார்க்கை அவர்களுக்கு வழங்குவோமேயானால், அதற்காகவாவது அவர்கள் கிராமங்களில் பணிபுரிய வருவார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலையை அரசாங்கம் உருவாக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதியிலே பணியாற்றக்கூடிய டாக்டர்கள் பி.ஜி. கோர்ஸ்க்குப் போகின்றபோது அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. அதுமட்டும் போதாது என்று எண்ணி, தேர்வாணையம் டாக்டர்களை நியமிக்கும்போதே, தமிழ்நாட்டை 9 மண்டலங்களாகப் பிரித்து எந்தெந்த மண்டலத்திற்கு விண்ணப்பிக்கிறார்களோ, அந்தந்த மண்டலத்திற்கு தேர்வாணையம் டாக்டர்களைத் தேர்ந்தெடுக்கிறது. அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்



1997 மார்ச் 31]

10 ஆண்டுகளுக்குள்ளாக வேறு பகுதிகளுக்கு மாற்றம் செய்ய முடியாது என்றும் விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து வசதி இல்லாத சில கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் செல்வதற்குக் கஷ்டமாக இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு வாகன வசதி செய்து தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்டத் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 366, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**366—**

### சுகாதார உதவியாளர்களுக்கு வேலைவாய்ப்பு

***4581—திரு ஆர். மணிமாறன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.—*

திண்டுக்கல், காந்திகிராமம் ஆகிய இடங்களில் 1990-91-ஆம் ஆண்டில் பல்நோக்கு சுகாதார உதவியாளர்களாக பயிற்சி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது பல்நோக்குச் சுகாதார உதவியாளர்களின் பணியிடங்கள் ஏதும் காலியாக இல்லை. இனி வரும் காலங்களில் ஏற்படும் காலியிடங்களுக்கு திண்டுக்கல், மற்றும் காந்திகிராமம் ஆகிய இடங்களில் 1990-91-ஆம் ஆண்டில் பல்நோக்குச் சுகாதார உதவியாளர்களாக பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[1997 மார்ச் 31

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91-ஆம் ஆண்டு கழக ஆட்சி இருந்தபோதுதான் அவர்கள் எல்லாம் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சி முடித்து வெளியே சென்றார்கள். கழக ஆட்சிக்காலத்திலே தேர்வு செய்யப்பட்டவர்கள் என்ற ஒரே காரணத்தால், கடந்த கால ஆட்சியில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். கனவுகளை மனதில் சுமந்து கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய அந்த இளைஞர்களுக்கு விரைவில் வேலை கொடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனவோடு இருக்கக்கூடிய அந்தப் பணியாளர்களுக்கு, என்னுடைய பதிலிலே சுகாதார உதவியாளர்களாக பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் சொல்லி இருக்கிறேன். இந்த ஆண்டு நிச்சயமாக அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91 மட்டுமல்ல, பல ஆண்டுகளுக்கு முன்பாகவே, சுகாதார உதவியாளர்கள் மட்டுமல்ல, செவிலியர்களாகப் பயிற்சி பெற்றவர்களும் இன்னும் வேலை வாய்ப்பு கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு வயது வரம்பு 32 என்று சொல்லப்பட்டிருக்கிறது. பல பேர் படித்துப் பட்டம் பெற்று பல ஆண்டுகள் காத்திருந்தும் வேலை கிடைக்காமல் அவதியுறுகின்ற ஒரு நிலை இருக்கிறது. எனவே வயது வரம்பைத் தளர்த்த அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா பல்நோக்குச் சுகாதார உதவியாளர்களைப் பொறுத்தது. தமிழ்நாட்டிலே மொத்தம் வேலை இல்லாமல் இருப்பவர்கள் எண்ணிக்கை 600. அந்த 600 பேருக்கும் இந்த ஆண்டு வேலை கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. செவிலியர்களைப் பொறுத்தவரையில், வயது வரம்பைத் தளர்த்துவது என்று சொன்னால் அதற்கு எல்லையே கிடையாது. ஆகவே வயது வரம்பு 32 என்பதை உயர்த்துவதற்கு இப்போது எந்தத் திட்டமும் இல்லை.



1997 மார்ச் 31]

முற்பகல் 9-45

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல், காந்திகிராமம் பகுதிகளில் மீண்டும் பல்நோக்கு பயிற்சியாளர்களை உருவாக்கும் நிலையை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே இப்படிப்பட்ட பயிற்சி வேண்டும் என்பார்கள்; பிறகு, படித்த உடனே அவர்களுக்கு வேலை வேண்டும் என்பார்கள்; எனவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டு, அப்படி ஆரம்பிக்கக்கூடிய திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இப்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 367, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**367—**

**விவசாயிகளுக்கு விதைநெல் மானிய விலையில் வழங்குதல்**

***2838—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தரமான விதைநெல் விவசாயிகளுக்கு உரிய காலத்தில் மானிய விலையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சான்று பெற்ற நெல் ரக விதைகள், ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின் (அரிசி) கீழ் பருவ காலங்களில் விதைப்பு பருவத்திலேயே வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு, மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு காலங்களில் தரமான விதைகள் என்னென்ன இருக்கின்றன; எந்த அளவு மானியத்திலே வழங்கி இருக்கிறார்கள் என்பதையும் நான் உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அவர் எழுப்பி இருக்கின்ற வினா, தரமான விதை நெல்; அதிலே வீரிய விதை பற்றிதான் வினா எழுப்பி இருக்கின்றார்கள்; அந்த வினாவுக்கு தான் பதில் அளித்தேன். சான்று பெற்ற ரக நெல் விதைகளுக்கு ஒரு கிலோவுக்கு மானியமாக 2 ரூபாயும், வீரிய ஒட்டு ரக விதைகளுக்கு ஒரு கிலோவுக்கு 5 ரூபாயும் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மூலமாக தரமான விதைநெல், அதிகப்படியாக தான் விநியோகம் செய்கின்றார்கள். ஆனால், இப்போது இருக்கின்ற பிரச்சினை, இதை விநியோகம் செய்கின்ற வேளாண்மைத் துறை ஆபீஸுக்கும், ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிர்வாகிகளுக்கும் சம்பந்தம் இல்லாமல இருக்கின்றது. விவசாயிகள் பெருவாரியாக ஒன்றியத்திலேதான் போய் கேட்கின்றார்கள். இதிலே வேளாண்மைத் துறைக்கும், ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளுக்கும் ஒரு இணைப்பை ஏற்படுத்தினால் மட்டும்தான், விவசாயிகளுக்கு காலாகாலத்திலே இந்த விவரங்களைச் சொல்வதற்கும், பெற்றுக்கொள்வதற்கும் வசதியாக இருக்கும். அந்த அடிப்படையில் ஒரு இணைப்பை இதில் ஏற்படுத்திக்கொள்ள முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் ஊராட்சி ஒன்றிய அளவில் கிடங்கு இருக்கிறது. அங்கே விதைகள் வழங்கப்படுகின்றன. அதைப்போல், துணைக் கிடங்குகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சொல்வது, உள்ளாட்சி இணைப்போடு ஒருங்கிணைந்து இந்தத் துறை செயல்பட வேண்டும் என்பது, அது கொள்கை முடிவு எடுக்க வேண்டிய ஒன்று. ஆனால் ஊராட்சி ஒன்றிய தலைமை இடத்திலே இப்போது இந்த விதை வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மூலம் மானிய விலையில் கொடுக்கின்ற விதைகளாக இருந்தாலும் அல்லது பூச்சி மருந்தாக இருந்தாலும், அதைக் கொடுக்கிற முறையோ,



அல்லது வந்து இருக்கிற திட்டங்களோ முறையாக விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுவது இல்லை. நான்கூட பல அதிகாரிகளை அழைத்து அரசு தருகிற திட்டங்கள் மக்களுக்குத் தெரிய வேண்டும்; குறைந்தபட்சம் அலுவலகத்தில் போர்டிலாவது எழுதி வையுங்கள் என்று சொல்லி இருக்கிறேன். ஆனாலும், அப்படிப்பட்ட முறை பின்பற்றப்படுவது இல்லை. அரசு வழங்குகிற திட்டங்கள் பற்றி விவசாயிகள் அறிகிற விதத்தில் செய்ய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது மாற்று ஏற்பாடு வைத்திருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மொத்தம் 21 லட்சம் ஹெக்டேரில் நாம் நெல் பயிர் செய்கின்றோம். இதிலே 17 சதவீதம்தான் சான்றிதழ் அளிக்கப்பட்ட விதைகள், 3 லட்சத்து 57 ஆயிரம் ஹெக்டேர்களுக்குதான் நாம் விநியோகம் செய்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினா, எந்தெந்தப் பொருளுக்கு மானிய விலை தருகிறோம் என்ற அந்த விளக்கம் விவசாயிகளுக்குத் தெரியவில்லை என்பது. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றவுடன், அதை இந்தத் துறை மூலம் ஒவ்வொரு ஒன்றியத் தலைமை இடத்திலும் அல்லது முக்கியமான இடங்களில் எந்தெந்தப் பொருளுக்கு மானிய விலை தருகிறோம், எந்தக் காலத்திலே பயிர் செய்யலாம் என்ற விவரமான விளம்பரப் பலகைகள் வைக்கப்பட வேண்டும் என்று நாங்கள் தெரிவித்து, இப்போது அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 9-50

இன்னொன்று, வேளாண்மையை ஒட்டியுள்ள பல்வேறு சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் அவைகளின் தாய்த்துறைகள் எல்லாம் எந்தெந்தப் பயிர்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன, எந்தெந்தப் பயிர்களை எந்தெந்தப் பருவ காலங்களில் பயிர் செய்யலாம், அந்தப் பகுதியின் மண்ணின் தரம் ஆகியவை பற்றியெல்லாம் விவசாயிகளுக்கு விளக்கங்கள் தரவேண்டுமென்று ஏறக்குறைய இரண்டு லட்சம் விவசாயிகளுக்கு இதுபோன்ற பயிற்சிகளும் விளக்கங்களும் தரவேண்டுமென்று சொல்லி, அவை தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பயிற்சி தரக்கூடிய அதைப்போன்ற நிகழ்ச்சிகளில் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் எல்லாம் கலந்துகொள்வது இன்னும் கூட சிறப்பாக இருக்கும்.

•

[1997 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்ச்சி செய்யப்பட்டிருக்கிற விதைகள் வினியோகம் செய்கிறபோது, சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் அல்லது பெரும் விவசாயிகள் என்கிற விகிதாச்சார அடிப்படையில் வழங்க, விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை மூலமாக பச்சை அட்டை வழங்கப்படுமா? அப்படி வழங்குவதன்மூலம் விவசாயிகளுடைய இடுபொருட்களைச் சீராக வழங்க அரசு முயற்சி எடுக்குமா? அப்படி எடுத்தால் குறைபாடுகள் இல்லாமல இடுபொருட்கள் வழங்க வாய்ப்பு உருவாகுமே, அதைப் பரிசீலனை செய்ய முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள், சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் ஆகிய இவர்களுக்குத் தனியாக அட்டைகள் வழங்கப்படவேண்டுமென்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சான்று விதைகளுக்கு 2 ரூபாயும், வீரிய ஒட்டு விதைக்கு 5 ரூபாய் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். எந்தெந்த வீரிய ஒட்டுவிதைகளில் எந்தெந்த விதிகள் தயாரான நிலையில் இருக்கின்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லைப் பற்றித்தான் நான் இங்கே பதில் அளித்திருக்கிறேன். விதைகளைப் பொறுத்தவரைக்கும் நெல், பருத்தி வகைகள் மற்ற எல்லா விதைகளும் அரசாங்கத்தின் வேளாண்மைத் துறையில தயாராக இருக்கின்றன. ஆனால் எந்தெந்த விதைகளுக்கு எவ்வளவு மானியம என்பதைத் தனியாகக் கேள்வி போட்டால் விபரமாகப் பதில சொல்லமுடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 368, திரு. வை. சிவபுண்ணியம, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



1997 மார்ச் 31]

**368—**

### பாமணி உர ஆலையை விரிவுபடுத்துதல்

***4339—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏடி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி பாமணி உர ஆலையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மன்னார்குடியில் செயல்பட்டு வரும் பாமணி உர ஆலையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் தற்போதைக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் 369 மற்றும் 370 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். வினா எண் 371, திரு. சி. கோபு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**371—**

### கூடுதல் நகரப் பேருந்துகள் இயக்குதல்

***409—திரு. சி. கோபு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதியில் புதூர், மந்தைவெளி, ராமாபுரம், சத்தியமங்கலம் மற்றும் பொய்கை வழியாக தோரணமங்கலம்-வேலூர் வழித்தடத்தில் நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்போதைக்கு அத்தகைய திட்டம் எதுவுமில்லை.

**திரு. சி. கோபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதூர், மந்தைவெளி, இராமாபுரம், சத்தியமங்கலம், பொய்கை, கன்னிகாபுரம் போன்ற கிராமங்கள் ஒரு தீவு போல இருக்கின்றது. இதுவரையில் எந்தவொரு சாலை வசதியோ அல்லது பேருந்து வசதியோ அங்கே வரவில்லை. அடுத்த ஆண்டாவது அந்தப் பகுதியில் இருக்கின்ற கிராமங்களை இணைக்கிற வகையில், சாலை வசதியும், பிறகு பேருந்து வசதியும் செய்து கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலிருந்து தோரணமங்கலத்திற்கு செல்கின்ற நகரப் பேருந்துகள், ராமாபுரம், மந்தைவெளி, புதூர், போன்ற பகுதிகள் வழியாகச் செல்லவேண்டுமானால், அந்தப் பகுதியில் உள்ள சாலைகள் கிராமச் சாலைகள் என்கிற அளவிலே உள்ளன. அந்தச் சாலைகளைச் செப்பனிடுமாறு போக்குவரத்துத் துறை மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 15-7-1996-லேயே எழுதப்பட்டிருக்கிறது. அந்தச் சாலைகள் செப்பனிடப்பட்டால் அந்தச் சாலைகளில் பேருந்துகளை விட அரசு முயற்சி எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 372, திரு. ஏ. ராசேந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**372—**

**பெங்களூருக்கு விரைவுப் பேருந்து இயக்குதல்**

***4008—திரு. ஏ. ராசேந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து உத்திரமேரூர், போளூர், செங்கம் வழியாக பெங்களூருக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இவ்வழித் தடத்தில் விரைவு பேருந்து இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.



**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், போளூர் தொகுதியிலிருந்து வணிகப் பெருமக்கள் தினமும் பெங்களூருக்கும் சென்னைக்கும் செல்லவேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆனால், சாத்தியக்கூறுகள் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தடங்கள் நன்றாக இருக்கின்றன. சென்னையிலிருந்து போளூர் வழியாக பெங்களூருக்குப் பேருந்து விட அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து பெங்களூருக்குப் போவதற்கு யாரேனும் உத்திரமேரூர் வழியாக, போளூர் வழியாக போவார்களா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பல்வேறு சாலைகள், வசதிகள் எல்லாம் இருக்கிறபோது அவருடைய ஊர் வழியாக பெங்களூர் போகவேண்டும் என்று கேட்பது சரியான கேள்வியாக இருக்காது. அந்தந்த ஊர்களிலேயிருந்து பல்வேறு இடங்களை இணைப்பதற்கான பேருந்துகள் எல்லாம் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களுக்குச் சென்று மாறிச் செல்லலாமே தவிர, சென்னையிலிருந்து உத்திரமேரூர், போளூர், செங்கம் வழியாக பெங்களூர் செல்லுகிற வாய்ப்புகள் இல்லை. திருவண்ணாமலையிலிருந்து பெங்களூருக்குச் செங்கம் வழியாகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆகவே, இதுபோன்று எல்லா ஊர்களுக்கும் எல்லா ஊர்களிலேயிருந்தும் பேருந்துகள் செல்லவேண்டும் என்று சொன்னால் அவற்றை இயக்குவதும் கடினம், மக்களுக்கும் அது சங்கடமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை. தமிழரசன்

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சிக்காலத்தில் Inter State- மாநிலங்களுக்கிடையேயான பேருந்துகளெல்லாம் நிறுத்தப்பட்டுவிட்டன. உதாரணமாக, விருத்தாச்சலத்திலிருந்து பெங்களூருக்கு இரண்டு பேருந்துகள் சென்று வந்தன. அவை பெருத்த வசூல், இலாபத்திலே இயங்கினாலும்கூட அவற்றை நிறுத்திவிட்டார்கள். எனவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்த 'Inter State' பேருந்துகளை மீண்டும் இயக்க முன் வருவார்களா? அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன். விருத்தாச்சலத்திலிருந்து

பெங்களூருக்குப் பேருந்து விட ஆவன செய்வாரா எனவும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாநிலங்களுக்கிடையிலே பேருந்துகளை விடவேண்டும் என்று சொன்னால் இரண்டு மாநிலங்களும் அதற்கு ஒப்புக்கொள்ள வேண்டும் குறிப்பாக கர்நாடக எல்லைக்குள்ளே நம்முடைய தமிழ் மாநில பேருந்துகளை விடவேண்டுமென்று சொன்னால் கர்நாடக மாநில அரசினுடைய ஒப்புதல் வேண்டும். நம்முடைய மாநிலத்திலே செல்வதற்கும் அந்த மாநில அரசினுடைய அனுமதியும் தேவைப்படுகிறது. ஆனால், அங்கே அவர்கள் கட்டணத் தொகையாக கிலோ மீட்டருக்கு 26 பைசா வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் 14 பைசா வசூலித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே அவர்கள் நம்முடைய பேருந்துகளை அங்கே அனுமதிக்க அதிகமாக விரும்புவதில்லை. ஏனென்றால் நம்முடைய பேருந்துகளோடு அவர்கள் போட்டியிட்டால் அவர்களுக்கு வருமானம் குறையும் என்ற காரணத்தினால் அவர்கள் அதற்கு வழி விடுவதில்லை. இருந்தாலும்கூட அவர்களோடு பேசி நாம் அனுமதி பெற்றிருக்கிற பல்வேறு பேருந்துத் தடங்களிலே மேலும் பேருந்துகள் விடப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மேலும் பரிசீலித்து மற்ற மாநில அரசுகளும் முன் வருமானால் இவைகளை விடுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சுடலைமுத்து

**திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலே மூணாறு, தேவிகுளம், பீர்மேடு ஆகிய பகுதிகளில் வாழுகின்ற மக்கள் அனைவரும் தமிழ் இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் அனைவரும் தமிழகத்திற்கு வந்து செல்வதற்கு, முன்னால் பஸ் வசதி இருந்தது. அந்த பஸ் வசதிகள் இப்போது நிறுத்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாகப் பலமுறை தபால் கொடுத்திருக்கின்றேன். அந்தத் தடையை நீக்கி, அந்த மக்கள் வந்து போவதற்காக மூணாறு, தேவிகுளம், பீர்மேடு வழியாக பஸ் விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கும் மாநிலங்களுக்கிடையிலான பிரச்சினைகள்தான்





தடையாக இருக்கின்றன. நான் முன்பே சொன்னதைப்போல, நம்முடைய பேருந்துகள் மற்ற மாநிலங்களுடைய எல்லையில் 100 கிலோ மீட்டர் ஓடுமானால் அவர்களுடைய பேருந்துகள் நம்முடைய மாநிலத்திலே 100 கிலோ மீட்டர் ஓட்டுவதற்கு நாம் அவர்களுக்கு கிலோ மீட்டர் அடிப்படையிலே அனுமதியளிக்கிறோம். ஆனால் இந்த கிலோ மீட்டரை அவர்கள் நம்முடைய மாநிலத்திலே இயக்குவதிலே அவர்களுக்கு அதிக ஆதாயம் கிடைப்பதில்லை. ஏனென்றால் இங்கே ஓட்டுகிறபோது நம்முடைய கட்டணத்திலே அவர்கள் ஓட்ட வேண்டியிருக்கிற காரணத்தினால் அவர்கள் இங்கே 100 கிலோ மீட்டர் ஓட்டுவதை விரும்பவில்லை. ஆகவேதான், அவர்கள் அனுமதி கொடுப்பதற்கு மிகவும் தயங்குகிறார்கள். இருந்தாலும்கூட, இந்த அரசு அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி, கூடுமானவரையிலே பல்வேறு சலுகைகளையும் பெற்று பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே இதுபோன்ற தடங்களை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னால், மற்ற மாநிலங்களுடைய ஒப்புதலைப் பெற்ற பிறகுதான் அவற்றை இயக்க முடியுமென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கோவிந்தன்

**திரு. வி. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை அழகிரிப் போக்குவரத்துக் கழகம் வேலூரிலிருந்து குடியாத்தம், பேரணாம்பட்டு வழியாக கே.ஜி.எஃப் செல்கிறது. அதை விரிவுபடுத்தி பெங்களூருக்குச் செல்வதற்கான வழிவகை செய்யுமா அரசு என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மறுபடியும் மறுபடியும் சொல்கிறேன். மற்ற மாநிலங்களில் இந்தப் பேருந்துகளை விடுகிறபோது அந்த மாநிலங்களுடைய அனுமதியில்லாமல் விடுவதற்கு வாய்ப்புக்கள் கிடையாது. அவர்கள் எத்தனை கிலோ மீட்டர் தூரம் செல்லலாம் என்று அனுமதித்திருக்கிறார்களோ அத்தனை கிலோ மீட்டரும் நாம் இப்போது இயக்கிக்கொண்டிருக்கிறோம். மேலும் அவர்கள் கிலோ மீட்டர் தூரத்தை அதிகப்படுத்திக் கொடுத்தால்தான் நாம் இயக்க முடியும்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கொ. வி. நன்னன்

[1997 மார்ச் 31]

**திரு. கொ. வி. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கத்திலிருந்து பிழைப்புக்காக பெங்களூருக்கு அதிகமாக மக்கள் தினமும் பயணம் செய்யும் காரணத்தால், செங்கம் வழியாக பெங்களூருக்குச் செல்லும் பேருந்துகளில் இடம் கிடைக்காமல் பயணிகள் மிகவும் தொல்லைக்கு ஆளாகிறார்கள். அதிலிருந்து விடுபட அந்தத் தொல்லையையும், சிரமத்தையும் குறைக்க செங்கத்திலிருந்து பெங்களூருக்குப் பேருந்துகள் விட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, செங்கத்திலிருந்து கர்நாடகத்தினுடைய எல்லையாக இருக்கிற ஓசூர் வரை வேண்டுமானால் நம்முடைய பேருந்துகளை அதிகமாக இயக்க முடியும் நான் திரும்பத் திரும்ப அதைத்தான் சொல்கிறேன். மற்ற மாநிலங்களுக்குப் பேருந்து விட வேண்டுமென்று சொன்னால் அங்கே நாம் அதிகமான கிலோ மீட்டர் இயக்குவதற்கு அவர்கள் அனுமதி கொடுக்க வேண்டும். அந்த அனுமதியை அவர்கள் கொடுப்பதில்லை. அங்கேயிருக்கிற கட்டணத்திற்கும் நம்முடைய கட்டணத்திற்கும் இடையே அதிக ஏற்றத்தாழ்வுகள் இருப்பதால் அவர்கள் அனுமதிக்க மறுக்கிறார்கள். எனவே அது இயலாத காரியம். நம்முடைய மாநிலத்தின் எல்லையாக இருக்கிற ஓசூர் வரை வேண்டுமானால் செங்கத்திலிருந்து பேருந்துகளை இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. மோகனதாசன்.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து பூம்புகாருக்கு ஒரு திருவள்ளுவர் பேருந்து ஓடிக்கொண்டிருக்கிறது. அதில் கூட்டம் அதிகமாக இருக்கிற காரணத்தால மேலும் இரண்டு திருவள்ளுவர் பேருந்துகளை விடுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் இரண்டு வழித்தடங்களைப் பெறலாம் என்று அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு வழித்தடத்தை இந்த உறுப்பினர் கேட்டால் நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, போளூரிலிருந்து பெங்களூருக்குப் பேருந்து விடவில்லை என்றாலும், போளூரிலிருந்து



1997 மார்ச் 31]

சென்னைக்கு L.S.S., P.P. (Point to Point) போன்ற வண்டிகளை ஆரணி வழியாக இயக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, முன்பு கேட்ட உறுப்பினருக்கு அளித்த பதில் இவருக்கும் பொருந்தும். இவருக்கு இரண்டு வழித்தடங்கள் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால், மாண்புமிகு ராசேந்திரன் அவர்கள், அந்த வழித்தடம் மிகவும் முக்கியம் என்று கருதினால், அதை அவர் கோரினால், நிச்சயமாக அந்த இரண்டில் ஒன்றை முன்னுரிமை கொடுத்து அரசு அவருக்கு வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 373, திரு. வ. வேலுசாமி, மாண்புமிகு உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர்.

**373—**

## புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல்

***2826—திரு. வ. வேலுசாமி :**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வறட்சியின் காரணமாக வெளியிடங்களிலிருந்து குடிபெயர்ந்து மதுரை நகரத்தில் குடியேறி இருக்கும் மக்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வறட்சியின் காரணமாக வெளியிடங்களிலிருந்து குடிபெயர்ந்து மதுரையில் குடியேறியவர்கள் எவரும் புதிய குடும்ப அட்டைகள் கோரி விண்ணப்பிக்கவில்லை. அவ்வாறு யாரேனும் விண்ணப்பித்தால் அவர்கள் எங்கிருந்து குடிபெயர்ந்து வந்தார்களோ அங்கு அவர்கள் பெற்றிருந்த குடும்ப அட்டைகளை சம்பந்தப்பட்ட வட்ட விநியோக அலுவலரிடம் ஒப்படைத்து, ஒப்படைப்புச் சான்றிதழ் பெற்று சான்றிதழ்களுடன் விண்ணப்பித்தால் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா முன்னால் எழுப்பப்பட்ட வினாவாகும். இப்போது புதிய

அட்டைகளை கொடுப்பதற்கு மனுக்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய அரசினுடைய நோக்கம் போலி அட்டைகளை ஒழிக்க வேண்டுமென்பதாகும். ஆனால் இப்போது கடைகளில் வியாபாரம் செய்யக்கூடியவர்கள் 50 கார்டுகள், 100 கார்டுகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கார்டுகள் எல்லாம் அடகு பிடிக்கப்பட்டவை. போலியாக உருவாக்கப்பட்டவை. அந்த அடகுகாரர்களும் மனு கொடுத்திருக்கிறார்கள்: அடகு வாங்கியவர்களும் இப்போது புதியதாக கடைகளில் மனுக்களை பெற்றிருக்கிறார்கள். பல்வேறு இடங்களில் போட்டோக்களை தயார் செய்து ஒட்டி மனுக்களை கொடுத்திருக்கிற காரணத்தால் மொத்தத்தில் இந்த அட்டைகளுடைய எண்ணிக்கை அதிகமாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எப்படியாவது இதை வெரிஃபை பண்ண வருபவர்களிடம் சரி செய்து விடலாம் என்ற எண்ணத்தில் இப்படி கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதை முறையாக, ஒழுங்காக வெரிஃபை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படி ஏதாவது தவறு செய்யக்கூடியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னையில் குடும்ப அட்டைகளைச் சரிபார்க்கிற பணி பரிட்சார்த்தமாக செய்யப்பட்டபோது 8 அட்டைகள் அதுபோல் இருந்தன. ஒரே நபரே மீசை வைத்துக் கொண்டு ஒரு படமும், மீசை இல்லாமல் ஒரு படமும் தந்து, தெருவை மாற்றி, எண்களை மாற்றி தந்திருந்தார். அதை ஆய்வு செய்து கண்டுபிடித்து இன்றைக்கு அந்த 8 பேர்களும் சிறையில் இருக்கிறார்கள். நம்முடைய குடிமைப் பொருள் புலனாய்வுத் துறை சார்பாக அவர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர்கள் சிறையில் இருக்கிறார்கள். புதிய அட்டைகள் 6 மாநகரங்களில் 21,06,706 அட்டைகள் பழைய அட்டைகளுக்கும். இதுவரையில் அட்டைகளே இல்லாதவர்கள் 6,78,847 பேர்கள் மனு செய்திருக்கிறார்கள், வட்ட வாரியாக அடுக்குகிற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவற்றைச் சரிபார்ப்பதற்கு, அந்த அட்டைகள் பதிவு செய்யப்பட்டவுடன் நேரிடையாக இல்லங்களில் சென்று விசாரிப்பதற்கு பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் செல்ல இருக்கிறார்கள். உணவுத் துறை அலுவலர்கள், ஆசிரியர் பெருமக்கள், தன்னார்வ நிறுவனங்கள், அறிவொளி இயக்கத்தைச் சார்ந்தவர்கள், இப்படி அந்தப் பகுதியில் யார் இருக்கிறார்களோ, அவர்களை வைத்து, நேரிடையாக உள்ளூரில் இருக்கிற வி.ஏ.ஓ.-க்கள் மூலமாக அவை சரிபார்க்கப்படும். அப்படி சரிபார்க்கிறபோது ஆங்காங்கு இருக்கிற வாக்காளர் பட்டியலையும் ஒப்பிட்டு பார்த்துதான் கார்டுகளை





வழங்க இருக்கிறோம். கிட்டத்தட்ட 90 சதவீதம் போலி கார்டுகளை ஒழிப்பதற்கு நடவடிக்கைகள் முழுமையாக எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. பூ. இராமஜெயம்.

**திரு. ந. பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடிசைப்பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகளின் காரணமாக எரிந்துவிடும் குடும்ப அட்டைகளுக்கு சம்பந்தப்பட்ட கடையின் மூலமாக புதிய அட்டைகளை உடனடியாக வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படியொரு நிகழ்வு ஏற்படுமானால் நிச்சயமாக அவர்களுக்கெல்லாம் அட்டைகளை உடனடியாக வழங்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வறட்சியின் காரணமாக ஒரு மாநிலத்திலிருந்து வேறு மாநிலத்திற்கு வேலை செய்வதற்காக - கூலி வேலை செய்வதற்கு—சென்றுவிடுகிறார்கள். அப்படிச் செல்லும்போது கிட்டத்தட்ட 3 அல்லது 6 மாத காலம் அங்கே தங்கி வயிற்றுப் பிழைப்புக்காக அவர்கள் பணிபுரிகிறார்கள். அப்போது அவர்கள் குடும்ப அட்டைகளுக்குப் பொருள்கள் வாங்குவதில்லை. அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அந்த அட்டைகளின் மூலம் பொருள்களை வாங்காத காரணத்தினால், அந்த அட்டைகள் செல்லுபடியாகாது என்று அதிகாரிகள் அட்டையை ரத்து செய்து விடுகிறார்கள். அதன் காரணமாக அவர்கள் மீண்டும் ஒரு புதிய அட்டையை வாங்கக்கூடிய ஒரு சூழ்நிலையிருக்கிறது. இது அரசினுடைய கவனத்திற்கு வந்ததா? அதுபோல வந்தால் அதற்கு என்ன மாற்றுத் திட்டம் இந்த அரசு வைத்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாக இதுபற்றி என்னுடைய அறையிலே வந்து கேட்டார். ஏற்கெனவே இருந்த

முறைப்படி மூன்று மாத காலம் தொடர்ந்து ஒருவர் பொருட்களை வாங்கவில்லை என்றால் அவருடைய குடும்ப அட்டை ரத்து செய்யப்பட்டிருந்தது வேறு பிழைப்புக்காக வெளியூர் செல்கின்றவர்களெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் சொன்னார் இப்போது வெளியூர் செல்கின்றபோது அந்தக் கடையிலே சென்று அவர்கள் குறித்துவிட்டு செல்வார்களேயானால் அந்த அட்டையை திரும்பவும் அவர்களுக்கு வழங்குவதற்கு சரியாகயிருக்கும். இல்லையென்றாலும் அப்படிப்பட்டவர்களைக் குறிப்பிட்டு ஆங்காங்கு இருக்கின்ற மக்கள், நமது சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது நகரமன்ற உறுப்பினர்களோ தெரிவிப்பார்களேயானால் உடனடியாக அந்தப் பழைய அட்டையை அவர்களுக்கு வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே இந்த அரசு நடவடிக்கை எடுப்பதற்குக் காரணம் தொடர்ந்து 3 மாத காலம் வாங்கவில்லையென்றால் அந்த அட்டையை மேலும் போலி கார்டுகளாக உபயோகித்து அந்தப் பொருட்களையெல்லாம் கடையில் இருப்பவர்களோ அல்லது மற்றவர்களோ பெற்றுவிடுவார்கள் என்பதால்தான் நிறுத்துகின்ற பணி இருந்துகொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றதும் என்னுடைய நெல்லை மாவட்டத்திற்கு இரண்டாயிரம் குடும்ப அட்டைகள் ஏழு மாதங்களுக்கு முன்பாக வழங்கப்பட்டு, என்னுடைய ராதாபுரம் தொகுதிக்கு 700 கார்டுகள் வழங்கப்பட்டு- 700 குடும்ப அட்டைகளும் எழுதி வைக்கப்பட்டு இதுநாள் வரை விநியோகம் செய்யப்படாமலேயிருக்கிறது. அதோடு 200 கார்டுகளும் இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கும் அதிகமான இடங்களுக்கு கிளைக் கடைகள் வழங்கவேண்டும் என்பதற்காக 23 கடைகளுக்கு 9 மாதங்களுக்கு முன்னால் எழுதிக்கொடுத்தும் எந்தவிதமான முயற்சியிலும் ஈடுபடாமல் மாவட்ட நிர்வாகம் மிக மந்தமான நிலையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே எழுதிவைக்கப்பட்ட 700 குடும்ப அட்டைகளை உடனடியாக வழங்கவும், 23 கிளைக் கடைகளை அமைப்பதற்கு எழுதிக்கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களை உடனடியாகப் பரிசீலித்து அவர்களுக்கு கிளைக் கடைகள் வழங்குவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் புதிய கடைகளைத் திறப்பதற்கான புதிய அரசு உத்தரவை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பியிருக்கிறார்கள். கடந்த காலத்தில் இருந்ததைப்போல அரசாங்கத்திடம் வந்து அனுமதி பெறவேண்டுமென்ற நிலையை மாற்றி அங்கிருக்கின்ற மாவட்ட ஆட்சியரோ எந்தெந்த இடத்தில் கடைகள் அமைக்கலாம் என்று கூட்டுறவுத் துறை அதிகாரிகளோடு கலந்து பேசி அமைக்கலாம் என்ற உத்தரவு அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. நான் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரோடு உடனடியாகத் தொலைபேசியில் பேசி உறுப்பினருடைய தொகுதியில் கடைகளை அமைத்துத் தருவதற்குப் பரிசீலிக்க முயற்சிக்கிறேன். அதைப்போல வழங்கப்படாமல் இருக்கின்ற அட்டைகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆட்சிப் பொறுப்பேற்றபோது 2 குடும்ப அட்டைகளைக் களைந்தால் புதிதாக ஒரு அட்டையை வழங்கலாம் என்ற ஒரு சட்டத்தை வைத்திருந்த காரணத்தினால்தான் உடனடியாக வழங்குவதற்குரிய பணிகள் வேகமாக நடைபெறவில்லை. ஆனால் அனைத்து மாநகரப் பகுதிகளிலும் இந்த அட்டைகளைப் புதுப்பிக்கின்ற பணி உடனடியாகத் தொடங்கப்பட்டுவிட்ட காரணத்தால் அந்த அட்டைகள் வழங்கப்படாமல் இருக்கும். வெகுவிரைவில் இன்னும் 10, 15 நாட்களுக்குள்ளாகவே சரிபார்க்கின்ற பணி நடைபெறவிருக்கிறது. விரைவிலேயே அவர்களுக்கு அட்டைகளை வழங்குவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய மானியக் கோரிக்கையினுடைய பதிலுரையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையோடு 200 கார்டுகள் இருக்கக்கூடிய இடங்களில் பகுதி நேரக் கடைகளும் புதிதாக கார்டு இல்லாதவர்களுக்கு உடனடியாக கார்டு வழங்குவதாகவும் கூறியிருந்தார்கள். ஆனால் பவானி தொகுதியில் பவானி நகரத்தில் 27 வார்டுகள் இருக்கக்கூடிய சூழ்நிலையில் 9 இடங்களில்தான் நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. எனவே 27 வார்டுகளிலே பகுதி நேர நியாய விலைக் கடைகளை அமைப்பதற்கும், அதேபோன்று பவானி தொகுதியில் 27 இடங்களிலே நியாய விலைக் கடைகள் அமைக்கவேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை வைத்தும்-7 மாதங்களுக்கு முன்பாக கோரிக்கை

விண்ணப்பம் கொடுத்தும்கூட- இதுவரையில் 12 இடங்களில்தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் உடனடியாகக் கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய மக்களுக்கு புதிய முறையிலே ரேஷன் கார்டுகள் கொடுப்பதற்கும் விரைவாக ரேஷன் கார்டுகள் கொடுப்பதற்கும், பவானி நகரத்திலே பவானி சுற்றுப்புறத்திலே இருக்கக்கூடிய கிராமப் பகுதிகளிலேயும். நியாயவிலைக் கடைகளை தேவையான இடங்களிலே அமைப்பதற்கும் இந்த அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல பல்வேறு இடங்களிலே ஆய்வுகள் செய்யப்பட்டு, பணிகள் துவங்க முதலிலே அனைத்து மாநகராட்சிப் பகுதிகளிலே பாரங்கள் தரப்பட்டு, அவை நிரப்பப்பட்டபின் திரும்பவும் பெறப்பட்டு, வார்டு வாரியாக, வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டு அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்யலாம் என்று எண்ணியபோது பொது மக்களிடமிருந்து பிரச்சினை வந்தது. 4 பக்கங்கள் இருக்கின்றன. எங்களை நீங்கள் நிறைய கேள்விகள் கேட்கிறீர்கள். அவ்வளவு கேள்விகள் கேட்கக்கூடாது" என்று பொது மக்களில் பல பேர்கள் பிரச்சினை எழுப்பிய காரணத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை எளிமைப்படுத்தி, 2 பக்கங்களைக் கொண்ட விண்ணப்பப் படிவமாக புதிதாக அது அச்சடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்னும் ஓரிரு வாரங்களில் அது விநியோகிக்கப்படும். முதல் கட்டமாக மாநகராட்சிப் பகுதிகள் முடிந்து விட்டன. அடுத்தது நகரப் பகுதி, மாவட்டத் தலைநகரப் பகுதிகளிலே, நகராட்சிப் பகுதிகளிலே விநியோகம் செய்யப்பட இருக்கிறது. அது இன்னும் 10 நாட்களுக்குள்ளாக விநியோகம் செய்யப்பட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு யார் யார் விண்ணப்பங்களைப் பெறவேண்டுமோ அவர்கள் பெற்று நிரப்பி திருப்பியளித்து, ஆய்வு செய்தபின் கார்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீண்டும் அரசு உத்தரவிலே தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே கடை திறக்கப்பட வேண்டுமென்றால், குறைந்தது ஒரு கடைக்கு 800 கார்டுகள் இருக்கவேண்டும். அப்படி 800 கார்டுகளுக்கு மேலாக 200 கார்டுகள் இருந்தால்கூட ஒரு பகுதி நேரக் கடையைத் திறக்கலாம், பகுதி நேரக் கடையைத் திறப்பதற்கு உரிய 200 கார்டுகளுக்கு தூரம் எவ்வளவு இருக்கவேண்டும் என்றால்,' 2 கிலோ மீட்டர் தூரம்



இருந்தால் போதும், அங்கே கடை திறக்கலாம் என்றும், அப்படி இல்லாமல் 50 கார்டுகள்தான் இருக்கிறது. ஆனால் அங்கே ஒரு சமூகப் பிரச்சினை இருக்கிறது. இவர்கள் அங்கே போய் வாங்குவதற்கு அஞ்சுகிறார்கள் அல்லது அவர்கள் தருவதற்கு மறுக்கிறார்கள் என்றால்கூட, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அங்கேயும் ஒரு பகுதி நேரக் கடையைத் திறப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டு இருக்கிறது. இது கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில்.

நகர்ப்புறத்தைப் பொறுத்தவரையில், ஒரு வார்டுக்கு ஒரு கடை அமைக்க வேண்டும் என்று புதிய உத்தரவிலே இருக்கிறது. ஒரு வார்டிலே 800 கார்டுகளுக்கும் அதிகமாக இருக்குமானால் அங்கே பகுதி நேரக் கடையாகப் பிரிப்பது என்றும், அதிகப்படியாக 800 கார்டுகள் என்றும், குறைந்தது ஒரு வார்டுக்கு ஒரு கடை வைக்கவேண்டும் என்றும் உத்தரவிலே இருக்கிறது. விரைவிலே உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டை வழங்குவதில் உள்ள வழிமுறைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவுபட எடுத்துச் சொன்னார்கள். ஆனால் குடும்பத் தலைவர் ஒருவருக்கு, 2 மனைவிகள் இருந்து தனித்தனியாக குடும்பம் இருந்தால் அவர்களுக்கு எப்படி குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்பதைப் பற்றி இதிலே வழிமுறைகள் கிடையாது: விதிவிலக்கும் இதிலே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை அறையிலே போய்த் தனியாக கேளுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை, அவர் சொன்னதற்குப் பதில். இது ரொம்ப முக்கியமான பிரச்சினை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 8 பேர்களைக் கைது செய்தார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு ஒரு தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள் அதிகாரிகள். அதிலே ஒருவர் பேப்பர் மில்ஸ் ரோடு, பெரம்பூரிலே இருக்கிறார்; அவரைக் கைது செய்திருக்கிறார்கள். அவருக்கு 2 வீடுகள் இருக்கின்றன. ஒவ்வொரு குடும்ப அட்டை கேட்டபோதும் மாத வருமானம் 10 ஆயிரம் ரூபாய் என்று போட்டிருக்கிறார். ஒரு மனைவி இரயில்வேயிலே வேலை செய்கிறார். இன்னொருவர் இன்னொரு இடத்திலே வேலை செய்கிறார். அவர்களுக்கு 2 வீடுகள் தனித்தனியாக இருப்பதால் வருமானம் அதிகம்

இருப்பதாலே, குடும்ப அட்டைகளை-வேறு பர்பசுக்குத்தான் அவர் குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்திருக்கிறார். ஆனால் அந்த அதிகாரிகள் இரவு 12 மணிக்கு அவருடைய வீட்டுக்கு வந்து கதவைத் தட்டி, கைது செய்து அவர்கள் மேலே * உண்மைக்கு புறம்பான வழக்கைப் போட்டிருக்கிறார்கள். அமைச்சருக்குத் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *என்பது 'உண்மைக்குப் புறம்பான' என்று மாற்றிக் கொள்ளப்படுகிறது.

**திரு. ப. ரங்கநாதன்:** உண்மைக்குப் புறம்பான வழக்கு அது. அதேநேரத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். ஒருவருக்கு 2 மனைவிகள் இருந்து, இரண்டு வீடுகள் இருந்து, தனித்தனியாக வருமானம் அதிகம் இருந்தால், அவர்கள் குடும்ப அட்டை கோரினால் அதற்கு என்ன வழிமுறையை அமைச்சர் அவர்கள் வைத்து இருக்கிறார்; அல்லது அரசு என்ன வழிமுறைகளைப் பின்பற்றப் போகிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய சொந்த விருப்பத்தில் கேட்கிறாரா என்று நான் கேட்க விரும்புகிறேன். (சிரிப்பு) ஒருவருக்கு இரண்டு குடும்பம் இருந்தால், அந்த பாரத்திலே தன்னுடைய இரண்டாவது குடும்பம் என்று எழுதித் தந்திருப்பார்களேயானால் தொடர்ந்து அது பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இன்னொன்றையும் நீங்கள் கவனமாகப் புரிந்து கொள்ளவேண்டும். இன்றைக்கு யூனிட்டு கணக்கிலே அரிசி . . . .

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சருக்கு ஒரு விளக்கம். அவர் அட்டையிலே இது இரண்டாவது குடும்பம் என்று எழுதிக் கொடுத்தார் என்றால், வழக்குப் போடலாம் அவர் பேரிலே. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்களுக்கு தனிப்பட்ட முறையிலே

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



கார்டுகள் வேண்டுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும் இரண்டாவது குடும்பம் ஒன்று இருக்குமானால், முதல் மனைவியுடைய அனுமதி பெற்று, அதைத் தந்தார்களேயானால், கார்டு கொடுப்பது பற்றிப் பரிசிலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய, பெரிய நகரங்களில் எல்லாம் கதவிலக்கங்கள் முறைப்படி கொடுத்து சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. அதற்குப் பிறகு கட்டப்பட்ட வீடுகளுக்கு எல்லாம் இடைச் செருகலாக பலவிதமான கதவிலக்கங்கள் கொடுத்திருப்பதால் பலவிதமான குழப்பங்கள் இருக்கின்றன. ஆகவே அங்கேயெல்லாம் புதியதாகக் கார்டுகள் கொடுப்பதற்கு முன்பாக உள்ளாட்சித் துறையின் மூலமாக கதவிலக்கங்களையெல்லாம் சரி செய்துவிட்டு, அதற்குப் பிறகு கார்டுகள் கொடுப்போமேயானால், போலி கார்டுகள் வழங்குவதையும் தடுக்கமுடியும். முறையாக அனைத்து வீடுகளுக்கும் நாம் கார்டுகள் வழங்கமுடியும் என்ற ஒரு கருத்து இருப்பதால், இதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே கதவிலக்கத்தில் 7 குடும்பங்கள், அல்லது 8 குடும்பங்கள் கூட இருக்கலாம். அப்படியிருக்கும் பட்சத்தில் அந்த வீட்டுக்காரரை அழைத்து நீங்கள் எவ்வளவு பேருக்கு வாடகைக்கு தந்திருக்கிறீர்கள் என்ற விவரத்தை சரிபார்க்கின்ற அளவிற்குக் கேட்கிறார்கள். அப்படி கேட்கின்றபோது எவ்வளவு வாடகை வாங்குகிறார்கள் என்று கேட்பதில்லை. எவ்வளவு பேரை நீங்கள் குடி வைத்திருக்கிறீர்கள் என்பதை மட்டும் கேட்கிறார்கள். அப்படி அந்த வீட்டுக்காரருடைய ஒப்புதலோடு அந்தப் பகுதியிலே இந்தத் துறையின் சார்பில் இருக்கின்ற அலுவலர்களை வைத்து, நம்மிடம் இருக்கின்ற வாக்காளர் பட்டியலோடு (Voters' List) சரிபார்க்கப்பட்டு, கார்டுகள் வழங்கப்படும். ஒரே கதவிலக்கத்திலே 4, 5 குடும்பங்கள் இருந்தாலும்கூட, அவர்களுக்கெல்லாம் வழங்குவதற்குரிய அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 375, திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

[1997 மார்ச் 31

375—

## குற்றவியல் நீதிமன்றம் அமைத்தல்

***601—திரு. தா. உதயசூரியன் :**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரத்தில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. தா. உதயசூரியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த மாமன்றத்தில் வட்டத் தலைநகரத்தில் குற்றவியல் நீதிமன்றம் இருக்கவேண்டுமென்று முன்பு அறிவித்துள்ளார்கள். சங்கராபுரம் தாலுக்காவாக உயர்ந்திருக்கிறது. ஆகவே அந்த வட்டத்திற்கு மறுபரிசீலனை செய்து குற்றவியல் நீதிமன்றம் அமைத்துத் தருவதற்கு அமைச்சரவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், சங்கராபுரத்தில் குற்றவியல் நீதிமன்றம அமைக்கவேண்டுமென்று 28-9-1994-ல் (குறுக்கீடு)...

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம் அல்ல சங்கராபுரம், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திலுள்ளது. முதலிலேயும் இதுபற்றி ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் வந்தது. சங்கராபுரம். விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில், சங்கராபுரத்திலே குற்றவியல் நீதிமன்றம் அமைப்பது குறித்து சென்னை உயர்நீதிமன்றத்திலேயிருந்து 28-9-1994-ல் ஒரு பரிந்துரை வந்திருக்கிறது. அதனை 28-6-1995-ல் முந்தைய அரசு நிறுத்தி வைத்துவிட்டது. என்றாலும் அங்கே நீதிமன்றம் அமைப்பது குறித்து சென்னை உயர்நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறது. இதுகுறித்து அரசு ஆய்வு செய்தபோது தொடராச் செலவினம் ரூ.10.25 லட்சம், தொடராச் செலவினம் ரூ. 3 லட்சம் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. இவற்றை அடுத்த ஆண்டு பார்ட்-2 ஸ்கீம்களில் எடுத்துக்கொள்ளலாம் என்று அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது.



1997 மார்ச் 31]

**திரு. தா. உதயசூரியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் எவ்வளவு செலவாகும் என்று இங்கே சுட்டிக்காட்டினார்கள். கள்ளக்குறிச்சியிலேயிருந்து பிரிந்ததுதான் சங்கராபுரம் வட்டம். கள்ளக்குறிச்சியிலே இரண்டு குற்றவியல் நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்தச் செலவைச் சொல்கின்ற மாண்புமிகு அமைச்சரவர்கள், கள்ளக்குறிச்சியிலுள்ள இரண்டு குற்றவியல் நீதிமன்றங்களிலிருந்து ஒன்றைப் பிரித்து, அந்த வட்டத்திற்குக் கொடுக்கவேண்டும். தென்னாற்காடு மாவட்டம் என்பது, வள்ளலார், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம் என்று பிரிக்கப்பட்டது. அதிலே கள்ளக்குறிச்சியிலிருந்து பிரிந்ததுதான் சங்கராபுரம் வட்டம். ஆகவே, கள்ளக்குறிச்சியில் உள்ள இரண்டு குற்றவியல் நீதிமன்றங்களிலிருந்து, ஒரு குற்றவியல் நீதிமன்றத்தை சங்கராபுரம் வட்டத்திற்கு மாற்றித் தருவதற்கு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தை மாற்றி அமைத்தாலும், அதிலும் செலவினங்கள் இருக்கின்றன. அதற்கும் உயர்நீதிமன்றத்தினுடைய ஒப்புதலும், நிதித் துறையினுடைய ஒப்புதலையும் பெறவேண்டும். எனவேதான் அடுத்த ஆண்டு அதை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினருக்கு நான் உறுதியளித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 374, திரு. ம. சண்முகம், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

374—

## வங்கிகளின் வளர்ச்சிப் பணிகள்

***3471—திரு. ம. சண்முகம் :**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிரதம நிலவள வங்கிகளில் பணியாளர்கள் நியமிக்கப் படாததால் வங்கிகளின் வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) : சீரமைப்புக் குழுவின் சிபாரிசுப்படி உபரிப் பணியாளர்கள் உள்ள வங்கிகளிடமிருந்து பணியிடங்கள் காலியாக உள்ள வங்கிகளுக்கு பணியாளர்கள் மறு பணியமர்த்தம் செய்வதன் மூலம் நிரப்பப்பட்டு வருகிறார்கள். அவ்வாறு நிரப்பப்படும்வரை புதிய நியமனங்கள் மேற்கொள்ள வழியில்லை. வேறு கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள உபரி பணியாளர்கள் நிலவள வங்கிகளில் மறு பணியமர்த்தப்படுவதால், நிலவள வங்கிகளின் வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*முற்பகல் 10-20*

**திரு. ம. சண்முகம் :** *மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, பிரதம நிலவள வங்கிகளில் மட்டும் அல்லாமல், மத்திய கூட்டுறவு வங்கிகள், மாநில வங்கிகள் போன்ற நிறுவனங்களிலும் நிறைய பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. பணியிடங்கள் இரண்டு வகைகளில் காலியாக இருக்கின்றன. ஒன்று நேரிடையாக நியமிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் என்றும், மற்றொன்று பதவி உயர்வினால் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்கள் என்றும் இரண்டு வகைகள் இருக்கின்றன. பதவி உயர்வு பெற வேண்டும் என்று சொன்னால், கீழ்நிலையிலே 3 ஆண்டுகாலம் கண்டிப்பாகப் பணியாற்றி இருக்க வேண்டும் என்று சட்ட விதி எண் 149-லே கூறப்பட்டுள்ளது. அப்படி 3 ஆண்டுகாலம் முடியாமல் பலர் இருக்கின்ற நிலையில், அந்தப் பணியிடங்கள் தொடர்ந்து காலியாகவே இருக்கின்றன. ஆகவே, அந்தப் பதவி உயர்வினால் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்கள், பணியாளர்கள் பதவி உயர்வு பெறாத காரணத்தினால் நிரப்பப்படாமல் இருக்கின்ற காரணத்தினால், அந்த விதியைத் தளர்த்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் எங்கும் உள்ள கூட்டுறவு நிறுவனங்களில் இருக்கின்ற காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. உரிய முறையிலே வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெறப்பட்டு, நேரிடையாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே, அதனுடைய தலைவரும், இணைப் பதிவாளரும் இணைந்து, இண்டர்வியூ நடத்தி தேர்ந்தெடுக்கப்படுவோர் பணியமர்த்தப்படவும், மத்திய கூட்டுறவு*





*வங்கிகளிலே இன்றைக்கு அறிமுகப்படுத்தியிருக்கின்ற புதிய முறையிலே வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெறப்பட்டு, இண்டர்வியூ நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படுவோர் வேலையிலே அமர்த்தப்படவும் இருக்கிறார்கள். தொடர்ந்து பிரதம நிலவள வங்கிகளிலே, அதேபோன்று காலியாக உள்ள பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்படும். 31-3-1992-ல் இந்த வங்கிகளை எல்லாம் ஆய்வு செய்தார்கள். இதில் எதெதற்கு வருவாய் இருக்கிறது; எதெதற்கு வருவாய் குறைவாக இருக்கின்றது என்று பார்க்கும் விதத்தில் வங்கிகளை 'ஏ', 'பி', 'சி' என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து, அவற்றினுடைய வருவாய்க்குத் தக்கவாறு அவற்றில் பணியமர்த்த வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *வினா எண் 376, திரு. இ. கணேசன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.*

**376—**

**எடப்பாடியில் குற்றவியல் நீதிமன்றம் தொடங்குதல்**

***3226—திரு. இ. கணேசன் :**

*மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி நகரில், குற்றவியல் நீதிமன்றம் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?*

**மாண்புமிகு ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர் :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

**திரு. இ. கணேசன் :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாணைப்படி, ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைக்க வேண்டும். அதுவும், குறிப்பாக எடப்பாடி நகரிலே இந்தக் குற்றவியல் நீதிமன்றத்தை அமைக்க ஏதுவாக 3 இலட்சம் மக்களுக்கு மேல் அங்கு வாழ்கின்றனர். எடப்பாடியிலே இருந்து சங்ககிரி குற்றவியல் நீதிமன்றத்திலே ஆண்டொன்றுக்கு 2,500*

[1997 மார்ச் 31

வழக்குகளுக்கு மேல் பதிவாகின்றன. அதிலே, 60 சதவிகிதம் வழக்குகள் எடப்பாடி, பூலாமட்டி காவல் நிலையங்களிலிருந்து பதிவாகக் கூடிய வழக்குகள். ஆகையால், அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை பயக்கின்ற வகையில் உடனடியாக இந்த நிதியாண்டிலே, எடப்பாடி தாலுக்காவிற்கு, எடப்பாடி நகரிலே ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத்திற்கு ஒரு நீதிமன்றம் என்ற கொள்கையின் அடிப்படையில், எடப்பாடியிலே ஒரு நீதிமன்றம் அமைக்க அரசு கடமைப்பட்டு இருக்கின்றது. இந்தக் கொள்கையை நாங்கள் மறுக்கவில்லை. அதே நேரத்தில் உயர்நீதிமன்றத்திலேயிருந்து எடப்பாடியிலே நீதிமன்றம் அமைப்பதைப் பற்றி இதுவரை எங்களுக்கு எந்தப் பரிந்துரையும் வரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போன்று, அந்தப் பகுதியிலேயிருந்து இப்போது சங்ககிரி நீதிமன்றத்திற்கு ஆண்டொன்றுக்கு சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் வருகின்றன என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். எனவே, வட்டத்திற்கு ஒரு நீதிமன்றத்தை அமைக்க வேண்டும்; கணிசமாக வழக்குகள் இருக்கின்ற பகுதியிலே நிச்சயமாக ஒரு நீதிமன்றத்தை அமைக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், இவற்றை அரசு பரிசீலிக்கும் என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 377, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**377—**

### கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியம்

***3826—டாக்டர் இ. எஸ். எஸ். இராமன்:—**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு வட்டத்திலுள்ள கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படாமல் இருக்கும் அரசு மானியம் வழங்கப்பட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1997 மார்ச் 31]

எம்.ஜி.ஆர். மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டிய அரசு மானியத் தொகை எதுவும் நிலுவையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**டாக்டர் இ. எஸ். எஸ். இராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு வட்டத்திலே பாழ்பட்டிருந்த விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களை இயக்கி வைத்த நமது அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். அதே நேரத்திலே 1991 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது பள்ளிப்பட்டு வட்டத்திலே இருந்த கூட்டுறவுச் சங்கங்கள் 55. அதற்குப் பின்பு வந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அது 15-ஆகக் குறைந்து 1992 ஆம் ஆண்டு முதல் அந்தச் சங்கங்களுக்குச் சேரவேண்டிய மானியத் தொகை சேரவில்லை. அப்போதிருந்த கைத்தறித் துறை அமைச்சருடைய சொந்த விருப்பு வெறுப்பு காரணமாக இத்தகைய நிலைமை ஏற்பட்டது என்று நான் அறிகிறேன். ஆகவே 1992 ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை வழங்கப்படாமல் இருக்கும் ஏறக்குறைய 1 கோடி ரூபாய்க்கு மேலாக இருக்கக்கூடிய மானியத் தொகையை வழங்க நம்முடைய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை கடந்த ஆகஸ்ட் 1996 ஆம் ஆண்டிலே இங்கே அளித்திருக்கிறார்கள். அந்த நேரத்திலே ஏறத்தாழ 50 இலட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள ஜனதா ரக சேலைகள் அங்கே தேக்கத்திலே இருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிவார்கள். உடனடி நடவடிக்கையின் காரணமாக அந்த ஜனதா ரக சேலைகள் பூராவும் கொள்முதல் செய்யப்பட்டுவிட்டன. அங்கே இருக்கின்ற 32 கைத்தறி நெசவாளர் சங்கங்களும் தள்ளுபடி மானியத்திற்குட்படாத ஜனதா ரக சேலைகளைத்தான் நெய்கின்ற பணியை செய்து வருகிறது. அதுபோக வேறு சில உற்பத்தி ரகங்களுக்குக் கொடுக்க வேண்டிய மானியத்தை ஏற்கெனவே இந்த அரசு மானியமாக அவர்களுக்கு அளித்து இருக்கிறது. தற்சமயம் அந்த 32 கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களிலும் ஜனதா ரக சேலை உற்பத்தி போக பள்ளிச் சிறார்களுக்கு வேண்டிய காடா துணியை ஏறத்தாழ 1,50,000 மீட்டர் அவர்களுக்கு உற்பத்திக்கு கொடுக்கப்பட்டு முழுமையாக உற்பத்தி செய்யப்பட்டு அதுவும்

முழுமையாக கொள்முதல் செய்யப்பட்டுவிட்டது. பழைய பாக்கி ஏதாவது ரிப்பேட்டிலே இருக்கும் என்ற கணக்கு இருக்குமானால்—என்னிடம் இருக்கின்ற விவரங்களிலே அப்படிப்பட்ட விவரங்கள் இதுவரைக்கும் இல்லை. நிச்சயம் இருக்கிறது என்று ஒரு கணக்கு இருந்தால்—அதை மீண்டும் பரிசீலனை செய்து பார்க்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 378. திரு. என். பாண்டுரங்கன், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**378—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

***6195—திரு. என். பாண்டுரங்கன் :**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், நமத்தோடு கிராமத்தில் புதியதாகக் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் பெரணமல்லூர் ஒன்றியத்தில், நமத்தோடு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

**திரு. என். பாண்டுரங்கன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டால் தோளிலே தூக்கிச் செல்லலாம். இளைஞர்களுக்கு, வயதானவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டால் பேருந்திலோ, சீருந்திலோ அழைத்துச் செல்லலாம். கால்நடைகளுக்கு உடல்நலக் குறைவு ஏற்படும்பொழுது அங்கே இருக்கின்ற கிராம மக்கள் உண்மையிலேயே மிகவும் சிரமப்படுகிறார்கள். குறிப்பாக ஏழை, எளிய மக்கள், கிராமங்களிலே வசிக்கின்ற மக்கள், விவசாயத்தைவிட ஆடு, மாடு, கோழி, பசு வைத்துதான் அன்றாட பிழைப்பையே





நடத்துகிறார்கள். நமத்தோடு கிராமம் 10 கிராமங்களை உள்ளிட்ட ஒரு கிராமம். எனவே அந்த கிராம மக்களுக்காக அந்தக் கால்நடைகளை பிழைக்க வைக்கிற வகையிலே மறுபரிசீலனை செய்து அங்கு கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டம் பெரணமல்லூர் ஒன்றியத்திலே பெரணமல்லூரில் ஒரு கால்நடை மருந்தகமும், வல்லம், கோட்டுப்பாக்கம், எரும்பூர் ஆகிய இடங்களில் கால்நடை கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் வரும் ஆண்டுகளில் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 379, திரு. குழந்தை. தமிழரசன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**379—**

**ஆதிதிராவிட மக்களுக்கு விட்டுமனைப் பட்டா வழங்குதல்**

***4728—திரு. குழந்தை. தமிழரசன் :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நிலங்களை அரசு கையகப்படுத்தும்பொழுது, நில உரிமையாளர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வதால் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்த்து பிரச்சினையைத் தீர்க்க சம்பந்தப்பட்ட பகுதியில் ஒரு இணக்கத் தீர்வுக் குழுவை நிறுவ அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நிலங்களை அரசு கையகப்படுத்தும்பொழுது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க ஏற்கெனவே வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்ட

[1997 மார்ச் 31

பகுதியில் ஒரு இணக்கத் தீர்வுக் குழு நிறுவ செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. குழந்தை. தமிழரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது ஏற்கெனவே வழிவகை செய்யப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். அது என்ன வழிவகை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளைக் காலதாமதமின்றி விசாரணை செய்வதற்காக அரசு வழக்கறிஞரை நியமித்துள்ளது. அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தனி அதிகாரம் கொடுத்து உடனுக்குடன் அந்தப் பிரச்சினையைப் பேச்சு வார்த்தையின் மூலம் தீர்ப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண் 885, வருவாய்த் துறை, நாள் 21-9-1995-இன்படி நேரடிப் பேச்சுவார்த்தையின் மூலம் தனியாரிடமும் பேசி மாவட்ட அளவிலே தீர்த்துக் கொள்வதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலும் இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலும் இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 380, திரு. லி. அய்யலுசாமி, மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**380—**

### கதர், கிராமத் தொழில்கள் துவங்குதல்

***4868—திரு. லி. அய்யலுசாமி :**

மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, எட்டயபுரத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் நடப்பு ஆண்டில் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1997 மார்ச் 31]

கோவில்பட்டி தொகுதி, எட்டயபுரத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் நடப்பு ஆண்டில் துவங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

### குறுகிய கால வினா

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, குறுகிய கால வினா, திரு. மு. பன்னீர்செல்வம் மற்றும் திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

### குறுகிய கால வினா எண் 1

### சட்டம் பயின்ற பட்டதாரிகள் பார் கவுன்சிலில் பதிவு செய்தல்

**7852—திரு. மு. பன்னீர்செல்வம் :**

**திரு. செ. இராமலிங்கம் :**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டம் பயின்ற பட்டதாரிகள் ஒரு மூத்த வழக்கறிஞரிடம் ஓர் ஆண்டு காலம் பயிற்சி முடித்த பின்னர்தான் பார் கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்ய இயலும் என்பதை ரத்து செய்ய அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டம் பயின்று முடிந்த மாணவர்கள் ஓராண்டு காலம் மூத்த வழக்கறிஞர்களிடத்தில் பயிற்சி பெறுதல் வேண்டும் என இந்திய வழக்கறிஞர் மன்றம் கொண்டு வந்துள்ள விதிமுறைகளை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இந்திய உச்ச நீதி மன்றத்தால் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்ட பின் அத்தீர்ப்பின் அடிப்படையில் அரசு இந்தக் கோரிக்கையை ஆராயும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது என்றால் அப்புறம் அடுத்த கேள்வி என்ன?

[1997 மார்ச் 31

**திரு. பி. ஆர். சுந்தரம் :** தலைவரவர்களே, இன்று காலை . ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொஞ்சம் உட்காருங்கள்.

**Thiru M. Abdul Latheef :** Hon'ble Speaker Sir, I am not referring to the cases which are pending before the Court. What I wanted to ask is the case which has been already disposed in favour of Adi Dravidars. Hon'ble Minister knows that it is being postponed endlessly without any reason. That is why I wanted to ask the question which is of major public importance. I am not asking questions often. But still, inspite of your promises, I was denied my right. I am very sorry.

வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

---

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும். ]

## 2. அனுமதி மறுத்த பொருள் பற்றி அவையில் எழுப்ப முற்படுதல்

**திரு. பி.ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று காலையிலே தங்களுடைய அறையிலே வந்து ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காலையிலே அறையிலே வந்து கேட்டபோது அனுமதி மறுக்கப்பட்டது, உட்காருங்கள். ஈரோடு டி.டி.எஸ். என்ற தனியார் துறை பேருந்துக் கம்பெனியில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் குறித்து, பேருந்துகளை எடுத்துச் சென்றவர்களை . . (குறுக்கீடு)

நீங்கள் உட்காருங்கள். அவைக் குறிப்பிலே எதுவும் ஏறாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவைக்குறிப்பிலே எதுவும் ஏறாது. உட்காருங்கள்.. அறையிலே வந்து கேட்டீர்கள், அனுமதி மறுத்து விட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) காரணம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. (குறுக்கீடு) அவைக்குறிப்பிலே நீங்கள் பேசுவது எதுவும் ஏறாது. ஒலிப்பெருக்கியை அணைக்க வேண்டும். (குறுக்கீடு) அவைக்குறிப்பிலே எதுவும் ஏறாது. நீங்கள் பேசிக்கொண்டே இருங்கள். (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமருங்கள் என்று உத்தரவிட்ட பிறகும், தொடர்ந்து ஓர் உறுப்பினர் பேரவைத்



1997 மார்ச் 31] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

தலைவரவர்களுடைய உத்தரவுக்குக் கீழ்ப்படியாமல், நின்றுகொண்டு பேசிக்கொண்டிருப்பது இந்த அவையையும், தங்களையும் அவமரியாதை செய்கின்ற காரியமாகும். ஆக, இது தொடரக்கூடாது. இதற்கு ஒரு முடிவு கட்டப்பட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் இப்பொழுது உட்காரவில்லை என்றால் உங்களை வெளியேற்றுவேன். நீங்கள் இப்பொழுது உட்காருகிறீர்களா இல்லையா? (குறுக்கீடு) நீங்கள் சொல்வது எதுவும் அவைக்குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடு) நீங்கள் சொல்வது எதுவும் அவைக்குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடு) நீங்கள் அவையை விட்டு வெளியேறுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. ஆர். சுந்தரம் வெளியேற வேண்டும்; மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. ஆர். சுந்தரம் வெளியேற வேண்டும். காவலர்கள் வந்து அவரை வெளியே அழைத்துச் செல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் சொல்வது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. அவரை அவையிலிருந்து வெளியேற்றுகிறேன்.

(திரு. பி. ஆர். சுந்தரம் அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)

முற்பகல் 10-35

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், உங்களுக்கு அனுமதி கிடையாது.

**திரு. சொ. கருப்பசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே. திரு. ஞானசேகரனுக்கு பேசுவதற்கு அனுமதி கொடுத்தீர்கள். எனக்குப் பேசுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு அனுமதி கிடையாது.

ஈரோட்டில் டி.டி.எஸ். என்ற தனியார்த் துறை பேருந்து கம்பெனியில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் குறித்தும், பேருந்துகளை எடுத்துச் சென்றவர்களைக் கைது செய்தது குறித்தும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினை..

**திரு. சொ. கருப்பசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. உட்காருங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்குறிப்பில் எதுவும் ஏறாது, உட்காருங்கள். இல்லையென்றால் உங்களையும் வெளியேற்றுவேன். நீங்கள் உட்காரவில்லையென்றால் உங்களையும் வெளியேற்றுவேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள் அவையைவிட்டு வெளியேற வேண்டும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள் அவையைவிட்டு வெளியேற வேண்டும். மூன்றாவது தடவையாகச் சொல்கிறேன் மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள் அவையைவிட்டு வெளியேற வேண்டும் அல்லது காவலர்களை அழைத்து வெளியேற்றுவேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வெளியே போகவேண்டும். காவலர்கள் வந்து அவரை வெளியே அழைத்துச் செல்ல வேண்டும்.

(திரு. சொ. கருப்பசாமி, அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### ஈரோட்டில் டி.டி.எஸ். என்ற தனியார் துறை பேருந்து நிறுவனத்தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தமும், அதனால் ஏற்பட்ட பாதிப்பும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "ஈரோட்டில் டி.டி.எஸ். என்ற தனியார் துறை பேருந்து நிறுவனத்தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தமும் அதனால் ஏற்பட்ட பாதிப்பும்" என்ற பிரச்சினை குறித்து உறுப்பினர் திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. கே. சுப்பராயன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து நான் மாநில அரசின் கவனத்திற்கு தங்கள் மூலமாக கொண்டுவர விரும்புகின்றேன். பொதுவாக சட்டத்தின் ஆட்சி பற்றி நாம் பல்வேறு இடங்களில், பல்வேறு மட்டங்களில் பலவாறு பேசி வருகிறோம். ஆனால், சட்டம் தன் ஆட்சியைச் செலுத்த வேண்டுமென்று வலியுறுத்திய தொழிலாளர்கள் தண்டிக்கப் பட்டிருக்கிறார்கள். சட்டம் என்ன வரையறுத்திருக்கிறதோ, சட்டம் எதை உரிமையென்று வழங்கியிருக்கிறதோ அவற்றை அனுபவிக்க முயன்ற முயற்சி குற்ற நடவடிக்கையாகக் கருதி தடுக்கப்பட்டிருக்கிறது. இது தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான சம்பவமாக ஈரோட்டில் T.T.S பஸ் கம்பெனியில் நடைபெற்றிருக்கிறது. இந்தச் சம்பவத்தை நான் மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். இதில் நான் தங்கள் மூலமாக மாநில அரசிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, ஒரு தொழிலாளி என்ற முறையில் அவனுக்கு அரசியல் சாசனம் வழங்கியுள்ள உரிமைகளை நிலைநிறுத்திக்கொள்வதற்கு, சங்கம் அமைத்து போராடுவதற்குரிய சங்க உரிமையை அடிப்படை உரிமையாக வழங்கியிருக்கிறது. இந்த அடிப்படை உரிமை எந்த வட்டத்திலும், எந்த வகையிலும் பாதிக்கப்படலாகாது. ஆனால், அந்த அடிப்படை உரிமை ஈரோடு போன்ற பல்வேறு நகரங்களில் தனியார் துறை பஸ் கம்பெனிகளில் இன்றைக்கு தமிழ்நாட்டில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை மிகுந்த மனவேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, அரசியல் சாசன ரீதியான உரிமை பாதிக்கப்பட்டிருப்பதோடு, குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் மாநில அரசு அறிவித்த அறிவிக்கையின்படியான சம்பளம், இதர பஞ்சப்படிகளும் அவர்களுக்கு வழங்கப்படவில்லையென்றும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, சட்டம் தன் ஆட்சியைச் செலுத்த வேண்டுமென்று வலியுறுத்துவது என்பது எப்படி குற்ற நடவடிக்கையாகும் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டில் பல்வேறு சட்டங்கள் தொழிலாளர்களுக்கு இருக்கின்றன. ஆனால், சட்டங்கள் இருப்பதை அனுபவிக்கின்ற உரிமை தொழிலாளிக்கு இல்லை. சட்டம் போடப்படுவது தொழிலாளர்கள் அனுபவிக்க வேண்டும் என்பதற்குத்தான். தொழிலாளிகள் அவ்வாறு அனுபவிக்க முடியவில்லை. இதிலே என்ன நடந்திருக்கிறது என்றால், அதாவது வார்த்தைகளில் சொல்ல முடியாத ஒரு அக்கிரமச் செயல் அங்கே ஈரோட்டில் நடைபெற்றிருக்கிறது. இந்தியத் தொழில் தகராறு சட்டப்படி முன்னறிவிப்பு நோட்டீஸ் கொடுத்து, இந்தக் கோரிக்கைகளை

நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்தினர். அந்தக் குறிப்பிட்ட காலவரம்புக்குள் அவை பேசி தீர்க்கப்படவில்லை யென்பதோடு. தொழிலாளர் துறையில் நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தையிலும் ஒப்புக்கொள்ளப்படவில்லை, இறுதியாக சட்டரீதியான உரிமைப்படி அவர்கள் முன்னறிவிப்பு நோட்டீஸ் கொடுத்து மேற்கொண்ட வேலை நிறுத்தத்தில், குறிப்பிட்ட சுமார் 60 சமூக விரோதிகள் சென்று அங்கேயிருந்த தொழிலாளர்களை விரட்டி அடித்துவிட்டு அங்கேயிருந்த பஸ்ஸை ஷெட்டுக்குள்ளேயிருந்து ஷெட் அவுட் செய்துள்ளது. என்பது, பகிங்கிரமாக இந்தியத் தொழில் தகராறு சட்டம் தொழிலாளர்களுக்கு வழங்கியிருக்கின்ற வேலைநிறுத்த உரிமையின் மீது தொடுக்கப்பட்ட கொடூரத் தாக்குதலாகும். இந்தக் கொடூரத் தாக்குதலை நிச்சயம் அனுமதிக்கக் கூடாது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

அதே போல உடுமலைப்பேட்டையிலேயும் நடந்திருக்கிறது. அங்கேயும் வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களைக் கடந்த தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராகப் போட்டியிட்ட நபர் அங்கிருநத பல்வேறு சமூக விரோத சக்திகளையும் திரட்டி அந்தத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்திற்கு எதிராகப் பலாத்காரமாகச் செயல்பட்டிருக்கிறார். ஆகவே இந்தத் தனியார் துறை பஸ் தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலும், இவர்களுக்கு எந்தவிதமான உரிமைகளும் இல்லாமல், ஒருவித கொத்தடிமைகளைப் போல் நடத்தப்பட்டு வருகிறார்கள். இவர்கள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும். விடுவிப்பதற்கான முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். இதில் மூன்று விஷயங்களை மாநில அரசு தெரிவிக்க வேண்டும். அரசியல் சாசனப்படியான உரிமைகளைத் தமிழ்நாட்டில் மறுப்பவர்களுக்கு எதிராக மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா? எடுக்காதா? என்பது ஒரு விஷயம். இரண்டாவது, சட்ட ரீதியான உரிமைகளை அமலாக்குங்கள் என்று போராடுகிறபோது போலீசார் ஏன் தொழிலாளிகளின் போராட்டத்தில் தலையிட வேண்டும்? இந்திய தண்டனைச் சட்டம் 506(1)-ன் கீழ்-Non Bailable பிரிவுகளில் வழக்குப்போட்டு கைது செய்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட ஆறு இடங்களில் இத்தகைய வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. எனவே சட்டத்தை அமலாக்குங்கள் என்று சொல்லிப் போராடிய தொழிலாளர்களின்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற



உத்தரவிடவேண்டும். மூன்றாவது, சட்டப்படி அறிவிக்கப்பட்டிருக்கிற உரிமைகளை அமலாக்க முதலாளிகளின் மாநில சங்கத்தை அழைத்து தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசி ஒரு சுமுக முடிவு காண வேண்டும். அதேபோல், எதிர்காலத்தில் அவர்கள் சங்கம் வைக்கிற உரிமை எந்தவகையிலும் பாதிக்கப்படாது என்கிற உத்தரவாதத்தை மாநில அரசு ஏற்படுத்த வேண்டும். இவற்றை ஏற்படுத்துமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்துக்களின்மீது சில விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பெரியார் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களுக்குமுன் ஏற்பட்ட தனியார் பேருந்து அதிபர்கள், தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து 9-12-1996 மற்றும் 17-2-1997 ஆகிய நாட்களில் பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, பெருந்துறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. என். பெரியசாமி, பெருந்துறை தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.கே. நல்லப்பன், கூடுதல் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர், பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர், தனியார் பேருந்து அதிபர்கள், சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சுமுகமானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அப்போது எடுக்கப்பட்ட முடிவிற்குப்பின், கடந்த 7-3-1997 வரை, பேருந்து அதிபர்களாலோ, தொழிற் சங்கத் தலைவர்களாலோ எந்தவிதமான பிரச்சினையும் ஏற்படுத்தப்படவில்லை. கோவை, பெரியார் மாவட்டங்களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தத் தொழிலாளர்கள் பிரிவு ஏ.ஐ.டி.யு.சி. சார்பாகத் தனியார் பேருந்துகளில் பணிபுரியும் பஸ் தொழிலாளர்களுக்கென கோவை, பெரியார் மாவட்ட தனியார் துறை மோட்டார் தொழிலாளர்கள் சங்கம் என்ற அமைப்பு தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஈரோடு-மேட்டூர் ரோட்டில் உள்ள தொழிலாளர்கள் டிரான்ஸ்போர்ட் சர்வீஸ் என்ற பேருந்துக் கம்பெனியில் பணிபுரிந்த தொழிலாளர்களில், சுப்பிரமணியன், குப்புசாமி, தேவசேனாதிபதி, அப்புசாமி, ராம்குமார் ஆகிய ஐந்து பேர்களை வேலையிலிருந்து நிர்வாகம் நீக்கியுள்ளது. இந்த ஐந்து பேர்களுக்கும்

மீண்டும் வேலை கேட்டும், பணி நிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் 7-3-1997 அன்று காலையில் அந்தப் பேருந்து கம்பெனி முன்பு ஏ.ஐ.டி.யு.சி. தொழிற் சங்கத்தின் கொடிகளை நட்டு அந்தக் கம்பெனியின் நான்கு பேருந்துகளையும் நிலையத்திலிருந்து வெளியே எடுக்கக்கூடாது என்று ஓட்டுநர் சுப்பிரமணியன் தலைமையிலே போராட்டத்தில் ஈடுபட்டனர். பஸ் உரிமையாளர்கள் பல முறை கேட்டும், தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் பேருந்துகளை வெளியே விட தொழிலாளர்கள் மறுத்துவிட்டனர். அதிகாரிகள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேளாமல், சென்னையிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் திரு. என். பெரியசாமி அவர்கள் தெரிவித்தால்தான் பேருந்துகளை வெளியே வழித்தடங்களில் செல்ல விடுவோம் என்றும் தெரிவித்துவிட்டனர்.

இதன்பின், மாவட்ட அமைச்சரான மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி பேருந்து அதிபர்களையும், சங்க நிர்வாகிகளையும் சென்னைக்குப் பேச்சுவார்த்தைக்காக வரும்படி அழைத்ததன் பேரில் 8-3-1997 அன்று சென்னை வந்த பேருந்து உரிமையாளரும், சங்க நிர்வாகிகளும் சென்னையிலேயே இருந்தனர். இருந்தாலும், 18-3-1997 அன்று வரை பேருந்துகள் வழித்தடங்களில் ஓடாமல் வைக்கப்பட்டிருந்தன. திரு. சுப்பராயன் எம்.எல்.ஏ.. அவர்களும், திரு. பழனிசாமி, எம்.எல்.ஏ. அவர்களும் இதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடுத்த வேண்டுகோளின்பேரில் நானும் சுற்றுப்புறச்சூழல் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி அவர்களும், எதிர்கட்சித் தலைவர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களும், மற்றும் சி.பி.ஐ. கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பராயன், திரு. பெரியசாமி ஆகியோர், பேருந்து உரிமையாளரோடும், தொழிற் சங்க நிர்வாகிகளோடும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். பேச்சு வார்த்தையின்போது, மாவட்டம் முழுமையுள்ள அனைத்துத் தனியார் பேருந்துகள் உரிமையாளர்களும், தொழிலாளர்களும் 12(3) ஒப்பந்தம் போட வேண்டும் என்றும், தனியாகக் கம்பெனிகளும் தொழிலாளர்களும் ஏற்கெனவே போட்டுக்கொண்டுள்ள ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று தொழிற் சங்கத் தலைவர்கள் தெரிவித்தனர். அனைத்தையும் பேசித் தீர்த்துகொள்ளலாம் என்றும், பேருந்துகளைக் கடந்த பத்து நாட்களாக சிறை வைத்திருப்பது நல்லதல்ல என்றும் தொழிற் சங்கத் தலைவர்களிடம் கோரப்பட்டது. இந்த நிலையில் 20-3-1997 அன்று காலை பேருந்து உரிமையாளர்கள் தங்களது விசுவாச ஊழியர்கள் மற்றும் உறவினர்களுடன் ஷெட்டிற்குச்





சென்று மூன்றுப் பேருந்துகளையும் ஷெட்டை விட்டு வெளியே எடுத்துச் சென்றுவிட்டனர்.

முற்பகல் 10-45

அந்த நேரத்தில் போராட்டப் பந்தலில் பேருந்துத் தொழிலாளர்கள் ஏழு பேர் மட்டுமே இருந்திருக்கிறார்கள். அவர்கள் வாய்மொழிமூலம் ஆட்சேபணை தெரிவித்திருப்பதைப் பொருட்படுத்தாது, பேருந்து உரிமையாளர்கள் மூன்று பேருந்துகளையும் வெளியே எடுத்துச் சென்று விட்டனர். அந்தச் சமயத்தில் இருதரப்பிலும் யாரும் கைகலப்பிலோ, அல்லது அடிதடி, கலாட்டா போன்ற நடவடிக்கைகளிலோ ஈடுபடவில்லை. அதன்பின்னர், தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஈரோடு, மத்தியப் பேருந்து நிலையத்தில், தனியார் பேருந்துகளை இயக்க மறுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். உடனடியாக சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றும் பொருட்டு, ஈரோடு நகர காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் மற்றும் ஈரோடு கோட்டாட்சியர் ஆகியோர் தலைமையில் அனைத்து அதிகாரிகளும் பேருந்து நிலையம் விரைந்து சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தொழிற்சங்கச் செயலாளர் மோகன்குமார் தலைமையில், தனியார் பேருந்துகளை இயக்கக் கூடாது என்று தடுக்க முற்பட்டவர்கள் 23 பேர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. திரு. சுப்பராயன் எம்.எல்.ஏ. அவர்கள் முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்ததும் உடனடியாக தொழிலாளர்கள் அன்று மாலையே விடுவிக்கப்பட்டனர்.

பின்னர், வருவாய்த் துறை கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஆகியோர் தலைமையில், தொழிற்சங்கத்தின் சார்பாக வெங்கடாசலம், மோகன்குமார், சுப்பிரமணி மற்றும் சிலரும், தனியார் பேருந்துகளின் சார்பாக தலைவர் ஜெயராமன், செயலாளர் நாகராஜன், டி.டி.எஸ். பேருந்தினுடைய உரிமையாளர் தம்புராஜன், அவருடைய மகன் வெங்கடேசன், மற்றும் சிலரும் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர். பேச்சு வார்த்தையில் வேலையிலிருந்து நீக்கப்பட்ட டிரைவர் சுப்பிரமணி மற்றும் நான்கு பேர்களை உடனடியாக வேலைக்கு எடுத்துக்கொள்வது என்றும், இதன் மூலம் மேற்படி டி.டி.எஸ். மற்றும் அதனைச் சார்ந்த இரண்டு பஸ் கம்பெனிக்ளில் பணிபுரிவோரின் எண்ணிக்கை 21 ஆக உயர்வதால், தொழிலாளர்களுடைய எண்ணிக்கையைக் குறைப்பதற்காக மொத்தம்

17 பேர்களை வேலைக்கு வைத்துக்கொண்டு, 4 பேர்களை தொழிற்சங்கத்தின் சார்பில் பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் பெரியசாமி அவர்கள் 23-3-1997 அன்று ஈரோடு வரும்பொழுது கலந்து ஆலோசித்து பணி நீக்கம் செய்துகொள்வது என்றும் இருதரப்பிலும் ஏற்றுக்கொண்டனர்.

அந்த ஒப்பந்தத்தின்படி பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்கப்பட்டு சுமுகமாக எல்லாப் பேருந்துகளும் 21-3-1997 அன்று முதல் இயங்கி வருகின்றன. 20-3-1997 அன்று பஸ் உரிமையாளர் ஷெட்டை விட்டு பஸ்ஸை வெளியே எடுத்துச் செல்லும்போது எந்தவிதமான தகராறோ, கைகலப்போ நடைபெறவில்லை. அதுபற்றி புகார் எதுவும் தொழிற்சங்கத்தின் சார்பில் காவல் நிலையத்தில் கொடுக்கப்படவில்லை. ஆனால் 23-3-1997 அன்று தொழிற்சங்க செயலாளர் மோகன்குமார் கொடுத்த புகாரில் 20-3-1997 அன்று காலை 8.00 மணியளிவில் டி.டி.எஸ். பேருந்து உரிமையாளர் தம்புராஜன், அவரது மகன் வெங்கடேசன், அவரது சம்பந்தி சிவசபாபதி, அவருடைய மகன் சிவசெந்தில்குமார், நிறுவன மேலாளர் கோவிந்தசாமி மற்றும் அடையாளம் தெரியாத சுமார் 150 பேர் அரிவாள், கத்தி, கம்பு, தடி மற்றும் பயங்கர ஆயுதங்களுடன் வந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களை அடித்துத் தாக்கியதோடு, மூன்று பேருந்துகளையும் ஷெட்டைவிட்டு வெளியே எடுத்துச் சென்றுவிட்டனர் என்றும், இந்தச் சம்பவத்தில் முருகராஜ் உள்ளிட்ட 12 பேர் கடுமையாகத் தாக்கப்பட்டனர் என்றும் குறிப்பிட்டிருந்தது. இந்தப் புகாரை மோகன்குமார் 23-3-1997 அன்று மாலை ஈரோடு வடக்கு காவல் நிலையத்தில் யாரோ ஒரு தனி நபர் மூலமாக கொடுக்கச் சொல்லி அனுப்பியிருந்தார். இந்தப் புகார் தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

20-3-1997 அன்று காலை தொழிற்சங்கத்தின் சார்பில் போடப்பட்டிருந்த போராட்டப் பந்தலில் தொழிலாளர்கள் குறைவாக இருந்த சூழ்நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு நிர்வாகத்தினர் தங்களது பேருந்துகளை ஷெட்டை விட்டு வெளியே எடுத்துச் சென்றதாகத் தெரிகிறது. சம்பவம் நடைபெற்றதாகச் சொல்லப்படும் பேருந்து பணிமனைக்கு அருகில் பாதுகாப்புக்கு போதுமான காவலர்கள் இருந்துள்ளனர். மேலும் கொடுமையான தாக்குதலுக்கு உள்ளானதாகச் சொல்லப்படும் சசிகுமார், பாலசுப்பிரமணி, விஜயன். சுப்பிரமணி மற்றும் முருகராஜ் ஆகியோர், 20-3-1997 அன்று ஈரோடு மத்திய பேருந்து



நிலையத்தில் தனியார் பேருந்துகளை இயக்கவிடாமல் தடுக்க எத்தனித்தபோது, கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர். அப்பொழுது அவர்கள் யாரும் இவர்களைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படவில்லை. இவர்கள் மீது காயம்பட்டதாகக்கூடத் தெரிவிக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் மீண்டும் இந்தப் பிரச்சினை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அப்பொழுது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னை அழைத்து இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்று தெரிவித்ததன் பேரில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அறையில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. பாலகிருஷ்ணன், திரு. சொக்கர், மாண்புமிகு அமைச்சர் திரு. என்.கே.கே. பெரியசாமி அவர்கள், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பராயன், திரு. பெரியசாமி ஆகியோருடன் பேச்சு வார்த்தையை நடத்தினோம். அப்பொழுது பஸ் உரிமையாளரும் இருந்தார். அப்பொழுது அவர்களிடத்திலே சங்கம் வைத்துக்கொள்ளும் உரிமையை மறுக்கக் கூடாது என்றும், Minimum Wages Act-படி தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கவேண்டுமென்றும் Deputy Labour Commissioner முன்னிலையில் 12(3) ஒப்பந்தம் செய்துகொள்ளவும் முடிவு செய்யப்பட்டது. ஆனால், பஸ் உரிமையாளர் அவர்கள் சங்க உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசித்து விரைவில் அரசுக்குத் தெரிவிப்பதாகத் தெரிவித்தார். எனவே இருசாராரும் இந்த நிபந்தனையை ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில், இந்த அரசு அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு, விரைவில் 12(3) ஒப்பந்தம் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தொழிலாளர்கள்மீது போடப்பட்ட வழக்கை வாபஸ் பெறவேண்டுமென்று சொன்னார்கள். அரசு அதுபற்றி பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 10-50

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு விளக்கங்களை கீழிருந்து கொடுக்கிற அதிகாரிகள் மிகுந்த பொறுப்போடு கொடுக்க வேண்டும். இங்கே பேரவைமுன் அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்ட பதிலில் தொழிலாளர்கள் பஸ்ஸை சிறைப் பிடித்து வைத்திருப்பதைப் போன்ற ஒரு தோற்றத்தில் விபரம் சொல்லப்பட்டிருக்கிறது. நான் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புவது, தமிழ்நாட்டில் ஐ.டி. ஆக்ட் செயல்படுகிறதா, இல்லையா? ஐ.டி. ஆக்ட் பிரிவு 22(1)-ன்படி, பிராப்பராக நோட்டீஸ் கொடுத்து மேற்கொள்ளப்பட்ட

[திரு. கே. சுப்பராயன்] [1997 மார்ச் 31

வேலை நிறுத்தம், எப்படி பஸ்ஸை சிறைப் பிடித்ததாக வரும் என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். பேரவைக் குறிப்பேட்டில், இந்திய அரசால் பிரகடனப்படுத்தப்பட்ட, இந்திய தொழில் தகராறு சட்டப்படி நோட்டீஸ் கொடுத்து மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தத்தை, 60 பேர் சேர்ந்து கொடிகளைப் பிடுங்கி எறிந்துவிட்டும், பஸ்ஸை எடுத்துக்கொண்டும் செல்லலாம் என்றால், ஜனநாயகத்தைக் கேலி செய்வதாகாதா? தமிழ்நாட்டில் சட்டபூர்வமான வேலை நிறுத்தங்களை நடத்தமுடியுமா? தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே அது திருத்தப்பட வேண்டுமென்பதை தங்கள் மூலம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சங்கத்தில் சேர்ந்ததற்காக வேலை நீக்கம் செய்யப்பட்ட 200-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலாளிகளின் நடவடிக்கைகளால் என்னுடைய ஒவ்வொரு மயிர்க் கால்களிலும் ஆவேசம் பொங்குகிறது. தமிழ்நாட்டில் உள்ள முதலாளிகள் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக நடத்திக் கொண்டு, எந்தவிதமான உரிமைகளும் கொடுக்காமல், சங்கம் என்று கேட்டால், காலண்டரிலிருந்து காகிதத்தைக் கிழித்து எறிவதைப் போல, தொழிலாளர்களைக் கிழித்தெறிகிறார்கள். இதைத் தடுக்க வழியில்லை. எதிர்த்துப் போராடினால் சிறை, வழக்கு, நான்-பெயிலபிள் வழக்கு என்றால் எப்படி தொழிலாளர்களின் உரிமைகள் காப்பாற்றப்படும் என்பதைப் பேரவையின் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே தொழிலாளர்களுக்கு முழுக்க, முழுக்க ஆதரவு தருகின்ற அரசாங்கம் என்பதை நான் முதலில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் தெரிவித்த இந்தக் கருத்துக்கள் எல்லாம் தொடர்ந்து டிசம்பர் மாதம் முதற்கொண்டு அந்தப் பகுதியிலே நடந்து வரக்கூடிய பிரச்சினை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பிரச்சினை எப்படியாவது தீர்க்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான், இரண்டு முறை இதற்கான முயற்சிகளிலே ஈடுபடும்படி கட்டளையிட்டார்கள். அதன்படி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர், உறுப்பினர்கள் திரு. சொக்கர், திரு. சுப்பராயன், திரு. பெரியசாமி மற்றும் அமைச்சர் திரு. என்.கே.கே. பெரியசாமி, அத்தனை பேரும் கலந்து பேசினோம். மிக முக்கியமான இந்தப் பிரச்சினையிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் தெரிவித்ததைப் போல, ஒன்று தொழிற் சங்கம் வைத்துக்கொள்ளக் கூடிய உரிமை



1997 மார்ச் 31] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

மறுக்கப்படக் கூடாது, இரண்டாவது மினிமம் வேஜஸ் ஆக்ட்டின்படி சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்; வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மறுபடியும் வேலை கொடுக்க வேண்டும்; இந்த நிபந்தனைகள் குறித்து சேலம், டெபுடி கமிஷனர் முன்னாலே 12(3) ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. அந்த நேரத்திலே பஸ் உரிமையாளர்களுடைய சங்க நிர்வாகிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. நாங்கள் வேலை கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். 12(3) ஒப்பந்தம் செய்து கொள்வதைப்பற்றி மட்டும் 'நாங்கள் மற்ற சங்க நிர்வாகிகளோடு கலந்து பேசி அரசுக்கு நிச்சயமாகத் தெரிவிக்கிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். கண்டிப்பாக, விரைவில் பஸ் உரிமையாளர்களையும் அழைத்து, உங்களையும் அழைத்து, இதற்கு ஒரு நிரந்தரத தீர்வு காணப்படும் என்பதை அவைக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### கோவை மாநகர் வார்ப்பட சாலைகளை உயர்நீதிமன்றத் தீர்ப்பினடிப்படையில் மூடவேண்டியுள்ளமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன் கீழ் கோவை மாநகர் வார்ப்பட சாலைகளை உயர்நீதிமன்றத் தீர்ப்பினடிப்படையில் மூட வேண்டியுள்ளமை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. சுப்பராயன், திரு. பா. அருண்குமார், திரு. சி. இரா. இராமச்சந்திரன் மற்றும் திரு. ஆ. நடராசன் ஆகியோர் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கோவை மாநகர் பகுதியில் வார்ப்பட சாலைகளை உயர் நீதிமன்ற தீர்ப்புகளுக்கிணங்க மூட வேண்டியுள்ளதால் ஏற்படக்கூடிய விளைவுகளை அரசு நீக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது :

## அறிக்கை

கோவை மாவட்டத்தில் 535 வார்ப்பட சாலைகள் அமைந்துள்ளன. இவற்றில் 161 வார்ப்பட சாலைகள் முதன்மை குடியிருப்புப் பகுதி மற்றும் கலப்பு குடியிருப்புப் பகுதியிலும், 310 வார்ப்பட சாலைகள் தொழிற்சாலைப் பகுதியிலும், 41 வார்ப்பட சாலைகள் மேற்குறிப்பிட்ட பகுதிகளைத் தவிர்த்து மற்ற வகைப்படுத்தப்பட்ட பகுதிகளிலும், எஞ்சியுள்ள 23 வார்ப்பட சாலைகள் எந்த வகையிலும் வகைப்படுத்தப்படாத பகுதியிலும் அமைந்துள்ளன. வார்ப்படத் தொழிற்சாலையின் செய்முறையில் உலோகம் உருக்குதல், அச்சு உருக்குதல், அச்சு ஊற்றுதல், வார்ப்படங்களைப் பிரித்தெடுத்தல், வார்ப்படங்கள் மேலுள்ள மண் மற்றும் கசடுகளைப் பிரித்தெடுத்தல் ஆகிய பணிகள் அடங்கியுள்ளது. இத் தொழிற்சாலைகளில் வாயுக் கழிவுகள் மற்றும் மிதக்கும் திடப் பொருட்கள் ஆகியவை உள்ளன. இத் தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள உலைகள், மண் கலக்கும் பிரிவு, மண் பிரித்தெடுக்கும் பிரிவு, ஷாட் பிளாஸ்டிங் பிரிவுகளிலிருந்து தூசுகள் வெளிப்படும். மேலும், இத் தொழிற்சாலைகளிலிருந்து திடக் கழிவுகளாக கசடு மற்றும் மண் ஆகியவைகளும் வெளியேற்றப்படுகின்றன.

2. 1992, 1995 மற்றும் 1996-ஆம் ஆண்டுகளில் அப்போதைய மாசுக் கட்டுப்பாடு வாரியத் தலைவர்கள், வார்ப்படச் சாலைகளின் பிரிதிநிதிகளின் கூட்டத்தில் கலந்து கொண்டு வார்ப்படச் சாலைகளிலருந்து வெளியேறும் வாயுக் கழிவுகள் மற்றும் மிதக்கும் வஸ்துகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த தகுந்த மாசு தடுப்புச் சாதனங்கள் நிறுவப்பட வேண்டும் என்றும், வாரிய இசைவினைப் பெற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுவரை 173 வார்ப்பட சாதனங்கள் இசைவாணைக்கு விண்ணப்பித்ததில், 114 தொழிற்சாலைகளுக்கு மட்டும் இசைவு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் எஞ்சியுள்ள 362 வார்ப்பட சாலைகள் வாரிய இசைவிற்கு விண்ணப்பிக்காமலும் காற்று மாசு தடுப்புச் சாதனங்களைப் பொருத்தாமலும் இயங்கி வருகின்றன.

3. இதனிடையே, கோவையைச் சேர்ந்த திருவாளர்கள் ராஜா இன்ஜினியரிங் மற்றும் விஜயலஷ்மி அண்டு கம்பெனி என்ற வார்ப்பட நிறுவனங்களை மூடும்படி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் டபிள்யு. பி. எண்கள் 1212 மற்றும் 1213/96-ல் வழக்குத் தொடுக்கப்பட்டன. அவற்றில் வெளியிடப்பட்டுள்ள உயர் நீதிமன்ற ஆணையின்படி, கோவை





மாவட்டத்தில் உள்ள வார்ப்படச் சாலைகளின் நிலைமை குறித்து, வாரியத்தால் ஓர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்குகள் 6-3-1997 அன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, முதன்மை மற்றும் கலப்பு குடியிருப்புப் பகுதிகளில் (Primary and mixed Residential) அமைந்துள்ள 161 வார்ப்படச் சாலைகளை மூடிவிட உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும், கலப்பு குடியிருப்புப் பகுதியில் உள்ள வார்ப்பட சாலைகள் குறித்து கோவை மாநகராட்சியால் தயாரிக்கப்பட்டுள்ள பெருநகர் வரைபடம் (Master Plan) மற்றும் தமிழ்நாடு நகர்-ஊரக அமைப்பு சட்ட விதிகள் 1971, அதன் பின்னர் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகளின்கீழ் தக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி ஆணைகளை அமுலாக்குவதில் சிரமம் ஏதேனும் ஏற்பட்டால் உயர் நீதிமன்றத்தை அணுகுமாறும் வாரியத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் முக்கியமான ஒரே ஒரு கேள்வியைத்தான் கேட்கப் போகிறேன். குடியிருப்புப் பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைந்திருப்பதால் அவை மூடப்படுவதற்குக் காரணமாக அமைந்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-55

சிங்காநல்லூர் நகராட்சியில் இருந்த பகுதியில் மாநகர எல்லைக்குள் சேர்வதற்கு முன்னர் வகைப்படுத்தப்படாத நிலையில், பல்வேறு பகுதிகளில் இதுபோன்ற 'ஃபவுண்டரிகள்' அமைந்து விட்டன. இப்பொழுது அந்தப் பகுதிகள் மாநகராட்சி எல்லைக்குள் வந்து விட்டபடியால், குடியிருப்புப் பகுதிகளாக மாறிவிட்டபடியால் பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன, எனவே, மாநில அரசு உயர் நீதிமன்றத்தில் 'ஸ்பெஷல் பெட்டிஷன்' ஒன்று கொடுத்து, குறிப்பிட்ட அந்த கால எல்லையைக் கொஞ்சம் நீட்டித்து வாங்கித் தந்தால்தான், உண்மையிலேயே அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வளிக்க முடியும். நீதிமன்றத் தீர்ப்பைப் பற்றி நான் குறை சொல்ல விரும்பவில்லை. ஆனால், நீதிமன்றத் தீர்ப்பு சமுதாயத்தில் ஏற்படுத்தியிருக்கின்ற விளைவுகளைப் பற்றியே நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்படி தொழிற்சாலைகள் ஒவ்வொன்றாக மூடப்பட்டு வந்தால் தமிழ்நாட்டில் தொழிற் துறையே நாசமாக்கப்பட்டுவிடும். நீரும், நிலமும், காற்றும் மாசுப்படுவதை நான் ஆதரிக்கவில்லை. ஆனால், மாசுப் படுத்தப்பட்ட ஒன்றை ஒழுங்கமைப்பது

[திரு. கே. சுப்பராயன்] [1997 மார்ச் 31

என்பது நினைத்த நொடிப்பொழுதில் நிகழ்ந்துவிடுகின்ற ஒரு விஷயம் அல்ல. அதற்கு ஒரு குறிப்பிட்ட காலவரையறை வேண்டும். எனவே, அந்தக் காலவரையறையை வழங்குவதற்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் விசேஷ மனு ஒன்றைத் தாக்கல் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் நீங்கள் கொஞ்சம் இருங்கள். நான்கு உறுப்பினர்களையும் விளக்கம் கேட்க நான் அழைத்து விடுகிறேன். அவர்கள் விளக்கம் கேட்ட பின்பு உங்களுடைய பதிலை மொத்தமாகச் சொல்லுங்கள். திரு. பா. அருண்குமார்.

**திரு. பா. அருண்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் இருக்கின்ற பல்வேறு தரப்பட்ட மக்களும் இந்த 'ஃபவுண்டரி' தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், இந்தத் தொழிற்சாலைகள், 4 வார காலத்திற்குள் மூடப்பட வேண்டும், அல்லது வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டும் என்று 6-3-1997 அன்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பதிவு செய்த மற்றும் பதிவு செய்யாத ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இன்றைக்கு கோவை மாநகரிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும், சுமார் 6,350 தொழிற்சாலைகள் மேற்படி ஃபவுண்டரி தொழிற்சாலைச் சார்ந்த தொழிற்சாலைகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. தற்போது, சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதனை அரசு பரிசீலனை செய்து, கொடுக்கப்பட்டுள்ள கால அவகாசத்தை நீட்டித்துக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆ. நடராசன்,

***திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 535 தொழிற்சாலைகளில் 362 தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படக்கூடிய இந்தப் பிரச்சினையில், மேலும் கால அவகாசம் பெறுவதற்கு உயர்நீதிமன்றத்தினை அணுக அரசு முழு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.



1997 மார்ச் 31]

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள், தொழிற்சாலைகளைப் பற்றியும் தொழிலாளர்களுடைய நிலை பற்றியும், தொழிற்சாலைகளினுடைய அமைப்பினைப் பற்றியும் விளக்கமாக இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதிலே மிகவும் வருத்தத்திற்குரிய செய்தி என்னவென்றால், தொடர்ந்து, 1992-ஆம் ஆண்டு முதல் 1996-ஆம் ஆண்டு வரை, ஏறத்தாழ 535 தொழில் அதிபர்களும் அழைக்கப்பட்டு, முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டு, அவர்கள் செயல்படாத காரணத்தினால் கோவையைச் சார்ந்த திருவாளர்கள் இராஜா இன்ஜினியரிங் கம்பெனி மற்றும் விஜயலஷ்மி அண்டு கம்பெனி ஆகிய இரண்டு 'ஃபவுண்டரி'-களையும் மூடும்படி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் உத்தரவிட்டது. அதனை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் கொடுத்த ரிட் பெட்டிஷன் நம்பர் 1212/96 மற்றும் 1213/96 ஆகியவற்றின் தீர்ப்பினால் ஏற்பட்ட விளைவுதான் குடியிருப்பு பகுதியிலே இருக்கின்ற, ஏறத்தாழ 161 தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டுமென்றும், மீதியிருக்கின்ற 374 தொழிற்சாலைகள் 15-4-1997-க்குள் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் விதிமுறைகளைக் கடைப்பிடிக்காவிட்டால் மூடப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்றும் 6-3-1997 தேதிய தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, பலமுறை இந்தத் தொழில் அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தும், 535 பேர்களில் 173 பேர்தான் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினை அணுகினார்கள். அதிலே 114 பேர்தான் தக்க நடவடிக்கைகளை எடுத்து, தங்களுடைய தொழிற்சாலைகளை நடத்திக்கொள்ளலாம் என்ற அனுமதியினை மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து பெற்றிருக்கிறார்கள்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர்-தலைமை)**

முற்பகல் 11-00

ஆகவே, இங்கே பலதரப்பட்ட கருத்துகளைச்சொன்னாலும், தொழிற்சாலைகளை மூடுவது என்பது அரசின் கொள்கை அல்ல. ஆனால், தொழிற்சாலைகளினுடைய அதிபர்கள், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய ஒருசில அடிப்படை யோசனைகளைக்கூட மறுத்துக் கொண்டிருப்பது, எந்தவிதத்திலே நியாயம் என்பது தெரியவில்லை.

[திரு. என். கே. கே. பெரியசாமி] [1997 மார்ச் 31

ஏதோ ஒரு ஆலை மூடப்பட்ட ஒரு காரணத்தை வைத்து, அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று பெற்ற தீர்ப்பின் விளைவாகத்தான், மற்ற ஆலைகளும் இப்போது மூடப்பட வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. எந்த நேரத்திலும், அரசு, வழக்கை, உயர்நீதிமன்றத்திற்கோ, உச்ச நீதிமன்றத்திற்கோ எடுத்துக் கொண்டு செல்ல விரும்புவதில்லை. மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய உத்தரவை வைத்தே, அங்கே இருக்கின்ற தொழில் அதிபர்கள், உயர்நீதி மன்றத்திற்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் செல்வதால் ஏற்படுகின்ற பிரச்சினைகள்தான், இன்று பெரிய அளவிலே, பூதாகரமாக உருவெடுத்து வந்திருக்கிறதே தவிர, வேறு எந்தக் காரணத்தினாலும் இந்தப் பிரச்சினை எழவில்லை. நல்ல முறையிலே இவ்வாறு காரியங்கள் முறைப்படுத்தப்படுவதால், எதிர்காலத்தில் இவையெல்லாம் நல்ல அணுகுமுறைகள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், பல சூழ்நிலைகளிலே, பற்பல தொழிற்சாலைகள் வெளியேற்றுகின்ற புகை, வெளியே எடுத்துக் கொட்டப்படுகின்ற மண், இப்படிப் பல்வேறு பிரச்சினைகள், நம்மையும் அறியாமல் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் இப்போது நடைபெறுகின்றன. ஆகவே, இதற்கு ஒரு நல்ல முடிவு காண்பதற்கு, நிச்சயம் சம்பந்தப்பட்ட தொழில் அதிபர்களுடன் கலந்து பேசுகின்ற பணியையும், அதற்குத் தேவையான வழிமுறைகளைச் செய்வதற்குரிய ஆலோசனைகளையும், அதற்குத் தேவையான நாட்கள் அதிகப்படுத்த வேண்டுமென்றால், அதுகுறித்து உயர்நீதிமன்றத்திலே கேட்பதற்கான வழிமுறைகள் ஆகியவற்றையும், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆராயும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 5-முத்திரைத்தாள்கள்-நிருவாகம்

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்) :** மானியக் கோரிக்கை எண் 5 முத்திரைத்தாள்கள்-நிருவாகம், மாண்புமிகு ஊரகத் தொழில்கள் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,



1997 மார்ச் 31] [திரு. இ. பெரியசாமி]

"முத்திரைத்தாள்கள்-நிருவாகம் பற்றிய 5-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ. 5,13,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1160, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

'வேலூர் சத்துவாச்சாரிக்கு நீதிமன்றங்கள் மாற்றப்படுவதால், முத்திரைத் தாள்களை விற்கும் விற்பனையாளர்களை நியமனம் செய்ய வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள்-நிருவாகம் பற்றிய 5-ஆம் எண். மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,13,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்) :** வெட்டுத் தீர்மானம் எண் 364, திரு. ஜி. பழனிசாமி,

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள்-நிருவாகம் பற்றிய 5-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,13,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்) :** வெட்டுத் தீர்மானம் எண் 90, திரு. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'முத்திரைத்தாள் விற்பனையாளர் தரகு (Commission) தொகையை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் - நிருவாகம் பற்றிய 5-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,13,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** வெட்டுத் தீர்மானம் எண் 92, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் - நிருவாகம் பற்றிய 5-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,13,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** வெட்டுத் தீர்மானம் எண் 367, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் - நிருவாகம் பற்றிய 5-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,13,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** வெட்டுத் தீர்மானம் எண் 366, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

'தமிழகத்தில் சில இடங்களில் பதிவு செய்யப்படும் சொத்துக்களின் மதிப்பைவிட, முத்திரைத்தாள்களின் விலை அதிகம் இருப்பதைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் - நிருவாகம் பற்றிய 5-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,13,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."





**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** வெட்டுத் தீர்மானம் எண் 803, திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில இல்லை.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1309, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 804, திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1525, திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை.

## கோரிக்கை எண் 6—ஆவணப் பதிவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 6—ஆவணப் பதிவு, மாண்புமிகு ஊரகத் தொழில்கள் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆவணப் பதிவு பற்றிய 6-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 32,72,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1162, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வேலூரை அடுத்த சத்துவாச்சாரியில், மாவட்டப் பதிவாளர் அலுவலகம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,72,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 371, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,72,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 94, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,72,97,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 95, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வழிகாட்டி மதிப்பீடுகளைத் தயாரிக்கும் முறையை அறிஞர் அண்ணா காலத்தில் உருவாக்கப்பட்ட முறைக்கு மாற்றியமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,72,97,000-ல்" ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1209, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'திருவள்ளுவர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, மாத்தூரில், சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆவணப் பதிவு பற்றிய எண் 6–ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,72,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 374, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் அரசாங்கக் கட்டடத்தில் இயங்கிவரும் சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம் பழுதடைந்து விட்டதால், அங்கே ஒரு புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,72,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2819, திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தருமபுரி' மாவட்டம், பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளியில், சார் பதிவாளர் அலுவலகம் அமைப்பதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,72,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 373, திரு. அ. வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தமிழ்நாட்டில் பதிவு செய்யப்படாத சீட்டு நிறுவனங்களைத் தடை செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,72,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1997 மார்ச் 31

**கோரிக்கை எண் 47—ஊரகத் தொழில்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47, ஊரகத் தொழில்கள், மாண்புமிகு ஊரகத் தொழில்கள் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47–ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 94,75,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1189, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் வாணியம்பாடி தாலுக்கா, ஆலங்காயம்-வாணியம்பாடி ரோடில், ஊரகத் தொழில்களைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 94,75,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1210, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47–ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 94,75,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 11.05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 254, திரு. கே. சுப்பராயன்.



1997 மார்ச் 31]

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறும் ரூ. 94,75,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 255, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறும் ரூ. 94,75,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 664, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், கிள்ளைப் பகுதிகளில் மணிலா மகசூல் அதிகமாக உள்ளதால் கடலை எண்ணெய் தொழிற்சாலை அமைப்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறும் ரூ. 94,75,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**கோரிக்கை எண் 60—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 60, ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. இ. பெரியசாமி] [1997 மார்ச் 31

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 60–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 1,11,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1207, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வாலாஜாபேட்டை வட்டத்தில ஊரகத் தொழில்துறை மூலம் காகித அட்டை தொழிற்சாலையை மானியம் தந்து லாபகரமாக இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 60–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், ஒதுக்கப்பெறும் ரூ. 1,11,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 725, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 60–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறும் ரூ. 1,11,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 317, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 60–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறும் ரூ. 1,11,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



1997 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 722, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 60–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறும் ரூ. 1,11,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2835, திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தருமபுரி மாவட்டம்-பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட இராமங்களில் வீட்டில் இருந்தபடியே கூடை முனைவோருக்கு கடன் வசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 60–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறும் ரூ. 1,11,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 724, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

'புவனகிரி தொகுதியில் ஊரகத் தொழில் துறை ஒருங்கிணைந்த செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 60–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறும் ரூ. 1,11,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



216825
D
V24, 31'97

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்கள் நிருவாகம், ஆவணப் பதிவு, ஊரகத் தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவை பதிவேட்டில் பதித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதில் உரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. திரு. என்.ஆர். அழகராஜா.

***திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் பத்திரப் பதிவுத் துறையை எடுத்துக் கொண்டால் 133 வயதாகின்ற இந்தத் துறை ஆண்டுதோறும் 750 கோடி ரூபாய் வருவாயில் இயங்கி வருவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாநிலத்திற்கு வருவாயை ஈட்டுகின்ற பல துறைகளிலே இது முதல் மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்று சொல்லும்போது அதனுடைய முக்கியத்துவத்தை நாம் அனைவரும் உணர்ந்தவர்களாக இருக்கிறோம். இந்தத் துறை பல ஆயிரக்கணக்கான பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், இந்தத் துறையை அணுகக்கூடிய பல ஆயிரக்கணக்கான மக்களும் இதனால் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். இதில் குறிப்பாக பத்திரப் பதிவை எழுதுகின்றவர்களுக்கும், பத்திரப் பதிவை தட்டச்சு மூலமாக பதிவு செய்கின்றவர்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 1995-96 ஆம் ஆண்டில் 5 சார் பதிவாளர் அலுவலகங்களை மூடுவதற்கு கடந்த கால ஆட்சியில் முயற்சி செய்யப்பட்டிருந்தபோதிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலையீட்டின்படி அவை ரத்து

@ 485-544-ஆம் பக்கங்களில் 1 மற்றும் 2 ஆக இணைப்புகள் அச்சிடப்பட்டுள்ளன.



செய்யப்பட்டு, புதிதாக 5 சார் பதிவாளர் அலுவலகங்களைத் திறந்து வைத்தமைக்காக நான் எனது நன்றி கலந்த பாராட்டைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர்-தலைமை)**

இந்தத் துறையிலே 4,500 பேர்களுக்கு தட்டச்சு மூலம் பத்திரங்களைப் பதிவு செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 14 லட்சத்திற்கு மேலாக ஆண்டுதோறும் பத்திரப் பதிவுகளை செய்கின்றபோது இன்றைய சூழ்நிலையில் கையால் எழுதுவது என்பது மிகவும் குறைந்து இருக்கின்ற காரணத்தால் அனேகமாக பாதிக்கு மேல் தட்டச்சு மூலமாகத்தான் பத்திரங்கள் எழுதப்படுகின்றன. ஆகவே தட்டச்சுப் பணியாளர்கள் 4,500 பேர் என்பதை அதிகப்படுத்த வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். 4,500 பேர்களுக்கு தட்டச்சு மூலமாக பத்திரப் பதிவு செய்ய அனுமதி வழங்கியுள்ள அதே நேரத்தில் அதில் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும். கடந்த காலங்களில் அரசு வேலை வாய்ப்புகளில் உடல் ஊனமுற்றவர்களுக்கு 3 சதவீதம் வழங்க வேண்டுமென்று இருந்தாலும்கூட அந்த 3 சதவீத வேலை வாய்ப்பை அவர்களுக்கு அளிக்க முடியாத நிலைமை இருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆகவே உடல் ஊனமுற்ற பெண்களுக்கு, தட்டச்சு பயிற்சி பெற்றவர்களுக்கு இதில் நீங்கள் அனுமதி வழங்க வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11.10

அடுத்து, சென்னை நகரிலுள்ள 26 சார் பதிவாளர் அலுவலகங்கள் கணிப்பொறி மூலமாக இயக்கப்படுவதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்வது, தமிழகத்திலே இருக்கக்கூடிய 46 மாவட்டப் பதிவு அலுவலகங்களிலேயும்கூட முக்கியத்துவம் அளித்து, கணினிப் பொறிகளை அங்கே இயக்க வேண்டும் என்றும் மற்றும் அவற்றை ஒன்றாக இணைக்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே அரசுக்குத் தெரியப்படுத்திடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதற்கு அடுத்தபடியாக, பத்திரங்கள் எழுதுவதற்கு ஒரு வேல்யூவேஷன் இருக்கின்றது. ஒவ்வொரு பகுதிக்கும் அதற்கு விலை மதிப்பு உண்டு என்பது பத்திரப் பதிவு அலுவலகத்திலேயே இருக்கின்றது. பல

இடங்களிலே அதனுடைய விலை மதிப்பானது, அதிகப்படுத்தப்பட்டதாக இருக்கின்றது. சில இடங்களிலே குறைந்ததாகவும் இருக்கின்றது. குறிப்பாக என்னுடைய தேனி அல்லி நகரப் பகுதியைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய நிலத்தினுடைய மதிப்பு, தேனியிலே இருக்கக்கூடிய மதிப்பைக் காட்டிலும், பல ஆண்டுகளாக அதிகமாக இருந்து கொண்டிருக்கின்றது. அல்லி நகரப் பகுதி என்பது விவசாயிகள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு பகுதியாகும். இதனால் என்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்று சொன்னால், பொதுவாக அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பத்திரங்களைப் பதிவு செய்வதற்கு அஞ்சுகிறார்கள். ஏனென்றால் உண்மையான மதிப்பு குறைவாக இருக்கின்றபோது, அதிகமான மதிப்பிற்கு அவர்கள் பத்திரங்களை வாங்க வேண்டியிருக்கின்றது. அதிகமான மதிப்பிற்கு பத்திரங்களினுடைய பதிவுக் கட்டணங்களை அவர்கள் செலுத்த வேண்டிய காரணத்தினாலேதான் அவர்கள், ஒரு அக்ரிமெண்ட் மூலமாகவோ அல்லது வேறு விதமாகவோ பதிவு செய்து கொள்கிறார்கள். எனவே, கட்டணம் கிடைப்பது என்பது பதிவுத் துறைக்குக் குறைவாக கிடைக்கின்றது. இதுபோன்று பல இடங்களிலே இருக்கின்றது என்பதனை அரசு உணர்ந்து அவற்றையெல்லாம் சரி செய்ய வேண்டுமாய் நான் கேட்டுக் கொள்கிறேன். அதிகமாக இருக்கக்கூடிய இடங்களிலே குறைவாகவும், குறைவாக இருக்கக்கூடிய இடங்களிலே அதிகப்படியாகவும் உள்ளதால், மீண்டும் சர்வே செய்து ஆவன செய்ய வேண்டுமாய், நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு குடும்பத்தில், அவர்களுடைய மூதாதையருடைய சொத்தினைப் பதிவு செய்கிறபோது, அல்லது மூதாதையர்களுடைய சொத்தினைத் தங்களுக்குள் பாகப் பிரிவினைகள் செய்து கொள்கின்றபோது, அந்த நிலத்தினுடைய மதிப்பு என்ன இருக்கின்றதோ அதற்கேற்றவாறு கட்டணங்களை முழுமையாகச் செலுத்தித்தான் அவர்களுக்குள் பாகப் பிரிவினை எழுத வேண்டி இருக்கின்றது. இங்கே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதாவது, பல கம்பெனிகளில் இருக்கக்கூடிய ஷேர்கள் எத்தனை இலட்சம் ரூபாயாக இருந்தாலும் சரி, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புடையதாக இருந்தாலும் சரி, அவற்றை ஒருவருக்கு விற்பனையோ அல்லது மாற்றமோ செய்ய வேண்டுமென்று சொன்னால் மிகவும் குறைந்த கட்டணத்தில் அவர்கள் மாற்றம் செய்து கொள்ளலாம். ஒரு கம்பெனியிலுள்ள ஒருவருடைய பார்ட்னர்ஷிப்பை வேறு ஒருவருக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்று சொன்னாலும்கூட ஒரு சிறிய



அக்ரிமெண்ட் மூலமாகவோ அல்லது சிறிய அளவிலே ரூ. 60 செலவில் மாற்றிக் கொள்ளலாம். ஆனால், ஒரு குடும்பத்திலே, மூதாதையரின் சொத்துக்களை, அந்தக் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களே அவர்களுக்குள் பாகப்பிரிவினை செய்துகொள்ள வேண்டுமென்று சொன்னால், முழுமையான அளவிலே பத்திரத்தினுடைய விலைகளை நாம் அதிகமாகக் கட்டிப் பதிவு செய்ய வேண்டியிருக்கின்றது. அதாவது சொத்தினுடைய மதிப்பு ரூ. 10 இலட்சம் என்றால், ஒரு குடும்பத்திலே அண்ணன், தம்பி நான்கு பேர்கள் என்றால், அவர்கள் கிட்டத்தட்ட ரூ. 1 இலட்சம் டாக்குமெண்ட் பீஸ் ஆகவோ அல்லது பேப்பராகவோ வாங்க வேண்டியிருக்கின்றது. ஒரு சொத்தை விற்றுத்தான் அவர்கள் அந்தக் கட்டணத்தைக் கட்ட வேண்டும். எனவே, மூதாதையர் சொத்தை, குடும்ப உறுப்பினர்கள் தங்களுக்குள் பாகப்பிரிவினை செய்துகொள்ள வேண்டுமென்று சொன்னால், அவர்கள் கட்டக்கூடிய அந்தக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். 1 சதவிகிதம் அல்லது 2 சதவிகிதம் கூடப் போடலாம். எனவே, அரசு, இவற்றைத் தீவிரமாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரியான பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினாலேதான் வேறு மாநிலங்களுக்குச் சென்று மக்கள் பத்திரங்களைப் பதிவு செய்கின்ற நிலைமையிருக்கின்றது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். சட்டத்தின் மூலமாக அவர்களைத் தடுத்துவிடலாம். நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அவர்கள் உண்மையிலேயே பத்திரங்களைப் பதிவு செய்கிறார்களா என்றால் இல்லை. ஒரு அக்ரிமெண்ட் மூலமாகவோ அல்லது ஒரு விடுதலைப் பத்திரம் மூலமாகவோதான் அவர்கள் செய்து கொள்கிறார்களே தவிர, அவர்கள் உண்மையான முறையிலே செய்ய வேண்டுமென்று சொன்னால், வேறு வகையிலே அவர்களுக்கு அனுகூலமாக இருக்க வேண்டுமென்று சொன்னால், இந்தக் கட்டணங்களையெல்லாம் குறைக்க வேண்டுமாய் இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பத்திரப் பதிவுகளைச் செய்கின்றபோது, பட்டா மாறுதலுக்குண்டான மனுவையும் சேர்த்து நாம் அளிக்கிறோம். எல்லாவிதமான ரிஜிஸ்ட்ரேஷனுக்கும் அது உண்டு. பட்டா மாறுதல் மனுவை நாம் அளிக்கின்றபோது, அந்த மனுவினை அவர்கள் வாங்கி வைத்துக் கொள்கின்றார்கள், சம்பந்தப்பட்டவர்களெல்லாம் கையெழுத்து எல்லாம் போட்டுத்தான் கொடுக்கின்றோம். ஆனால், பத்திரம் பதிவு செய்து முடிந்த பிறகு, பட்டா மாறுதல் ஆகின்றதா என்று சொன்னால் இல்லை. மீண்டும் பட்டா மாறுதல் செய்ய வேண்டுமென்று

சொன்னால், பதிவு செய்யப்பட்ட பத்திரத்திற்கு ஒரு ஜெராக்ஸ் நகல் எடுத்து, சம்பந்தப்பட்ட ரெவின்யூ அலுவலகத்திற்குச் சென்று, சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து. அவர்களிடத்திலே கொடுத்து, நீண்ட நாட்கள் காத்திருந்து. அல்லது ஜமாபந்தி நேரங்களிலே காத்திருந்து மீண்டும் பட்டா மாறுதல் செய்ய வேண்டியிருக்கின்றது. எந்த ஒரு டாக்குமெண்ட் பதிவு செய்யப்பட்டாலும். பட்டா மாறுதல் பத்திரத்தைக் கொடுக்கின்றபோது. அந்தப் பட்டா மாறுதலோடு, டாக்குமெண்டுகளைத் திரும்பி மக்கள் வாங்கக் கூடிய அளவிற்குச் சட்டத்திலே மாற்றம் செய்ய வேண்டும்.

பிற்பகல் 11-15

அதேபோல, கிணறு ஒன்று இருக்கிறது என்று சொன்னால், அந்தக் கிணற்றையும் சேர்த்துப் பத்திரம் பதிவு செய்கிறோம் என்று சொன்னால். அப்படிப் பத்திரம் பதிவு செய்யும்போது. கிணற்றில் இருக்கக்கூடிய மின் மோட்டார்களுக்கும் பெயர் மாற்றம் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு மின் இலாக்காவிற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் ஒரே நேரத்தில் செய்துவிட்டோம் என்றால், பொதுமக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்பதைக் கருத்திலேகொண்டு, அரசு அதற்கு வேண்டிய சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. அதாவது, யார் நிலத்தையும், யார் வேண்டுமானாலும் பதிவு செய்து கொள்ளலாம். என்னுடைய நிலத்தை, இன்னொருவர். அவர்தான் அழகராஜா என்று சொல்லிக்கொண்டு, பத்திரம் பதிவு செய்துகொண்டால், அதற்கு மாற்றுப் பரிகாரமே கிடையாது. அது எனக்கே தெரியாமல் இருக்கலாம். யார் பெயரிலே உள்ள சொத்தாக இருந்தாலும், யாரோ ஒருவர் சென்று பதிவு செய்து கொள்ளலாம். ஒருவர். தான் இன்னார்தான் என்று சப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸுக்கு வந்து, நான்தான் அவர் என்று சொல்லிவிடலாமே தவிர, பத்திரத்தில் உள்ள பெயர் கொண்டவர் அவர்தானா என்று சப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸுக்குத் தெரிய வேண்டிய அவசியம் கிடையாது. அடுத்து, வாங்குகிறவர்கள்கூட யாராவது பொய்க் கையெழுத்துப் போடக்கூடிய ஒரு நபரைக் கூட்டிக்கொண்டு போய், பத்திரத்தைப் பதிவு செய்துவிடலாம். எனவே, அரசு இதிலே கவனம் செலுத்தியாக வேண்டும். என் பெயரிலே பட்டா இருக்கும் மற்ற எல்லாம் இருக்கும். நம்முடைய பெயரில்தான் இருக்கிறது என்று நாம் நினைத்துக் கொண்டிருப்போம். ஆனால், யாரோ ஒருவர் நம்முடைய



பெயரில் பத்திரத்தைப் பதிவு செய்துகொண்டு, வேறு ஒருவர் பெயரிலே பட்டா வாங்கிக் கொண்டு போயிருப்பார். ஆகவே, ரேஷன் கார்டு வைத்திருக்கக் கூடியவர்கள் — இப்போது ரேஷன் கார்டில் போட்டோ ஒட்டும் முறை வந்துள்ளதால் — போட்டோ ஒட்டிய ரேஷன் கார்டுடன் வந்துதான் பத்திரத்தைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று ஆணை பிறப்பித்தால், ஒருவருடைய நிலத்தை, இன்னொருவர் பெயரில் கள்ளத்தனமாகப் பதிவு செய்ய முடியாத நிலைமை வந்துவிடும். அந்த அளவுக்கு நாம் சட்டத் திருத்தங்களைச் செய்ய வேண்டுமாய் இந்த நேரத்திலே உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தற்சமயம். பத்திரம் பதிவு செய்கிறபோது, பதிவுக் கட்டணத்தில் 10 சதவிகிதம் அரசு எடுத்துக்கொண்டு, மீதம் 90 சதவிகிதத்தை சம்பந்தப்பட்ட மாநகராட்சிக்கும், நகராட்சிகளுக்கும் அளிக்கிறது. ஆனால், ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பேரூராட்சிகளுக்கும் அந்தக் கட்டணம் அளிக்கப்படுகிறபோது 3 சதவிகிதம்தான் எடுத்துக் கொள்ளப்பட்டு, 97 சதவிகிதத்தைக் கொடுக்கிற நிலைமை உள்ளது. நகராட்சிகளிலே இருக்கக்கூடிய சொத்துக்களுக்குத் தான் அதிக மதிப்பு. அதிகமான வேல்யு....

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு 3 சதவிகிதமும், நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளுக்கு அதிக சதவிகிதமும் கொடுப்பதாக உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். தமிழ்நாடு முழுவதும் நமது உள்ளாட்சி மன்றங்களுக்கு வருகிற தொகை 5% சர்சார்ஜ் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். ஆர். அழகராஜா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் அதைச் சொல்லவில்லை. அதாவது, பதிவுக் கட்டணமாக வசூல் செய்வதில் 10 சதவிகிதம், கிட்டத்தட்ட வருடத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் வருகிறது என்று சொன்னால் அதிலே 10 சதவிகிதம் தொகையை பதிவுத் துறை எடுத்துக் கொண்டு, மீதம் 90 சதவிகிதத்தையும் மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் அளிக்கிறது. ஆனால், ஊராட்சி ஒன்றியங்களில். உள்ள இடங்களைப் பதிவு செய்யப்படுகிறது என்று சொன்னால், அந்த ஏரியாவில் இருக்கக்கூடிய சொத்துக்களைப் பதிவு செய்யும்பொழுது, பதிவுக் கட்டணத்தில் 3 சதவிகிதம் மட்டும் அந்தத் துறை எடுத்துக்கொண்டு, மீதம் 97 சதவிகிதத்தை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்குக் கொடுக்கிறது. நான் சொல்ல வருவது, துறை பதிவுக் கட்டணத்திலிருந்து 10 சதவிகிதம் என்று எடுத்துக் கொள்வதைக் குறைத்து,

அதை 5 சதவிகிதமாகவோ அல்லது 3 சதவிகிதமாகவோ குறைத்துக்கொண்டு, எப்படி ஊராட்சிகளுக்கு 97 சதவிகிதம் அளிக்கப்படுகிறதோ அதேபோன்று நகராட்சிகளுக்கும் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த ஐந்தாறு மாதங்களுக்கு முன்னால் அறிவித்து, இன்று தேனி அல்லி நகரமானது மாவட்டத்தினுடைய தலைநகராக விளங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பகுதியிலே மாவட்டப் பதிவுத் துறை அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழில் துறையை எடுத்துக்கொண்டால், சிறிய தொழில்களுக்கு அதிக முக்கியத்துவத்தை அளித்து, பெரிய தொழில்களும் இந்த மாநிலத்தில ஏற்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருமுயற்சி எடுத்து, பல்வேறு வெளிநாடுகளிலே இருக்கக்கூடிய முதலீட்டாளர்களை இங்கே அழைத்துவந்து, ஆயிரக்கணக்கான கோடி என்ற அளவில் முதலீடு செய்து, தொழில்களைத் தொடங்குவதற்காக இருக்கிறார்கள். ஆனால் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அதிலே இருக்கக்கூடிய முக்கியத்துவத்தை அறிந்து செயல்படுகிற அதேநேரத்தில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதுமாதிரி செயல்படுகிறார்களா என்றால், அதில் எனக்குச் சந்தேகம்தான். நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அரசு கருத்தோடு செயல்பட்டாலும், அவற்றை முழுமையாகச் செயல்படுத்தக்கூடிய தகுதி படைத்தவர்கள் அதிகாரிகள்தான். அரசு, இந்த மாநிலத்திலே பல்வேறு தொழில்களை ஏற்படுத்த பெரும் முயற்சிகளை வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் தொழில்களைத் தொடங்குகிறவர்கள் அமைச்சர்களைப் பார்ப்பது கிடையாது. அதிகாரிகளைத்தான் சென்று பார்க்க முடியும். அதிகாரிகளைத்தான் அணுகமுடியும். அதிகாரிகளிடம்தான் அனுமதியைப் பெறமுடியும். ஆனால், சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளிலே இருக்கின்ற அதிகாரிகள் இந்த மாநிலத்தைத் தொழில்மயமாக்க வேண்டுமென்று விரும்புகிறார்களா என்றால், இல்லை என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யார் யார் தொழில் துறையில் அதிக ஆர்வம் கொண்டிருக்கிறார்களோ, யார் யார் அதிகமான முறையில் தொழில்களைத் தொடங்க ஊக்கப்படுத்துவார்களோ, அவர்களை நியமிக்க வேண்டும். சட்டங்கள் இருக்கலாம். சட்டத்திற்குப் புறம்பாகச் செய்ய வேண்டுமென்று நான் சொல்ல முடியாது; சொல்லவில்லை, சொல்லவும் மாட்டேன். சட்டத்திலே இருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளைச்



சமாளித்து, தொழில் தொடங்குகின்றவர்களுக்கு ஊக்கமளிக்கக் கூடியவர்களை அந்தப் பதவிகளில் போட வேண்டும். எந்தத் துறையாக இருந்தாலும் - 'டிக்', 'டிட்கோ', 'சிப்காட்', 'சிட்கோ' போன்ற துறைகள் இருக்கின்றன; மாவட்ட அளவில் மாவட்டத் தொழில்கள் மையம் இருக்கிறது. ஆகவே அந்தந்தப் பகுதிகளில், தொழில்களுக்கு முக்கியத்துவம் அளித்து, அதிகாரிகள் தொழில் தொடங்குபவர்களை ஊக்கப்படுத்துகிறார்களா என்று அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

அடுத்தபடியாக, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் - இன்றைக்கு சிட்கோ என்ன பண்ணுகிறது என்றால் - முன்பு வேறு விதமாக இருந்தது, யார் யார் அப்ளிகேஷன் போட்டாலும், தொழிற்பேட்டை அலாட் செய்ய, புதிய லாட் முறையை, லாட் சிஸ்டத்தை கொண்டு வந்திருப்பதாக அறிகிறேன். நான் அப்ளிகேஷன் போட்டு வைக்கிறேன்; அது கிடைக்கிறதோ அல்லது கிடைக்கவில்லையோ அது வேறு சமாச்சாரம்; லாட் போடும்போது என்னுடைய பெயருக்கு அது கிடைக்கும் என்று சொன்னால் அல்லது ஒரு சாதாரணமானவருக்குக் கிடைக்கும் என்று சொன்னால், உண்மையிலேயே தொழிலை ஆரம்பிப்பதற்கு அல்லது தொழிலைத் தொடங்குவதற்கு முயற்சி செய்கின்றார்களா என்றால், இல்லை. ஆனால் உண்மையாக முதலீடு செய்து, அனுமதி பெற்று தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று விருப்பம் கொண்டவர்கள் தொழிலை ஆரம்பிக்க முடிவதில்லை. ஆனால் அப்ளிகேஷன் போட்டு வைக்க வேண்டுமென்று போடுகின்றவர்களுக்கு, தொழில் தொடங்க ஆர்வம் இல்லாதவர்களுக்கு லாட் சிஸ்டத்தில் கிடைக்கக் கூடிய வாய்ப்பு உண்டு. ஹவுசிங் போர்டு வேண்டுமென்றால் அந்த சிஸ்டத்தை வைத்துக்கொள்ளலாம். ஆனால் தொழிற்பேட்டைகளை அலாட் செய்யும்போது, யார் யார் உண்மையிலேயே தொழில் தொடங்குவதற்கு முயற்சி செய்கின்றார்களோ, அந்தத் தொழிற்பேட்டைகளில் தொடங்கப்படுகின்ற தொழில் சரியான முறையில் நடைபெறுமா என்பதை ஆராய்ந்து அவர்களுக்கு முக்கியத்துவம் அளித்து, தொழிற்பேட்டைகளை அலாட் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழில் தொடங்குபவர்கள் ஒரு நிலத்தை வாங்கி, அதிக முதலீடு செய்து, அதிலே கட்டிடங்கள் கட்டி, மின்சார வசதி, தண்ணீர் வசதி போன்ற வசதிகள் பெற்று - இவற்றிற்கு அதிக முதலீடு செய்ய வேண்டுமென்பதற்காகத்தான், அவர்கள் தொழிற்பேட்டைக்கு வந்தால் பல நன்மைகள் கிடைக்கும் என்ற அடிப்படையில் தொழிற்பேட்டைக்கு வருகிறார்கள். ஆனால் அந்தத் தொழிற்பேட்டைகளுக்கு இன்று விண்ணப்பிக்க வருகின்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று சொன்னால், சாதாரணமாக வெளியிலே தொழிற்கூடங்களை வாங்கிக் கட்டிக் கொள்வதைக் காட்டிலும், ரொம்ப காஸ்ட்லியாக இருக்கிறது என்று. சப்சிடைஸ்டு ரேட்டிலேயாவது கொடுக்க வேண்டும். குறிப்பாக சிட்கோ தொழிற்பேட்டைகளைக் கொடுக்கின்றபோது, குறைந்த விலையில் சப்சிடைஸ்டு விலையில் தொழில் தொடங்குபவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் கொடுக்க வேண்டும். வெளி மார்க்கெட்டைக் காட்டிலும் நீங்கள் அதிகமான விலைக்குக் கொடுக்கக் கூடாது. டெவலப்மென்ட் சார்ஜ், அதிகாரிகளுடைய செலவினம் இவற்றைச் சேர்த்து, அதிக விலை நிர்ணயம் செய்து கொடுப்பீர்கள் என்று சொன்னால், தொழிற்பேட்டைக்கு வருகின்றவர்களின் ஆர்வம் குறைந்துவிடும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தப் படியாக, என்னுடைய தொகுதி விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய ஒரு பகுதி. குறிப்பாக சின்னமனூர் பகுதியானது விவசாயத் தொழிலை மட்டுமே நம்பியிருக்கக்கூடிய. ஆயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் இருக்கக்கூடிய பகுதி. அந்தப் பகுதியிலே நீங்கள் ஒரு 'அக்ரோ பேஸ்டு'. விவசாயம் சம்பந்தப்பட்ட ஒரு சிறிய தொழிற்பேட்டையை அமைத்துத்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு இங்கு பேச வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. இராமசாமி):** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில்கள் துறை, பதிவுத் துறை, பட்டு வளர்ச்சித் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின்கீழ் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.



முற்பகல் 11-25

இந்தியாவின் முன்னேற்றம் கிராமங்களில்தான் இருக்கிறது என்ற அடிப்படைத் தத்துவத்திற்கேற்ப தொழிலாளர்கள், இளைஞர்கள் மற்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் அடித்தள மக்களின் வாழ்வில் விளக்கேற்றிடவும், படித்துவிட்டு வேலை வாய்ப்பற்று இருக்கும் இளைஞர்களின் ஏக்கப் பெருமூச்சைத் தீர்க்கும் வகையிலும், எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி, இன்றைக்கு வெளி நாட்டிலே இருக்கும் பல தொழில் நிறுவனங்களையெல்லாம் அழைத்து வந்து, தொழிற்சாலைகளை-9-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளை இந்த 10 மாத காலத்திலே தமிழகத்திலே தொடங்க திட்டங்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களால் தீட்டப்பட்டுள்ளன. அதுபோல, ஊரகத் தொழில் துறைக்கு, பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அறிவித்து இன்று சாதனை படைத்துக் கொண்டிருப்பதை நாடு பாராட்டிக் கொண்டிருக்கும் இந்த வேளையிலே,

"ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்;
ஆலைகள் வைப்போம்; கல்விச் சாலைகள் வைப்போம்"

என்ற பாரதியாரின் வரிகளுக்கு ஏற்ப, ஊரகத் தொழில்களுக்கு இந்த நிதி ஆண்டில் 95 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கி அதிலே சுமார் 22.50 கோடி மதிப்பீட்டிலே 200 தொழிற்கூடங்களையும் 250 தொழில் மனைகளை மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளதை நான் மனதார வரவேற்கும் வேளையில் தர்மபுரி மாவட்டம் ஓசூரிலே 7.24 ஹெக்டேர் பரப்பளவிலேயும், அதே தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி அருகே 26.64 ஹெக்டேர் பரப்பளவில் ஒரு புதிய தொழில் பேட்டையையும் எங்கள் மாவட்டத்தில் வழங்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் அந்தத் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய பணிவான நன்றியைக் கூறிக்கொள்கிறேன். எனது தர்மபுரி தொகுதிக்கு உட்பட்ட கிருஷ்ணாபுரம், சோலைக்கொட்டை, நாய்க்கன் கொட்டை, அதக்கப்பாடி, நல்லம்பள்ளி, தொம்ரஹாம்பட்டி, கங்களாபுரம் ஆகிய பகுதிகள் வேலைவாய்ப்பில் மிகவும் பின்தங்கிய பகுதிகளாகும். மேட்டுப்பாசன விவசாயத்தையே நம்பி வாழும் அம்மக்கள், அன்றாடம் குடும்பம் நடத்தவே படாத பாடுபட்டுக்கொண்டு இருக்கும் நிலையிலே பல விவசாயக் கூலித் தொழிலாளர்களும் படித்த இளைஞர்களும் பக்கத்தில் உள்ள கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களுக்குச் சென்று வயிற்றுப் பிழைப்பை நடத்தி வருகின்றார்கள். இந்த படித்த இளைஞர்களின், குறிப்பாக அந்த கூலி வேலை செய்யும் விவசாயிகளின் அவல நிலையைப் போக்கிட

இப்பகுதியிலே ஒரு தொழிற்பேட்டையை அரசு அவசியம் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளும் வேளையிலே, மரவள்ளிக் கிழங்கிலிருந்து தயாராகும் ஜவ்வரிசி மாவினைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலை ஒன்று 11.23 கோடி ரூபாயிலே இந்த ஆண்டு துவக்கப்படும் என்ற அறிவிப்பு. மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு நல்ல அறிவிப்பாக இருக்கும். இந்த நல்ல நேரத்திலே எங்களது தர்மபுரி மாவட்டத்திலே விளையும் மரவள்ளிக் கிழங்குகளை வேறு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்லும் அந்த விவசாயிகளின் மரவள்ளிக் கிழங்கிற்கு செஸ் வரி விதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தில் இருந்தும் வேறு மாவட்டங்களுக்கு அந்த மரவள்ளிக் கிழங்கை எடுத்துக் கொண்டு செல்லும்போது இந்த செஸ் வரி விதிப்பது கிடையாது. ஆனால், தமிழ்நாட்டில் தர்மபுரி மாவட்டத்திலேயும் கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் — இந்த இரண்டு மாவட்டங்களில் விளைகிற மரவள்ளி கிழங்கிற்கு மட்டும், அதை வேறு மாவட்டத்திற்கு எடுத்துக்கொண்டு போகும்போது செஸ் வரி விதிக்கும் ஒரு கொடுமை நிகழ்ந்து கொண்டு இருக்கிறது. இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் பல தடவை தெரிவித்துள்ளோம். அதனாலே, தயவுசெய்து மாண்புமிகு முதல்வர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்த விவசாயிகளின் நலன் கருதி மரவள்ளிக் கிழங்குக்கு எங்கள் மாவட்டத்தில் விதிக்கும் அந்த செஸ் வரியை நீக்க உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மரவள்ளிக் கிழங்கை-ஜவ்வரிசி ஸ்டார்ச்சை பதப்படுத்தும் தொழிற்சாலைகளை அதிகமாக எங்களுடைய தர்மபுரி மாவட்டத்திற்குத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டத் தொழில் மையங்கள் பல தொடங்கும் இந்த நேரத்திலே, படித்த இளைஞர்களுக்கு வங்கிக் கடன் கொடுக்க மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக தேர்வு செய்யப்படுகிறது. பெரும்பாலான அரசாங்க வங்கிகள் எல்லாம் அந்த படித்த இளைஞர்களுக்கு, தேர்வு செய்யப்பட்ட அந்த இளைஞர்களுக்கு ஒழுங்காக குறித்த நேரத்திலே கடனைத் தர மறுக்கின்றன; பல இளைஞர்கள் பேங்கிற்கும் வீட்டிற்கும் அலைக்கழிக்கப்படுகிறார்கள்; நிறைய பேர் எங்களிடம் புகார் கூறுகின்றார்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் ஒழுங்காக அந்த இளைஞர்களுக்குக் கடன் கிடைக்கும் நிலையை உருவாக்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறிக்கொள்கிறேன்.



முற்பகல் 11-30

கடந்த காலத்திலே வேலியே பயிரை மேய்ந்த கதையாக, அதிகாரத்தைப் பயன்படுத்தி, அதிகார துஷ்பிரயோகம் செய்து அன்றைக்கு இருந்த முதல்வர் அரசாங்கத்தினுடைய டான்சி நிலத்தை அடிமாட்டு விலைக்கு நிர்ணயித்து, அந்த நிலத்தை தனதாக்கிக் கொண்டதோடு மட்டுமல்லாமல் பத்திரப் பதிவிலேயும் பல லட்சக் கணக்கான ரூபாய்களை மோசடி செய்து அரசாங்கத்தின் சொத்தை தனதாக்கியதை நாடு அறிந்தது. ஆனால் இன்றைக்கோ, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே டான்சியை மேம்படுத்த பழைய கடன்களை மானியமாக்குதல், அந்தக் கடன்களுக்குண்டான வட்டியை நீக்குதல், மேற்கொண்டு சில ஆண்டுகளுக்கு வட்டி இல்லாமல் ரத்து செய்தல் என்று நடவடிக்கை மேற்கொண்டு டான்சி நிறுவனத்தை மேம்படுத்தவும் முறைப்படுத்தவும், பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையிலே, சென்ற ஆண்டுகளிலே கடந்த ஆட்சிக் காலத்திலே ரூ. 14.50 கோடி அளவுக்கு முத்திரைக் கட்டணப் பாக்கி ஏமாற்றப்பட்டிருந்த அந்தத் தொகையை இந்த பத்து மாதக் காலத்திற்குள்ளாக 11.60 கோடி ரூபாயை முத்திரைக் கட்டணமாக வசூலித்த கழக அரசைப் பாராட்டும் இந்த நேரத்திலே, பத்திரப் பதிவு அலுவலகங்களில் பொது மக்கள் சென்று சொத்துக்களுக்கு உண்டான மதிப்பீடு ரூபாய் எவ்வளவு என்று கேட்கும்போதும் அதேபோல பத்திரக் கட்டணம் சரியான முறையில் நிர்ணயிக்கப்படுவது குறித்தும் அந்த அதிகாரிகளைக் கேட்கிறபோது, அதிகாரிகள் சரியான முறையில் உரிய பதிலைத் தருவதில்லை. வெளியில் இருக்கும் பத்திர எழுத்தாளர்களைப் போய்க் கேளுங்கள் என்கிறார்கள். பிறகு அந்தப் பத்திர எழுத்தாளர்கள், புரோக்கர்கள் உள்ளே போய் சம்பந்தப்பட்ட அலுவலக அதிகாரிகளிடத்திலே சென்று அவர்கள் தெரிந்து வந்து கூறினால்தான் உண்மை நிலை புரியும். பொதுமக்களுக்கு ஒழுங்காகப் பத்திரப் பதிவு அலுவலகங்களிலிருந்து சரியான தகவல்கள் வருவதில்லை. காரணம், ஏற்கெனவே பல்லாண்டுக்காலம் ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்களால் ஏற்பட்ட ஊழல் காரணமாக, இன்னும் அந்த அதிகாரிகள் திருந்தாத நிலையிலே இவை எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நமது கழக அரசு பொறுப்பேற்றபின் பல இடங்களில் ஊழல் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டது. அவர்கள் அந்தப் பத்திரப் பதிவு அலுவலகங்களுக்குச் சென்று சோதனை போட்டாலும், அங்கே வேலை செய்கின்றவர்கள் சில நேரங்களில் அவற்றை ஒழுங்குபடுத்தும், சரிக்கட்டும் வேலையெல்லாம்கூட நடக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

பத்திரப் பதிவு அலுவலகத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தயவுசெய்து நடவடிக்கை எடுத்து, பொதுமக்களுக்குத் தகுந்த தகவலைத் தர அனைத்து ஊழியர்களுக்கும் தகுந்த உத்தரவை வழங்க வேண்டுமென்று இந்த வேளையிலே கேட்டுக் கொள்கிறேன்.

எனது தர்மபுரி தொகுதியில் தர்மபுரி நகரில் உள்ள மூன்று சார் பதிவாளர்கள் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டிடம் இல்லை. வரும் ஆண்டில் அதற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆயிரம் ரூபாய்க்கு நிலம் வாங்குகிறவர்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள். வீட்டு மனைக்கான நிலம் வாங்கினால் பத்திரப் பதிவுக் கட்டணம் இலவசம் என்ற ஒரு தேனான நல்ல அறிவிப்பை இப்போது வெளியிட்டிருக்கிறீர்கள். அதற்காக அரசுக்கும் என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் 1,000 ரூபாய்க்கு எந்த மனையும் கிடைப்பதில்லை. 3 சென்ட் நிலம் வாங்கினால்கூட 3,000, 4,000 ரூபாய் ஆகும். ஆகவே, அந்த ஆயிரம் ரூபாய் என்பதை ரூ. 5,000 ஆக உயர்த்தினால்தான் அது ஏழைகளுக்கு உண்மையிலேயே பயன்படும். இதில் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டு வளர்ச்சியைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் தர்மபுரி மாவட்டத்தில்தான் அதிகமாகப் பட்டு விளைகின்றது. அந்த மாவட்டத்தில் உள்ள பட்டுக் கூடத்திற்கு கணிப்பொறி வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறும் இந்த நேரத்தில், எங்களுடைய மாவட்டத்தில் அதிகமாக விளைகின்ற பட்டைக் கொண்டு போய், காஞ்சிபுரத்தில் வைத்து பட்டு நூலாக முறுக்கேற்றி விற்றால்தான் விலை கிடைக்கும். அங்கேதான் அந்த விற்பனைக் கூடம் இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் பட்டு விளைகிற இடமே தர்மபுரி மாவட்டம்தான். ஆகவே தர்மபுரி மாவட்டத்திற்கு பட்டு நூல் முறுக்கேற்றும் ஆலையும் அதை விற்பனை செய்யும் கூடமும் தர்மபுரியில் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு அரசினர் தொழில் பயிற்சி மற்றும் தொழிற்பேட்டை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு தொழில் பேட்டை என்ற அளவில் முடிவு பண்ணி இந்த அரசு ஒரு சிறந்த திட்டத்தைக் கொண்டு



வந்தால்தான் கிராமப்புறங்களில் இருக்கும் இளைஞர்களுக்கு நல்ல பொருளாதார வசதியை ஏற்படுத்த முடியும் என்பதோடு தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியில் மறுமலர்ச்சி ஏற்பட்டது கலைஞர் காலத்தில்தான் என்ற நிலையையும் உருவாக்க முடியும் என்று சொல்லி அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. இராமசாமி):** திரு. ந.பூ. இராமஜெயம்.

**திரு. ந. பூ. இராமஜெயம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள் நிருவாகம், ஆவணப்பதிவு போன்ற மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு அரிய வாய்ப்பினை அளித்த தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாலைவனத்தில் ஒரு பசுமையான சோலையை உருவாக்கித் தமிழக மக்களுக்கு தந்து, காலியாகயிருந்த கஜானாவில், அனைவராலும் பாராட்டப்படுகின்ற ஒரு நிதிநிலை அறிக்கையினைத் தந்து தமிழக மக்களுடைய பாராட்டுகளைப் பெற்றுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு முதலில் நன்றி கூறிக் கொள்கிறேன். பட்ஜெட் வருகிறதென்று சொன்னால், எந்தப்பொருளின்மீது விலை ஏறுமோ என்ற ஐயப்பாட்டினை நீக்கி, வரி விலக்களித்து, வரியைக் குறைத்து, பல தரப்பினருக்கும், பல்வேறு சலுகைகளை வழங்கி இந்த நிதிநிலை அறிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பல்வேறு மானியக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, இருக்கின்றன.

எல்லா துறைகளிலுமே தனக்கென ஒரு முத்திரையைப் பதித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முத்திரைத்தாள் மானியத்தின் மீதும், பல்வேறு சிறப்பம்சங்களை வழங்கியிருக்கிறார்கள். உதாரணமாக ஒன்றிரண்டைக் கூறுவது கடமையெனக் கருதுகிறேன். ஆவணங்களில் குறிப்பிடப்படும் அசையாச் சொத்துக்களின் மதிப்பைக் குறைத்து அதன்மூலம் முத்திரைத் தீர்வை ஏமாற்றம் செய்யப்படுகிறதா என்பதைக் கண்டறிய 26 தனிக்கைக் குழுக்கள் உள்ளன. வருகிற ஆண்டிலே மேலும் அறு குழுக்கள் அதிகமாக அமைத்துள்ளது ஒன்று. அதேபோல,

தனித் துணை ஆட்சியாளர் பணியிடங்கள் 11-ஐ 15 ஆக உயர்த்தி, 11 தனித் துணை ஆட்சியாளர் அலுவலகங்களில் 11 தனி வருவாய் ஆய்வாளர்களை நியமிக்க ஆணைகள் வழங்கப்பட்டிருப்பது ஒன்று. ஏழை மக்கள் வீட்டுமனைகள் வாங்கினால் ரூபாய் ஆயிரத்திற்குக் குறைவான ஆவணப்பதிவிற்கு முழு விலக்களித்திருப்பது. மயிலாப்பூர், சென்னை பெரியமேடு மற்றும் மத்திய சென்னை இணை சார்பதிவகங்களில் கடந்த 14 ஆண்டு காலத்தில் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்கள் குறித்த வில்லங்கச் சான்றுகள் பொதுமக்களுக்கு விரைவாகக் கிடைக்க கணிப்பொறி மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது, அதேபோன்று 2000 மக்கள் தொகைக்கு ஒருவர் என்பதை மாற்றி ஆயிரம் மக்களுக்கு ஒருவர் என்ற அளவில் முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமம் வழங்கி, பல பேருக்குக் கூடுதல் வருமானம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது, அதேபோல், முத்திரைத்தாள் பெறுவதில் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளைப் போக்க ஃபிராங்கிங் கருவி பயன்படுத்தி பொதுமக்கள் அந்த முத்திரைத்தாளைப் பெறுவதில் சிரமத்தைக் குறைக்க ஏற்பாடு செய்திருப்பது, மறு ஈடு அல்லது ஒற்று ஆவணங்களின் மீது விதிக்கப்படக்கூடிய 13 சதவீத முத்திரைத் தீர்வையை .1 (புள்ளி ஒன்று) சதவீதமாகக் குறைத்து நிர்ணயித்திருப்பது, அதேபோல தமிழகச் சொத்துக்கள் பெருமளவில் அண்டை மாநிலங்களில் பதிவு செய்வது செல்லாது எனச் சட்டத்திருத்தம் கொண்டு வந்து அதன்மூலம் துறைக்கு மேலும் வருவாய் கிடைக்கவும், தில்லுமுல்லுகள் நடைபெறாமல் தடுத்து நிறுத்தவும் ஆவன செய்யப்பட்டிருப்பது, சென்னை மாநகரப் பகுதியிலுள்ள அனைத்துப் பதிவகங்களையும் ரூபாய் ஒரு கோடி செலவில் கணிப்பொறி மூலம் இணைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்ததால் ஆவணப்பதிவு குறித்த விவரங்கள் பொதுமக்களுக்கு எளிதாகவும், விரைவாகவும், கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது, முத்திரைத்தாள், முத்திரை வில்லைகள் போன்றவை தாராளமாக இடர்ப்பாடின்றிக் கிடைக்கும் வகையில் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் முத்திரைத்தாள் விற்பனை மையம் ஒன்றைத் திறக்க அரசு முடிவு செய்திருப்பது, அனைத்திற்கும் மேலாக படித்து வேலையின்றி இருப்பவர்களுக்கு ஆவண எழுத்தர், நகல் எழுத்தர் உரிமம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது போன்ற பல்வேறு சிறப்பம்சங்களில் இந்த மானியக் கோரிக்கையில் கலைஞர் அவர்கள் தன்னுடைய தனி முத்திரையைப் பதித்திருக்கிறார்கள். இதைக் கூறுகின்ற நேரத்தில் 1899 ஆம் ஆண்டு முத்திரைத் தாள் சட்ட உட்பிரிவு (அ) (1)-ன்படி குறைவு முத்திரைத் தாள் என்ற அடிப்படையில், குறைத்து ஏழை மக்களுக்கு வழங்கப்படுகிற அந்த வீட்டு மனையின்மீது



பல்லாயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள முத்திரைத்தாள் வாங்கி பதிவு செய்ய வேண்டுமென்று ஒரு ஆணை இருக்கிறது.

(முற்பகல் 11-40)

குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால், சென்னை மாநகரப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு குடிசைப் பகுதிகளில் - குறிப்பாக மயிலாப்பூரைச் சேர்ந்த கபாலி வனபோஜனத் தோட்டம். மந்தைவெளிப்பாக்கம். கன்னிகாபுரம் இன்னும் இதுபோன்று சென்னை நகரத்தில் 20, 25 பகுதிகளில் வாழ்கிற மக்களுக்கு 80 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள வீட்டு மனை குடிசை மாற்று வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அப்படி 80 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட. 1982 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட அந்த மனையின் விலை 3,400 ரூபாய். ஆனால் அபிவிருத்திக் கட்டணம் என்ற வகையில் 1,920 ரூபாய் வருகிறது. இரண்டையும் சேர்த்தால் கூட 5,320 ரூபாய்தான் மனையின் அடக்கம். அந்தத் தொகையை. 3,400 ரூபாயை 10 ஆண்டு கால அவகாசத்தில், தவணைகளில் செலுத்த வேண்டுமென்று குடிசை மாற்று வாரியத்திற்கும் அந்த நிலம் வாங்கியவர்களுக்கும் ஒப்பந்தம் ஏற்படுகிறது. அதன்படி செலுத்தப்பட்ட பிறகு 5 ஆண்டு காலம் கழித்து குடிசை மாற்று வாரியத்தால் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட அந்தத் தொகைக்கு, 3,420 ரூபாயோ அல்லது ஐந்தாயிரத்து சில்லரையோ அதற்கு கிட்டத்தட்ட 650 ரூபாய் அளவில் குடிசை மாற்று வாரியம் கிரயப் பத்திரத்தை வழங்குகிறது. ஆனால் தனித் துணை ஆட்சியர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்ட 1899 ஆம் ஆண்டு முத்திரைத் தாள் சட்டத்தின் உட்பிரிவின்படி குறைவு முத்திரைத்தாள் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட 3,420 ரூபாய் மதிப்புள்ள அந்த நிலத்திற்கு 32,618 ரூபாயை உடனடியாக செலுத்த வேண்டுமென்று தாக்கீது அனுப்புகிறார்கள். 90 நாட்களுக்குள் அனுப்பவில்லை என்றால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறுகிறார்கள். கிட்டத்தட்ட 50 ஆண்டு காலம், 60 ஆண்டு காலமாக வாழ்ந்து கொண்டிருக்கிற அந்தக் குடிசை வாழ் மக்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு. அந்த 3,420 ரூபாயை 120 மாதத் தவணைகளில் செலுத்துகிற ஏழ்மையான நிலையில் இருக்கிற மக்கள், குறைவு முத்திரைத்தாள் என்ற வகையில் 32,000 அளவுக்கு ரூபாயை உடனடியாக செலுத்துவது என்பது இயலாத காரியம் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாக தெரியும். ஏனோ தெரியவில்லை, எல்லா துறைகளிலும், எல்லா நிலைகளிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வை

விழுந்திருக்கும் போது, இப்படி ஒரு இக்கட்டான நிலையில் ஏழைகளால் தாங்க முடியாத சுமை இருப்பதும் அவர்களுடைய பார்வையில் பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தட்டினால்தான் திறக்கப்படும் என்பார்கள், கேட்டால்தான் கொடுக்கப்படும் என்பார்கள். கேட்காமலேயே பல துறைகளுக்கு வரி விலக்கு அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை மக்கள் மீது இருக்கிற அந்தச் சுமையை குறைக்கிற வகையில், அந்த 1899 ஆம் ஆண்டு முத்திரைத் தாள் சட்டப் பிரிவை ரத்து செய்து, அந்த ஏழை மக்கள் இல்லங்களில் அவர்களுடைய விஷயத்திலும் விளக்கேற்றி வைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்து விடுகிறேன்.

சிறு தொகைக்கான முத்திரைத் தாள் கிடைப்பது சிரமமாக இருக்கிற காரணத்தால் அந்தத் தட்டுப்பாட்டைப் போக்க அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டும். முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் சில நேரங்களில் செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விடுகிறார்கள். பின்னர் அதிக விலைக்கு விற்கிறார்கள். பழைய முத்திரைத் தாளைப் பயன்படுத்தி, முறைகேடாகப் பதிவு செய்வதற்கும் வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அவர்களை கண்காணிக்க கண்காணிப்புக் குழு ஒன்றை அமைத்தால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-45

பதிவு அலுவலகங்களிலே முத்திரைத்தாள் விற்பதற்கு குறைந்தபட்சம் ஒரு பங்க் அமைத்து தருவதன் மூலம் முத்திரைதாள் விற்பனையாளரைத் தேடி அலைய வேண்டிய நிலை பொதுமக்களுக்கு இருக்காது என்பதால் இதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக என்னுடைய தொகுதி - பல உறுப்பினர்கள் இங்கே பேசுகிறார்கள், கேட்கிறார்கள், தன்னுடைய தொகுதிக்கு சாலை வேண்டும். ஆலை வேண்டுமென்று, இப்படிப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன என்று கூறுகிறார்கள். ஆனால் மயிலை தொகுதியைப் பொறுத்தவரையில் ஆலைகளைக் கேட்பதோ, அல்லது மற்ற பெரிய பெரிய பிரச்சினைகளைப் பற்றியோ பேசுகின்ற நிலைமை இல்லை. குடிநீர்பிரச்சினைதான் அங்கு பெரிதாகயிருக்கிறது. பட்டினப்பாக்கம் போன்ற அரசு அலுவலர்கள் குடியிருக்கின்ற இடங்களில் பலமாடி கட்டிடங்களில் இப்பிரச்சினை இருக்கிறது. அந்த மக்கள் பொதுக்



குழாய்களில் தண்ணீரைப் பிடித்துக் கொண்டு மாடிக்குச் செல்கின்ற ஒரு நிலைமையிருக்கிறது. அதேபோன்று சாஸ்திரி நகர் போன்ற பல பகுதிகள் இருக்கின்ற காரணத்தால் அந்த பகுதிகளுக்கும் மேல்நிலை நீர்த்தொட்டி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதோடு ஒன்றேயொன்றை இறுதியாக கூற விரும்புகிறேன். சீனிவாசபுரத்தில் ஒரு பழுதடைந்த ஒரு பாலம் இருக்கிறது. அந்தப் பாலத்தை மீண்டும் பழுது பார்த்தால் மந்தவெளி, அடையாறு, திருவான்மியூர் போன்ற பகுதிகளிலே ஏற்படுகின்ற நெரிசலை போக்குவதற்கு வழி இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்து, இந்த நல்லதொரு வாய்ப்பை அளித்த மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. இராமசாமி):** திரு. பி. என். வல்லரசு..

* **திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஊரகத் தொழில், பத்திரப் பதிவுத்துறை, பட்டுவளர்ச்சித் துறை மீது நான் சார்ந்துள்ள அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன் வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். ஊரகத் தொழில் துறையானது கிராமப்புற மக்களின் தொழில் வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு துறையாகும். ஒரு நாடு இருக்கிறது என்று சொன்னால், அந்த நாட்டினுடைய முன்னேற்றத்தை அந்த நாட்டிலே வாழ்கின்ற கிராமப்புற மக்களுடைய முன்னேற்றத்தை பொறுத்துதான் அறிய முடியுமென்ற காரணத்தால் இன்று கிராமப்புற மக்களை தொழில் ரீதியாக, வளர்ச்சி அடையச் செய்கின்ற இந்த ஊரகத் தொழில் துறையை அரசு ஊக்கப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒவ்வொரு ஆண்டும் ஊரகத் தொழில் துறையின் மூலம் 30 ஆயிரம் சிறுதொழில் நிலையங்களை உருவாக்கிடவும் அதன்மூலம் 5 ஆண்டுகளில் 10 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கவும் முற்பட்டுள்ள டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசை நான் மனதாரப் பாராட்டுகிறேன், அதேபோன்று, சிறுதொழில் குறைகளைத் தீர்ப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதையும், கிண்டியில் ஒரு தொழில் முனைவோர் வளர்ச்சி மையம் அமைக்க அரசு முற்பட்டு இருப்பதையும், மகளிர் தொழில் முனைவோருக்கு 50 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கிட அரசு முற்பட்டிருப்பதையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

[திரு. பி. என். வல்லரசு] [1997 மார்ச் 31

பத்திரப் பதிவுத் துறை அலுவலகங்களில் இந்த ஆண்டு முதல் புதிதாக கம்ப்யூட்டர் என்று சொல்லப்படுகின்ற கணிப்பொறி வசதி, ஜெராக்ஸ் வசதி, தொலைபேசி வசதி, பொதுமக்கள் அந்த அலுவலகங்களில் வந்து அமர நாற்காலி வசதி போன்ற பல்வேறு வசதிகளை அமைத்துக் கொடுக்க முற்பட்டுள்ள கலைஞர் அரசை மீண்டும் நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதையெல்லாம்விட ஆயிரம் ரூபாய்க்கு கீழ்பட்ட வீட்டுமனைகளைப் பதிவுசெய்கின்ற ஏழையெளிய மக்களுக்கு பதிவுத்தீர்வில் இருந்து முழுவிலக்கு அளித்திருக்கின்ற கலைஞர் அரசை மீண்டும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். ஆனால் 1997-98-ஆம் ஆண்டுக்கு ஊரகத் தொழில் துறைக்கு ரூ. 76 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதும் சிறு தொழில்களுக்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும் போதாது. இது யானைப் பசிக்கு சோளப்பொறி மாதிரி உள்ளது. ஊரகத் தொழில் ஒரு நோஞ்சான் குழந்தையைப் போலவே தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. எனவே அதிக நிதி ஒதுக்கீடு செய்து ஊரகத் தொழிலை ஊக்கப்படுத்த வேண்டுமென்று மீண்டும் அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இந்தத் துறை மூலம் இதுவரை 47 ஆண்டுகளில் 73,589 தொழில் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. காலத்தை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். 47 ஆண்டுகளில் 73,589 தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த 47 ஆண்டுகளில் இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி 2,867 கோடி ரூபாய் என்றால்-காலம் எவ்வளவு நீண்ட நெடிய காலம் - இந்த நீண்டகாலத்தில் குறைந்த அளவிற்கே வளர்ச்சி விகிதமும் நிதி ஒதுக்கீடும் இருக்கிற காரணத்தால், இந்தத் துறையை மேம்படுத்த அரசு இன்னும் கூடுதலாக நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனால்தான், ஊரகத் தொழிலை நோஞ்சான் குழந்தை என்றேன்.

முற்பகல் 11-50

ஊரகத் தொழில் துறை மூலம் பல தொழிற்சாலைகள் உருவாக்கப்படுகின்றன. அந்தத் தொழிற்சாலைகள் எங்கே உருவாக்கப்படவேண்டும் என்றால் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளிலேதான் உருவாக்கப்பட வேண்டும். ஆனால், எங்கே தொழிற்சாலைகள் ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருக்கின்றனவோ அதே பகுதியிலே மீண்டும் மீண்டும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துகின்ற ஒரு



1997 மார்ச் 31] [திரு. பி. என். வல்லரசு]

அவல நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, ஊரகத் தொழில் துறை மூலமாக ஏற்படுத்துகின்ற தொழில் நிறுவனங்களானாலும் தொழிற்கூடங்களானாலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளிலே, அதிலும் குறிப்பாக, என்னுடைய உசிலம்பட்டி தொகுதி போன்ற, தொழிற்சாலைகளே இல்லாத பகுதிகளிலேயே தொடங்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், 1997-98-ஆம் ஆண்டிற்கு - இந்த ஆண்டிற்கு - தொழிற்கூடங்களும், தொழில் மையங்களும் எங்கே ஏற்படுத்த அரசு முற்பட்டிருக்கிறது என்றால், தொழிற்சாலைகள் எங்கே அதிகமாக இருக்கிறதோ, அதே ஹோசூரிலேதான், அம்பத்தூரிலேதான், தொழிற்சாலைகள் எங்கே அதிகமாக இருக்கிறதோ, அதே அம்பத்தூரிலேதான், தொழிற்சாலைகள் எங்கே அதிகமாக இருக்கிறதோ, அதே கிண்டியில்தான் மீண்டும் மீண்டும் தொழிற்சாலைகளை உருவாக்குகின்ற திட்டம் இருக்கிறது. எனவே, உசிலம்பட்டி போன்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியில் இத்தகைய தொழிற்சாலைகளைத் தொடங்கிட வேண்டுமாய் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக அரசு - டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு - ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு ஐ.டி.ஐ. என்று சொல்லப்படுகின்ற தொழில் பயிற்சி நிலையத்தை உருவாக்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறது. அதேபோல், கிராமப்புற மக்களுடைய தொழில் வளர்ச்சிக்கு அரசு என்ன அறிவிக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்றால் இதுபோன்று, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலேயும் ஒரு தொழிற்பேட்டையை உருவாக்கித் தரவேண்டும்; அதன் மூலம் பல தொழில் கூடங்களை உருவாக்கி, கிராமப்புற மக்களை கைதூக்கிவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய உசிலம்பட்டி தொகுதி, தொழிற்சாலைகளே இல்லாத மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாகும். இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், 1989-90 ஆம் ஆண்டு, முதலமைச்சராக இருந்தபோது, இதே சட்டமன்றத்தில் அன்று உசிலம்பட்டி தொகுதியை மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாக அறிவித்தார்கள். ஆனால், அதற்குப் பின்னால் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா அவர்கள் திட்டமிட்டு அதை ரத்து செய்துவிட்டார்கள். எனவே, மீண்டும் முதலமைச்சராக வந்திருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எந்த இலட்சியத்திற்காக, எந்தக் குறிக்கோளுக்காக, 1989-90 ஆம் ஆண்டு உசிலம்பட்டி தொகுதியை மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாக

அறிவித்தார்களோ - இன்று ஒரு தொழிற்சாலை கூட இல்லை, எந்தத் தொழிற்சாலையும் அந்தத் தொகுதியில் இல்லாத காரணத்தால் - உசிலம்பட்டி தொகுதியை மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாக, தொழில் துறையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாக மீண்டும் அறிவிக்க வேண்டும் என்று நான் மீண்டும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று சென்ற பட்ஜெட் கூட்டத்திலே, இதே சட்டமன்றத்தில் என்னுடைய உசிலம்பட்டி தொகுதியில் சிட்கோ மூலம் ஒரு தொழிற்பேட்டையை உருவாக்கித் தாருங்கள் என்று நான் அரசைக் கேட்டுக் கொண்டேன். மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் 30 முதல் 50 ஏக்கர் நிலத்தைத் தயார் செய்யுங்கள் என்று கூறியிருந்தார்கள். அதன்படி என்னுடைய உசிலம்பட்டி தொகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை ஏற்படுத்துவதற்கு 30 ஏக்கரிலிருந்து 50 ஏக்கர் வரை நிலத்தை தயார் செய்து. அரசுக்குத் தகவல் அனுப்பி வைத்து இருக்கிறோம் என்ற காரணத்தால். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்து. உசிலம்பட்டி தொகுதியில் சிட்கோ மூலம் ஒரு தொழிற்பேட்டையை ஏற்படுத்தவும் அதன்மூலம் பல தொழில்கூடங்களை அமைத்துத் தரவேண்டுமாயும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இதே சட்டமன்றத்தில், ஏற்கெனவே நடந்த பட்ஜெட் கூட்டத்தில், உசிலம்பட்டி தொகுதியில் உள்ள விக்கிரமங்கலம், பாப்பாப்பட்டி., கருமாத்தூர் போன்ற ஊர்களில் சார் பதிவாளர் அலுவலகங்களை உருவாக்கித் தர வேண்டும் என்று கடந்த முறையே நான் கேட்டுக்கொண்டேன். இந்தக் கோரிக்கையை பரிசீலனை செய்து ஏற்கவேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை மிகவும் குறைந்த விலைக்கு வாங்கி ஊழல் புரிந்தார்கள். இது வேலியே பயிரை மேய்ந்த கதையாக இருக்கிறது. ஒரு முதலமைச்சரே அரசுக்குச் சொந்தமான நிலத்தை வாங்கி, அன்றையதினம், அரசின் சட்டத்தை மீறினார்கள். அன்று டான்சி நிலத்தைக் குறைந்த விலைக்கு வாங்கியதோடு மட்டுமல்லாமல் அதைப் பதிவு செய்வதில்கூட பல லட்ச ரூபாய்களைக் குறைத்து, முத்திரைத் தாள் வாங்கி, அதிலேயும் ஒரு மோசடியைச் செய்தார்கள். எனவே, ஜெயலலிதா வாங்கிய அப்படிப்பட்ட டான்சி நிலத்தை மீட்பதற்கு





அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தமிழக மக்கள் அறிய விரும்புகிறார்கள். அன்று தண்டோரா போட்டார்கள்; நாட்டு மக்கள் அறிந்தார்கள். அன்று தண்டோரா போட்ட பின்பு, அரசிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்கிய டான்சி நிலத்தை ஜெயலலிதாவிடம் இருந்து மீட்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தமிழக மக்கள் அறிய ஆவலாக இருக்கிறார்கள் என்பதை அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பத்திரப் பதிவுத்துறை என்பது ஒரு மூத்த துறையாகும்; பழமையான துறையாகும். அதனால்தானோ என்னவோ, இன்றையதினம் பத்திரப் பதிவுத் துறையின் அலுவலகங்கள் அனைத்துமே மிகவும் பழமையான கட்டிடங்களில் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. எனவே, பெரும்பாலான பத்திரப் பதிவுத் துறை அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் இல்லாத நிலைமை இருக்கிற காரணத்தால், அரசு சொந்தக் கட்டிடங்களைக் கட்டித்தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இரண்டு சதவீத சர்சார்ஜ் அங்கே வாங்கப்படுகிற காரணத்தினால் அதைக் கொண்டு கழிப்பறை வசதி, பொதுமக்கள் வந்து அமர்வதற்கு நாற்காலி வசதி போன்ற பொதுவான வசதிகளைச் செய்துதர வேண்டுமாய் அரசை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-55

இன்றையதினம் சீட்டுக் கம்பெனிகள் புற்றீசல்போல் வளர்ந்து கொண்டிருக்கின்றன, இந்தச் சீட்டுக் கம்பெனிகளில், நிதி நிறுவனங்களில் மக்கள் பல இலட்சக்கணக்கான ரூபாய்களைப் போட்டு, இன்று ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். பல முக்கியமான கம்பெனிகள் இன்றையதினம் மக்களைப் பரவலாக ஏமாற்றியுள்ளனர். தமிழக அரசு அந்த மோசடிக் கம்பெனிகளின் மீது, நிதி நிறுவனங்களின்மீது நடவடிக்கை. எடுத்துக் கொண்டிருக்கிற இந்தக் கால கட்டத்தில், நான் மீண்டும் அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்வதெல்லாம், தமிழக மக்கள் எங்கெங்கே ஏமாற்றப்பட்டிருக்கிறார்களோ, அந்தந்தச் சீட்டுக் கம்பெனிகளிலிருந்து அந்தப் பணத்தை மீட்டுத் தரவும், எதிர்காலத்தில் அதுபோன்று சிட்டுக் கம்பெனிகள் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடாத அளவிற்குப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நில மதிப்பீடு செய்கின்ற முறை 1-4-1997 முதல் வர இருக்கிறது. எனவே தமிழக அரசு நில மதிப்பீடு செய்கின்ற வழிகாட்டிக் குழுவின் மூலம் நில மதிப்பீடு செய்கின்றபோதும், இந்த ஆண்டுக்கு நில மதிப்பீட்டைக் குறைத்து மதிப்பிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். காரணம், தமிழகம் எங்கும் வறட்சி கடுமையாக நிலவுகிறது. தமிழக மக்களின் வாங்கும் சக்தி குறைந்துவிட்ட காரணத்தினால், நில மதிப்பீட்டைக் குறைத்து மதிப்பீடு செய்யவேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. இராமசாமி):** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் வரலாற்று நாயகராக இந்த நூற்றாண்டின் இணையற்ற பொருளாதார நிபுணர், நம்முடைய முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள், வாழ்கின்ற தலைமுறையும், வரப்போகும் தலைமுறையும் வழிகாட்டியாக எடுத்துக் கொள்ளக்கூடிய மிகச் சிறப்பான நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திலே அளித்ததற்குப் பின்னர், இன்று நடைபெறுகிற ஊரகத் தொழில்கள் மற்றும் முத்திரைத் தாள்கள் மீதான மானியக் கோரிக்கைகளின் மீது ஒரு சில கருத்துக்களை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 'All roads lead to Rome' எல்லா வீதிகளும் ரோமாபுரியை நோக்கிச் செல்கின்றன என்று சொல்வார்கள். அதேபோல் நம்முடைய தலைவர், கலைஞருடைய ஆட்சியில் எல்லா தொழிற்சாலைகளும் தமிழகத்தை நோக்கி வரக்கூடிய ஒரு உன்னதமான சூழ்நிலையை இன்றைக்கு நம்முடைய தலைவர், கலைஞர் அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. கடந்த ஆட்சியையும், நம்முடைய ஆட்சியையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன். அன்று நடைபெற்றது ஆட்சியல்ல, ஒரு அலங்கோல காட்சி. இன்று நடைபெறுவது ஒரு அற்புதமான ஆட்சி. அன்று தொழில் முனைவோர்கள் தொழிற்சாலையை தமிழகத்திலே தொடங்க வேண்டுமென்று சொன்னால், பெட்டிகள் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் பெட்டிஷன் கொடுக்கவேண்டுமென்ற நிலை அன்றைக்கு இருந்தது. ஆனால், இன்றைக்கு பெட்டிஷன்கூட தேவையில்லை. தலைவர் கலைஞர் அவர்கள் தொழில் முனைவோரைத் தாமாகவே அடையாளம் கண்டு, அவர்களைத் தாயுள்ளத்தோடு அரவணைத்து, அழைத்து, தமிழகத்திலே தொழில் தொடங்குகிற ஒரு நல்ல நிலையை இன்றைக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.



நம்முடைய ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சரவர்கள் இந்த அவைக்கு அளித்துள்ள ஊரகத் தொழில்கள் பற்றிய கொள்கைக் குறிப்பிலே பல்வேறு சிறப்பு அம்சங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நான் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சுயமாக ஊரகப் பகுதியிலேயிருந்து தொழில்களைத் துவக்க முன்வரும் இளைஞர்களை ஊக்கப்படுத்த அரசு சார்பில் முதன்முதலாக கிண்டியிலே 'தொழில் முனைவோர் பயிற்சி நிலையம்' தொடங்கவிருப்பதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் தொழில் வணிக இயக்ககத்தின் செயல்பாடுகளில் நல்ல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. துறைத் தலைவரின் நடைமுறை அதிகாரங்களில் பெரும்பாலானவை மாவட்டத் தொழில் மையங்களில் இருக்கக்கூடிய பொது மேலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது ஒரு நல்ல அம்சம் இதன்மூலம் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு வேலைகள் எளிதாக நடைபெறும் என்று நான் கருதுகிறேன். மாவட்டத் தொழில் மையத்தில் வழிகாட்டிச் சேவைப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வழிகாட்டிச் சேவைப் பிரிவின்கீழ் அனைத்துப் பொது மேலாளர்கள், மண்டல இணை இயக்குநர்கள் ஆகியோருக்கு திட்டத் தொகுப்புகள் 5,200 இனங்கள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 6 மாத காலத்தில் 440 இனங்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது. இருந்தாலும், நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது துறைத் தலைவருக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை அவர்களுக்கும் நமது அரசு வழங்கியிருக்கிற காரணத்தால், பொது மேலாளர்கள், மண்டல இயக்குநர்கள், இன்னும் முனைப்போடு செயல்பட்டு, மேலும் கூடுதலான இனங்களுக்கு உதவிகள் செய்து தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

படித்து வேலையற்ற மகளிர், ஆடவர்களை ஊக்கப்படுத்த கிண்டியில் ஒரு தொழில்முனைவோர் வளர்ச்சி மையம் தொடங்கி உள்ளதை நான் மனதார வரவேற்கிறேன்.

முதல் தலைமுறை மகளிர் தொழில்முனைவோருக்கு திட்ட மதிப்பில் 10 விழுக்காடு அதிகபட்சம் ரூ. 50,000 ஈட்டுத் தொகையை மானியமாக வழங்க அரசு முன்வந்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

நண்பகல் 12-00

தந்தை பெரியார் கண்ட கனவை நனவாக்கும் விதத்தில், பெண்களை நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் பங்கேற்கச் செய்து, தொழில்

துறையிலும் அவர்களை ஈடுபடச் செய்து. தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றல்மிக்க சிந்தனையின் வெளிப்பாட்டை இன்றைக்கு நமக்குத் தந்திருக்கிறார். சிறு தொழில் நிறுவனங்களுக்கு மற்ற நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையினை உரிய நேரத்தில் பெற்றுத் தருவதற்குக் கண்காணிப்பு முறையும், இந்தக் கொள்கைக் குறிப்பிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கயிறு உற்பத்தியைப் பார்க்கும்போது, கயிற்றுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1996-97-ஆம் ஆண்டிற்கு நவம்பர் 1996 முடிய நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ. 486.67 இலட்சம். ஆனால், அதற்கு மாறாக ரூ. 543.94 லட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது கிட்டத்தட்ட 112 சதவிகிதம் ஆகும். நான் இதற்காக அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அடுத்த மூன்று ஆண்டுகளில் செயல்படுத்துவதற்கு 16.71 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த கயிறு வளர்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டு, மாநில அரசின் பங்காக 25 விழுக்காடு அதாவது 138.75 லட்சம் ரூபாய் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

தென்காசியிலே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே கயிறு ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் தொடங்கப்படவுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கின்றேன். ஆக, கயிறு உற்பத்தியிலே கூட, கழக அரசு எந்த அளவுக்குக் கவனம் காட்டுகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால் நடந்து முடிந்த அரசு, கயிறு திரிப்பதையே தொழிலாகக் கொண்டிருந்த ஆட்சியாக விளங்கியது. அதுவும் அடுத்தவன் தொடையிலே கயிறு திரிக்கிற அரசாகத்தான் அன்றைக்கு இருந்த அம்மையார் ஆட்சி விளங்கியது. இன்றைக்கு நம்முடைய ஆட்சியிலே, கயிறு உற்பத்தியிலேகூட நம்முடைய திறமையைக் காட்டுகின்ற அளவில் முனைப்போடு நம்முடைய அமைச்சர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, தேயிலை உற்பத்தியைப் பார்க்கும்போது, குன்னூரிலே உள்ள INCOSERVE நேரிடையாக மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மற்றும் இதர அயல் நாடுகளுக்கும் தேயிலை ஏற்றுமதி செய்ய ஏற்றுமதிப்பிரிவு ஒன்றை அமைக்க உள்ளதாக நம்முடைய கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், கடந்த ஆட்சியிலே ஊட்டியிலே அல்லது குன்னூரிலே தேயிலை எஸ்டேட்டுகளை வாங்கினார்களே தவிர, தேயிலை உற்பத்தியைப் பற்றியோ, தேயிலைத் தொழிலாளர்களைப் பற்றியோ



சிந்திக்க அன்றைக்கு அவர்கள் தயாராக இல்லை என்பதை நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1949-லே உருவாக்கப்பட்டது. நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகமும் 1949-லேதான் உருவாக்கப்பட்டது. அந்த வரலாறு இந்தக் கழகத்திற்கும் இருக்கிறது என்பதை நான் நினைவுபடுத்தி கடந்த 47 ஆண்டு காலத்தில் 73,581 தொழிற்சாலைகளுக்கு 2,864 கோடி ரூபாய் இதுவரை நிதியுதவி செய்திருப்பது குறித்து, நான் அந்தக் கழகத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். நடப்பு நிதியாண்டில் சிறு தொழில் பிரிவுகள் 'ஐ.எஸ்.ஓ. 9000' தொடர் சான்றிதழைப் பெறும் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை நம்முடைய அரசு அறிமுகப்படுத்தியிருக்கிறது. அதேபோல, டான்சியை, மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறது. நம்முடைய பார்வார்டு பிளாக் உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல டான்சி நிலத்தை மேம்படுத்த வேண்டிய கடந்த அரசு, டான்சி நிலம் எங்கேயிருக்கிறது என்று பார்த்து, அதைப் பங்கு போட்டுக்கொண்டு, அதையும் மற்றவர்களுக்குக்கூட விற்கவில்லை – ஒரு முதலமைச்சர் – தானே எடுத்துக் கொண்ட சோகக் கதையெல்லாம் இந்த நாட்டிலே நடந்திருக்கிறது. அதிலேகூட முறையான பதிவுக் கட்டணம் கூட ஒழுங்காகச் செலுத்தவில்லை. எடுத்துக் கொண்ட நிலத்திற்குக்கூட உரிய கட்டணம் செலுத்தாமல், அதிலேகூட ஒரு முதலமைச்சர் ஆதாயத்தைத் தேடிக் கொண்டார் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், 'யார் அந்த ஊழலுக்கு உடந்தையாக இருந்த அதிகாரி, அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?'. என்பதுதான் ஒருவேளை அந்த அம்மையார் செய்த ஊழலுக்குத் துணை போன அதிகாரி, இன்னும் இருந்தால் அவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் மூலம் பல்வேறு இடங்களில் தொழிற்பேட்டை உருவாக்கப்படவிருக்கிறது. அமைச்சர் அந்தப் பட்டியலை இந்த அவைமுன் வைத்திருக்கிறார். நான் அவரிடத்திலே, எனது தொகுதியின் சார்பாகவும், எனது மாவட்டத்தின் சார்பாகவும் சில கோரிக்கைகளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த நிதியாண்டில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையினைச் சமர்ப்பித்தபோது, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில், செய்யாறு தொகுதியிலே சிப்காட் தொழிற்பேட்டை

அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். இந்த பட்ஜெட்டிலேகூட நான் விவாதத்திலே பங்கேற்று உடனடியாக நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று கேட்டபோது நான் இந்த மன்றத்திலே பேசிய 5-வது நாள் செய்தித்தாள்களிலே நில ஆர்ஜிதம் செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டதைக் கண்டு உண்மையிலேயே வியந்து போனேன். அதுபோல சிப்காட் தொழில் வளாகம் அமைக்கப்படும் என்று ஏற்கெனவே மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள். என்றாலும் இந்த நிதியாண்டிலே சிப்காட் அமைக்கப்படுவதற்கான — நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிற காரணத்தினால் நம்முடைய அமைச்சர் அவர்கள் நேரிலே வந்து பார்வையிட்டு — செய்யாறிலே சிப்காட் தொழிற்பேட்டையை ஆரம்பிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

செய்யாறிலே ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இருக்கிறது. அதிலே இருந்து வரக்கூடிய மொலாசஸ் பல இடங்களுக்குச் செல்கிறது. பல தொழிலதிபர்கள் அதை எடுத்து அவர்களுடைய தொழில் உற்பத்திக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சிப்காட் வரவிருக்கிற காரணத்தினாலே செய்யாறிலே மொலாசஸை பயன்படுத்தி எரிசாராயத் தொழிற்சாலையோ அல்லது அதைப் பயன்படுத்தி வேறுவிதமான தொழிற்சாலைகளையோ அமைக்க நமது அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-05

அதேபோல செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலிருந்து வரக்கூடிய கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி ஒரு காகித ஆலையை செய்யாறிலே தொடங்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல செய்யாறு பகுதியில மட்டும் அல்ல; திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் முழுவதும் பல்வேறு இடங்களில் கிரானைட் கிடைக்கின்றது. பல்வேறு தனியார்கள் முடிந்த அளவுக்கு கிரானைட்டை எடுத்துக் கொண்டுபோய் வெளிநாட்டிலே விற்றுவிடுகிறார்கள். அதனால் எங்களுடைய மாவட்டத்திலேயே கிரானைட்டை பாலிஷ் செய்கின்ற அந்தத் தொழிற்சாலையை உருவாக்கிக் கொடுத்தால் எங்களுடைய மாவட்டம் வளர்ச்சிபெறும் என்று நான் கருதுகிறேன். அதேபோல எங்களுடைய மாவட்டத்தில் குறிப்பாக செய்யாறு, ஆரணி போன்ற பகுதிகளில்



கைத்தறி லுங்கிகள், கைத்தறி துணிகள், பட்டுப்புடவைகள் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. கைத்தறி துறை மூலம் அவை விற்கப்பட்டாலும்கூட நம்முடைய வணிக இயக்ககத்தின் மூலம் பெருமளவு உற்பத்தி செய்யப்படுகின்ற அந்தத் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய நம்முடைய அரசு முன்வர வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான பிரச்சினை என்னுடைய தொகுதிப் பிரச்சினை. எல்லோருக்கும் தெரியும் நாம் யாருக்கும் நாமம் போட்டு பழக்கப்பட்டவர்கள் அல்ல. இருந்தாலும் கூட என்னுடைய தொகுதியிலே ஜம்டரி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்த ஜம்டரி கிராமத்திலேதான் நாமக்கட்டி உற்பத்தி செய்யப்படுகிறது. அந்த ஊரில மட்டும்தான் அந்த நாமக்கட்டி உற்பத்தி செய்வதற்குத் தகுந்த மண் கிடைக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் குடிசைத் தொழிலைப் போல நாமக்கட்டி தயார் செய்கிறார்கள். அங்கு தயாரிக்கப்படுகிற நாமக்கட்டிகள்தான் திருப்பதி மற்றும் வெளிநாட்டிற்குக்கூட ஏற்றுமதி செய்யப்படுவதாக நான் அறிகிறேன். ஆனாலும் வழிவழியாக அந்தத் தொழிலைச் செய்து வருகிற அந்தக் கிராமத்து மக்களைப் பார்த்தால் இன்னும் அவர்கள் குடிசையிலேதான் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்குப் போதிய விலை கிடைக்கவில்லை என்று நான் கருதுகிறேன். எனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வணிக இயக்ககத்தின் மூலம்—நேரடியாக வந்து அந்த இடத்தைப் பார்வையிட்டு அரசு மூலம்—அந்த நாமக் கட்டிகளைக் கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் சேத்துப்பட்டுக்கு அருகில முடையூர் என்ற கிராமத்தில் மாவுக்கல்லிலிருந்து சிற்பங்கள் செய்கிறார்கள். அவற்றை குறைந்த விலையிலே அவர்கள் வெளியிலே விற்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருமுறை அந்த இடத்தைப் பார்வையிட்டு ஒரு சிற்பத் தொழிற் கூடம் அங்கே அமைத்தால் ஏதுவாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல எங்களுடைய மாவட்டத்தில் பல்வேறு இடங்களில பட்டுப்பூச்சி வளர்க்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக நம்முடைய மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களுடைய சொந்தத் தொகுதியான கீழ்பென்னாத்தூரில் அதிகமான அளவிலே பட்டுப்பூச்சிகள் வளர்க்கப்படுகின்றன. அந்த அளவுக்கு பட்டுப்பூச்சிகள்

எங்களுடைய மாவட்டத்தில் வளர்க்கப்பட்டாலும்கூட ஆரணியில் இருக்கக்கூடியவர்கள், செய்யாறில் இருக்கக்கூடிய நெசவாளர்கள் எல்லாம் கோரா வாங்க வேண்டும் என்று சொன்னால் பெங்களூருக்குச் சென்று வாங்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. எனவே எங்களுடைய மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கோரா தொழிற்சாலையை நம்முடைய அமைச்சர் அவர்கள் தொடங்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல அதற்குத் தேவையான ஜரிகைத் தொழிற்சாலையையும் எங்களுடைய மாவட்டத்திலே நீங்கள் அமைத்துத் தரவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் செங்கத்தில் 10,000 ஏக்கர் பரப்பளவிலே மத்திய அரசாங்கத்தின் மூலமாக ஒரு விவசாயப் பண்ணை இருக்கிறது. அங்கே அதிகமான அளவிலே மிகச் சிறப்பான தக்காளிகள் விளைகின்றன அந்தத் தக்காளியைப் பயன்படுத்தி ஒரு தக்காளி ஜூஸ் தொழிற்சாலை தொடங்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுக்குத் தெரியும். திருப்பத்தூரிலேகூட அண்மையிலே சந்தன மரங்கள் எரிந்தன. எங்களுடைய மாவட்டத்திலே ஜவ்வாது மலையிலே அதிகமான அளவிலே சந்தன மரம் உற்பத்தியாகின்றது. எனவே திருட்டுப்போகின்ற சந்தன மரங்களைப் பிடிக்கின்றபோது வீணாக அந்த மரங்கள் எரிவதைத் தவிர்க்கும் விதத்திலே ஒரு சந்தனத் தொழிற்சாலையை ஆரம்பித்தால் உடனடியாக அதைப் பயன்படுத்தி சந்தன ஆயில் தயார் செய்வதற்கு ஏதுவாக இருக்கும்.

மொத்தத்தில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தொழில் ரீதியாக பின்தங்கிய வட்டங்களாக பல்வேறு வட்டங்களை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் 1989-லேயும் சரி, இப்போதும் சரி அறிவித்திருக்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது தொழில் ரீதியாக பின்தங்கிய வட்டங்களாக அறிவித்திருக்கிற அத்தனை வட்டங்களிலும் ஒரு தொழிற்பேட்டையைத் துவங்குவதற்கு நம்முடைய அரசு முன்வர வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. இராமசாமி):** உரையை முடித்துவிடுங்கள், 15 நிமிடம் ஆகிவிட்டது.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எங்களிடமிருந்து பிரிந்து சென்ற வட ஆற்காடு மாவட்டம் தொழில்



ரீதியிலே மிகவும் முன்னேறிய ஒரு மாவட்டமாக இன்றைக்கு வந்துகொண்டிருக்கிறது. நான் அதை வரவேற்கிறேன். எனவே அதில் ஒரு பகுதியாக இருந்திருக்கிற காரணத்தினால் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் அந்த அளவுக்கு உயர வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பார்வை திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் மீதும் விழவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருமுறை எங்களுடைய மாவட்டத்தைப் பார்வையிட்டு எங்கெங்கு என்னென்ன சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்து எங்களுடைய மாவட்டத்திலே தொழிற்சாலைகள் உருவாக்கிட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பதிவுத் துறையைப் பற்றி நான் அதிகம் பேச வேண்டும் என்று கருதினாலும்கூட நேரம் இல்லை. சுருக்கமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு பல்வேறு கண்காணிப்புக் குழுக்கள் அந்த ரிஜிஸ்டரார் அலுவலகங்களைப் பார்வையிட்டு அதன்மூலமாக வழி வழியாக நடைபெற்றுக் கொண்டிருந்த பல்வேறு குற்றங்கள், தவறுகள் இன்றைக்கு ஓரளவுக்கு தவிர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-10

நிலத்தின் மதிப்பு நகர்ப்புறங்களில் உயருகிறது. அதற்கு ஈடாக கிராமப்புறங்களில் நிலத்தின் மதிப்பு உயருவது இல்லை. ஆனாலும்கூட அதிகாரிகள் நிலத்தின் மதிப்பை எக்கச்சக்கமாக கிராமப்புறங்களில் உயர்த்தி விடுகிற காரணத்தால் சில நேரங்களில் நிலத்தின் மதிப்பை விட அதற்கு வாங்க வேண்டிய பத்திரத்தின் மதிப்பு அதிகமாகி விடுகிறது. எனவே, முறையாக அந்தப் பகுதிகளை ஆய்வு செய்து அந்தக் கட்டணத்தை விதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வில்லங்கச் சான்றிதழைக் கோருகிறபோது ஒரு மாதம், 2 மாதம் கூட எடுத்துக்கொள்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு ஆலோசனையாகச் சொல்ல விரும்புவது, இன்று கணிப்பொறி யுகமாக இருக்கிற காரணத்தால் வில்லங்கச் சான்றிதழைக்கூட கணிப்பொறி மூலமாக வழங்க நம்முடைய அரசு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் வீட்டு மனைகளைப் பொறுத்தவரையில் அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளை நிச்சயமாகப் பதிவு செய்யக்கூடாது என்கிற ஒரு சட்டத்தை இந்த அவையிலே இயற்ற வேண்டும். அதன் மூலம் பல்வேறு தவறுகளை நாம் தவிர்த்திட ஏதுவாக இருக்கும். (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்துவிடுகிறேன்.

முத்திரைத்தாள் முகவர்கள் செய்கிற தவறுகளைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஒரே முகவருக்கு எல்லா உரிமங்களையும் கொடுப்பதைத் தவிர்த்து ஒவ்வொரு நகரத்திலும் 5 பேர், 10 பேர் முகவர்கள் என்று அறிவித்தால் இந்தக் குற்றச்சாட்டு நிச்சயமாக எழாது என்பதை நான் தெரிவித்துக்கொண்டு மொத்தத்தில் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்பதோடு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற அனைத்து மானியக் கோரிக்கைகளையும் வரவேற்பதோடு மீண்டும் நினைவுபடுத்தி. தெரிவித்துக்கொள்ள விரும்புவது. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தை வட ஆற்காடு மாவட்டத்திற்கு நிகரான மாவட்டமாக தொழில் ரீதியில் வளர்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. இராமசாமி):** அடுத்து திரு. ஏ. எம். ராமசாமி.

**திரு. ஏ. எம். ராமசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, பதிவுத் துறை, பட்டு வளர்ப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதி தொழில் துறையில் மிகவும் பின் தங்கிய தொகுதி ஆகும்.

சேலம் மாவட்டத்தில் அதிகமாக சேகோ, ஸ்டார்ச், ஜவ்வரிசி உற்பத்தி செய்யும் மில்கள் இருக்கின்றன. ஆத்தூரில் 500 மில்களுக்கு மேல் இருக்கின்றன. ஆத்தூரைப் பொறுத்தவரையில் இந்தத் தொழிலை நம்பித்தான் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தத் தொழிலை மேம்படுத்தவும், உற்பத்தியை ஓரளவுக்கு முறையாக அதிகப்படுத்தவும் இந்தத்



தொழிலினுடைய முதலீட்டாளர்களுக்கு அதிக அளவில முதலீடு தேவைப்படுகிறது.

மேலும் பருத்தியைப் பொறுத்தவரையில் பருத்தி உற்பத்தியில் இந்தியாவில் தரம் வாய்ந்த பருத்தி உற்பத்தி ஆராய்ச்சி மையம் இருக்கிறது. ஜின்னிங் பேக்டரி மற்றும் நூல் மில்கள் துவங்க அதிக வாய்ப்புகள் உள்ளன. எங்களது தொகுதிக்கு "தாய்கோ" வங்கி ஒன்றை தொழில் துறையில் அமைத்தால் அந்த வங்கியின் மூலமாக அவர்கள் கடன் பெற்று நல்லமுறையில் தொழில் வளர்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் தொழில் மையம் ஒன்று துவங்க அனைத்து வசதியும் அங்கே உள்ளது. அரசு புறம்போக்கு நிலங்கள் அதிக அளவில் அங்கே இருப்பதால் இடம் தேர்வு செய்வதில் பிரச்சினைகள் எதுவும் இல்லை எனவே, எனது தொகுதியில் தொழில் துறை முன்னேற தங்களுடைய மேலான கவனம் தேவை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாவட்ட பத்திரப் பதிவு அலுவலகம் ஒன்றை ஆத்தூரில் அமைத்துத் தர வேண்டும்.

சிட்கோ தொழில் பேட்டை துவங்குவதற்கு நிறைய புறம்போக்கு நிலங்கள் அங்கே உள்ளன. அந்த நிலங்களை எல்லாம் கையகப்படுத்தி அங்கே ஒரு பெரிய சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆத்தூர் நகருக்கு குடிநீர் வழங்க மேட்டூர்-ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. ஆனால் வாரம் இரண்டு முறைதான் குடிநீர் வருகிறது., ஏற்கெனவே 4.2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செய்து வந்த இராமநாயக்கன்மலை-கல்லாறு அணைக்கட்டு திட்டத்தை செயற்படுத்தினால் குடிநீர்த் தட்டுப்பாடு எப்போதும் இருக்காது. சுமார் ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதேபோல் அதைச் சுற்றியுள்ள ஏரிகளுக்கும் நீர் வரத்து அதிகமாக வந்து ஏரிகள் நிரம்பக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே, இந்தக் கல்லாறு திட்டத்தை நடைமுறைப்படுத்தி, எனது தொகுதியில் விவசாயம் நல்லமுறையில் வளரவும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும் ஆவன செய்ய அன்புடன் கேட்டுக் கொண்டு அமர்கின்றேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. இராமசாமி) :** திரு. ஆர். ஆர். சேகரன்.

**திரு. ஆர். ஆர். சேகரன் :** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான ஊரகத் தொழில்கள், மற்றும் பத்திரப் பதிவு மீதான மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் நாட்டிலே ஆண்டுதோறும் எண்ணற்ற இலட்சக்கணக்கான இளைஞர்கள் பட்டதாரிகளாக வந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அத்தனைபேருக்கும் அரசாங்கத்திலோ, தனியார் துறையிலோ வேலைவாய்ப்பு கிடைப்பதில்லை. அவர்கள் சுயமாகத் தொழில் தொடங்க வேண்டுமென்ற அடிப்படையிலே, பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம் செயல்பட்டு வருகின்றது. அது முறையாகச் செயல்படுகின்றதா என்று பார்த்தால் அது மிகப் பெரிய கேள்விக்குறியாக இருக்கின்றது.

மாவட்டத் தொழில் மையத்திலே பரிந்துரை செய்து அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டால், வங்கியிலே தேவையில்லாத பல்வேறு வினாக்களை எழுப்பி, அவற்றைத் தள்ளுபடி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்கின்றன. கொள்கைக் குறிப்பேட்டிலே 1996-97-ஆம் ஆண்டுக்கான இலக்கு 21,800 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் டிசம்பர் மாதம் வரை 7,500 பேருக்குத்தான் இந்தக் கடனுதவி வழங்கப்பட்டிருக்கின்றது.

மேலும், அவர்களிடம் செக்யூரிட்டி போன்ற பத்திரங்களையெல்லாம் கேட்டு, அந்த மனுக்களைத் தள்ளுபடி செய்வதற்கான சாத்தியக்கூறுகள்தான் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, இந்த வங்கிகளுக்கு அரசாங்கம் தெளிவான ஒரு உத்தரவைப் பிறப்பித்து, இந்தப் படித்த பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான ஒரு உத்தரவாதத்தை அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

பின்தங்கிய வகுப்பினருக்கு 27 சதவீதம் இட ஒதுக்கீடு என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு 15



சதவீதம் என்று தனியாக ஒரு இட ஒதுக்கீட்டிற்கு அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் கடன் வேண்டி விண்ணப்பங்கள் கேட்டால், அந்த விண்ணப்பப் படிவத்தைப் பார்த்தாலே சுமார் 60, 70 பக்கங்கள் இருக்கின்றன. அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு ஆடிட்டரை வைத்து அந்த விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலைமை இருக்கின்றது. சாதாரண, கிராமப்புறங்களிலே உள்ள இளைஞர்கள் அந்த விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்குக் கூட முடியாமலே சிரமப்படுகிறார்கள். அப்படிப் பூர்த்தி செய்து அனுப்பப்பட்ட விண்ணப்பங்களும் சுமார் 3 அல்லது 4 மாத காலமாகின்றது அவற்றைப் பரிசீலனை செய்து கடன் உண்டு, இல்லை என்று சொல்வதற்கு. அப்படி சேங்ஷன் செய்யப்பட்ட பிறகும்கூட, சென்னையிலேயிருந்து பணம் வரவில்லை என்று சொல்லி, மாதக் கணக்கிலே அவர்களுடைய விண்ணப்பங்கள் நிலுவையிலே இருக்கின்றன. ஆகவே, அரசு இதிலே கவனம் செலுத்தி, அந்த சேங்ஷன் செய்யப்பட்ட விண்ணபபங்களுக்கு உடனடியாகக் கடனுதவி அளிப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மாநில அளவிலே உள்ள இந்தக் குழுவிலே, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளையும் அங்கத்தினர்களாக நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கின்றேன்.

பெரிய தொழிற்சாலை என்று எடுத்துக் கொண்டால், சென்னையிலே அசோக் லேலண்ட், ஸ்டான்டர்ட் என்று ஏற்கெனவே தொழிற்சாலைகள் இருந்தும்கூட தற்போது துவங்கப்பட இருக்கின்ற ஹீண்டாய், போர்டு தொழிற்சாலைகளும் சென்னைக்கு அருகிலேயே துவங்க இருக்கின்றார்கள். சென்னை, ஏற்கெனவே போக்குவரத்து நெரிசல் மிகுந்த நகரம். எனவே, இதுபோன்ற தொழிற்சாலைகளை, எங்களது பகுதி போன்ற கிராமப் பகுதிகளிலோ அல்லது மாநிலத்தின் பிற பகுதிகளிலோ துவங்கினால் அங்கே வேலைவாய்ப்பு பெருகும். எனது ஓமலூர் தொகுதியிலே விமான நிலையம் இருக்கின்றது. தேசிய நெடுஞ்சாலை அந்த வழியாகச் செல்கின்றது. ஆகவே, அந்தப் பகுதியிலே இதுபோன்ற பெரிய தொழிற்சாலைகளை இனிமேலாவது துவங்குவதற்கு அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தை எடுத்துக் கொண்டால், தமிழகத்திலே ஆங்காங்கு பலயிடங்களிலே மின் தடங்கல் ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக, சேலம் நகரிலே தொடர்ந்து பல மணி நேரம் மின் தடங்கல் ஏற்பட்டு வருகிறது.

[திரு. ஆர். ஆர். சேகரன்] [1997 மார்ச் 31

கிராமப்புறங்களிலே மின்னழுத்தம் குறைவான காரணத்தினால், மின்சார மோட்டார்கள் காயில் பழுதுபட்டு தொழிற்சாலைகளுக்கு ஏராளமான நஷ்டங்கள் உருவாவதற்கு ஒரு சூழ்நிலை இருந்து வருகின்றது.

மேலும், சிறுதொழிலிலே எல்.டி. கன்ஸ்யூமர்களுக்கு 105 ஹார்ஸ் பவர் என்பதை 250 அல்லது 300 ஹார்ஸ் பவராக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மின் கட்டணத்தைப் பொறுத்தவரையிலே, சிறு தொழில்களுக்கும், பெரிய தொழில்களுக்கும் ஒரேமாதிரியான அளவு இருந்து வருகின்றது. அரசு, சிறுதொழில்களை ஊக்குவிக்கும் வகையிலே அவர்களுக்குக் கட்டணச் சலுகையை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, புதிதாக மின்னிணைப்பு பெறும் சிறுதொழில்களுக்கு அந்த டெவலப்மெண்ட் சார்ஜ் என்பதை ரத்து செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிறுதொழில்களைப் பொறுத்தவரையில் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மின் கட்டணம் வசூலிப்பதை மாதம் ஒரு முறை மின் கட்டணம் வசூலிக்க வேண்டும். அவர்களுடைய பளுவைக் குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

லாரிகள் வேலை நிறுத்தம் ஆண்டுதோறும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாக ஆகிவிட்டது. சிறு தொழில் வளர்ச்சிக்கு பெரிய ஒரு முட்டுக்கட்டையாக இது அமைகிறது. லாரித் தொழிலை எடுத்துக்கொண்டால் கூட அதுவும் ஒரு சிறு தொழில்தான். ஏராளமான டிரைவர்களும், கிளீனர்களும் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே அரசு இதிலே கவனம் செலுத்தி அந்தச் சங்க பிரதிநிதிகளை அழைத்துப் பேசி இதுபோன்ற நிகழ்ச்சிகள், வேலைநிறுத்தங்கள் இனிமேல் தொடராத வகையில் ஒரு தெளிவான முடிவை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதன் மூலம் சிறு தொழில் வளர்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

ஆட்டோமொபைல் துறையை எடுத்துக்கொண்டால் தமிழகத்தில் ஏராளமான உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இருக்கின்றன.



1997 மார்ச் 31] [திரு. ஆர். ஆர். சேகரன்]

அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான உதிரி பாகங்கள் அனைத்தும் தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளில்தான் வாங்கவேண்டும் என்ற ஒரு தெளிவான உத்தரவைப் பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் இங்கே தொழில் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கும்.

ஐ.எஸ்.ஓ. 9000 என்ற சான்றிதழ் பெற்ற நிறுவனங்கள் அதோடு தொடர்புடைய சலுகை பெறுவதற்கான கால உச்ச வரம்பை இந்த அரசு நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சிறு தொழிலில் உள்ள குறை தீர்க்கும் குழுவில் மக்கள் பிரதிநிதிகளையும் சேர்த்து அவர்களுடைய ஆலோசனைகளையும் பெறவேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய ஓமலூர் தொகுதியில் தேங்காய் நார் அதிக அளவில் உற்பத்தி ஆகிறது. இந்தப் பகுதியில் கயிறு சம்பந்தமான ஒரு ஆராய்ச்சிக் கூடமும், அதையொட்டி ஒரு தொழில் கூடமும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஓமலூரில் மிகப் பெரிய அளவிலே ஒரு தோல் சந்தை நடைபெற்று வந்தது. அந்தத் தோல் சந்தையை சுகாதார முறையில் மீண்டும் நடத்துவதற்கு அரசு முன்வந்து அங்கே தோல் சம்பந்தப்பட்ட ஒரு தோல் தொழில் பேட்டையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவற்றிற்குத் தேவையான இரசாயன மூலப் பொருட்கள் கிடைக்கக்கூடிய வகையில் அங்கே ஒரு சேவை மையம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சேலம் மாவட்டத்தில் ஜவ்வரிசி தொழில் மிகவும் பெரிய அளவில் நடைபெற்று வருகிறது. சுமார் 800 தொழிற்சாலைகள் அங்கே இயங்கி வருகின்றன. சமீபகாலத்தில் ஸ்டார்ச் மாவுக்கான உற்பத்தி வரியை மத்திய அரசு விதித்து இருக்கிறது. அந்த வரியை நீக்குவதற்கு மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவுத் துறையை எடுத்துக்கொண்டால் சென்னை மறைமலை நகரில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் அருகருகே இடங்களை ஒதுக்கீடு செய்து அந்த வீட்டு மனைகளை வழங்கி வருகிறது. அதிலே வீட்டு வசதி வாரியம் ஒதுக்கக்கூடிய இடத்திற்கு பத்திரப் பதிவுக் கட்டணம் 3 சதவீதமும், சி.எம்.டி.ஏ.

ஒதுக்கீடு செய்யக்கூடிய வீட்டுமனைகளுக்கு 12 சதவீதமும் முத்திரைக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஏன் இவற்றில் இந்த முரண்பாடு என்று தெரியவில்லை. ஆகவே, சி.எம்.டி.ஏ.வின் பத்திரப் பதிவுக் கட்டணத்தை 3 சதவீதமாக குறைத்து வழங்க உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 100 ரூபாய், 1,000 ரூபாய் பத்திரங்கள் அதிகமாக இங்கை உறிஞ்சக்கூடிய தன்மையில் இருக்கிறது. அவற்றை நல்ல தரமான காகிதத்தைக் கொண்டு தயாரிக்க மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பத்திரம் எழுதுபவர்களின் நலன் மீது இந்த அரசு அக்கறை செலுத்தி அவர்களுக்கும் ஒரு காப்பீட்டுத் திட்டம் மூலம் அவர்கள் நலன் பாதுகாக்க வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. இராமசாமி):** அடுத்து திரு. குழந்தை. தமிழரசன்.

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் நிர்வாகம், பத்திரப் பதிவு, சிறு தொழில்கள் ஆகிய இந்த மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களை நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையில் 134 வருட சேவையை இந்த முத்திரைத் தாள் நிர்வாகமும், பத்திரப் பதிவுத் துறையும் தமிழ்நாட்டில் செய்து வருகிறது என்றும் மிகப் பழமையான அமைப்பைக் கொண்ட நிர்வாகம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே நான் பெருமைப்படுகிறேன். அவர்கள் அதைச் சொல்லிவிட்டு அதிலே குறிப்பிடுகிறபோது தமிழகத்தினுடைய கஜானாவுக்கு அதிக வருமானத்தைத் தரக்கூடிய வணிக வரி, கலால் ஆகிய இந்த இரண்டுக்கும் அடுத்தப்படியாக இந்தப் பத்திரப் பதிவுத் துறை — இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது, நீங்கள் அரசுக்கு 'வருவாயை ஈட்டக்கூடிய துறையாக நெம்பர் 1 என்ற முறையில் இந்தத் துறையை மாற்றிக் காட்டலாம். ஆட்சி மாறி விட்டது. அமைச்சர் அவர்கள் மாறி விட்டார்கள். ஆனால் அந்தத் துறையில்



மேலிடத்திலிருந்து அடிமட்டம் வரையில் பணியாற்றக்கூடிய அதிகாரிகள் இன்னும் முற்றிலுமாக தங்களை மாற்றிக்கொண்டு இந்த அரசுக்கு வருவாயை கொண்டு வந்து சேர்க்கிற இடத்திலே அவர்கள் இல்லை என்பதை நான் மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் பொது மக்கள் அன்றாடம் சென்று அணுகக்கூடியத் துறை இது. ஆனால், இந்தத் துறையில் பொது மக்கள் படுகின்ற அல்லல்கள், குறைகள் மிகவும் அதிக அளவில் இன்றளவும் இருந்து வருகின்றது என்பதை இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர்கள் எல்லாம் உணர்ந்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன். இந்தத் துறையைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில், சில சோன்களாகப் பிரிக்கப்பட்டு, விஜிலன்ஸ் புலனாய்வு, விழிப்புப் பணிக் குழு என்ற அளவில் சில இடங்களில் இருக்கின்றது. அதிலே மாவட்ட அளவிலே என்று இல்லாமல் வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு விழிப்புப் பணிக் குழு இருக்கிறது. அதனுடைய டி.எஸ்.பி., துணைக் கண்காணிப்பாளர் அளவில் அவர் அங்கேயிருந்து கொண்டிருக்கிறார். அவர் பொறுப்பிலே இருக்கின்ற இரண்டு, மூன்று மாவட்டங்களுக்கு அவர் வருகின்ற நேரத்தில், அவர் சரியான முறையில் புலன் விசாரணை செய்கிறாரா என்றால் இல்லை. அவர் வருகின்ற நாளைக் குறிப்பிட்டு அதிகாரிகளுக்கு தெரிவித்துவிடுகிறார்கள். அவர் வந்தவுடன். அதிகாரிகள் சென்று அவரைப் பார்க்கின்றார்கள். வேண்டிய ஃபைலிலோ, பத்திரங்களிலோ இருந்த இடத்திலேயே கையெழுத்தை வாங்கிக் கொள்கிறார்கள். தேவையானவற்றை கொடுத்துவிட்டால், அவற்றை வாங்கிக்கொண்டு அவர்கள் வந்துவிடுகின்றார்கள். எனவே இப்படிப்பட்ட இந்தத் துறையில் ஊழலைக் குறைக்க வேண்டும் அல்லது வருவாயை அரசுக்கு அதிகமாக ஈட்ட வேண்டுமென்ற அடிப்படையில் நீங்கள் பல்வேறு நிர்வாக சீர்திருத்தங்களை ஏற்படுத்தினாலும் கூட, குழுக்கள் போடப்போட அங்கே நடமாடக்கூடிய வருமானத்தை அவர்கள் பிரித்துக்கொள்வதிலேயே குறியாக இருக்கின்றார்களே தவிர, உண்மையான வருமானத்தை அரசாங்கத்திற்குக் கொண்டு சேர்க்கின்ற எண்ணத்தில் அதிகாரிகள் இல்லையென்பதை நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது ஒரு புதிய முறையை நீங்கள் அறிமுகப்படுத்தியிருக்கின்றீர்கள். நிலத்திற்கோ அல்லது வீட்டிற்கோ வேல்யுவேஷன் நிர்ணயம் செய்து, அதை ஒரு வழிகாட்டிப் பதிவேடு என்ற முறையில் பதிவு செய்து

வர்த்தக நிறுவனத்திற்கும், விவசாயிகளுக்கும் கொடுக்க வேண்டுமென்று திட்டமிட்டு அதை நாளைக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றீர்கள்—அதாவது 1-4-1997-க்குள் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றீர்கள். அப்படி சென்னையிலேகூட, அந்த வழிகாட்டிப் பதிவேடுகள் கொடுத்துவிட்டதாக அறிவித்திருக்கின்றீர்கள் நன்றி. ஆனால். கிராமப்புறங்களிலே, மாவட்ட அளவிலே என்ன நடக்கின்றதென்றால் நீங்கள் அந்த வழிகாட்டிப் பதிவேடு ஏற்பாடு செய்துவிட்டு, அவற்றை முறையாக வேல்யுவேஷன் செய்வதற்குரிய பணியாளர்களைக் கொடுக்காத காரணத்தினாலே, அங்கேயிருக்கின்ற சார் பதிவாளர்கள் அவர்களுக்குக் கீழே பணியாற்றக் கூடியவர்கள், குமாஸ்தாக்கள், பத்திரம் எழுதுபவர்களையெல்லாம் அழைத்து வந்து, வேல்யுவேஷன் போடச் சொல்லி, அவர்கள் 50 சதவீதம், அல்லது 60 சதவீதம் என்று எதைப் போடுகிறார்களோ அதன் அடிப்படையில் அந்த வேல்யுவேஷனை இந்த அரசுக்குத் தெரியப்படுத்த தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, எந்த நோக்கத்திற்காக நீங்கள் வேல்யுவேஷன் போட வேண்டுமென்று எதிர்பார்க்கின்றீர்களோ அது நிச்சயமாக நிறைவேறவில்லை. அதற்குரிய சரியான பணியை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** தலைவர் அவர்களே, வழிகாட்டிப் பதிவேட்டைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே இருக்கின்ற மதிப்பீட்டைத் தயார் செய்து அங்கே இருக்கின்ற வர்த்தக நிறுவனத்திடமோ, அல்லது பொதுவாக இருக்கக்கூடிய பொது இடங்களிலோ, விவசாயச் சங்கத்திடமோ அல்லது ஏதாவது ஒரு இடத்தில் பொது மக்கள் பார்வைக்கு. வைத்துவிடுவோம். அவர்கள் பார்த்துவிட்டு, நேரிடையாகப் போய் அதற்குரிய ஸ்டாம்ப் வாங்கி பதிவு செய்து கொள்ளலாம். இப்போது அங்கே கொடுக்க மாட்டோம். சப்-ரிஜிஸ்தரார் அலுவலகத்தில் மதிப்பீடு இருக்கும். இருந்தாலும் பொது மக்கள் விரும்பினால், இருக்கக்கூடிய பொது இடங்களில் சென்று பார்வையிடுகின்ற அளவுக்கு வழங்கப்படும்.

**திரு. குழந்தை. தமிழரசன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது குறிப்பிட்ட இந்தப் பதிவேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும் வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாதந்தோறும் டிஸ்டிரிக்ட் ரெவியூ மீட்டிங் என்று ஒவ்வொரு



மாதமும் நடத்துகிறார்கள். அப்படி நடத்துகிறபோது அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், வேலை நாட்களில் அந்த மீட்டிங்கை நடத்துகிறார்கள். அவருக்குட்பட்ட 10, 15 சார்-பதிவாளர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், தங்களுடைய பணிகளையெல்லாம் போட்டுவிட்டு, அந்த ரெவியூ மீட்டிங்குக்கு வருகிறார்கள். வந்து அங்கே எந்தவிதமான கருத்தையும் பரிமாறிக்கொள்வதில்லை. சாதாரணமாக மீட்டிங்குக்கு வந்ததற்கு கையெழுத்துப் போட்டுவிட்டு டி.ஏ. கிளைம் செய்துவிட்டு வந்துவிடுகிறார்கள். மீண்டும் அவர்கள் வருகின்றபோது அலுவலகத்தில் நான் வருகின்றவரை எந்தப் பத்திரத்தையும் நீங்கள் பதிவு செய்யக்கூடாது என்று சொல்லிவிட்டு வந்துவிடுகிறார்கள், ஏனென்றால் பத்திரத்தை அவர்கள் பதிவு செய்துவிட்டால், அவர்கள் ஏதாவது வாங்கிக் கொண்டு போய்விடுவார்கள் என்று ஒரு பயம். எனவே, எல்லாவற்றையும் வைத்துப் பூட்டிவிட்டு வந்துவிடுவார்; தலைநகரத்திற்கு வந்துவிடுகிறார். 5 மணி, 6 மணி வரை மக்கள் அங்கே எந்தவிதமான பத்திரத்தையும் பதிவு செய்யாமல் உட்கார்ந்து கிடக்கிறார்கள். எனவே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்த மாதாந்திர ரெவியூ மீட்டிங்கை தயவுசெய்து லீவு நாட்களில் சனிக்கிழமைகளில் வைக்கலாம். எனவே, மாதந்தோறும் டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்தரார் நடத்துகின்ற அந்த டிஸ்டிரிக்ட் ரெவியூ மீட்டிங்குகளை வேலை நாட்களைத் தவிர்த்து, பொது மக்களின் குறைகளை நீக்குகின்ற வகையில் சனிக்கிழமைகளில் நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

இப்போது பத்திரம் எழுதுகின்றவர்களுக்கு நீங்கள் லைசன்ஸ் வழங்குகின்றீர்கள். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கொடுக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதற்காக நன்றி. ஆனால், அந்த சர்டிபிகேட்டைக் கொடுக்கின்றபோது, பேப்பரிலே கொடுக்கின்றீர்கள். அவை கிழிந்து போய்விடுகின்றன, அல்லது அவர்கள் எங்கேயோ அவற்றைத் தவற விட்டுவிடுகிறார்கள். எனவே நீங்கள் அவற்றை லேமினேட் செய்யப்பட்ட ஒரு அடையாள அட்டை போல் கொடுத்தால், அவர்கள் அதைச் சிறப்பாகப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள மிக ஏதுவாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு பத்திரத்தைப் பதிவு செய்ய சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு ஒரு சொத்தைக் கொண்டு வருகிறார்கள். அங்கு அவர்கள் ஒரு

வேல்யூவேஷன் போட்டு பத்திரத்தைப் பதிவு செய்துவிடுகிறார்கள். பின்பு அந்த வேல்யூவேஷன் குறைவாக இருக்கிறது என்று சார்-பதிவாளர் நினைக்கிறார். அதிலே அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், அடுத்து இருக்கின்ற அவர்களுடைய மேல் அதிகாரிகளுக்கு — Special Deputy Collector தனி துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்), ஒவ்வொரு மாவட்ட அளவிலும் இருக்கின்றார்கள் — அனுப்பி வைக்கின்றார்கள். ஆனால் அங்கே அனுப்பி வைக்கின்ற நேரத்தில் என்ன நடக்கிறது என்றால், சார்-பதிவாளர் ஒரு நிலத்தைக் கொடுத்து அல்லது ஒரு வீட்டைக் கொடுத்து, ஒருவர் மிகக் குறைவான அளவில் பத்திரத் தாள் வாங்கி இருக்கிறார், ஆனால் உண்மையான அதனுடைய மதிப்பீடு 5 இலட்சம் ரூபாய் அல்லது 6 இலட்சம் ரூபாய் என அதிக அளவில் இருக்கும், ஆனால் இதில் இவர் குறைந்த அளவில் ஸடாம்பு ஒட்டியிருக்கிறார் இதை நீங்கள் பரிசிலனை செய்ய வேண்டும் என்று எழுதுகிறார்கள். அந்தப் பத்திரம் தனி துணை ஆட்சியர் அவர்களுக்கும் போய் சேருகின்றது. ஆனால் அங்கே என்ன நடக்கிறது என்றால், தனி துணை ஆட்சியரிடம் சம்பந்தப்பட்டவர்கள் சென்று தனிப்பட்ட முறையில் பார்த்துவிடுவதால் சார்-பதிவாளர் அலுவலக அதிகாரிகள் மிகச் சரியான காரணத்தை எழுதி, அதிகமான ஸ்டாம்பு டியூட்டி, அதிகமான முத்திரைத் தாளை வாங்க வேண்டும் என்று எழுதினாலும்கூட, தனி துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) அவர்கள் தங்களுக்குப் பெறவேண்டியதைப் பெற்றுக்கொண்டு, மிகச் சாதாரணமாக ஏதாவது ஒரு காரணத்தைக் குறிப்பிட்டு, இந்தப் பத்திரத்தை நீங்கள் ரிலீஸ் செய்யலாம் என்று அதற்குரிய காரணங்களைக் கண்டுபிடித்து எழுதிவிடுகிறார்கள். இதனால் என்ன நடக்கிறது என்றால், வரவேண்டிய பல கோடி ரூபாய் வருமானம் இந்த அரசிற்குக் கிட்டவில்லை. நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே இந்த டிசம்பர் மாதம் வரை ஏறத்தாழ 11 கோடி ரூபாய் இந்த முறையிலே வருமானம் வந்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், உண்மையிலே அந்த அதிகாரிகள் இந்த அரசுக்கு ஒத்துழைத்து, மிக நேர்மையான முறையில் அவர்கள் செயல்பட்டிருந்தால், ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்கு மேல் இந்த அரசாங்கத்திற்கு இதன் மூலமாக, இந்தத் தனி துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) மூலமாக வருமானம் வந்திருக்கும். அதை தனி துணை ஆட்சியர்கள் சரியாகச் செய்யவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதன் மீதும் தகுந்த கவனம் செலுத்துமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





அதேபோல் சார்-பதிவாளர் அலுவலகத்தில், இப்போது புகார்கள் குறித்து ஒரு பெட்டியை வைக்க நீங்கள் ஆலோசனை சொல்லியிருக்கிறீர்கள். மிக்க நன்றி, ஆனால், அந்தப் புகார்களை எழுதிப் போட்டால் அங்கேயிருந்து அதை எடுப்பது யார். அவர்கள் மீதேயான குற்றச்சாட்டாக இருந்தால் அந்தக் குற்றச்சாட்டை எப்படி அரசுக்குத் தெரிவிப்பார்கள்? அவர்கள் அதை அமைச்சருக்குத் தெரிவிக்க மாட்டார்கள். தயவு செய்து நீங்கள் . . . .

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தப் பெட்டியை, அதற்கு மேலே இருக்கக்கூடிய அதிகாரிகள் வந்து திறக்க வேண்டும். அதுவும் வாரத்திற்கு ஒரு முறை திறக்கப்பட்டு, அதிலே நடவடிக்கை எடுத்து, எடுத்த நடவடிக்கையை அதற்கு மேல் இருக்கின்ற அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று நாம் குறிப்பிலே சொல்லியிருக்கின்றோம். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி, நான் சொல்ல வருவது — They are all equal in everything ஏனென்றால் அவர்களிடமிருந்து நியாயமான முறையை எதிர்பார்க்கமுடியாது. தயவுசெய்து நீங்கள், உங்கள் அலுவலகத்திற்கு முன்னால் பெட்டியை வையுங்கள். அங்கு வருகின்ற புகார்களை நீங்கள் நேரிடையாக விசாரித்து அல்லது உங்களுக்கு வருகின்ற, ரிஜிஸ்டர் தபாலில் வருகின்ற புகார்களை விசாரித்து அவற்றின் மீது நீங்கள் நடவடிக்கை எடுங்கள். ஏனென்றால், நாங்கள் அமைச்சர் அவர்கள் மீது தான் நம்பிக்கைக் கொள்கிறோம். இந்த அரசின்மீதுதான் நம்பிக்கை கொள்கிறோம். எனவேதான், இந்த முறையைப் பொறுத்து, இந்த வேண்டுகோளை நீங்கள் பரிவுடன் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல், என்னுடைய தொகுதியான விருத்தாசலத்தைப் பொறுத்தவரையில், தற்போது சிதம்பரத்திலேயும், அதற்குப் பிறகு கள்ளக்குறிச்சியிலேயும் 30 சார்-பதிவாளர் அலுவலகங்களைக் கொண்ட இரண்டு மாவட்ட பதிவாளர் அலுவலகங்கள் இருக்கின்றன விருத்தாசலத்திலே கோட்டாட்சியர் அலுவலகம் ஏறத்தாழ 50 ஆண்டுகாலமாக இருக்கிறது. எல்லா அலுவலகங்களும் இருக்கின்றன. எனவே, விருத்தாசலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, தயவு செய்து ஒரு மாவட்ட பதிவாளர்

[திரு. குழந்தை தமிழரசன்] [1997 மார்ச் 31

அலுவலகத்தை நீங்கள் ஏற்படுத்த வேண்டும். சிதம்பரத்திலே இருந்து ஐந்து சார்-பதிவாளர் அலுவலகங்களையும், கள்ளக்குறிச்சியிலேயிருந்து ஐந்து சார்-பதிவாளர் அலுவலகங்களையும் எடுத்தால், பத்து சார் பதிவாளர் அலுவலகங்களை வைத்து ஒரு மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தை நீங்கள் தொடங்கலாம். எனவே, அதைச் செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான விருத்தாசலத்திலே பீங்கான் தொழிற்சாலை முன்பு இயங்கி வந்தது. இப்போதெல்லாம் சிறிய விளையாட்டுப் பொம்மைகள், கலைப் பொருட்கள் ஆகியவற்றையெல்லாம் மிகச் சாதாரண முறையில், எளிய முறையில் குடிசைத் தொழில்களைப் போல நிறைய பேர் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 200 யூனிட்டுகள் இருக்கின்றன. சென்னை, பெங்களூர் ஆகிய எல்லா இடங்களுக்கும் விருத்தாசலத்திலேயிருந்துதான் அந்த அழகான பீங்கான் பொம்மைகள் ஏற்றுமதியாகி, விற்பனையாகின்றன. ஆனால், அவர்களுக்கு உரிய வசதிகள் கிடையாது. உரிய அதிகாரிகளிடம் கேட்டாலும் எந்தவிதமான பதிலும் இல்லை. எனவே, விருத்தாசலத்தைப் பொறுத்தவரையில், அந்தப் பொம்மை செய்யும் தொழிலை சிறு தொழிலாக நீங்கள் அறிவித்து, அது மேம்பாடு அடைவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. இராமசாமி):** அடுத்து, திரு. ஜி.கே. மணி.

பிற்பகல் 12-35

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, "முத்திரைத்தாள் நிருவாகம் மற்றும் பதிவுத்துறை, ஊரகத் தொழில் மற்றும் சிறுதொழில், பட்டு வளர்ச்சித்துறை" போன்ற மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

முத்திரைத்தாள் நிருவாகம் மற்றும் பதிவுத்துறையைப் பொறுத்தவரையில், நாட்டுக்கு வருவாயைத் தேடித்தரக்கூடிய இந்தத் துறை கடந்தகால ஆட்சியில் எவ்வாறெல்லாம் சீரழிந்து இருந்தது என்பதை இந்த நாடே அறியும். குறிப்பாக, மாவட்டப் பதிவாளர்



1997 மார்ச் 31] [திரு. ஜி. கே. மணி]

அலுவலகமாக இருந்தாலும், சார்-பதிவாளர் அலுவலகமாக இருந்தாலும், அங்கே பதிவு செய்வதற்காக பொதுமக்கள் செல்கின்றபோது, அவர்களை மாற்றாந்தாய் பிள்ளையைப் போல கருதப்பட்ட காட்சிகளையெல்லாம் காண முடிந்தது.

வீட்டுமனைகள் பட்டா போட்டு விற்பனை செய்யக்கூடிய நேரத்தில், நகரத்திலே விற்பனை செய்யக்கூடிய வீட்டுமனை நிலங்களுக்கு பதிவுத்துறை அதிகாரிகள் குறைந்த கட்டணத்தைப் பெற்றுக் கொண்டு, அதற்காக கையூட்டும் பெற்று பதிவு செய்கின்ற நிலை இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் கிராமப்புறங்களில் மிகவும் குறைவான விலையில் இருக்கக்கூடிய வீட்டுமனை நிலங்களுக்குக் கூடுதலாகக் கட்டணம் வசூலிக்கின்ற நிலையிருக்கிறது. எனவே, இதையெல்லாம் மாற்றியமைத்து, இப்படி ஏமாற்றுகின்ற அதிகாரிகளைக் கண்டுபிடித்து அவர்கள் தண்டனை பெறுகின்ற வகையிலும், கிராமங்களில் பதிவு செய்யக் கூடிய மக்களுக்கு நியாயமான முறையில் குறைந்த கட்டணத்தை வசூலிக்கும் வகையிலும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று பத்திர எழுத்தர்கள், மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களிலும், சார்-பதிவாளர் அலுவலகங்களிலும் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் இருக்கிறார்கள். ஒருசில இடங்களில் பதிவு செய்யச் செல்லும்போது பத்திர எழுத்தர்கள் பற்றாக்குறை இருப்பதைக் காண முடிந்தது. ஆகவே, கூடுதலாக பத்திர எழுத்தர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊரகத் தொழில் மற்றும் சிறுதொழில் துறையைப் பொறுத்தவரையில், இந்த நாடு தொழில் துறையில் வளர்ந்துகொண்டு இருந்தாலும், படித்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்காமல் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டேயிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டுமானால், அதற்கு ஊரகத் தொழில்தான் பெரிதும் உறுதுணையாக இருக்கும். அந்த வகையில் சிறுதொழில் தொடங்குவதற்காக படித்த இளைஞர்கள் வங்கிகளில் கடன்பெறும் பொருட்டு விண்ணப்பித்து, அந்தக் கடனைப் பெறுவதற்காக வங்கி அதிகாரிகளை வருடக் கணக்கில் அணுகி அலைந்தாலும் கூட, வங்கிகள் அவர்களுக்குக் கடன் கொடுக்க முன்வருவதில்லை. அதற்கு

வங்கிகளில் பலவேறு காரணங்களைச் சொல்கிறார்கள். என்னவென்றால், 'இதற்கு முன்பு கடன் பெற்றவர்கள் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை, அதனால் உங்களுக்குக் கடன் தர இயலாது' என்று சொல்கிறார்கள். இதைப்பற்றி நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த நாட்டிலே கோடிக்கணக்கிலே கடன் பெற்றவர்கள் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தாமல் ஏப்பம் விடக்கூடிய நிலை இருந்தது அப்படி ஏமாற்றுகின்றவர்கள் கோடிக்கணக்கில் கடன் பெற முடிகிறது. ஆனால் படித்த இளைஞர்கள் சிறுதொழில் தொடங்குவதற்காக விண்ணப்பம் போட்டு, கடன் கேட்கும்போது வங்கிகள் அதைப் புறக்கணிக்கக்கூடிய நிலை நாடு முழுவதும் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, அவர்கள் தொழில் தொடங்குவதற்கு நியாயமான முறையில் வங்கிகள் கடன் கொடுத்து உதவ ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டம் (ரோஜ்கர் யோஜனா திட்டம்) என்ற திட்டத்தின்கீழ் விண்ணப்பித்து பல ஆண்டுகளாகியும் அவர்களுக்கு அந்த உதவி கிடைக்கவில்லை. அவர்கள் இன்னமும் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அதுபோல பிற்படுத்தப்பட்டவர்கள், மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கென்று கடந்த ஆட்சியில் ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின்படி விண்ணப்பம் செய்த ஒவ்வொருவரும் ஏறக்குறைய 15 ஆயிரம், 20 ஆயிரம் ரூபாய் வரையில் செலவு செய்து அலைந்த பிறகும், இதுவரையில் அவர்களுக்கு அந்தக் கடன் கிடைக்கப் பெறவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படி விண்ணப்பித்து, இதுவரையிலும் உதவி பெறாதவர்கள் பட்டியலைத் தேர்வு செய்து, மீண்டும் அவர்கள் தொழில் தொடங்க—கடந்த ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டிருந்தாலும்கூட—ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்வதன் மூலமாகத்தான் கிராமங்கள்தோறும் நிச்சயமாகத் தொழில் வளரும்.

பிற்பகல் 12-40

ஊரகத் தொழில்கள் என்று சொல்கிறபோது, தருமபுரி மாவட்டம் தொழில் வசதி இல்லாத பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. தருமபுரி மாவட்டம், ஓசூரிலே தொழிற்சாலைகள் இருக்கின்றனவே, அவை தருமபுரி மாவட்ட மக்களுக்குப் பயன்படுகின்றனவா என்றால் இல்லை. அந்த இடத்தில் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளிலெல்லாம் ஆந்திரா, கர்நாடகா போன்ற இடங்களிலிருந்து வரக்கூடிய தொழிலாளர்கள்தான்



பணியாற்றுகிறார்கள். ஆகவே, நான் அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்வது, அந்தத் தொழிற்சாலைகளிலெல்லாம் பிற மாநிலங்களிலிருந்து வருகின்றவர்களைத் தவிர்த்து, தருமபுரி மாவட்டம் அல்லது தமிழகத்தைச் சேர்ந்த பிற மாவட்டங்களிலிருந்து வரக்கூடிய தொழிலாளர்களுக்கு முன்னுரிமை கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான். ஓசூரிலே தொழிற்பேட்டைகள் இருக்கின்ற காரணத்தால் அந்த மாவட்டம் முன்னேறிய மாவட்டமாக பொருளாகாது. சிறு விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடிய பெண்ணாகரம் தொகுதியிலே எப்படியாவது இந்த ஆண்டு சிட்கோவின் மூலமாக தொழிற்சாலை துவங்க நீங்கள் முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அங்கே தொழிற்பேட்டைகள் அமைப்பதற்குத் தேவையான நிலங்களைத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆகவே, பெண்ணாகரம் தொகுதியிலே தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுப் புழு வளர்ப்பது என்பது மிக முக்கிய தொழிலாக இருக்கிறது. பட்டுப் புழு வளர்ச்சிக்கான, பட்டு உற்பத்திக்கான 'மல்பரி' பயிர் அதிக அளவில் தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டத்தில்தான் பயிரிடப்படுகிறது. குறிப்பாக பெண்ணாகரம், பாலக்கோடு ஆகிய இரண்டு தாலுக்காக்களிலே அதிக அளவு மல்பரி பயிரிடப்படுகிறது. விவசாயிகள் மல்பரி பயிரைப் பயிரிட்டு வந்தனர். தற்போது மல்பரி பயிரைப் பயிரிடுவதை அவர்கள் கைவிடக்கூடிய அளவுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், பட்டு வளர்ச்சித் துறையிலே பணியாற்றுகின்ற அதிகாரிகளுடைய கவனக் குறைவு, சரியான பயிற்சியின்மை, தரமான முட்டை வழங்கப்படாததுதான். இப்படிப்பட்ட காரணங்களினால் மல்பரி பயிரிடுவதும், பட்டுப்புழு வளர்ப்பும் குறைந்து கொண்டு வருகின்றது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்; என்னுடைய தருமபுரி மாவட்டத்திலே ஒரு பயிற்சி மையத்தைத் துவக்கி, விவசாயிகளுக்கு இது குறித்து பயிற்சி அளிக்க வேண்டும். தரமான முட்டை வழங்க ஆவன செய்ய வேண்டும். முட்டை விற்பனை செய்யும் மையங்கள் இருக்கின்றன. இருந்தாலும் அவை சரிவர செயல்படுவதில்லை. தரமான முட்டை வழங்கி மல்பரி பயிரிடுவதற்குப் பயிற்சி தருவதோடு மல்பரி பயிரிடக்கூடிய விவசாயிகளுக்கு மானியத்தோடு கடன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். பட்டு உற்பத்தி செய்வது, மல்பரி பயிரைப் பயிரிடுவது, பட்டு நூல் தயாரிப்பது சார்புத் தொழிலாகத்தான் இருக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் பட்டுக் கூடு தயாரிக்கக்கூடிய

உபதொழிலைத் தொடங்குவதற்கு பயிற்சியளித்து மானியத்துடன் கடன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் என்ற திட்டத்தை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். உள்ளபடியே நாங்கள் வரவேற்கிறோம். மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்திலே கோவை, கன்னியாகுமரி, நெல்லை மாவட்டங்களெல்லாம் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நாங்கள் வரவேற்கிறோம். குறையாகச் சொல்லவில்லை. இருந்தாலும் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியிருக்கக்கூடிய மாவட்டங்களான, பட்டு உற்பத்தி செய்யக்கூடிய மாவட்டங்களான தருமபுரி மற்றும் சேலத்தை இந்தத் திட்டத்தில் சேர்க்காமல் விட்டிருப்பது பெருத்த ஏமாற்றமாக, வருத்தமாக இருக்கிறது. ஆகவே சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களையும் அதனோடு சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். மலைவாழ் மக்கள் மேம்பாடு அடைவதற்கு நீங்கள் அதிகமான திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள். உள்ளபடியே நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். மலைவாழ் மக்கள் மல்பரி பயிரிட அரசு உதவுவதைப்போல, பிற்படுத்தப்பட்ட மக்கள், பெரிய, சிறிய விவசாயிகள், யாராக இருந்தாலும், அவர்கள் மல்பரி பயிரிடுவதற்கு அதிக அளவிலே மானியத்துடன் கடன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எடப்பாடி நகரத்திலே சார்-பதிவாளர் அலுவலகம் நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில், சீரழிந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்த அலுவலகத்திற்கு நடப்பு ஆண்டிலே புதிய கட்டிடம் கட்டித்தர ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

அதேபோன்று, எங்களுடைய தலைவர், மரியாதைக்குரிய பேராசிரியர் தீரன் அவர்களுடைய தொகுதியான ஆண்டிமடத்திலுள்ள இருமுளிக்குறிச்சியிலும், மத்தூரிலும் நடப்பு ஆண்டிலேயே சார்-பதிவாளர் அலுவலகங்கள் துவக்கப்பட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலுள்ள சார்பதிவாளர் அலுவலகம் தற்காலிகக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. அக்கட்டிடம்



பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, நடப்பு நிதியாண்டில் அதற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டித்தர முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, தர்மபுரி மாவட்டத்தில் நல்லம்பள்ளியிலும், இந்தூரிலும் சார்-பதிவாளர் அலுவலகங்கள் இல்லாமையால், அந்நகரங்களைச் சுற்றி இருக்கின்ற பொதுமக்கள் தொலைவில் இருக்கின்ற தர்மபுரியிலுள்ள சார்-பதிவாளர் அலுவலகத்திற்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, நல்லம்பள்ளியிலும், இந்தூரிலும் சார் பதிவாளர் அலுவலகங்கள் துவங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. இராமசாமி):** அடுத்து, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில்கள் மற்றும் பத்திரப் பதிவுத் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கைகள் மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிக்க அனுமதி அளித்தமைக்காக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் சற்றேறக்குறைய 40 இலட்சம் பேர்கள் படித்துவிட்டு, வேலை தேடி, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருக்கிறார்கள். வேலை வேண்டி பதிவு செய்திருக்கின்ற 40 இலட்சம் பேர்கள் இருக்கின்ற இந்த மாநிலத்தில், ஊரகத் தொழில் துறையின் வளர்ச்சி குறித்து முழு அளவில் அக்கறை செலுத்த வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு இருப்பதாக நாங்கள் கருதுகின்றோம். ஊரகத் தொழில் துறையில் எது முக்கியத்துவம் வகிக்கின்றது என்பதை ஆய்கின்றபோது, குறுந்தொழிலில் ஈடுபட்டுள்ள 2 இலட்சம் தொழிற்சாலைகள் 96 சதவீதத்தினைப் பெற்றுள்ளன. சிறுதொழில் துறை சுமார் 22 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்திருக்கின்றது. அதில் 'டைனி செக்டார்' என்று சொல்லப்படுகின்ற குறுந்தொழிற்சாலைகள் 84 சதவிகித வேலைவாய்ப்பினைக் கொடுத்திருக்கின்றன. எனவே, இந்தக் குறுந்தொழில் துறைக்கு தேவையான முக்கியத்துவத்தைக் கொடுத்து, அதற்கு அதிகக் கவனம் செலுத்தி, அங்கே தொழில் முனைவோர்களுக்குள்ள இடர்பாடுகளைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இருப்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை)**

அதேபோன்று, சிறுதொழில்களுக்கான மூலதன மதிப்பீடு ரூ. 60 இலட்சம் என்றும், துணைத் தொழில்களுக்கு ரூ.75 இலட்சம் என்றும் வரையறை செய்திருக்கிறீர்கள். சிறுதொழில்களுக்கு மேலும் ரூ. 10 இலட்சமாவது உயர்த்தித் தரவேண்டிய அவசியம் இருப்பதாக நாங்கள் கருதுகின்றோம். இந்தக் குறுந்தொழில்களின் வளர்ச்சிக்கு ஒரு தனிக் கொள்கை வகுக்க வேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதற்காக முந்தைய மத்திய அரசு கவனம் செலுத்தியிருந்தது. ஆனால், போதுமான அளவிற்கு அறிவிப்புகள் வரவில்லை. எனவே, தமிழக அரசும் இதிலே கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறுந்தொழில்களைப் பொறுத்தவரையில், நிதியுதவியினைப் பெறுவதில் தொழில் முனைவோர்கள் பெரும் இடர்ப்பாடுகளை அடைந்து வருகிறார்கள். 'தாய்கோ' வங்கி, ஒன்றுதான் இவர்களுக்காகக் கடன் வழங்கிக்கொண்டிருக்கிறது. அந்த வங்கியிலே குறுந்தொழில் செய்வோருக்கு ரூ.50 ஆயிரம் வரை கடன் வழங்குகிறார்கள். அந்த கடனுக்குக்கூட இரண்டு பேர் 'Surety' இருக்க வேண்டும், ஜாமீன்தாரர்கள் இருக்க வேண்டும். பிணையாணையினைப் பெற்றுக் கொண்டுதான் அந்தக் கடனைக் கொடுக்கிறார்கள். ஏற்கெனவே பாட்டாளி மக்கள் கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, இப்படிப்பட்ட இடர்ப்பாடுகளைத் தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள். எனவே, தொழில் துவங்குவதற்கு, அதுவும் குறுந்தொழில் துவங்குவதற்கு முன்வருபவர்களுக்கு, சூழ்நிலைகளைப் பொறுத்து, எந்தவித பிணையாணையும் இல்லாமல், கடன் கொடுப்பதற்கு, அதுவும் ரூ.2 இலட்சம் வரைக்கும் கடன் கொடுப்பதற்கு வழிவகை காணப்படவேண்டும் என்பது எங்களுடைய கருத்து. பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்பு உதவித் திட்டத்தின் கீழ் ரூ.95 ஆயிரம் வரை கடனுதவி வழங்கப்படுகின்ற சூழ்நிலையில், குறுந்தொழில் செய்ய முன்வருவோருக்கு ரூ.50 ஆயிரம்தான் கடனுதவி என்றால், அவ்வுதவி அத்தொழிலுக்கு எந்தவகையிலும் ஒரு சரியான முதலீடாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அக்கடனுதவியினை ரூ.2 இலட்சமாக ஆக்கிட முயற்சிகள் எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஒரு தொழிலை ஆரம்பிக்கின்றபோது, முதல் முதலீட்டுக்கு மாத்திரம் உதவி செய்துவிட்டு, சகல வகைகளிலும் தொழில் வளர்ச்சி



பெறும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. பல நேரங்களிலே, இந்தக் குறுந்தொழில்கள் சந்திக்கக்கூடிய இடர்ப்பாடுகளில், முக்கியமான இடர்ப்பாடு, நடைமுறை மூலதனம் இல்லாமல் அவதிப்படுவதுதான். நடைமுறை மூலதனத்திற்காக அவர்கள் தனியார் நிதி நிறுவனங்களுக்குச் சென்று, 36 சதவிகிதம், 40 சதவிகிதம் என்று வட்டிக்குக் கடன் வாங்கி, தங்களுடைய தொழிலை நடத்த முடியாமல், நெருக்கடிக்கு ஆட்படுகிறபோது, அந்தத் தொழில் நசிந்து விடுகிறது. ஆகவே, குறுந்தொழில்கள் நசிவதற்கு, இப்படிப்பட்ட நடைமுறை மூலதனம் ஒரு பிரச்சினையாக இருக்கிறது. நடைமுறை மூலதனத்திற்காக - Working capital - என்று சொல்வார்களே, கடன் கொடுப்பதற்கும், அதுவும் மிகக் குறைவான வட்டிக்கு அதைக் கொடுப்பதற்கும் வழிவகை காண வேண்டிய அவசியம் இருப்பதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 12-50

அதேபோல, இப்போது தொழிற்பேட்டைகளில் 30 சதவிகிதம், குறுந் தொழில்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி அறிவிக்கப்பட்டிருக்கிற இந்த அறிவிப்பு, செம்மையாக, சிறப்பாக, அரசினுடைய நோக்கத்திற்கேற்ப செயல்பட வேண்டுமானால், கூட்டுறவு அமைப்புகள் மூலம் செயல்படுகின்ற அந்தக் குறுந்தொழில் அமைப்புகளுக்கெல்லாம் முன்னுரிமை கொடுத்து, குறுந்தொழில் முனைவோர் அமைப்புகளை அழைத்துப் பேசி, அரசினுடைய தரிசு நிலத்தை அல்லது புறம்போக்கு நிலத்தை, குறுந்தொழில் வளர்ச்சிக்காக, எளிமையான முறையிலே அவர்கள் அதனை வாங்கக்கூடிய வகையிலே, அவர்களுக்குக் கொடுக்க வேண்டியது அவசியம் என்பதைப் பற்றியும் அரசு பரிசீலிக்க வேண்டும்.

அதேபோல், சிறு மற்றும் குறுந்தொழில்களுக்கு மின்சாரச் சலுகை கொடுக்கப்பட்டு வந்தது இரத்து செய்யப்பட்டிருக்கிறது. பட்டை தீட்டும் செயற்கை வைரத் தொழில்களுக்கும் பாய் முடைகிற சிறு தொழில்களுக்கும் கொடுப்பதைப்போல, குறுந் தொழில்களுக்குக் கொடுக்கப்பட்ட மின்சாரச் சலுகை, 10 எச்.பி. வரைக்கும் உயர்த்திக் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படி 10 எச்.பி. வரைக்கும் மின்சாரச் சலுகை உயர்த்தப்படும் என்று அரசு அறிவிப்பு இருந்தும்கூட, இன்றைக்கு அதனை அவர்கள் நடைமுறையிலே பெறுவதிலே பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைக்கு உரிய கட்டிடம், அவர்களுடைய பெயரிலேயே இருக்க

வேண்டுமென்று சொல்கிறார்கள். மின் இணைப்புப் பெற்றிருப்பதும், அவர்களுடைய பெயரிலேயே இருக்க வேண்டுமென்ற நிபந்தனையெல்லாம் இருக்கிறது. பெரும்பாலும், சொந்தக் கட்டடத்தை வைத்து, சொந்த இடத்தை வைத்து, தொழிலைத் துவக்குபவர்கள் மிகவும் குறைவாகத்தான் இந்தத் தொழிலிலே இருக்கிறார்கள். எனவே, இந்தக் குறுந்தொழிலிலே அப்படிப்பட்ட நிபந்தனைகளை அரசு வைக்காமல், 10 எச்.பி. வரைக்கும் மின்சாரச் சலுகை வழங்குவதற்கு முன்வர வேண்டும். அதற்கு நிலமோ, அந்தத் தொழிற்சாலைக்குண்டான இடத்திற்கு மின் இணைப்போ, அவருடைய பெயரிலேதான் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையைத் தளர்த்தி, தொழில் நடத்துகிற உரிமம் பெற்றிருக்கக்கூடிய அனைவருக்கும் மின்சாரச் சலுகை வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, குறுந்தொழில் துறையில் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களை, மற்ற மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களைவிட அதிக அளவில் நம்முடைய தமிழ்நாட்டில் நல்ல சந்தை கிடைப்பதற்கு, அரசு தொடர்புடைய அனைத்துத் துறைகளும், நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி ஆகக்கூடிய பொருள்களை வாங்குவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அப்போதுதான், குறுந்தொழில்கள் எல்லாம் சிரமம் இல்லாமல் நடப்பதற்குச் சாத்தியமாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், குறுந்தொழில்களுக்காக 'சிப்காட்' அமைக்கப் பட்டிருக்கிறபோது, அதனுடைய வேலைகளை நாம் துரிதப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தச் சிறுதொழில்களுக்காக 17,196 பேருக்குக் கடன் கொடுத்திருக்கிறார்கள். அதிலே, 307 கோடி ரூபாய் வரைக்கும் கடன் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், அந்தத் தொழிற் சாலைகள் எல்லாம் நம் நோக்கத்திற்குத் தகுந்தபடி வளர்ந்திருக்கின்றனவா; உண்மையிலேயே அவற்றிலே உற்பத்தி நடைபெறுகிறதா; அவ்வாறு உற்பத்தி நடைபெறுவதால், தொழில் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு பெருகியிருக்கிறதா என்பதையெல்லாம் பார்த்து, அப்படிப் பெருகி வருவது உண்மையானால், மேலும் அவை சிறப்பாகச் செயல்படுவது பற்றி உரிய முறையிலே கண்காணிப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

பெருந்துறை தொகுதியைப் பொறுத்தவரையில், ஊத்துக்குளி ஒன்றியத்தில், காங்கேயம்பாளையத்தில் ஒரு 'சிப்காட்' வளாகம்



அமைக்கப்பட்டிருக்கிறது. அது இன்னும் முழுமையான வடிவம் பெறாமல், அரைகுறையாக நின்றிருக்கிறது. அதனை முழுமையாக அமைத்துக் கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, பத்திரத் துறையில், இப்போது 'வழிகாட்டி மதிப்பு' தயாரிக்கப்படுகிறது. இந்த வழிகாட்டி மதிப்பு தயாரிக்கப்படுவதில், பழைய முறை கைவிடப்பட்டிருக்கிறது. வளர்ச்சி விகிதம் என்ற அடிப்படையில், அலுவலகத்திலேயே அமர்ந்து கொண்டு, சென்ற ஆண்டு இருந்ததைக் காட்டிலும், இந்த ஆண்டு இப்படி வளர்ந்திருக்கும்; போயிருக்கும் என்று அவர்களாகவே யூகித்து, அந்த வழிகாட்டி மதிப்பு — 'Guideline Value' — தயாரிக்கும் முறை இருக்கிறது. அது நடைமுறையில் இருக்கக்கூடிய விலை நிர்ணயத்தைப் பிரதிபலிப்பதாக இல்லை. நகர்ப்புறத்திலே இருக்கக்கூடிய விலையை விட வழிகாட்டி மதிப்பு குறைவாக இருக்கிறது; கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய விலையைவிட வழிகாட்டி மதிப்பு அதிகமாக நிர்ணயிக்கப்படுகிறது. இப்படி வழிகாட்டி மதிப்புகளைத் தயாரிப்பதற்கு, பேரறிஞர் அண்ணா காலத்தில், 1969-ஆம் ஆண்டில் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து, அந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக, போதுமான பணியாளர் அமைப்பை ஏற்படுத்தி, அவர்கள் மூலமாக இரண்டாண்டுக் காலம் சரியான சந்தை நிலவரத்தை ஆய்வுசெய்து நில மதிப்பு எப்படி உயர்கிறது என்பதை விரிவான முறையிலே ஆய்வு செய்து, வழிகாட்டி மதிப்பு தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முறையை மீண்டும் பின்பற்றுவதற்கு பத்திரப் பதிவுத் துறையிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

அடுத்து, பத்திரப் பதிவுத் துறை பணியாளர்கள் 7 அம்சக் கோரிக்கையை அரசின் முன் வைத்திருக்கிறார்கள். அவை விரைவில் தீர்க்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே அதற்குண்டான முன்முயற்சி எடுத்து அவர்களுடைய கோரிக்கைக்குப் பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பத்திர நகல் எழுதுபவர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் வராண்டாவில் உட்காரக்கூடாது என்று விரட்டப்படுவதாக தெரிவிக்கிறார்கள். அவர்கள் வராண்டாவில் அமர்ந்து

ஆவணம் எழுதும்போது பொதுமக்களுக்கு எந்தவகையிலும் இடையூறாக இருப்பதில்லை. எனவே. ஆவண எழுத்தர்களுக்கு இருக்கக்கூடிய இடையூறுகளைக் களைவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஆவண எழுத்தர்களை ஏ. பி, சி, என்று மூன்று வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். அப்படி பிரிக்கப்பட்டிருக்கின்ற அந்த நிலையை மாற்றி, ஒரு உரிமம் பெற்றால் தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் அவர்கள் ஆவணம் எழுதுவதில் ஈடுபட முடியும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருப்பூரிலே உள்ள செட்டிப்பாளையம் என்ற பகுதியைச் சேர்ந்தவர்களை முன்பு இருந்ததைப்போல திருப்பூர் நகரத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. காரணம், நல்லூர் சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு அவர்கள் மாற்றப்படுகிறபோது அந்த கிராமத்திலிருந்து 12 கிலோ மீட்டர் தூரத்திற்குச் செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. எனவே பழையபடி நல்லூர் கிராமத்திலிருந்து சார்-பதிவாளர் அலுவலகத்தை திருப்பூர் நகரத்திற்கே மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஈரோடு நகரத்திலே இருக்கக்கூடிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தை பெரிய இடத்திற்கு, சொந்தக் கட்டிடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது 1942-ல் உருவாக்கப்பட்ட மிகப் பழமையான கட்டிடமாகும். ஆவணங்களுக்கு அதிலே போதுமான பாதுகாப்பு இல்லை. கண்ட இடங்களில் ஆவணங்கள் கிடக்கக்கூடிய நிலை இருக்கிறது. எனவே அதற்காக ஒரு புதிய கட்டிடத்தை ஏற்படுத்தி ஆவணங்களைப் பாதுகாப்பதற்கு பதிவுத் துறை கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

***திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக மற்றும் சிறுதொழில்கள், பத்திரப்பதிவு, ஆவணத் துறை மானியங்களில் பேசக்கூடிய வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, எனக்குத் தெரிந்த ஒரு சில கருத்துக்களை இங்கே தெரிவிக்கலாம் என்று உங்கள் முன்னால் நான் நிற்கின்றேன்.



குறிப்பாக பதிவுத் துறையைப் பற்றி குறிப்பிடும்போது, கடந்த ஆட்சிக் காலத்தில் முன்னாள் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா அவர்களும், அவர்களது அமைச்சர்களும், அன்று இருந்த தொழிலதிபர்களும் 'கொள்ளையோ கொள்ளை' என்று கொள்ளையடித்து. நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான எஸ்டேட்டுகளையும், பங்களாக்களையும், மாநகராட்சிகளிலும், நகர்ப்புறங்களிலும் வாங்கிக் குவிக்க, மிக மிகக் குறைந்த அளவில் பதிவு செய்த அவர்களின் அத்தனை சொத்துக்களையும் உடனடியாக பறிமுதல் செய்து ஏழை எளியவர்களுக்கு, இல்லாதவர்களுக்கு இந்த அரசு வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலத்தில் எந்தெந்த அளவுக்கு மிகக் குறைந்த பதிவுக் கட்டணத்தில் கொள்ளையடித்தவர்கள் பதிவு செய்தார்களோ அவற்றையெல்லாம் செல்லாது என்று அறிவிக்கக்கூடிய அளவிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களது நடவடிக்கை எதிர்காலத்தில் அமையவேண்டுமென்று அன்போடு இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பதிவு அலுவலகங்களைப் பொறுத்தவரையில், விவரங்கள் தெரியாதவர்கள், விவசாயிகள் எல்லாம் அங்கே செல்லுகின்றபோது — இடுப்பிலே வேட்டியை கட்டிக்கொண்டு கூனிக் குறுகி — அதிகாரிகளை அணுகி என்ன செய்ய வேண்டுமென்று தெரியாமல் இருக்கின்ற அவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கக்கூடிய அதிகாரிகள் பதிவு அலுவலகங்களிலே 'கொள்ளையோ கொள்ளை' என்று கொள்ளையடிக்கக் கூடிய நிலையை தயவுசெய்து எதிர்காலத்திலே மாற்றி அமைக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். உண்மை நிலையைப் பற்றித்தான் நான் சொல்லுகிறேனே ஒழிய ஏதோ சட்டமன்றத்தில் பேசவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. குறிப்பாக விவரம் தெரியாதவர்கள், விவசாயிகள் அங்கே செல்லும்போது, உண்மையிலேயே 40 ஆயிரத்திற்கு விற்கக்கூடிய நிலங்களை லட்சத்து ஐம்பதினாயிரம், இரண்டு லட்சம் என்று சொல்லி அதிலே உனக்காக ஒரு லட்சத்தைக் குறைத்து, ஒரு லட்சம் என்று மட்டும் மதிப்பீடு செய்து குறைத்து விடுகிறேன் என்று சொல்லி குறுக்கே இருக்கக்கூடிய தரகர்கள் லஞ்சம் அடிக்கக்கூடிய நிலையையும், காலையில் 9 மணிக்கு அலுவலகம் வந்து மாலை 6 மணிக்கு செல்லக்கூடிய பதிவுத் துறை அலுவலகத்திலே இருக்கக்கூடிய பதிவாளர் மற்றும் அதிகாரிகள் எல்லாம் குறைந்தது அவர்களுடைய 'பைகளை' (ஜேப்பிகளை) நிறைத்துக்கொண்டு, செல்லக்கூடிய நிலையையும் எதிர்காலத்தில் மாற்றி அமைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

இலஞ்ச ஒழிப்புத் துறையிலே இருக்கக்கூடியவர்களும், பதிவுத் துறையிலே இருக்கின்றவர்களும், ஒன்றாகப் பேசி அவர்களுக்குள் ஒன்றாகிவிடுகிறார்களேயொழிய, லஞ்ச ஒழிப்புத் துறை, நீங்கள் நினைக்கின்ற அளவிற்கு முழுமையாகப் பணியாற்றவில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, விவசாயிகளினுடைய நிலங்கள் நியாயமாக என்ன விலை அல்லது நியாயமாக அந்தப் பகுதியிலே என்ன விலைக்கு விற்கின்றது என்பதையெல்லாம் கண்டறிய ஒரு கமிட்டி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்தாலும் சரி அல்லது சமூக நோக்கோடு செயல்படக்கூடிய சமுதாய இயக்கங்களைச் சார்ந்தவர்களைக் கொண்டு ஒரு கமிட்டியை அமைத்து, எதிர்காலத்திலே இப்படிப்பட்ட குறைகளைப் போக்குவதற்குத் தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பத்திரங்களைப் பொறுத்தவரையில், 100 ரூபாய் பேப்பர், 500 ரூபாய் பேப்பர், 1,000 ரூபாய் பேப்பர் என்று வாங்கிச் செல்கின்றபோது, அவற்றில் பேனாவினாலே எழுதுகின்றபோது, மை எல்லாம் ஊறி, அந்தப் பத்திரம் எழுதுவதற்கே இலாயக்கற்ற நிலையில் இருக்கின்றது. எனவே, எதிர்காலத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு எழுதி 100 ரூபாய், 500 ரூபாய், 1,000 ரூபாய் பேப்பர்கள் எல்லாம் எந்த விதத்திலேயும் மை ஊறாத அளவிற்கு நல்ல பேப்பர்களாக அனுப்பவேண்டுமென்கிற கோரிக்கையினை வைக்க வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று அங்கீகரிக்கப்படாத இடங்களில் கூட சிலர் லே-அவுட் போடுகிறார்கள். அவ்வாறு போடும்போது, பொது நோக்கோடு, பள்ளிக்கூடம் கட்டுவதற்கு, பொதுக் கழிப்பிடம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகியவற்றிற்கு இடம் ஒதுக்குகிறார்கள். அவ்வாறு நகராட்சிப் பகுதியில் செய்தாலும், பேரூராட்சிப் பகுதியில் செய்தாலும், அவ்வாறு 'ரிசர்வ்' செய்யப்படுகிற இடங்களை ஒதுக்கிவிட்டு, மீதி இடத்தினை மட்டுமே மதிப்பிட்டு உரியவர்கள் பெயரில் பதிவுசெய்வதற்குண்டான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். நேரம் அதிகம் இருக்காது என நினைக்கிறேன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், நான் சீக்கிரமாகப் பேசி முடித்துவிடுகிறேன்.





1959-லே, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் சிறு தொழில்களை ஆரம்பித்தார்கள். வெளிநாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை பேரும் பாராட்டக்கூடிய அளவிற்கு, போற்றக்கூடிய அளவிற்கு இங்கு சிறுதொழில்கள் வளர்ச்சி அடைந்துள்ளன. 1959-லே சிறுதொழில்களுக்கு வேண்டிய சலுகைகள் எல்லாம் அளித்து பல மாவட்டங்கள் தொழில் மையமாக ஆயின என்பது இங்குள்ள அத்தனை பேருக்கும் தெரியும். 1967-க்குப் பிறகு தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அத்தனை பேரும் சிறுதொழில்களுக்குச் சலுகைகளை அளித்து வந்தார்கள்.

கடந்த மாதத்திலே எடுக்கப்பட்ட ஒரு முடிவு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். சிறு தொழில் செய்பவர்களிடமிருந்து உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களை 15% அரசே வாங்கிக் கொள்ளக்கூடிய ஒரு சலுகை இருந்து வந்தது. அதைத் திடீரென்று மாற்றி, சிறு தொழில்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்க வேண்டிய இந்த அரசு, திடீரென்று பறித்து, அங்கே கொள்முதல் செய்வதையும் குறைத்திருக்கின்றார்கள். அதனை மறுபரிசீலனை செய்து கடந்த காலத்திலே எந்த அளவிற்கு சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை அரசாங்கம் கொள்முதல் செய்ததோ, அதே அளவிற்கு தொடர்ந்து கொள்முதல் செய்வதற்குத் தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சிறு தொழில்கள் செய்யக்கூடியவர்களெல்லாம் 'டான்சி' 'டிக்' போன்ற நிதி நிறுவனங்களுக்குச் செல்லக் கூடிய நிலை இருக்கிறது. அப்படிச் சென்று அங்கே கடன் வாங்கக் கூடிய நிலையில், ஒரு முறை, இரண்டு முறை, மூன்று முறை என்று கூட இல்லாமல் பல முறை அவர்கள் அலைய வேண்டியிருப்பதால், வந்து செல்வதற்கே கடன் வாங்குவதிலே பாதி செலவாகக்கூடிய நிலையெல்லாம் இருக்கிறது. இதை எதிர்காலத்திலே மாற்றி, சிறு தொழில் கடனுக்கு ஒருவர் விண்ணப்பித்தால், அவருக்கு முறையாக, அதிகபட்சமாக ஒரு மாதத்திற்குள்ளாக, உடனடியாக கடன் கொடுக்க வேண்டுமென்கிற ஒரு காலவரம்பை நிர்ணயித்து, அதற்குள்ளாக சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டு, இப்படிப்பட்டவர்களுக்கு நிதி நிறுவனங்கள் அரசாங்கத்தின் மூலமாக உடனடியாகக் கடன் கொடுக்க வேண்டுமென்ற ஒரு நியதியினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று, இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இன்று இருக்கக்கூடிய நிலையில் அந்த அளவிற்கு நடக்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலையை மாற்றி அமைத்திட

வேண்டும். சிறுதொழில் வளர்ச்சி காந்திஜி கண்ட கனவு. கிராமப்புறப் பகுதிகள் நல்லமுறையில் முன்னேறினால்தான், நாடு முன்னேற முடியும் என்பதை தேசப்பிதா காந்தி அவர்கள் வலியுறுத்தினார்கள். அதனை நாம் அத்தனைபேரும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். ஆனால், உண்மையில், கிராமப்புறத்தினை மறந்து வருகிறோம். எதிர்காலத்திலே கிராமங்கள் வளர்ந்தால்தான் நகரம் வளரும், நகரம் வளர்ந்தால்தான் நாடு வளர முடியும் என்ற நிலையிலே கிராமப்புறப் பகுதியினுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கோடு, காந்தி கண்ட கனவை நனவாக்கும் நோக்கோடு. கிராமப் பகுதியில் சிறுதொழில்கள் ஆரம்பிப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டுமென்று அன்போடும் வணக்கத்தோடும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஆகவே. இப்படிப்பட்ட சூழ்நிலையில் எதிர்காலத்தில் சிறுதொழிலில் இருக்கக்கூடியவர்களுக்கு — சிறு தொழில் சிறப்பாக இருந்தால்தான் பெரிய தொழில்கள் வளரமுடியும் — இன்றைக்கு நேரடியாக சிறு தொழில்கள் செய்யக்கூடியவர்கள் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை எல்லாம் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார்கள். அந்த மாதிரி ஏற்றுமதிக்கான வசதி வாய்ப்புகளைத் தொடர்ந்து செய்வதோடு, இன்றைய நிலையில் அதிகபட்சமாக இன்னும் 5% அதிகப்படுத்தி. ஏற்றுமதியை நேரிடையாகச் செய்யக்கூடிய வாய்ப்பினை சிறுதொழில் செய்யக்கூடியவர்களுக்கு அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

பத்திரப் பதிவுத் துறை அலுவலகங்களிலே பணியாற்றக் கூடிய பத்திர எழுத்தர்கள் 50 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சம் வரை பத்திரங்களை எழுதிக் கொண்டிருக்கிற நிலை உள்ளது. எனவே, அரசாங்கத்திலே மற்ற துறைகளில் உள்ள ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகளை இவர்களுக்கு எந்த அளவுக்குச் செய்து கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, திருவண்ணாமலை வட்டத்தில் இருக்கக்கூடிய தச்சம்பட்டு பகுதியிலே இருக்கக்கூடியவர்கள் பத்திரங்களைப் பதிவு செய்ய 50 லிருந்து 60 கிலோ மீட்டர் வரை வந்து செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, தச்சம்பட்டு பகுதியிலே ஒரு பதிவு அலுவலகம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல திண்டிவனம் அருகே தொழுதூர் பகுதியிலே பதிவு அலுவலகம் ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்காலத்திலே சிறு தொழில்கள் வளர்வதற்கு அரசு எந்தெந்த அளவுக்கு உதவி செய்யவேண்டுமோ அந்த அளவுக்குச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, பத்திரப் பதிவுத் துறையிலே இலஞ்ச லாவண்யம் இல்லை, அது ஒழிந்தது, அந்தத் துறை நேர்மையான துறை என்று சொல்லக்கூடிய அளவிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையிலே முக்கிய பொறுப்பிலே இருக்கக்கூடிய அதிகாரிகளிடத்திலே நான் நேரிலே சென்று சொன்ன நேரத்தில் புகார் மனுக்களை எங்களைப் போன்றவர்களிடத்திலே கொடுத்தால், நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் தகுந்த ஆதரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சிறப்பான இந்த மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய தங்களுக்கு நன்றி கூறி. விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறை மற்றும் ஊரகத் தொழில் துறை சார்பாக நடைபெற்ற மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில 
மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் 11 பேர்கள் கலந்துகொண்டு தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திலே இரண்டாவது முறையாக நான் பங்கேற்று, பதிலளிக்கின்ற வாய்ப்பினை நல்கிய எங்களது உயிரினும் மேலான தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எங்களது இனமான பேராசிரியர் அவர்களுக்கும், பொருளாளர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், எங்களுக்குத் தோளோடு தோள் கொடுத்து, துணை நின்று, ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்து என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

பதிவுத் துறையைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டு மானியக் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும்போது, ஏற்கெனவே தமிழகத்திலே இருந்த ஆவண எழுத்தர்கள் 21 ஆயிரம் பேர்கள் என்பதை எதிர்காலத்திலே

[திரு. இ. பெரியசாமி] [1997 மார்ச் 31

படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கருதிய காரணத்தால், 20 ஆயிரம் மக்கட்தொகைக்கு ஒரு முத்திரைத் தாள் விற்பனையாளர் என்பதை 10 ஆயிரம் மக்களுக்கு ஒரு முத்திரைத் தாள் விற்பனையாளர் என்ற வகையிலே மாற்றி 20 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகின்ற அளவிலே சென்ற கூட்டத் தொடரிலே அறிவித்ததைத் தொடர்ந்து, ஏப்ரல் மாதம் இரண்டாம் வாரத்திலே அதற்கான தேர்வுகளை நடத்தி, 20 ஆயிரம் இளைஞர்களைப் புதிய ஆவண எழுத்தர்களாக இந்த அரசு தேர்வு செய்ய இருக்கிறது என்ற செய்தியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோன்று, முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் ஏற்கெனவே இருந்ததைப்போல கிட்டத்தட்ட இன்னொரு மடங்கு சுமார் 2,500 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கின்ற அளவிலே மே மாதத்திற்குள்ளாக — ஏற்கெனவே பத்திரிகையில் எல்லாம் அறிவிக்கப்பட்டது — நியமனம் செய்ய அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

பிற்பகல் 1-10

அதேபோன்று, சென்ற முறை நமது அனைத்து உறுப்பினர்களும் எடுத்து வைத்த வகையிலே வழி காட்டி மதிப்பீட்டைப் பற்றிச் சொல்ல வேண்டியுள்ளது. பத்திரப் பதிவு அலுவலகத்திற்குச் சென்றால், அவர்கள் சொல்கின்ற மதிப்பீட்டைக் கூட்டிச் சொல்கின்றார்கள். இங்கே பேசிய உறுப்பினர்கள் பொதுவாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். 10,000 ரூபாய் மதிப்பீடு என்றால் 20,000 ரூபாய் என்று சொல்லி, அதைக் குறைத்து பதிவு செய்ய வேண்டுமென்றால், கூடுதலாகப் பணம் வேண்டுமென்று சொல்லி, பணத்தை இலஞ்சமாகப் பெறுகிறார்கள் என்றக் குற்றச்சாட்டை மாற்றுவதற்காகத்தான் 'Guideline Value Register ' வழிகாட்டி மதிப்புப் பதிவேடு, வர்த்தகர் சங்கம் அல்லது விவசாயிகள் சங்கத்திற்கு வழங்கப்பட்டு — இங்கே பேசிய உறுப்பினர் குழந்தை. தமிழரசன் அவர்கள் சொன்னதுபோல, ஊராட்சி மன்றங்களில் வைக்க வேண்டுமென்று, அங்கேகூட வைக்கலாம், ஆட்சேபனை இல்லை — பொதுமக்கள் உடனே பார்க்கின்ற வகையிலே தகவலுக்காக வழங்கப்பட்டுள்ளது. ஒரு சர்வே நம்பருக்கு என்ன மதிப்பீடு, ஒரு வீட்டிற்கு என்ன மதிப்பீடு என்பதை உடனே தெரிந்துகொள்கின்ற வகையில், வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் முதன்முதலில் சென்னையில்



1997 மார்ச் 31] [திரு. இ. பெரியசாமி]

அனைத்துப் பகுதியிலும் உள்ள வர்த்தக சங்கங்களில் வைக்கப்பட்டிருக்கிறது. இது முழுக்க அனைத்து மாவட்டங்களிலும் வெகு விரைவில் வைக்கப்படுமென்ற உறுதியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பயிற்சி நிலையம் ஒன்று அமைக்க வேண்டுமென்பதற்கிணங்க, சார் பதிவாளர்கள், பதிவுத் துறையில் பணிபுரிகின்ற அலுவலர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்க பயிற்சி மையம் அமைக்கப்படுமென்று கடந்த முறை அறிவித்தோம். 1-12-1996 அன்று முதல், பயிற்சி மையம் அமைக்கப்பட்டு, அவர்களுக்கு உரிய பயிற்சி கொடுக்கப்பட்டு வருகின்றது.

அதுபோல, சென்ற தடவை மானியக் கோரிக்கையிலே அறிவித்தபடி, வில்லங்கச் சான்றிதழ்கள் பெறுவதற்கு சிரமமான முறைகள் இருக்கின்ற காரணத்தால், கணிப்பொறி முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். இங்கே உறுப்பினர்கள் எடுத்துவைத்த வேண்டுகோளுக்கிணங்க, மைலாப்பூர் சார் பதிவகத்தில் 14 ஆண்டுகளுக்கு பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுடைய விவரங்கள் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு, வில்லங்கச் சான்றிதழ்கள் உடனுக்குடன் கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். எதிர்காலத்தில், தமிழகம் முழுவதும் கணிப்பொறி மூலம் கொடுப்பதற்கான ஏற்பாடு விரிவாக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுபோக, வீட்டுக் கடன் ஈட்டுறுதிப் பத்திரம் Housing Refinance என்று சொல்வார்கள். வீட்டுக் கடன் ஈட்டுறுதி பத்திரங்களுக்கு முத்திரைத் தீர்வை குறைப்பது சம்பந்தமாக, ஏற்கெனவே டெல்லியிலே நடந்த நிதியமைச்சர்கள் மாநாட்டிலே—தற்போது விதிக்கப்படக்கூடிய 13 சதவீத முத்திரைத் தீர்வையை குறைப்பது சம்பந்தமாக பேசப்பட்டது.

வீட்டுக்குக் கடன் வழங்கும் சங்கம், வீடுகளுக்கு வழங்கிய கடன்களை இன்னொரு வங்கியில் மீண்டும் கடனாகப் பெறுவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மீண்டும் கடன் பெறுவதற்கு, 13 சதவிகித முத்திரைத் தீர்வையை செலுத்த முடியாத நிலை இருக்கிறது. ஆக யாரும் மறுகடன் பெற முடியாத சூழ்நிலை இருப்பதால், அதிகம் பேருக்குக் கடன் வழங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே இந்தியா முழுவதும் உள்ள நிதியமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாட்டிலே முத்திரைத் தீர்வையை 0.1 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று, அங்கே ராஜா செல்லையா கமிட்டி சிபாரிசு செய்தது. அனைத்து மாநிலங்களும், ஈட்டுறுதி பத்திரத்தினுடைய — Housing Refinance முறையிலே — முத்திரைத்

தீர்வையை 0.1 சதவீதமாகக் குறைக்க வேண்டுமென்று அவர்கள் வைத்த கோரிக்கை — நமது தமிழக முதல்வர் அவர்கள் இன்றைய நிதிநிலை அறிக்கையில் 0.1 சதவிகிதமாகக் குறைத்து அறிவித்திருக்கிறார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாவட்டப் பதிவாளர்கள் சிறந்த முறையிலே பணி செய்ய வேண்டும் என்பதற்காக, இதற்கு முன்னால் எந்த அரசும் வழங்காத அளவுக்கு, அவர்களுக்கு வாகன வசதிகள் செய்து தர வேண்டுமென்ற நோக்கத்தோடு நமது முதல்வர் அவர்கள் ஆணையிட்டு முதல் முறையாக, இது வரை எந்தக் காலத்திலும் வழங்காத அளவுக்கு 10 மாவட்டப் பதிவாளர்களுக்கு புதிய வாகனங்கள் வாங்கி நமது அரசு வழங்கியிருக்கிறது.

இதுபோக, முத்திரைத் தீர்வை சம்பந்தமாக சீரமைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தச் சீரமைப்புக் குழுக்கள் வணிகவரித் துறை செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்டு, அதற்குரிய அறிக்கையும் அரசுக்கு வரப்பெற்றிருக்கிறது. Stamp Reforms Committee என்று அமைத்து அதனுடைய அறிக்கை பெறப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையினுடைய அடிப்படையில் பல்வேறு சீர்திருத்தங்கள் எதிர்காலத்திலே முத்திரைத் தீர்வை சம்பந்தமாக கொண்டுவரப்படும் என்ற உறுதியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோக, இங்கே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். 47(ஏ) என்பது பத்திரத்தைக் குறைவாக பதிவு செய்வது. சொத்தின் மதிப்பை அங்கே இருக்கக்கூடிய வழிகாட்டி மதிப்பைவிட குறைத்து பதிவு செய்யும்போது, அந்தப் பத்திரத்தை உடனடியாக உரியவர்களுக்குக் கொடுக்க மாட்டார்கள். அதை உடனடியாக தனித் துணை ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பிவிடுவார்கள். அந்த வகையிலே 1995-96 ஆண்டில் இந்த அரசு ஈட்டிய வருவாய் ரூ.20.65 கோடிதான்.

பிற்பகல் 1-15

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், 1996-97-லே 28-2-1997 வரை அரசு ஈட்டி இருக்கின்ற வருமானம் ரூ. 28.72 கோடி. இங்கே பேசிய நண்பர்கள் சொன்னார்கள். தனித் துணை ஆட்சியரை சந்தித்து ஏதோ கையூட்டு கொடுத்துவிட்டால் குறைத்து விடுவார்கள் என்று. நாங்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால், இந்தத் துறையினுடைய தலைவர் ஐ.ஜி. அவர்கள் surprise super check திடீரென்று ஓர்



இடத்திற்கு—கோவை மாவட்டம், பெரியார் மாவட்டம், என்றால் குறிப்பாக திருப்பூர், கோவை ஆகிய இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்ததிலே பல பேர் மீது நடவடிக்கை இந்த அரசு எடுத்து, அவர்களை தற்காலிகப் பணி நீக்கம் செய்து இருக்கிறது என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதனால்தான் கிட்டத்தட்ட 8 கோடி ரூபாய்க்கு மேல் இந்த ஆண்டு பிப்ரவரி மாதக் கடைசிக்குள் பணம் ஈட்டி இருக்கின்றோம்.

இதுபோக, இதற்கு முன்னால் வருடக் கணக்கில்கூட தேங்கி இருந்தது. 47-ஏ-யில் ஒருவருடைய பத்திரம் வந்து போய்விட்டது என்று சொன்னால், ஓராண்டு, ஈராண்டு கூட தேங்கி இருந்தது. இப்போது என்ன செய்யப் போகிறோம் என்றால், அந்தப் பத்திரம் 47-ஏ-ல தனித் துணை ஆட்சியரின் பார்வைக்குப் போய்விட்டது என்றால், 3 மாத காலத்தில் அதை முடித்துவிட வேண்டும் என்ற கோரிக்கையை இன்றையதினத்திலே அரசு பரிசீலித்து வெகுவிரைவிலே அதை அமல்படுத்த இருக்கிறது என்ற தகவலை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது காலக்கெடு நிர்ணயம் பண்ணுகிறோம் 3 மாதத்திற்குள் அதைத் தீர்க்க வேண்டும் என்று.

சிறு தொழில் துறையை பொறுத்தவரையில் கடந்த மானியத்திலே தெரிவித்தபடி ஆண்டுக்கு 30 ஆயிரம் தொழில்கள் தொடங்க வேண்டும். 5 ஆண்டுகளிலே ஒரு லட்சத்து 50 ஆயிரம் தொழில்கள் என்பதிலே, இந்த ஆண்டு, 1996-97-ஆம் ஆண்டிலே 31-12-1996 வரை கிட்டத்தட்ட 22,249 சிறு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் பயனாக சுமார் ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 744 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கப் பெற்று இருக்கின்றன. இது போக, மாவட்ட தொழில் முனைவோர்களுக்கு கடந்த மானியத்தில் மகளிர் தொழில் முனைய வந்தால் அவர்களுக்கு அதிகபட்சமாக 50 ஆயிரம் ரூபாய் மானியம் அல்லது அவர்கள் திட்டமிட்டு இருக்கின்ற மதிப்பீட்டிலே 10 சதவீதம் என்று அறிவித்து, 1996-97-ஆம் ஆண்டுக்கு 30 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்து, அதிலே 250 மகளிர் தொழில் முனைவர்கள் பயனடைய இருக்கின்றார்கள் என்ற செய்தியை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோக, ஒவ்வொரு மாவட்ட தொழில் மையத்திலே இருக்கக்கூடிய Single Window Committee - ஒருமுனைத் தீர்வு என்பது சரியான பயனை அளிக்கவில்லை என்று பல்வேறு உறுப்பினர்கள் கடந்த தடவை கொடுத்த கோரிக்கையினுடைய அடிப்படையிலே, அவை குறை தீர்க்கும் குழுக்களாக மாற்றி அமைக்கப்பட்டு, அந்த அடிப்படையிலே மனுக்கள் பெறப்பட்டவை 1,862; அந்த மனுக்கள் மீது தீர்வு செய்யப்பட்டது 1,681; ஆக 90 சதவீத மனுக்கள் குறை தீர்க்கும் குழுக்களின் மூலமாக கடந்த ஆண்டு தீர்வு செய்யப்பட்டு இருக்கின்ற அந்தச் செய்தியை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது போக மாவட்ட தொழில் மையங்கள் அனைத்திலுமே பல்வேறு குறைபாடுகள் இருப்பதாக பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் பரிசீலித்து, அதை நாங்கள் முதன்மைத் தகவல் மையமாக இன்றையதினம் அமைத்து இருக்கின்றோம். அதிலே இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு இருக்கின்றது, ஓராண்டுக்கு 5,200 என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கின்றது. 6 மாத காலத்திலே அவை 440 பேருக்கு தீர்த்து வைக்கப்பட்டு இருக்கிறது.

இதுபோக, இங்கே பேசிய உறுப்பினர்கள் ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். பிரதமர் ரோஜ்கார் யோஜனா - PMRY - அதிலே ஓராண்டுக்கு 1996-97-க்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 21,800; அதிலே 31-12-1996 வரை கிட்டத்தட்ட 7,523 பேருக்கு கடன்கள் அனுமதிக்கப்பட்டு இருக்கிறது.

இதுபோக நமது மத்திய தொழில் துறை அமைச்சர் அவர்கள் 2 மாதத்திற்கு முன்னால் ஒரு பெரிய கூட்டத்தைக் கூட்டி, அதிலே அனைத்து அலுவலர்களை அழைத்து இந்த PMRY - பிரதமர் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின் வாயிலாக வழங்கப்படுகின்ற கடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றத் தலைவர்கள்—அத்தனை பேரையும் அழைத்து ஒரு கருத்தரங்கை நடத்தி அங்கு இருக்கின்ற படித்த இளைஞர்களுக்கு இந்தக் கடன் எளிதாகப் பெறுவதற்குரிய வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்து இருக்கின்றார்கள். ஆகவே, அவர்களுடைய யோசனைப்படி வருகின்ற காலத்திலே கிட்டத்தட்ட அனைத்து மாவட்டங்களிலும் இந்தக் கூட்டத்தை நடத்தி பிரதமர் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்



மூலமாக பெறுகின்ற கடனை எளிதாக எல்லா கிராமத்திலும் இருக்கக்கூடிய படித்த இளைஞர்களுக்கும் எதிர்காலத்திலே கிடைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கடந்த காலத்திலே நடந்த நிகழ்வுகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதைப் போல, இந்த அரசு ஒரு நேர்மையான, நியாயமான, லஞ்ச லாவண்யமற்ற ஆட்சியை, நிர்வாகத்தை இந்த நாட்டுக்குத் தருவோம் என்று அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில், எங்களுடைய துறையைப் பொறுத்தவரையில் செய்து கொண்டிருக்கிறோம். உங்களுக்கே தெரியும். சிட்கோவில் கடந்த காலத்தில் இருந்த முறைகளைப் பார்த்தால் தெரியும். சிட்கோவில் பண்படுத்தப்பட்ட மனைகள் ஒதுக்கீட்டைப் பார்த்தால் சிட்கோவின் தலைவர் நினைத்தால் யாருக்கு வேண்டுமானாலும் அப்ளிகேஷன் வாங்காமலேயே கூட மனைகளைக் கொடுத்துவிடலாம். கடந்த ஆட்சியிலே எப்படியெப்படி எல்லாம் தவறான வழிகளில் மனைகளைக் கொடுத்திருக்கிறார்கள் என்று கடந்த முறைகூட நான் இங்கே சொன்னேன். ஆனால் இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால் 100-க்கு 100 சரியாகக் கொடுத்து வருகிறோம். லாட் முறை பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் அழகராஜா அவர்கள் கூட சொன்னார்கள். அவரே ஒரு தொழிலதிபர். ஆதனால்தான் அவர் சொன்னார். நல்ல தொழில் முனைவோர்களுக்கான மனை ஒதுக்குவதில் லாட் முறையில் போட்டால், தொழிலிலேயே ஈடுபடாதவர்களுக்குக் கூட லாட் விழுந்துவிடும் நிலை இருந்ததாகச் சொன்னார். ஏனென்றால், ரியல் எஸ்டேட் மாதிரி, பணத்தைக் கட்டி பதிவு செய்துவிட்டால், அவர்கள் பெயர் சேர்க்கப்பட்டுவிடும். அவர்கள் பெயரும் லாட் முறையில் விழ வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இப்போது அப்படி அல்ல. சிட்கோவில் ஒரு ஸ்கிரீனிங் கமிட்டி இருக்கிறது. அந்த ஸ்கிரீனிங் கமிட்டியில் இருக்கின்ற விதிப்படி, அவர்கள் எஸ்.எஸ்.ஐ.-யிடம் எல்லாவிதமான சர்டிபிகேட்டுகளையும் பெற்றிருக்கவேண்டும். உண்மையிலேயே அவர்கள் தொழில் செய்ய முன்வந்திருக்கவேண்டும். அவர்கள்தான் அனுமதிக்கப்படுவார்கள். உண்மையிலேயே தொழில் தொடங்குவதற்குரிய வாய்ப்பு இருக்கக் கூடியவர்கள்தான் லாட் முறையிலேயே அனுமதிக்கப்படுகிறார்கள். அப்படி அவர்கள்

அனுமதிக்கப்பட்ட பின்னால்தான் அவர்கள் லாட் முறையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று வைத்திருக்கிறோம்.

முன்னாலே இருந்த ஆட்சியில் பணம் கட்டிவிட்டால் மட்டுமே அவர்களுக்கு மனையைக் கொடுத்துவந்ததைப் போல இப்போது கொடுத்து விடுவதில்லை. இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், ஸ்கிரீனிங் கமிட்டி என்ன முடிவெடுக்கிறதோ அதுதான் இறுதி. நான் அமைச்சர்தான். இதுவரையிலே அந்த ஸ்கிரீனிங் கமிட்டியிலே ஒரு பெயரைக்கூட சேர்க்கவேண்டுமென்று நான் போன்மூலம்கூட சிபாரிசு செய்தது கிடையாது. அதுதான் கலைஞர் ஆட்சி. இதுவரையில் யார் ஒருவருக்கும் ஒரு ஷெட்டையோ பண்படுத்தப்பட்ட மனையையோ வழங்கவேண்டுமென்று நான் யாருக்கும் சிபாரிசு செய்தது கிடையாது. நூற்றுக்கு நூறு, குலுக்கல் முறையில், ஒரு சதவீதம் கூட அப்பழுக்கற்ற முறையில் மனைகளை ஒதுக்கித் தந்ததன்மூலம் ஒரு சிறந்த நிர்வாகத்தை சிட்கோவில் தருகின்ற ஆட்சி தலைவர் கலைஞர் ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் முன்பிருந்த ஆட்சியில் டெண்டர் முறைகள் எப்படியிருந்தன, இப்போது டெண்டர் முறை எப்படி இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்கிறேன். தொழிற்பேட்டைகள் உள்ள சாலைகளில் அதன் வசதியை மேம்படுத்த ஒரு கோடி ரூபாயை, வெள்ள நிவாரணப் பணிகளின் கீழ் தலைவர் கலைஞர் அவர்கள் ஒதுக்கினார்கள். இந்த ஒரு கோடி ரூபாயில், இந்த ஆட்சியில், மொத்தம் 98 லட்ச ரூபாய்க்கு அந்த வேலைகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டன. அந்த ஒப்பந்தப் புள்ளிகளை வாங்கியவர்கள் 127 பேர். அதில் 82 பேர் டெண்டரில் கலந்து கொண்டார்கள். அதாவது கிடைக்கப்பெற்ற டெண்டர்கள் 82. இதில் ரூ.85 லட்சத்திற்கு வேலைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டிருக்கின்றன. வேலைகளின் மொத்த மதிப்பு 98 லட்சம். ஆனால் 85 லட்சத்திற்கு வேலைகள் முடிக்கப்பட்டு, 13 லட்சம் ரூபாய் இந்த அரசுக்கு இலாபமாகக் கிடைத்திருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆட்சிக் காலத்தில் சிட்கோ நிறுவனத்தின் தலைவராக சுலோசனா சம்பத் இருந்தார்கள். அவர்கள் சொல்கிறார்கள், எங்கள் குடும்பத்தின் சொத்து மலையாக இருந்தது, எங்களுடைய சொத்து பூராவும் அரசியலுக்குப் போய்விட்டது, இப்போது மடுவாகிவிட்டது



என்று. முன்பு கழக ஆட்சியில் வான் உயரத்திற்கு மலையாக வளர்ச்சி அடைந்து, அந்த அளவுக்கு உயர்ந்திருந்த அந்த நிறுவனம், கடந்த ஆட்சிக்காலத்தில், இரண்டாண்டுக் காலத்தில், அந்த அம்மாள் தலைவியாக வந்ததற்குப் பின்னால், பூராவும் பார்த்தால் இப்போது அங்கே சம்பளம் கொடுப்பதற்குக் கூட பணம் இல்லை. இன்றைக்கு நமது ஆட்சி வந்ததால், அந்த சிட்கோ என்ற பெயருக்கு இப்போது உயிர் இருக்கிறது. அது திரும்பவும் பழைய நிலையை அடைவதற்கு, அதை உயர்த்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். அந்த அளவுக்கு அரசினுடைய பணத்தைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு இதுபோல் நிறைய உதாரணங்கள் இருக்கின்றன.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், எங்கள் ஊருக்கு வந்து சிட்கோ மூலம் தொழில் பேட்டையை அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அது நியாயம்தான். அவர்கள் கேட்பது நியாயம்தான். பிற்படுத்தப்பட்ட பகுதிகளில், வளர்ச்சியுறாத பகுதிகளில் தொழில் பேட்டைகள் அமைக்கப்படவேண்டும், அங்கேயுள்ள படித்திருக்கின்ற இளைஞர்களுக்கு நாம் அந்தத் தொழில் பேட்டைகளின் மூலம் நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பது உண்மைதான். இருந்தாலும் சிட்கோவின் நிலையைச் சொல்லவேண்டும்.

பிற்பகல் 1-25

திருமுடிவாக்கத்தில் தோல் பொருள்களுக்காக ஒரு தொழில் பேட்டையை நிறுவ அந்த அம்மாள் தலைவியாக இருந்த நேரத்தில் ரூ.6,10,73,199 மதிப்பில் 241.419 ஏக்கர் நிலத்தை அங்கே கையகப்படுத்தியிருக்கிறார்கள். இதிலே நில மதிப்பு, அங்கேயுள்ள கைடுலைன் மதிப்புப்படி ஒரு செண்ட் ரூ.292 தான். ஒரு செண்ட் 292 ரூபாய் என்றால் அதன் மதிப்பு ரூ.29,200 தான் ஒரு ஏக்கருக்கு. அதே மாதிரி 292-லிருந்து 492 ரூபாய் தான் அங்கே கைட்லைன் வேல்யூ. ஆனால் அவர்கள் ஒரு வேல்யூவை எடுத்துக் கொள்கிறார்கள். டிசம்பர் 1995 மற்றும் ஜனவரி 1996 காலகட்டத்திலே பதிவு செய்யப்பட்ட நிலப்பதிவு ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு செண்ட் ஆயிரம் ரூபாய் என்று சொல்லி அங்கே நிலம் கையகப்படுத்தப்பட நில எடுப்பு அலுவலர் பரிந்துரை செய்திருக்கிறார். ஆயிரம் ரூபாய்க்கு எடுத்துக்கொள்ளலாம் என்று 1995 டிசம்பர் மற்றும் 1996 ஜனவரி வரைக்கும் எடுத்துக்கொண்டார்கள். அப்படியே வைத்துக்கொள்வோம்.

நில எடுப்பைத் துரிதப்படுத்தும் நோக்குடன் அமைக்கப்பட்ட தனியார் பேச்சுவார்த்தைக் குழு - Private Negotiation Committee - ஒரு சென்ட் ரூ.2,250-வீதம் இந்த நிலத்தை வாங்கலாமென்று விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஆனால் அங்கே இருக்கக்கூடிய கைட்லைன் வேல்யூ - மாண்புமிகு உறுப்பினர்களே இதிலே பாருங்கள், சாதாரணமாக கைட்லைன் வேல்யூக்கு மேலே அதற்கு மதிப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் எந்த மாவட்ட ஆட்சித் தலைவரும் கொடுக்கமாட்டார்கள். ஆனால் இங்கே பார்த்தீர்களென்றால், கைட்லைன் வேல்யூ 400-லிருந்து 492 ரூபாய் வரை உள்ளதற்கு அங்கே தனியார் பேச்சுவார்த்தைக் குழு என்று ஒன்றை அமைத்து கிட்டத்தட்ட 2250 ரூபாய்க்கு ஒரு சென்ட் வீதம் வாங்கி அரசினுடைய பணம் கிட்டத்தட்ட 3 கோடியே 69 இலட்சத்து 21 ஆயிரத்து 299 ரூபாய் சிட்கோவிற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

இப்படி பலகோடி ரூபாய், கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய் பூராவும் வெளியிலேதான் கிடக்கிறது. பணம் எதுவும் இன்னும் வரவில்லை. அதனால்தான் 'சிட்கோ' இந்த அளவிற்கு நசிந்துபோய் கிடக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வல்லரசு அவர்கள் சொன்னதுமாதிரி 'நோஞ்சான்' ஆகப்போய்விட்டது. இன்றைக்கு நம்முடைய ஆட்சியிலே என்ன செய்திருக்கிறோம் என்பதை நான் பின்னாலே சொல்ல வருகின்றேன்.

இங்கே ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால், தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், 1991-லிருந்து 1995-வரைக்கும் சிறுதொழில் வளர்ச்சியிலே நலிந்திருந்த சிறுதொழில் செய்யக்கூடியவர்களுக்கு எந்த அளவிற்குப் பெருந்தன்மையாக, எந்த அளவிற்கு உதவியாக இந்த அரசு இருக்கின்றது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். மாநில மூலதனக் கூடுதல் சிறப்பு மானியம் 1991-92க்கு ரூபாய் 853.09 இலட்சம். மின் மானியம் ரூபாய் 77.87 இலட்சம். ஜெனரேட்டர் மானியம் ரூபாய் 24.09 இலட்சம். 'டிக்' மூலம் மானியம் ரூபாய் 175 இலட்சம். ஆக மொத்தம் 11 கோடியே 30 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய். 1991-92-க்கு கொடுத்த மானியம். 1992-93-க்கு ரூ.18.50 இலட்சம். அதேமாதிரி 1993-94-க்கு 22.30 இலட்சம். 1994-95-க்கு 23,25,49,000 ரூபாய் ஆக மொத்தம் 75 கோடியே 35 இலட்சத்து 54 ஆயிரம்தான். எத்தனை வருஷத்திற்கு? அதாவது, 1991-லிருந்து 1995-வரைக்கும் சிறுதொழில் செய்ய முன்வந்தவர்களுக்குக்



கொடுக்கப்பட்ட மானியம் ரூபாய் 75 கோடியே 35 இலட்சத்து 54 ஆயிரம்தான். ஆனால் கடந்த 1996-97-ஆம் ஆண்டில் மட்டும் தலைவர் கலைஞர் அவர்கள் அரசு சிறு தொழில் செய்ய முன்வந்தவர்களுக்குக் கொடுத்த மானியம் ரூபாய் 70 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி). நான்கு ஆண்டு காலத்தில் கொடுக்கப்படாத அளவிற்கு ரூபாய் 70 கோடி கொடுத்திருக்கிறார்கள். யாருமே இதுவரைக் கொடுத்ததில்லை. நான் பலமுறை தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் 30 கோடி கொடுக்கவேண்டும், 35 கோடி கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். அவர்களும் கொடுத்துக்கொண்டே இருந்தார்கள். கேட்கக்கேட்கக் கொடுத்தார்கள். ஆக, இந்த அளவிற்கு அவர்கள் கொடுத்ததற்கு என்ன காரணம் என்றால், ஒரு கடன் வாங்கக்கூடியவன் மானியம் பெறுவதற்குள்ளேயே மானியம் பூராவும் 'Penal Interest' ஆகப் போய்விடும். இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்களும் ஒரு தொழில் அதிபர்தான். இந்த மானியம் வருவதற்குள்ளேயே பூராவும் பீனல் இன்ட்ரஸ்ட் ஆகப்போய்விட்டது என்றால் என்ன பண்ணமுடியும். மானியம் எல்லாம் வட்டியிலேயே போய்விடும். அந்தமாதிரி போகக்கூடாது. சின்னச் சின்னத் தொழில் செய்கிறவர்களுக்கு அந்த நன்மை போய்ச் சேரவேண்டும் என்பதற்காகத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் உடனேயே செய்ய வேண்டும் என்று சொல்லி 70 கோடி ரூபாய் இன்றைக்குக் கொடுத்திருக்கிறார்கள். இதேபோல் மற்ற பிற துறைகளைப் பற்றியும் நான் இங்கே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழில் அதிபர் என்று சொன்ன வார்த்தையை விட்டுவிட்டு தொழில் முனைவர் என்று திருத்திக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவருடைய கருத்து, இருப்பவர்களிலேயே நீங்கள்தான் பெரிய தொழிலதிபர். அதனால் அதை நான் மாற்ற முடியாது. (சிரிப்பு). பேரவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

பிற்பகல் 1.30

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** தலைவர் அவர்களே, பட்டு வளர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரையில் தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம் 1996-ஆம் ஆண்டுடன் முடிவடைகிறது. வருகிற 9-வது ஐந்தாண்டுத்

திட்டம் 1-4-1997 முதல் அமல்படுத்தப்பட உள்ளது. நடப்பாண்டில் 1997 ஜனவரி வரையில் டான்சில்க் நிறுவனம் 63 லட்சம் ரூபாய் இலாபம் ஈட்டி இருக்கிறது. 1995-96-ல் இதன் இலாபம் 38.91 லட்சம் ரூபாய். ஆனால் 1996-97-ல் 67.65 லட்சம் ரூபாய். கிட்டத்தட்ட இரண்டு மடங்கு டான்சில்க் இலாபத்தை ஈட்டியிருக்கிறது என்ற நல்ல செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்திறத் தொழிலைப் பொறுத்தவரையில் பூம்புகார் நிறுவனத்திற்கு தமிழகத்தில் 15 விற்பனை நிலையங்கள் உள்ளன. பிற மாநிலங்களில் 4 விற்பனை நிலையங்கள உள்ளன. இந்த ஆண்டு 1,500 லட்சம் ரூபாய் பொருள்களை விற்பனை செய்ய பூம்புகார் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் தேனி அழகராஜா அவர்கள் பத்திரப் பதிவு மதிப்பை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அது ஏற்கெனவே எங்களுடைய பரிசீலனையில் இருக்கிறது. இங்கே பல்வேறு உறுப்பினர்களும் அதே கருத்தை எடுத்து வைத்தார்கள். சில இடங்களில் ரொம்பக் கூடுதலாக இருக்கிறது. இந்த மாதிரி குறைபாடுகளை நாங்கள் நிவர்த்தி செய்வதற்குத் தயாராக இருக்கிறோம். சுட்டிக்காட்டியவுடன் அதை நிவர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அனுப்பி நிவர்த்தி செய்கிறோம். பொதுவாக தமிழ்நாடு பூராவும் இதைச் செய்ய பரிசீலித்து வருகிறோம்.

பாகப் பிரிவினை சொத்துப் பத்திரத்தைப் பற்றி சொன்னார்கள். அது உண்மைதான். பாகப் பிரிவினையில் ஒரே ஒரு வீடு இருக்கும், அதன் மதிப்பு உயர்ந்த மதிப்பாக இருக்கும். அவர்கள் திரும்பப் பதிய முடியாது. ஏனவே 4 சதவீதம் என்று இருப்பதை இந்த அரசு 2 சதவீதமாகக் குறைக்க இருக்கிறது என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ரேஷன் கார்டு முறையைக் கொண்டு வர வேண்டுமென்றும், அப்போது பட்டா கிடைக்கும் என்றும் சொல்லி இருக்கிறார்கள். பட்டாவைப் பொறுத்தவரையில் நாங்கள் வருவாய்த் துறையிடத்தில் கலந்து ஆலோசித்து பணியைச் செய்ய இருக்கிறோம். சர்வீஸ் சார்ஜ் பற்றியெல்லாம் சொல்லி இருக்கிறார்கள்.

திரு. மனோகரன் அவர்கள் சொல்கிறபோது மரவள்ளிக் கிழங்குக்கு வரியைக் குறைக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அதுவும் பரிசீலனையில் இருக்கிறது.



கடன் வழங்குவதில் வங்கிகளில் ஏற்பட்டிருக்கிற தாமதம் உண்மை தான். 'டிக்' பொறுத்தவரையில் இங்கே பேசிய நம்முடைய சேகரன் அவர்கள் சொன்னார்கள், 'டிக்' நிறுவனத்தில் மிகவும் காலதாமதம் ஆகிறது என்று. அதெல்லாம் நிவர்த்தி செய்யப்படும். காலதாமதம் ஆகாமல் கடன் கொடுப்பதற்கு வேண்டிய அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இங்கே பேசிய உறுப்பினர்கள் 1,000 ரூபாய் என்று இருக்கக்கூடியதை 5,000 ரூபாயாக ஆக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே 100 ரூபாய்தான் காலம் காலமாக இருந்தது. இன்றையதினம் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் பல ஆண்டுகளாக 100 ரூபாய்க்கு ஸ்டாம்ப் டியூட்டி இல்லையென்று சொன்னதை 1,000 ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள். எனவே இது போன்று இங்கே உறுப்பினர்கள் எடுத்து வைத்திருக்கின்ற கருத்துக்களை நாங்கள் மதித்து அவற்றை நிறைவேற்றுவதற்கு இருக்கிறோம்.

மாண்புமிகு இராமஜெயம் அவர்கள் குடிசை மாற்று வாரியத்தில் மார்க்கெட் மதிப்பிற்கு அவர்கள் பத்திரப் பதிவு செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கலந்து பேசி அதற்குரிய நடவடிக்கையை விரைவில் எடுப்பேன் என்ற உறுதியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு சில அறிவிப்புகளை இங்கே அறிவிக்க இருக்கிறேன். முத்திரைத் தீர்வை பொறுத்தவரையில் 1,000 ரூபாய்க்கு மேற்படாத மதிப்புள்ள சொத்து உரிமை மாற்றம் விற்பனை ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கும் பொது மக்கள் சிறிய சொத்துக்கள் வாங்கும்போது முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

தற்போது ஒத்தி ஆவணங்கள் மீதான முத்திரைத் தீர்வை 13 சதவீதமாக இருக்கிறது அந்த 13 சதவீதத்தை குறைப்பதற்கு இந்த அரசு — ஏனென்றால் 13 சதவீதம் என்பது விற்பனை செய்வதற்கே (Sale Deed). ஆகவே, இந்த 13 சதவீதத்தை ஒத்தி அடமானங்களுக்குக் குறைத்து, அரசுக்கு வருமான இழப்பு ஏற்பட்டாலும், பொது மக்கள் நேர்மையாக இந்த வகை ஆவணங்களை எழுதி பதிவு செய்ய முறையாக சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முத்திரைத் தாள் விற்பனையாளர்களுக்கு தரகுத் தொகை ஏற்கெனவே 5,000 ரூபாய்க்கு மேலே இருக்கிற முத்திரைத் தாளுக்கு அவர்களுக்கு கமிஷனே கிடையாது அதற்குக் கீழே இருப்பவற்றிற்குதான் ஸ்லாப் வைசாக கமிஷன் இருக்கிறது. ஸ்லாப் வைசாக இருக்கிற கமிஷனை —ஏற்கெனவே அவர்களுக்கு மொத்தம் ஓர் ஆண்டுக்குக் கிடைக்கிற தொகை 1.33 கோடி ரூபாய்தான் கமிஷனாகக் கொடுக்கிறோம். அந்த ஸ்டாம்ப் வெண்டர்களுக்கு. வருங்காலத்தில் அது 3.02 கோடியாக உயர்த்தப்படும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பாகப் பிரிவினை ஆவணங்களுக்கு ஏற்கெனவே சொல்லி விட்டேன், 2 சதவீதமாகக் குறைக்கிறோம் என்று.

பத்திரப் பதிவு அலுவலகங்களை நவீனமயமாக்குதல். தற்போது சென்னை முழுவதும் அலுவலகங்களை கம்ப்யூட்டரைஸ் பண்ண வேண்டுமென்று எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டு வருகிறோம். இது படிப்படியாக அனைத்து மாநகராட்சிகளிலும் கொண்டுவரப்பட்டு பின்பு மாநிலம் முழுவதும் நவீன கணிப்பொறி வசதியுள்ள வகையிலே நவீனமயம் ஆக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

புதிய சார் பதிவகம் திறப்பதற்கு பல்வேறு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் மதித்து எதிர்காலத்தில் முழுமையாக ஆய்வுசெய்து அவையெல்லாம் எடுத்துக்கொள்ளப்படும். இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படுகின்ற அலுவலகங்கள் - தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திலே இருக்கக்கூடிய மங்களூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர், நமது எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடைய கோரிக்கையை ஏற்று தொழுதூரிலே புதிய சார் பதிவகம் அமைக்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டத்திலுள்ள இரும்புலிக்குறிச்சியிலேயும் புதிய சார் பதிவகம் அமைக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

புதியக் கட்டிடங்களைக் கேட்டிருக்கிறார்கள்-இடைப்பாடியிலேகூட கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு 10 இடங்களிலே பழுதடைந்த,



மிகவும் பழுதடைந்த புதிய கட்டிடங்களில் இடைப்பாடியும் சேரும், இடைப்பாடி நம்பர் ஒன் ஆக வந்துவிடும். ஆக மொத்தம் இந்த ஆண்டு 10 கட்டிடங்கள் - ஒரு கட்டிடத்திற்கு 5 இலட்சம் ரூபாய் வீதம் 10 புதிய கட்டிடங்கள் திறக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையை ஏற்றபோது - ஃபிராங்கிங் இயந்திரம் - மற்ற மாநிலங்களில் ஃபிராங்கிங் இயந்திரம் இருக்கிறது, நமது மாநிலத்தில் இல்லை என்கிற குறையை நீக்குகின்ற வகையில் ஆவணங்களை முத்திரைத்தாளில் எழுதாமல் வெற்றுத் தாளில் எழுதி முத்திரைத்தீர்வை செலுத்துகின்ற வகையில் ஃபிராங்கிங் இயந்திரம் அறிமுகப்படுத்தப்படவிருக்கிறது. முதன்முதலாக சென்னை, கோவை, மதுரை போன்ற நகரங்களில் இவை அறிமுகப்படுத்தப்படுமென்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதுபோக முத்திரைத்தாள் விற்பனை மையம் ஒன்றை திறக்கவிருக்கிறோம். சென்னையிலே ஒரு மையம் (Centre), அந்த சென்டரிலே பொதுமக்கள் எந்த நேரமும் போய் வாங்கிக்கொள்ளலாம். அந்தவகையில் முத்திரைத்தாள் பொதுமக்களுக்கு எளிதாகவும் கட்டுப்பாடின்றி உரிய விலையில் கிடைக்கச்செய்யும் நோக்கத்தோடுதான் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முத்திரைத்தாள் விற்பனை மையம் திறக்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பதிவுத்துறைக் கையேடு - இந்த பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்தவரையில் ஒரு கையேடு - எப்படி, எப்படி, ஒவ்வொன்றும் எவ்வளவு, எவ்வளவு, பதிவுத்தொகையோ, ஈடோ, வில்லங்கச் சான்றிதழ் வாங்குவது எப்படி என்று எல்லா வகையிலும் விளக்குகின்ற வகையில் ஒரு கையேடு. எதிர்காலத்தில் முத்திரைத் தாள் சட்டம் பதிவுச் சட்டம் விரைவிலே தமிழில் வரவிருக்கிறது என்பதை இந்த அவையின் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புகார் பெட்டி - புகார் பெட்டி பற்றி ஏற்கெனவே உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். ஒவ்வொரு சப் ரெஜிஸ்தரார் அலுவலகத்திலும் வைக்கப்படும் - அங்கு இருக்கக்கூடிய டி.ஆர்.ஓ. போன்றவர்கள் அதை எடுத்து அதன்மீது நடவடிக்கை எடுப்பார்கள். கூடுதல் நியமனம் என்பது - இந்த தனித் துணை ஆட்சியர் - தமிழ்நாட்டிலே இதுவரைக்கும் 47(ஏ)வின் கீழ் 128.39 கோடி சொத்துக்கள் சம்பந்தமாக இன்றையதினம் நிலுவையிலே இருக்கிறது. அவற்றை உடனுக்குடனே விசாரித்து தீர்ப்பதற்கு

அதன்மீது உத்தரவு வழங்குவதற்கு 11 தனித் துணை ஆட்சியர் என்பதை இன்னும் 4 துணை ஆட்சியரை சேர்த்து. அதேபோல 11 தனி வருவாய் ஆய்வாளர்களை நியமனம் செய்து, அவற்றை முழுவதும் இந்த ஆண்டிலேயே முடித்து இன்னும் பல கோடி ரூபாய் வருவாய் ஈட்டுவதற்காக, கூடுதலாக நான்கு துணை ஆட்சியர், 11 வருவாய் ஆய்வாளர்களை நியமனம் செய்ய இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆவண எழுத்தர் உரிமம் பற்றி உறுப்பினர்களுக்குத் தெரியும். ஏற்கெனவே இரண்டு வருடங்களுக்கு ஒருதடவைதான் அவர்களுக்கு ரெனுவல் கொடுத்துவந்தோம். அந்த ஆவண எழுத்தர்களுடைய கோரிக்கையை ஏற்று இந்த அரசு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆவண எழுத்தர் உரிமத்தை புதுப்பித்தால் போதும் என்று தெரிவித்திருக்கிறது.

இதுபோக விருத்தாசலத்திலே நவீன இயந்திரங்களோடு கூடிய தொழில் சேவை மையத்தில் பரிசோதனை மேற்கொள்ள இந்த ஆய்வுக்கூடத்திற்கு ரூ 10.25 இலட்சம் ஒதுக்கப்படவிருக்கிறது. காக்களூர் மின் ஆய்வுக்கூடத்திற்கு ரூ. 10 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது.

தொழில் முனைவோர் பயிற்சி மையம் கிண்டியிலே அமைக்கப்பட 5 இலட்சம் ரூபாயும், அதில் தொழிற்பயிற்சி பெறுபவர்களுக்கு 20 இலட்சம் ரூபாயுமாக மொத்தம் ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. முதன்முதலாக இந்தியாவிலேயே தொழில் முனைவோர் பயிற்சி மையம் மகாராஷ்டிராவை அடுத்து தமிழ்நாட்டிலே நிறுவப்பட இருக்கின்றது. என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுபோக கம்ப்யூட்டர் உதவி வடிவமைப்பு உற்பத்தி மையத்திற்காக கிட்டத்தட்ட 54.31 கோடி ரூபாய் மதிப்பிலே கம்ப்யூட்டர் உதவி வடிவமைப்பு உற்பத்தி மையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளது. சிட்கோ நிறுவனம்-வருகின்ற ஆண்டிலே 225 தொழிற்கூடங்களையும் 2,20 செப்பனிட்ட மனைகளையும் மேம்படுத்துவதற்கு உத்தேசித்திருக்கிறது.

பிற்பகல் 1-40

இப்போது தொழில் தொடங்குபவர்களுக்குக் கடன் கிடைக்கவில்லை. வங்கிகளுக்குப் போனால் ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. ஆகவே,



தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமும், (T.I.I.C.) சிட்கோவும் (SIDCO) சேர்ந்து, ஒரு இணைப்புத் திட்டம் ஆரம்பித்து, தொழில் முனைவோர்களுக்கு மிக இலகுவாக கடன் கிடைப்பதற்கு, உடனே தொழிலைத் துவங்குவதற்கு வசதியாக, 'தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்-சிட்கோ இணைப்புத் திட்டம்' என்ற ஒரு திட்டத்தை இந்த ஆண்டிலேயிருந்து அறிமுகப்படுத்த இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த சிட்கோவிலே இந்த வருடம் பணமே இல்லாமல் - மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் சொன்னார்கள் - தொழிற் பேட்டையை எப்படி அமைப்பது என்று. நாங்கள் கூட ரொம்ப கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். மத்திய அரசின் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு 2, 3 கடிதங்கள் வாயிலாக Integrated Infrastructure Development என்ற அடிப்படையிலே, அதன் மூலமாக தொழில் தொடங்குவதற்கு -மத்திய அரசு கடனாக 10 கோடி கொடுத்தால், கிட்டத்தட்ட 40 சதவீதம் மானியம். அதன் மூலமாகக் கிடைக்கும் ஒரு மாநிலத்திற்கு ஆண்டுக்கு ஒன்றுதான் கொடுப்பார்கள். ஆனால் இந்த ஆண்டு நமது மத்திய தொழில் துறை அமைச்சர் அவர்கள்-நமக்குக் கிட்டத்தட்ட Integrated Infrastructure Development இந்திய அரசின் ஒருங்கிணைந்த உள்ளமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.10.35 கோடியை வழங்கி அவர்கள் நமது தமிழகத்திற்கு 2 திட்டங்களைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்ற செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதன் மூலமாக சிட்கோவிற்கு 10.35 கோடி இன்றைக்குக் கிடைக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன் மூலமாக தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தலாம். பின்தங்கி இருக்கிற பகுதிகளிலே. இதிலே மானியம் 4 கோடி. அதற்காக, நமது மத்திய தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு நமது தமிழக அரசினுடைய சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுபோக இன்னும் ஒன்று. ஒன்றுதான் ஒரு மாநிலத்திற்குக் கிடைக்கும். அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழில் பேட்டை என்று கிட்டத்தட்ட பல்லாண்டுகளாக கோவையிலே ஆரம்பிக்கப்பட்டு, அதற்கு மத்திய அரசினுடைய ஒப்புதலே ஐ.ஐ.டி. புரோகிராமிலே கிடைக்காமல் இருந்தது. உங்களுக்கே தெரியும், மதுரையிலே ஒரு 'ஹோய்சரி யூனிட்' ஆரம்பித்தார்கள். ஐ.ஐ.டி. ஸ்கீமிலே 'ஹோய்சரி யூனிட்டை' ஆரம்பித்து

[திரு. இ. பெரியசாமி] [1997 மார்ச் 31

இதுவரைக்கும் முடிவுறாத நிலையில் இருக்கிறது. மதுரையிலே ஒரு பனியன் தொழிற்சாலை ஆரம்பித்து இதுவரையிலும் . முடிவுறாத நிலையிலே இருக்கின்ற காரணத்தால், மத்திய அரசு அனுமதி வழங்காமல் இருந்தது. இருந்தாலும், அறிஞர் அண்ணா தொழில் பேட்டைக்கும் முன் அனுமதி வழங்கி, 5.52 கோடி ரூபாயை மத்திய அரசு வழங்க முன் வந்திருக்கிறது என்ற செய்தியையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மாநிலத்திற்கு ஒன்று. ஆனால் நம்முடைய மாநிலத்திற்கு மட்டும் 3 கிடைத்திருக்கிறது. நம்முடைய மாநிலம் மத்தியில் தொழில் துறை அமைச்சர் அவர்களைப் பெற்றிருக்கிற காரணத்தால்.

இது போக 'சாப்ட் லோன்', ஏற்கனவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 'சாப்ட் லோன்' என்பது கடன், அதாவது தொழில் தொடங்குவதற்கு கடன்பெற மார்ஜின் மணி வேண்டும். இந்த மார்ஜின் மணி என்பது தொழில் துவங்குவதற்கு பணம் இல்லாதவர்கள் மூலதனத்தில் 25 சதவீதம் மார்ஜின் மணி போடவேண்டும், ஒவ்வொருவரும், தொழில் தொடங்குகிறவர்கள், 75 சதவீதம் கடன் வாங்கினாலும் 25 சதவீதம் மார்ஜின் மணி போடவேண்டும், அவர்கள் மூலதனம் போட வேண்டும், . அவ்வாறு மூலதனம் இல்லாத படித்த இளைஞர்கள் இன்றைக்கு முதன் முதலாக தொழில் தொடங்க வந்தார்கள் என்றால், முதல் தலைமுறையாக இருந்தால் அவர்களுக்கு ரூ. 4 லட்சம், அதிகபட்சம் போனால் 15 சதவீதம், மொத்த மூலதனத்திலே - இல்லாவிட்டால் ரூ. 4 லட்சம் - கிடைக்கின்ற வகையிலே நமது பட்ஜெட்டிலே நமது முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.

இதுபோக, கடந்த ஆண்டு இதே அவையில் அறிவிக்கப்பட்ட 'தாய்கோ' வங்கியினுடைய பிரிவு வருகின்ற 14-4-1997-ஆம் நாள் ஆயிரம் விளக்குத் தொகுதியிலே ஆரம்பிக்கப்படும் என்ற செய்தியை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற ஆண்டிலே இதே 'தாய்கோ' வங்கியினுடைய பிரிவு சேலம் மாவட்டம் ஆத்தூரிலே ஆரம்பிக்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோக, சிட்கோ வங்கி இல்லாமல், கடந்த காலத்திலே 1962-ஆம் ஆண்டிலேயிருந்து எடுத்துப் பார்த்தால், Industrial Co-operative Societies என்பது நன்றாக வளர்ந்திருக்கிறது. மாதவரத்தைப் போய்ப் பார்த்தவுடனே நான் கூட யோசித்தேன். 1962-லே ஆரம்பிக்கப்பட்டது.



1997 மார்ச் 31] [திரு. இ. பெரியசாமி]

Industrial Co-operative Societies என்று ஆரம்பித்தது எல்லாம் சிறந்த முறையிலே இன்னும் பணியாற்றி வருகின்றன. அந்த அடிப்படையிலே ஒவ்வொரு பகுதியிலேயும் Industrial Co-operative Societies இப்போது மாநிலத்திலே 10 மாவட்டங்களிலே 5 ஏக்கர் அளவிற்கு மிகைப்படாத அளவிற்கு நிலங்களை எடுத்து அங்கே சிறுதொழில் கூட்டுறவு பேட்டைகள் - அங்கே என்னென்ன அடிப்படை பொருட்கள், மூலப் பொருட்கள் கிடைக்கின்றனவோ, அதை அடிப்படையாக வைத்து - குறிப்பாக எடுத்துக் கொண்டால், பெரியார் மாவட்டத்தில் மஞ்சள் கிடைக்கிறது. எனவே, மஞ்சள் தூளை தயாரிக்கலாம் என்றால், அங்கே ஒரு சிறுதொழில் கூட்டுறவு பேட்டையை அமைப்பது.- 5 ஏக்கர் அளவிலே அங்கே உள்ள உறுப்பினர்களைச் சேர்த்து, அந்தச் சங்கத்தை அமைத்து, அந்த வகையில் 10 மாவட்டங்களிலே அமைக்க இருக்கின்றது. இங்கே சொன்னார்கள், ஐ.ஐ.டி. ஒவ்வொரு யூனியனுக்கும் வருகிறது, அதேமாதிரி தொழில்பேட்டையும் ஒவ்வொரு யூனியனுக்கும் வரவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே எதிர்காலத்திலே விரிவுபடுத்துகின்ற வகையிலே 10 மாவட்டங்களிலே இந்த சிறுதொழில் கூட்டுறவு பேட்டைகளை இந்த அரசு அமைக்க இருக்கிறது என்ற செய்தியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-45

இதுபோக, பட்டு வளர்ச்சியைப் பொறுத்தவரையில், அதற்கு வருகின்ற நோய்களைத் தடுக்கின்ற வகையில், பயிற்சி மையங்களை அமைப்பதற்கு வைகை வீரன் அழகுமுத்து மாவட்டத்திலே, வைகை அணையிலே வருகின்ற கால கட்டத்திலே 10 லட்சம் ரூபாய்ச் செலவிலே ஒரு பயிற்சி மையம் கட்ட இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி)

இது போக, தமிழ்நாடு கைத்திற தொழில்களைப் பொறுத்த அளவில், பூம்புகாரைப் பொறுத்த அளவில், புதிதாக பம்பாயிலே ஒரு கிளையைத் திறக்க அரசு முன்வந்திருக்கிறது. ரூ.12.50 லட்சம், செலவிலே. இது போக, இங்கே சென்னையில் அண்ணா சாலையிலே இருக்கக் கூடிய கிளையை குளிர் சாதன வசதியோடு, நவீன வசதிகளோடு, மாற்றியமைப்பதற்கு இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது என்ற செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியிலே தும்மணப்பட்டு தேயிலை தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் - நமது கொறடா அவர்கள் ஏற்கெனவே சொல்லி அனுமதி வழங்கியிருக்கிறோம். அதையும் இந்த அவைக்குத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமாய் கேட்டு, அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்-நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்-நிருவாகம் வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை, திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"முத்திரைத்தாள்கள்—நிருவாகம் பற்றிய 5-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 5,13,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## கோரிக்கை எண் 6 - ஆவணப் பதிவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 6 - ஆவணப் பதிவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர் இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.



"ஆவணப் பதிவு பற்றிய 6-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.32,72,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## கோரிக்கை எண் 47—ஊரகத் தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

[1997 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர் இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 94,75,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## கோரிக்கை எண் 60—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 60—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை



1997 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர் இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 60-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 1,11,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே . அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1-4-1997) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-49 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

125. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

126. 1995-96-ஆம் ஆண்டிற்கான சதர்ன் ஸ்ட்ரக்சுரல் நிறுவனத்தின் முப்பத்தொன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன]. (தமிழ், ஆங்கிலம்)

127. சென்னை மத்திய சிறையிலிருந்து 27-02-1995-ஆம் நாளன்று இரவு 'தடா' கைதிகள் ஒன்பது பேர் தப்பிச் சென்றது தொடர்பாக விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதிபதி திரு. ஜி. இராமானுஜம் விசாரணைக் கமிஷனின் அறிக்கை. [1952-ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

93. மானியக் கோரிக்கை எண்கள் 47 மற்றும் 60—ஊரகத் தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் மீதான மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு 1

*(402-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### வணிக வரி மற்றும் அறநிலையத் துறை

### மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள் நிர்வாகம்

### மற்றும்

### மானியக் கோரிக்கை எண். 6—ஆவணப் பதிவு

### கொள்கை விளக்கக் குறிப்பு

அரசுத் துறைகளில் பதிவுத் துறையானது ஒரு பழமையான துறை. 134 வருடங்களாக எவ்வித விளம்பரமும் முழக்கமுமின்றி பொதுமக்களுக்கு மதிப்பிட இயலாத சேவையினை புரிந்து வருகிறது. இது மக்களுக்கு சேவை செய்யும் அதேசமயம், இந்திய முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் ஆகிய பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் மற்றும் இதர கட்டண வரவினங்கள் மூலம், அரசுக் கருவூலப் பெட்டியினை நிரப்பும் வருவாய் பெற்றுத் தரும் துறையாகும். வருவாய் ஈட்டலில் வணிகவரி மற்றும் கலால் துறைக்கு அடுத்து மூன்றாவது இடத்தில் இருந்து வருகிறது.

### 02. நிர்வாக அமைப்பு

#### அ. தலைமை நிர்வாகம்

பத்திரப் பதிவுத்துறைத் தலைவராக இந்திய ஆட்சிப் பணி தரத்தில் உள்ள அலுவலர் நியமிக்கப்படுகிறார். பிறப்பு, இறப்பு, திருமணத் தலைமைப் பதிவாளராகவும், 1982 ஆம் ஆண்டு மத்திய சிட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் (மத்திய சட்டம் 40/1982) சிட்டு நிதிகள் பதிவாளராகவும், 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவாளராகவும் இவர் செயல்படுகிறார். இவருக்கு உதவியாகப் பின்வரும் அலுவலர்கள் தலைமையிடத்தில் பணியாற்றி வருகின்றனர் :

1. கூடுதல் பதிவுத்துறை தலைவர் (வழிகாட்டி)
2. கூடுதல் பதிவுத்துறை தலைவர் (புலனாய்வு)
3. கூடுதல் சிட்டு மற்றும் சங்கங்களின் பதிவாளர்

4. சட்ட அலுவலர்

5. பதிவுத்துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர்

6. பதிவுத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர் (சீட்டு நிதிகள்)

7. மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி)

8. கணக்கு அலுவலர்

9. காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் இயங்கும் இரு காவல் துறை ஆய்வாளர்கள் அடங்கிய விழிப்புப் பணிக்குழு.

### ஆ. மண்டல அலுவலகங்கள்

சென்னை, வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களை தலைமையகமாகக் கொண்டு தமிழ்நாடு முழுவதும் ஒன்பது பதிவு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மண்டலங்கள் ஒவ்வொன்றும் பதிவுத்துறைத் துணைத் தலைவர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மண்டலம் முழுவதையும் நிர்வகித்தல், ஆய்வு செய்தல், அவருடைய மண்டலத்திற்குள் உள்ள வட்டார பதிவுத்துறை அலுவலகங்கள், மாவட்டப் பதிவகங்கள் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்களின் பணிகளை மேற்பார்வையிடுதல், ஆய்வு செய்தல் ஆகிய பணிகள் மண்டலத் தலைவரின் பணிகளாகும். மண்டலத்தின் மாதாந்திர வருவாய் இலக்கை எட்டுதல் அவரின் தலையாய பொறுப்பாகும். அவர் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் இணைப்பதிவாளராகவும் உள்ளார்.

### இ. வட்டார அலுவலகங்கள்

சென்னை, வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் உதவிப் பதிவுத்துறைத் தலைவர்கள் தலைமையில் ஏழு வட்டாரப் பதிவுத்துறை அலுவலகங்கள் செயல்படுகின்றன.

சார்பதிவாளர் அலுவலகங்களை ஆய்வு செய்தல், புகார்கள் தொடர்பாக விசாரணை செய்தல், தணிக்கைக் குழுவின் பணிகளை ஆய்வு செய்தல் ஆகியவை பதிவுத்துறை வட்டாரத் தலைவர்களின் முக்கிய கடமைகளாகும். அவர்கள் சங்கங்களையும் சீட்டு நிதி நிறுவனங்களையும் ஆய்வு செய்கின்றனர்.





### ஈ. மாவட்ட அலுவலகங்கள்

மாநிலம் 47 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டமும் மாவட்டப் பதிவாளர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அவர் சங்கங்களின் பதிவாளராகவும், திருமணங்கள், கூட்டு வணிக நிறுவனங்கள் ஆகியவற்றின் பதிவாளராகவும் இருக்கிறார். சார்பதிவாளர் அலுவலகங்களை ஆய்வு செய்தல், பதிவுச் சட்டத்தின் கீழ் செய்யப்படும் மேல் முறையீடுகளை விசாரித்தல், பத்திரங்களின் தன்மை தொடர்பாக சார்பதிவாளர்கள் எழுப்பும் ஐயங்களுக்கு விளக்கம் அளித்தல், புகார்கள் ஏதேனும் வரப்பெற்றால் அவற்றை விசாரித்தல், சொத்துக்களின் மதிப்பைக் குறைவாகக் குறிப்பிட்டுள்ள பத்திரங்கள் அடங்கிய சொத்துக்களை கள ஆய்வு செய்து சரியான மதிப்பை நிர்ணயித்தல் ஆகியவை அவருடைய முக்கியமான பணிகளாகும். நிர்வாகத்தில் திறமையை மேம்படுத்தும் பொருட்டு சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டப் பதிவகங்களின் தலைவராக உதவிப் பதிவுத்துறைத் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### உ. தணிக்கை குழுக்கள்

மாநிலத்திலுள்ள எல்லா சார் பதிவாளர் அலுவலகங்களையும் நூறு சதவீதம் உள் தணிக்கை செய்ய 26 தணிக்கைக் குழுக்கள் செயல்படுகின்றன. ஒவ்வொன்றும் ஒரு மாவட்டப் பதிவாளர் தலைமையில் இயங்குகின்றது. 1997-98-ஆம் ஆண்டில் மேலும் 6 தணிக்கைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஆவணங்களில் குறிப்பிடப்படும் கட்டிடங்கள் போன்ற அசையாச் சொத்துக்கள், முத்திரைத் தீர்வை ஏய்ப்பு செய்யும் நோக்குடன் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளனவா என கள ஆய்வு செய்யும் பணியையும் தணிக்கை குழு கவனிக்கிறது.

### ஊ. சார்பதிவாளர்கள்

மாநிலம் முழுவதும் 591 சார்பதிவகங்கள் சார்பதிவாளர் தலைமையில் செயல்படுகின்றன. விற்பனை, தானம், விடுதலை, குத்தகை, அடமானம் போன்ற பல்வேறு வகை ஆவணங்களைப் பதிவு செய்தல், வில்லங்கச் சான்றிதழ்கள், ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் வழங்குதல் ஆகியவை சார்பதிவாளரின் பணிகளாகும். இந்து திருமணச் சட்டம் மற்றும் சிறப்புத் திருமணச் சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் திருமணப் பதிவாளராகவும் செயல்படுகிறார்.

சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை போன்ற பெருநகர்களைப் பொறுத்தவரையில், பதிவுக்கு வரும் சிக்கலானதும், மதிப்பு அதிகமானதுமான ஆவணங்களை விரைவாகவும் சரியாகவும் பதிவு செய்ய, அப்பெருநகர்களிலுள்ள சார்பதிவகங்கள் மாவட்டப் பதிவாளர் தலைமையில இயங்குகின்றன. அதே போல, காஞ்சிபுரம், வேலூர், கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், கரூர், நாமக்கல், சேலம், ஈரோடு, திருப்பூர், பழனி, ஊட்டி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி 1 நிர் இணை சார்பதிவகங்களும் மாவட்டப் பதிவாளர் தலைமையில் இயங்குகின்றன:

அம்பத்தூர், வில்லிவாக்கம், உறையூர், சிங்காநல்லூர் மற்றும் அரசரடி ஆகிய இடங்களிலுள்ள சார் பதிவகங்களும் மாவட்டப் பதிவாளர் தலைமையில் செயலபட ஆணையிடப்பட்டுள்ளது.

மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் புதிய சார் பதிவகங்கள் திறக்கப்பட வேண்டும் என்று சட்டப்பேரவை உறுப்பினர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் கோரிக்கைகள் வந்துள்ளன. பதிவுக்கு வரும் ஆவணங்கள் மிக அதிகமாக உள்ள இடங்களில் புதிதாக சார்பதிவகங்கள் திறக்க வேண்டிய அவசியம் குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

ஒவ்வொரு சார்பதிவகத்திலும், பொது மக்கள் தங்கள் ஆவணங்களைப் பதிவு செய்வதில் உள்ள இடர்பாடுகளையும், அவர்களுடைய ஆலோசனைகளையும் எழுதிக் கொடுக்கும் புகார் மனுக்களைப் பெற வசதியாக, ஆலோசனை—புகார் பெட்டி ஒன்று வைக்கப்பட வேண்டும் என்று அரசு அறிவுறுத்தியுள்ளது.

### எ. புலனாய்வுக் குழு

இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 27-ன்படி கைமாறும் சொத்தின் உண்மை விவரங்கள் முழுமையாகக் கொடுக்கப்பட வேண்டும். அசையாச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்களில் கட்டிட அளவுகளை மறைத்து மதிப்புக் குறைவு செய்து, அதனால், அரசுக்கு வரக்கூடிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டண வருவாயை ஏமாற்ற ஆவணதாரர்கள் முயற்சிக்கின்றனர். அதனைத் தடுக்கும் வகையில், 'புலனாய்வுக் குழு' என்ற பிரிவு ஒன்று, கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரின் தலைமையின் கீழ், 8 மாவட்டப் பதிவாளர்களையும் 2 உதவி செயற்பொறியாளர்களையும் கொண்டு 1989-ஆம் ஆண்டு முதல் பதிவுத் துறையில் செயல்பட்டு வருகிறது. இவர்களுடன் நிர்வாக மாவட்டப்



பதிவாளர்களும், தணிக்கை மாவட்டப் பதிவாளர்களும் கட்டிடக் கள ஆய்வுகள் செய்து வருவாய் இழப்பைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர்.

கடந்த ஆண்டில் கட்டிடங்கள் கள ஆய்வில் 60,195 வழக்குகளில் ரூ.14.50 கோடிக்கு முத்திரைத் தீர்வை ஏய்ப்பு கண்டுபிடிக்கப்பட்டு, 28-2-1997 முடிய ரூ.11.60 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொகையில் கணிசமான தொகை அடுக்குமாடிக் குடியிருப்பு விற்பனைகள் தீர்வை விதிக்கப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக, அரசு உச்சநீதிமன்றத்தில வழக்கு கோர்வை செய்ததின் மீது முடிவான தீர்ப்பாணையை எதிர்நோக்கி வசூலிக்க முடியாத நிலையில் உள்ளது.

### ஏ. வழிகாட்டி மதிப்புக் குழு

வளர்ச்சி சதவிகிதம், விற்பனைப் புள்ளிவிவரங்கள், நிலத்தின் உபயோகம், பூகோள அமைப்பு, தெருக்களின் அகலம் மற்றும் விசாரணையின் மூலம் அறியப்படும் மதிப்பு ஆகிய விவரங்களைக் கொண்டு, சொத்துக்களில் வழிகாட்டி மதிப்புகள் திருத்தி அமைக்கப்படுவதற்கு கூடுதல் பதிவுத்துறைத் தலைவர் ஒருவரின் கீழ் 'வழிகாட்டி மதிப்புக் குழு' இயங்கி வருகிறது. இக்குழு, வழிகாட்டிப் பதிவேடுகளில் உள்ள சொத்துக்கள் மதிப்பு விவரங்களில் உள்ள முரண்பாடுகள் தொடர்பாக பொது மக்களிடமிருந்து பெறப்படும் முறையீடுகளின் அடிப்படையில் கள ஆய்வும் விசாரணையும் மேற்கொண்டு முரண்பாடுகளைச் சரி செய்கிறது.

நகரங்களுக்கு அருகாமையிலுள்ள நிலங்களும், நஞ்சை நிலங்களும், விவசாயப் புறம்போக்கு நிலங்களும், தரிசு நிலங்களும் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இவ்வழிகாட்டிக்குழு துறையிலுள்ள களப்பணி அலுவலர்களுடன் சேர்ந்து மனைப் பிரிவுகளையும், மனையிடங்களையும் ஆய்வு செய்தும், விசாரணையின் மூலமும், பதிவுப் புள்ளிவிவரங்கள் அடிப்படையிலும் சொத்துக்களின் சரியான மதிப்பை நிர்ணயம் செய்கிறது.

### ஐ. வழிகாட்டி மதிப்புப் பதிவேடு

சொத்துரிமை மாற்றம், சொத்துப் பரிமாற்றம், தானம், விடுதலை, செட்டில்மெண்ட், நிலையான குத்தகை, உடைமை உரிமையிலுள்ள அடமானம் போன்ற அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் பரிமாற்ற ஆவணங்கள் மூலம் கிடைக்கும் வருவாய் முத்திரைத் தீர்வை

வருமானத்தில் கணிசமான அளவாகும். சொத்து விற்பனை, பரிமாற்றம், தானம், குடும்ப உறுப்பினர் அல்லாத நபர்கள் சம்பந்தப்பட்ட செட்டில்மெண்ட் குறித்த பரிவர்த்தனைகளில் சம்பந்தப்பட்ட சொத்தின் சந்தை மதிப்பு அடிப்படையில் முத்திரைத் தீர்வை விதிக்கப்பட்டு வருகிறது. பத்திரத்தில் சந்தை மதிப்பு சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வசதியாக பத்திரப் பதிவு அலுவலர்களுக்கு அவர்களது அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள சொத்தின் நேரிய மதிப்புகள் குறிக்கப்பட்டுள்ள வழிகாட்டு மதிப்புப் பதிவேடுகள் பராமரிக்கப்படுகிறது.

மாநகராட்சிகள் நகராட்சிகள் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும ஆளுகைக்குட்பட்ட பகுதிகளுக்கும், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சி மற்றும் இதர நகராட்சிகளில், 1971-ஆம் ஆண்டு கிராம மற்றும் நகரபுற திட்டச் சட்டத்தின் பிரிவு 10(1)-ன் கீழ் உள்ளாட்சி திட்டப் பகுதி என அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும் உள்ள சொத்துக்களின் வழிகாட்டு மதிப்பு ஆண்டுதோறும் திருத்தியமைக்கப்படவும் இதர கிராமப்புறங்களிலுள்ள சொத்துக்களின் மதிப்பு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படவும் 17-7-1996-ல் அரசாணை நிலை எண்.249-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்கண்ட அரசாணையின்படி தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள சொத்துக்களின் வழிகாட்டு மதிப்புகள் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன. இந்த மதிப்புகள் திருத்தியமைக்கும் பணி விரைவில் முடிக்கப்பட்டு அமலுக்கு கொண்டுவரப்படும். இதனால் அரசுக்கு சுமார் ரூ.145 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சொத்துக்களில் வழிகாட்டி மதிப்பு குறிப்பிட்ட பதிவேட்டின் நகல் ஒன்று அந்தந்த பகுதிகளில உள்ள வர்த்தகர் சங்கம் அல்லது விவசாயிகள் சங்கத்திற்கு வழங்கப்பட்டு, பொது மக்களின் தகவலுக்காக வைக்கப்பட வேண்டும் என்று அரசு பதிவுத்துறை தலைவருக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளது. சென்னையில் பலவேறு பகுதிகளில் உள்ள வர்த்தகர் சங்கங்களின் பிரிதிநிதிகளிடம் சம்பத்தில் வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் நகல் பொது மக்களின் தகவலுக்காக வழங்கப்பட்டுள்ளது.



### ஐ. பதிவுத்துறை பயிற்சி நிலையம்

பதிவுத் துறையால் நிர்வகிக்கப்படும் முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் மற்றும் பலவேறு சட்டங்கள் குறித்து துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்க பயிற்சி நிலையம் ஒன்றை பதிவுத் துறைத் தலைமை அலுவலகத்தில் அரசு நிறுவியுள்ளது. இப்பயிற்சி நிலையம் கடந்த டிசம்பர், 1996 முதல் செயல்படத் துவங்கியுள்ளது.

## 03. பதிவுத் துறை நிர்வகிக்கும் பல்வேறு சட்டங்கள்

1. 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்தியச் சட்டம் 16/1908)

2. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்தியச் சட்டம் 2/1899).

3. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்தியச் சட்டம் 40/1982).

4. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம்

5. 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம்.

6. 1972 ஆம் ஆண்டு வர்த்தகம் அல்லாத கம்பெனிகள் சட்டம்.

7. 1886 ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு திருமணங்கள் சட்டம்.

8. (அ) 1938 ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம்.

(ஆ) 1869 ஆம் ஆண்டு பிறப்பு இறப்புச் சட்டம்.

(இ) 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம்.

(ஈ) 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்.

(உ) 1872 ஆம் ஆண்டு இந்திய கிறிஸ்துவ திருமணச் சட்டம்.

(ஊ) 1961 ஆம் ஆண்டு வரதட்சிணை தடுப்புச் சட்டம்.

## 04. இந்திய முத்திரைச் சட்டம் - நிர்வாகம்

சொத்து விற்பனை, பரிவர்த்தனை, அடமானம், நன்கொடை, உடைமை, உரிமை நிலவா ஏற்பாடு முதலியவை குறித்த பத்திரங்கள் மீது முத்திரைத்

[1997 மார்ச் 31

தீர்வை விதிப்பதற்கு 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) மாநில அரசுக்கு அதிகாரமளிக்கிறது. வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்பு, பதிவுத் துறைத் தலைவர் 1-12-1980-லிருந்து வருவாய் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரியாக (முத்திரைத் தாள் வருவாய்) செயல்பட்டு வருகிறார். அவர் இந்திய முத்திரைச் சட்டத்தின் மூலம் அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருவாய் வசூலிக்கும் பொறுப்பிலும் இருந்து வருகிறார். அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை மாற்றம் செய்வது குறித்த ஆவணங்களின் பேரில் முத்திரைத்தாள் தீர்வை விதிப்பதன் மூலம் கணிசமான வருவாய் கிடைக்கிறது.

## பதிவுத் துறை வருவாய்

ஆவணங்கள் மீது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை, பத்திரப் பதிவுக் கட்டணம் மற்றும் சீட்டுகள், சங்கங்கள், கூட்டு வணிக நிறுவனங்கள், திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்காக விதிக்கப்படும் கட்டணங்கள் ஆகியவை இத்துறைக்கு வருவாய் தரும் முக்கிய இனங்களாகும். ஆவணத்தில் குறிப்பிடப்படும் சொத்தின் விலைமதிப்பின் மீது முத்திரைத் தீர்வை விதிப்பதை மாற்றி ஆவணச் சொத்தின் சந்தை மதிப்பின் மீது தீர்வை விதிக்க வகை செய்து 1968 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் திருத்தப்பட்டது. அதன் அடிப்படையில் சொத்துக்களின் நியாயமான சந்தை மதிப்பைக் குறிக்கும் வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் சார்பதிவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புகள் கால முறையாக அவ்வப்போது திருத்தியமைக்கப்படுகின்றன. இதனால் தீர்வை ஏய்ப்பு செய்யும் நோக்குடன் ஆவணங்களில் சொத்து மதிப்பு குறைத்து எழுதப்படுவது தடுக்கப்படுவதுடன் அரசின் முத்திரைத் தீர்வை வருவாய் இழப்பும் தடுக்கப்படுகிறது.

பத்திரப் பதிவுக் கட்டணம், முத்திரைத்தாள் தீர்வை ஆகியவற்றின் மூலம் 1968-69-ல் ரூ.40 கோடியாக இருந்த வருவாயானது இத்துறையின் தீவிரமான மேற்பார்வையினாலும், விழிப்புணர்வினாலும் 1995-96-ஆம் நிதியாண்டில் ரூ.748.50 கோடி அளவு வசூலிக்கப்பட்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டில் 28-2-1997 முடிய இத்துறையின் வருவாய் ரூ. 584.80 கோடியை எட்டியுள்ளது. அதே காலத்தில் 11,49,536 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இலாப நோக்கின்றி கட்டணம் வசூலிக்காமல் ஏழை மக்களுக்கு இலவச சேவை செய்யும் கல்வி, சமூக மற்றும் அற



1997 மார்ச் 31]

நிறுவனங்கள் வாங்கிய சொத்துக்களின் மீதும், பெரும் தொழில்கள் தொடங்கவும், தொழிற்பேட்டைகள் அமைக்கவும் நிலங்கள் வாங்கும்போதும், நடப்பு நிதியாண்டில் 31-1-1997 முடிய ரூ.8.32 கோடி அளவிற்கு முத்திரைத் தீர்வை விலக்களிக்கப்பட்டுள்ளது.

## முத்திரை வருவாய்

| வருடம் | பத்திரப் பதிவு அதிகாரிகள் மூலம். (ஆவணப் பதிவின் மூலம்.) | முத்திரைத்தாள்களின் கண்காணிப்பாளர் மூலம் விற்பனை (நீதிசாரா முத்திரைத் தாள்கள் அல்லாததின் மூலம்) |
|---|---|---|
| | (ரூபாய் கோடிகளில்) | |
| 1992-93 | 367.81 | 31.75 |
| 1993-94 | 411.98 | 29.90 |
| 1994-95 | 586.34 | 29.11 |
| 1995-96 | 748.34 | 30.93 |
| 1996-97 | 584.80 (பிப்ரவரி '97 வரை) | 39.64 (ஜனவரி '97 வரை) |

## இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ)-ன் கீழ் வரும் இனங்கள்

முத்திரைச் சட்டத்தின்படி பத்திரங்களைப் பதிய வருபவர்கள் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் உண்மையான சந்தை மதிப்பைக் குறிப்பிட வேண்டும். சொத்தின் சரியான சந்தை மதிப்பு பத்திரத்தின் உண்மையில் குறிக்கப்பட்டுள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள வழிகாட்டு மதிப்புப் பதிவேட்டை வைத்து சரி பார்க்கப்படுகிறது. பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள மதிப்பிற்கும் வழிகாட்டிப் பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள மதிப்பிற்கும் இடையே வேறுபாடு ஏதுமிருந்து, பத்திரம் பதிய வருபவர் கூடுதல் முத்திரைத் தீர்வையை செலுத்த மறுத்தால், இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ)-ன் கீழ், அச்சொத்தின் உண்மையான சந்தை மதிப்பை நிர்மாணிப்பதற்கு பத்திரப் பதிவு அதிகாரி, அந்தப் பத்திரத்தை தனித்துணை ஆட்சியர் (முத்திரை)-க்கு அனுப்பி

[1997 மார்ச் 31

வைப்பார். பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தின் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்து, அதன் மீது செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வையை தனித்துணை ஆட்சியர் நிர்ணயிக்கிறார். அவ்வாறு சட்டப்பிரிவு 47(ஏ)-ன்கீழ் தனித் துணை ஆட்சியர் (முத்திரை) மதிப்பு நிர்ணயம் செய்து வெளியிடும் ஆணையால் பாதிக்கப்பட்டவர்கள் துணை நீதிமன்றங்களில் முறையீடு செய்யலாம். இந்த மேல்முறையீடுகளை பதிவுத்துறைத் தலைவர் நக்கச் செய்து கொள்ள வகை செய்யும் முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ)-க்கான சட்டத் திருத்தம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

கீழ்கண்ட இடங்களில் 11 தனித் துணை ஆட்சியர்கள் (முத்திரை) செயல்படுகின்றனர்.

1. சென்னை
2. வேலூர்
3. கடலூர்
4. தஞ்சாவூர்
5. திருச்சிராப்பள்ளி
6. சேலம்
7. கோயம்புத்தூர்
8. மதுரை
9. தூத்துக்குடி
10. விருதுநகர்
11. திருநெல்வேலி

மேற்கண்ட சிறப்பு அலுவலகங்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட மாவட்டங்கள்தோறும் சுற்றுப்பயணம் செய்து சொத்துக்களைப் பார்வையிட்டு செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை போதுமானதா அல்லது குறைவானதா என்பதைக் கண்டறிய சொத்துக்களின் மதிப்பை நிர்ணயம் செய்கின்றனர். இந்த சிறப்பு அலுவலர்கள் 1995-96 ஆம் ஆண்டில் முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ)-ன் கீழ் 59,012 ஆவணங்களை முடித்து டிசம்பர் 1996 முடிய ரூ.20.65 கோடி வசூல் செய்துள்ளனர்.

முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ)-ன் கீழ் 1996 அக்டோபர் வரை சொத்து மதிப்பு நிர்ணயம் செய்ய அனுப்பப்பட்ட 68,818 ஆவணங்களில் சுமார் ரூ.157.86 கோடி வருவாய் முடங்கியுள்ளது என்று பதிவுத்துறை தலைவர் தெரிவித்துள்ளார். இரண்டு அல்லது மூன்று மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் உள்ள சொத்துக்களை விரைந்து கள ஆய்வு செய்து, முடங்கிக் கிடக்கும் அரசு வருவாயை விரைந்து வசூலிப்பதற்கும் ஆவணங்களை விரைவில் திரும்ப வழங்குவதற்கும் வசதியாக, தனித்துணை



1997 மார்ச் 31]

ஆட்சியர் (முத்திரை)களுக்கு வாகனங்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேலும் முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ)-ன் கீழ் அதிக அளவில் ஆவணங்கள் தேங்கிக் கிடக்கும் பகுதிகளான சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தற்போதுள்ள தனித்துணை ஆட்சியர்களுடன் கூடுதலாக ஒரு தனித்துணை ஆட்சி என்ற வகையில் 4 தனித்துணை ஆட்சியர் (முத்திரை) பணியிடங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், வருவாய் மீட்புச் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படக் கூடிய நிலுவையில் இருக்கும் ரூ.33.84 கோடியை உடனடியாக வசூல் செய்ய, 11 தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அலுவலகங்களில் 11 தனி வருவாய் ஆய்வாளர்களை நியமிக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

## முத்திரைத் தீர்வை மீதான மேல்வரி:

விற்பனை, பரிவர்த்தனை, நன்கொடை, உடைமை உரிமையுடன் கூடிய அடமானம், அதன் மாற்றம், நிலையான குத்தகை தொடர்பான ஆவணங்களைப் பொறுத்த வரையில் முத்திரைத் தாள் தீர்வையுடன் 5 சதவீதம் மேல்வரி கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளைப் பொறுத்தவரை மேல்வரியாக வசூலிக்கப்படும் தொகையில் 10 சதவீதத் தொகையை வசூல் கட்டணமாக பதிவுத்துறை எடுத்துக் கொண்டு, எஞ்சியுள்ள 90 சதவீதத் தொகை மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் வழங்கப்படுகிறது. அதேபோல் நகரப் பஞ்சாயத்துக்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கு சம்பந்தப்பட்ட மேல்வரி வசூலில் 3 சதவீதம் இத்துறை வசூல் கட்டணமாக எடுத்துக் கொள்கிறது. மீதமுள்ள 97 சதவீதம், மேல்வரி சம்பந்தப்பட்ட நகர பஞ்சாயத்துக்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் வழங்கப்படுகிறது.

## வீட்டு வசதிக் கடன்கள் மறு ஈட்டு ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை குறைப்பு:

தமிழ்நாட்டில் பொது மக்களுக்கு வீட்டுவசதிக் கடன்கள் தாராளமாகக் கிடைக்கச் செய்யும் நோக்குடன், வீட்டுவசதிக் கடன் நிதி நிறுவனங்கள் தாங்கள் பொது மக்களுக்கு வழங்கிய வீட்டுவசதிக் கடன்களை ஒருங்கிணைத்து அந்த மொத்தக் கடன்கள் மதிப்பை மறுநிதி

நிறுவனத்திற்கு தங்களுக்குத் தேவையான நிதியைப் பெற, எழுதிக் கொடுக்கும் மறுசீட்டு அல்லது ஒற்று ஆவணங்களின் மீது சாதாரணமாக விதிக்கப்படக் கூடிய 13 சதவீத முத்திரைத் தீர்வையை 0.1 சதவீதமாகக் குறைத்து நிர்ணயித்து அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

### ஏழை மக்கள் வீட்டுமனைகள் வாங்கிப் பதிவதற்கு முத்திரைத் தீர்வை முழு விலக்கு:

ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.1,000/-க்குக் குறைவான மதிப்புள்ள வீட்டுமனைகள் வாங்கும் ஆவணப் பதிவிற்கு முத்திரைத் தீர்வை முழு விலக்கு அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

### மற்ற மாநிலப் பதிவகங்களில் தமிழகச் சொத்து ஆவணங்கள் பதிவு செய்யப்படுவதைத் தடுக்கப் பதிவுச் சட்டத்திருத்தம்:

பதிவுச் சட்டப் பிரிவு 28-ல் உள்ள உரிமையைப் பயன்படுத்திக் கொண்டு அதிக அளவு முத்திரைத் தீர்வை செலுத்துவதிலிருந்து தப்பிக்க தமிழகச் சொத்துக்கள் குறித்த விற்பனை ஆவணங்கள் பெருமளவு அண்டை மாநிலமான கேரள சார்பதிவகங்களில் பதிவு செய்யப்படுகின்றன. இதைத் தடுக்க, தமிழ்நாடு சொத்துக்கள் குறித்த விற்பனை/பரிவர்த்தனை ஆவணங்கள், தமிழ்நாட்டில் சொத்து அமைந்துள்ள பகுதியின் எல்லை உரிமை உடைய சார்பதிவகத்தில் மட்டுமே பதியப்பட வேண்டும் என்றும், அதை மீறி வேறு மாநில சார்பதிவகத்தில் பதிவு செய்தால் அது செல்லாது என்றும் சட்டத்திருத்தம் கடந்த 31-1-1997 அன்று சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஏற்புக்காக அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், பொதுக் கொள்கைக்கு எதிரான ஆவணங்களைப் பதிவு செய்வதை மறுக்க அதிகாரமளிக்கும் பதிவுச் சட்டத்திருத்தம் ஒன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஏற்புக்காக அனுப்பப்பட்டுள்ளது.

### இந்திய முத்திரைச் சட்டத்திற்கு சட்டத் திருத்தங்கள்:

தமிழகப் பத்திரப் பதிவுத்துறை அமைச்சரை ஒரு உறுப்பினராகக் கொண்ட "முத்திரைச்சட்ட சீர்திருத்தம் குறித்த மாநில நிதியமைச்சர்களின் குழு" இந்திய முத்திரைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளையும் பல்வேறு



வகை ஆவணங்கள் மீது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை விகிதங்களையும் ஆய்வு செய்து பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையைக் கொடுத்துள்ளது.

"முத்திரைத் தீர்வைச் சீர்திருத்தக் குழு" ஒன்று மாநில அரசு வணிகவரி மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் தலைமையில் நியமனம் செய்தது. முத்திரைத் தீர்வை ஏய்ப்பைத் தடுக்கவும், தீர்வை விகிதங்களைத் திருத்தியமைப்பது குறித்தும், ஆவணப் பதிவின் போது மக்கள் பயனடையும் வகையில் சேவையை நவீனப்படுத்துவது குறித்தும் ஆய்வு செய்து முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டத்திற்கு தேவையான சட்டத் திருத்தங்கள் செய்வது குறித்து பரிந்துரைக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட குழு இந்திய முத்திரைச் சட்டத்திற்குத் திருத்தங்கள் செய்வது குறித்து பல பரிந்துரைகளை செய்துள்ளது. தத்து ஆவணம், ஆணை உறுதி ஆவணம், ஒப்பந்த ஆவணம், சீட்டு ஒப்பந்த ஆவணம், நகல் ஆவணம், படி ஆவணம், பங்கு நிறுவன ஆவணம், பங்கு நிறுவனக் கலைப்பு ஆவணம், கூட்டு ஆவணம், டிரஸ்ட் ஆவணம், டிரஸ்ட் முறிவு ஆவணம், உரிமை ஆவண ஒப்படைப்பு, அடகு அல்லது ஈட்டுறுதி ஆவணம் ஆகிய ஆவணங்கள் மீது தற்போது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை மிகக் குறைந்த அளவு உள்ளதாலும், சொத்துக்களின் மதிப்பு ஆண்டுதோறும் பெருமளவு உயர்ந்து வருவதாலும், பதிவுத் துறையின் பணிச் செலவை ஈடுகட்ட வேண்டியும், இந்த கட்டணங்களை நியாயமான அளவு உயர்த்தி நிர்ணயம் செய்ய பரிந்துரைத்துள்ளது. இந்தப் பரிந்துரைகளை ஆய்வு செய்து மேற்கண்ட ஆவணங்களின் மீதான தீர்வை விகிதங்களை மாற்றியமைக்கத் தேவையான முத்திரைச் சட்டத் திருத்தங்கள் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

### அடுக்குமாடிக் குடியிருப்புகள் உரிமை மாற்று ஆவணங்களின் மீது முத்திரைத் தீர்வை விதித்தல்:

அடுக்குமாடிக் குடியிருப்புகளை அசையாச் சொத்துக்களாக பாவித்து சொத்துரிமை வழங்கவும், உரிமை மாற்றம் செய்யவும் "அடுக்குமாடிக் குடியிருப்புகள் உரிமை மாற்று ஆவணங்கள்" மீது ஒரு நியாயமான அளவு முத்திரைத் தீர்வை விதிக்கவும் வகை செய்யும் 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் அட்டவணை 1-ல் உள்ள பிரிவுக் கூறு 27(ஏ)-க்கு சட்டத்திருத்தம் கொண்டு வருவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

[1997 மார்ச் 31

## பத்திரப் பதிவுத் துறையை நவீனமாக்குதல்

பத்திரங்கள் பதிவு செய்வதில் பதிவுத்துறையில் நெடுங்காலமாக கையால் எழுதப்பட்டு பதிவு செய்யும் நடைமுறைகள் இருப்பதால், பதிவு செய்வதிலும், பத்திரங்களைத் திரும்ப அளிப்பதிலும் நீண்ட காலதாமதம் ஏற்பட்டு பொது மக்கள் இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். பத்திரப் பதிவு முறை நவீனமயமாக்கப்படாததாலும், தானியங்கி முறை புகுத்தப்படாததாலும், தமிழ்நாட்டிலுள்ள 591 சார்பதிவகங்களில் ஆண்டொன்றுக்கு சுமார் 14 லட்சம் ஆவணங்கள் பதிவு செய்யும் வேலைப் பளுவை பதிவுத்துறை சமாளிக்க இயலாத நிலையில் உள்ளது.

பத்திரப்பதிவு அலுவலகங்களின் அமைப்பு மற்றும் நடைமுறைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்து அறிக்கை அளிக்குமாறு ஆய்வு நிறுவனம் ஒன்றை அரசு நியமனம் செய்தது. பத்திரப்பதிவு அலுவலகங்களுக்கு கட்டிட வசதி, பயன்பாடுடைய அறைகலன்கள், கணினிமயமாக்குதல், பதிவு செய்யப்பட்ட ஆவணங்களைப் பாதுகாத்தல், பாதுகாக்கப்பட்ட ஆவணங்களில் இருந்து தகவல்களை எளிதில் பெறுதல், ஆவணங்களின் நகல்கள், வில்லங்கச் சான்றுகள் ஆகியவற்றை காலதாமதமின்றி வழங்குதல், முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் போன்ற சட்டங்கள் குறித்து பதிவுத்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல், பல்வேறு வகை ஆவணங்களுக்கான படிவங்களை நிர்ணயித்தல் ஆகியவை குறித்து ஆய்வு செய்து பல்வேறு பரிந்துரைகள் கொண்ட ஆய்வு அறிக்கையை மேற்கண்ட நிறுவனம் அரசுக்கு அளித்துள்ளது.

பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்தில் 27-6-1994 அன்று 3 முறைகளுடன் கூடிய ஒரு கணிப்பொறி நிறுவப்பட்டது. மைலாப்பூர் சார் பதிவகத்திலும், சென்னை பெரியமேடு மற்றும் மத்திய சென்னை இணை சார் பதிவகங்களிலும், 1983 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரையிலான 14 ஆண்டு காலத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து ஆவணங்கள் குறித்த விவரங்கள் இந்தக் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு, வில்லங்கச் சான்றுகள் உடனுக்குடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வட சென்னை மற்றும் தென் சென்னை பதிவகங்களில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் அட்டவணைகள் குறித்த விவரங்களை பதிவு செய்ய ஒவ்வொன்றும் 5 முனைகளுடைய 2 கணிப்பொறிகள் நிறுவப்படுள்ளன.



1997 மார்ச் 31]

## 1997-98 ஆம் ஆண்டுக்கான பகுதி-2 திட்டங்கள்

மாநிலத்தில் உள்ள அனைத்து சார்பதிவகங்களையும் நவீனப்படுத்தும் பதிவுத்துறைத் தலைவரின் செயற்குறிப்பை அரசு பரிசீலித்து, எல்லா பதிவகங்களையும் கணிப்பொறி மூலம் இணைக்கும் திட்டம் ஒன்றை படிப்படியாக நிறைவேற்றுவது என்று அரசு முடிவு செய்துள்ளது.

1997-98 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக சென்னை மாநகர் பகுதியிலுள்ள அனைத்துப் பதிவகங்களையும் கணிப்பொறிமூலம் ரூ. 1 கோடி செலவில் இணைக்கும் திட்டத்திற்கு அரசு ஏற்பளித்துள்ளது. இதன் மூலம் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்த அட்டவணை தயாரிப்பதும், நகல் எடுப்பதும், வில்லங்கச் சான்றுகள் வழங்குவதும், ஆவணப் பதிவு குறித்த விவரங்களை பொது மக்களுக்கு எளிதாகவும் விரைவாகவும் அளிப்பதும் சாத்தியமாகும்.

மேலும் ரூ. 15 லட்சம் செலவில் 15 ஜெராக்ஸ் இயந்திரங்கள் வாங்கவும், ரூ. 5.91 லட்சம் செலவில் பதிவுத் துறைக் கட்டிடங்களை பராமரிக்கவும், ரூ. 3.83 லட்சம் செலவில் சில பதிவகங்களில் தொலைபேசி வசதி செய்யவும் அரசு ஏற்பளித்துள்ளது.

## முத்திரைத் தாள்களின் தேவையைக் கணித்தலும், முத்திரைத் தாள்களை வழங்கலும்

தமிழ்நாடு முழுவதற்கும் அஞ்சல் சாரா முத்திரைத் தாள்கள்ன நீதித்துறை முத்திரைத்தாள்கள், நீதித்துறை சாரா முத்திரைத் தாள்களின் தேவையை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் மதிப்பீடு செய்து, அதனை நாசிக்கிலுள்ள இந்திய பாதுகாப்பு அச்சக முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கிறார். சென்னையிலுள்ள கருவூல கணக்குகள் துறை மண்டல துணை இயக்குநர், முத்திரைத்தாள் உதவி கண்காணிப்பாளர் ஒருவரின் உதவியுடன் அலுவல் முறையில் முத்திரைத்தாள் கண்காணிப்பாளராக செயல்படுகிறார். ஒவ்வொரு ஆண்டிற்கு மற்றும் காலாண்டிற்கான முத்திரைத்தாள்கள் தேவைப் பட்டியலை மாவட்ட கருவூல அதிகாரிகளும், முத்திரைத்தாள் உதவிக் கண்காணிப்பாளரும் தயாரிக்கின்றனர். அவற்றை முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைக்கிறார். வெவ்வேறு கருவூலங்களில் முத்திரைத்தாள்களின் இருப்பு நிலவரப்படியும், பொது மக்களுக்குத் தேவைப்படும் அனைத்து விதமான முக மதிப்புகளைக் கொண்ட முத்திரைத்தாள்களை வழங்கும் நோக்குடனும், பொது மக்களின் தேவை

[1997 மார்ச் 31

திட்டமொன அதிகரிக்கும் போது அத்தேவையை நிறைவு செய்யும் வகையிலும் சென்னை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைந்த முத்திரைத் தாள்கள் தேவைப் பட்டியலை தயாரிக்கிறார். குறிப்பிட்ட முக மதிப்புடைய முத்திரைத் தாள்கள் அவசரமாகத் தேவைப்படும் போதும், பற்றாக்குறை ஏற்படும் போதும், முத்திரைத் தாள்கள் இருப்பு வைத்துள்ள ஒரு மாவட்டத்திலிருந்து இருப்பு இல்லாத மற்ற மாவட்டங்களுக்குத் தேவையான முத்திரைத் தாள்களை அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தற்போது ரூ. 25,000, ரூ. 20,000, ரூ. 10,000 ரூ. 5,000 மற்றும் ரூ 20 முக மதிப்புக் கொண்ட நீதிசாரா முத்திரைத்தாள்கள் வெளியிடப்பட்டுள்ளது.

### ஃபிராங்கிங் கருவி (Franking Machine) மூலம் ஆவணங்களை முத்திரையிடுதல்

ஆவணங்களின் மீதான முத்திரைத் தீர்வையை செலுத்துவதற்கு முத்திரைத் தாள்களைப் பயன்படுத்துவதற்கு பதிலாக, வெற்றுத்தாளில் எழுதி பதிவுக்குக் கொடுக்கப்படும் ஆவணங்களின் மீது "ஃபிராங்கிங் கருவி" (Franking Machine) மூலம் தீர்வைத் தொகை வசூல் குறித்து முத்திரையிடும் முறையை அறிமுகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த முறை முதற்கட்டமாக சென்னையில் அறிமுகப்படுத்தப்படும். மற்ற இடங்களில் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

### உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள்

உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் மூலமும், கருவூலங்கள், சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றின் வாயிலாகவும், பொதுமக்களுக்குத் தேவையான நீதிமன்ற மற்றும் நீதிசாரா முத்திரைத் தாள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் தற்போது 20,000 மக்கள் தொகைக்கு ஒருவர் என்ற விகிதத்தில் 3,519 உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர். இந்த விகிதத்தை மாற்றி 10,000 மக்கள் தொகைக்கு ஒருவர் என்ற அளவில் கூடுதலாக 2,472 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமனம் செய்யப்பட முத்திரை விதிகள் திருத்தப்பட்டு, முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமனத்திற்கு மனுக்கள் கோரி செய்தித் தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. விரைவில் இந்த நியமனங்கள் செய்யப்பட்டு விடும்.



1997 மார்ச் 31]

முத்திரைத்தாள்கள் விற்பனையில் முத்திரை விதிகளில் குறிப்பிட்ட கழிவுத் தொகை விகிதம் விற்பனையாளர்களுக்கு அனுமதிக்கப்படுகிறது. தங்களின் சேவைக்கு ஈடுகட்டும் வகையிலும், முத்திரைத் தாள்கள் விற்பனையில் முறைகேடுகள் செய்வதைத் தடுக்கும் வகையிலும், முத்திரைத்தாள் விற்பனைக்கு நியாயமான விகிதம் கழிவுத் தொகை அளிக்க வேண்டும் என தமிழ்நாடு முத்திரைத்தாள் விற்பனையாளர் சங்கம் அரசுக்கு கோரிக்கை விடுவித்துள்ளது. அரசு இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து வருகிறது.

முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் செயல்பாட்டினை மாவட்டப் பதிவாளர்களும், பதிவுத்துறை உயர் அதிகாரிகளும் மேற்பார்வை செய்து முறைப்படுத்துகின்றனர்.

### சார்பதிவகங்களில் முத்திரைத்தாள் விற்பனை

முத்திரைத்தாள்கள் மற்றும் சிறப்பு ஒட்டு வில்லைகள் விற்கும் முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் சார் பதிவாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். சிறப்பு ஒட்டு முத்திரை வில்லைகளில் ஒப்பமிடும் அதிகாரியாகவும், முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக, இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 41-ன் கீழ் முத்திரைத் தீர்வையினை ரூ. 10,000 வரை ரொக்கமாகப் பெற்றிடவும் சார்பதிவாளர்கள் அதிகாரம் பெற்றுள்ளனர்.

மேலும் மாவட்டப் பதிவாளர் சார்பதிவாளராகச் செயல்படும் இடங்களில் உச்சவரம்பு இல்லாத வகையில், முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக ரொக்கம் பெற்று ஆவணத்தில் தீர்வை செலுத்தியதற்கான சான்று சேர்க்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முத்திரைத் தாள்கள் தாராளமாகக் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து பதிவு அலுவலகங்களிலும் முத்திரைத்தாள் விற்பனைக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. பொதுமக்கள் அவர்களுடைய பத்திரங்களில் முத்திரை வில்லைகள் ஒட்ட உதவும் வகையில் அனைத்து சார்பதிவகங்களிலும் சிறப்பு ஒட்டு வில்லைகள் எப்போதும் கிடைக்கிறது.

### சென்னையில் முத்திரைத்தாள் விற்பனை மையம் திறத்தல்

நீதிமன்ற முத்திரைத்தாள்கள், பத்திரப் பதிவிற்கான நீதிசாரா முத்திரைத் தாள்கள் மற்றும் முத்திரை வில்லைகள் ஆகியவை எளிதாகவும்,

216825 V2ü,31/N97 N67.282

தேவையான அளவும் இடர்பாடின்றியும் பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் நோக்குடன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் ஒரு முத்திரைத்தாள் விற்பனை மையம் ஒன்றைத் திறக்க அரசு முடிவு செய்துள்ளது.

**சென்னை உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளரால் முத்திரைத்தாள்கள் விற்பனை.**

**1995-96** *மற்றும்* **1996-97** *முத்திரைத்தாள்களின் வரவு—செலவு விவரம்.*

| கணக்குத் தலைப்பு | 1995-96 | 1996-97 (31-1-1997 வரை) |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்) | |
| *வரவு.* | | |
| 1. நீதித்துறை சாரா முத்திரைத்தாள்கள் | 50,264.58 | 40,185.73 |
| 2. நீதித்துறை சார்ந்த முத்திரைத்தாள்கள் | 3,093.30 | 2,953.42 |
| 3. உண்டியல் முத்திரைத்தாள்கள் | 118.15 | 1.59 |
| 4. ஒட்டு முத்திரை வில்லைகள் | 1,269.71 | 1,008.52 |
| 5. பல்வகை வரவு | 20,731.86 | 12,888.04 |
| பெரு மொத்த வரவுகள். | **75,477.60** | **57,037.30** |
| *கழிப்பு - திருப்பி செலுத்தியவை.* | | |
| 1. உள்ளாட்சி மன்றங்களுக்கு கொடுக்கப்படும் தொகை உட்பட நீதித்துறை சாராதவை | 22,524.06 | 14,705.87 |
| 2. நீதித்துறை சார்ந்தவை | 313.48 | 114.76 |
| மொத்தம் | 22,837.54 | 14,820.63 |



| கணக்குத் தலைப்பு | 1995-96 | 1996-97 (31-1-1997 வரை) |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்) | |
| *கட்டணங்கள்.* | | |
| 1. முத்திரைத்தாள் விற்பனையில் தள்ளுபடி | 155.21 | 114.15 |
| 2. பணியாளர் செலவு | 111.81 | 129.13 |
| 3. நாசிக் மற்றும் ஹைதராபாத்திலுள்ள முத்திரைத்தாள் அச்சகங்களுக்கு செலுத்தப்பட்ட கட்டணம் | 361.58 | 188.13 |
| 4. ஏற்ற இறக்கக் கூலி | 7.20 | 4.90 |
| மொத்த செலவுகள் | **635.80** | **436.31** |
| மொத்த வரவுகள் | **75,477.60** | **57,037.30** |
| மொத்த செலவுகளும் திருப்பி கொடுக்கப்பட்ட தொகையும் | **23,473.34** | **15,256.94** |
| நிகர வரவுகள் | **52,004.26** | **41,780.36** |

## 05. ஆவண எழுத்தர் மற்றும் நகல் எழுத்தர் உரிமங்கள்.

### நகல் எழுத்தர் உரிமம்.

இந்திய பதிவு (உண்மை நகல் கோர்வை) விதிகள் 1967-ன் படி பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஆவணத்துடன் அந்த ஆவணத்தின் நகலையும் தாக்கல் செய்ய வேண்டும். இந்த நகல் அழகாகவும், தெளிவாகவும், சரியாகவும் தயாரிக்கப்பட வேண்டும் என்பதால், "தமிழ்நாடு நகல் எழுத்தர்கள் உரிமை விதிகள் 1971", 2-4-1971-ல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டன. ஆவணங்களுக்கு தட்டச்சு நகல் எடுக்கவும் தட்டச்சர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது 19,558 நபர்கள் நகல் எழுத்தர் உரிமமும், 4,766 நபர்கள் தட்டச்சு நகல் எழுத்தர் உரிமமும் பெற்றுள்ளனர்.

[1997 மார்ச் 31

**ஆவண எழுத்தர் உரிமம்.**

ஆவணங்கள் எழுதுபவர் உரிமம் பெற்றிருக்க வேண்டும் என்பதால், 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகள், 14-4-1982-ல் அமுல்படுத்தப்பட்டன. இந்த விதிகளின்படி அரசு நடத்தும், முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டம், அவற்றின் கீழ் வகுக்கப்பட்ட விதிகள் குறித்த அறிவுத் திறன் தேர்வில் தேர்ச்சி பெற்றவர் மட்டுமே உரிமம் பெற தகுதியுடையவர் ஆவர். மாநில அளவிலான உரிமம், பதிவு மாவட்ட அளவிலான உரிமம், சார்பதிவு மாவட்ட அளவிலான உரிமம் என மூன்று வகை உரிமங்கள் வழங்கப்படுகின்றன. தற்போது 22.124 நபர்கள் ஆவணம் எழுத உரிமம் பெற்றுள்ளனர்.

28-2-1997 அன்று உள்ளவாறு ஒவ்வொரு இனத்தின் கீழ் உரிமம் பெற்றவர்களின் விவரம் பின்வருமாறு:—

| உரிமத்தின் தன்மை | ஆவண எழுத்தர் உரிமம் | நகல் எழுத்தர் உரிமம் | நகல் தட்டச்சர் உரிமம் |
|---|---|---|---|
| 1. மாநில உரிமம் ('எ'. உரிமம்) | 6,694 | 6,418 | 3,209 |
| 2. மாவட்ட உரிமம் ('பி'. உரிமம்) | 8,377 | 6,133 | 912 |
| 3. உப மாவட்ட உரிமம் ('சி'. உரிமம்) | 7,053 | 7,007 | 645 |
| கூடுதல் | **22.124** | **19,558** | **4,766** |

இதுவரை பல்வேறு வகை ஆவணங்கள் எழுத கட்டணங்கள் நிர்ணயிக்கப்படாமல் இருந்தது. இதனால் ஆவணம் எழுத அதிகமான கட்டணம் வசூலிக்கப்படுவதாக எழும் புகார்களுக்கு தீர்வு காணும் வகையில் பல்வேறு வகை ஆவணங்கள் எழுத கட்டணம் வரையறை செய்யப்பட்டுள்ளது. ஆவண எழுத்தர், நகல் எழுத்தர் உரிமங்கள் வழங்குவதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான கட்டண விகிதங்களை மாற்றியமைக்கவும் உரிமங்களை ஐந்து ஆண்டுகளுக்கு செல்லத்தக்கவாறு வழங்கிடவும் அரசு பரிசீலித்து வருகின்றது. படித்து வேலையின்றி



1997 மார்ச் 31]

இருக்கும் நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் நோக்குடன், ஆவண எழுத்தர்/நகல் எழுத்தர் உரிமத் தேர்வு வரும் ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் நடக்கவுள்ளது. இதனால் 20,000 நபர்கள் ஆவண எழுத்தர்/நகல் எழுத்தர் ஆக உரிமம் பெறுவர்.

## 06. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975 (தமிழ்நாடு சட்டம் 27/1975)

1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பாக சங்கப் பதிவுச் சட்டம் 1860 (மத்திய சட்டம் 21/1860) தமிழ்நாட்டில் அமுலில் இருந்து வந்தது. இந்தச் சட்டத்தில் உறுப்பினர் பட்டியல்கள் பராமரிக்கவும், துணை விதித் திருத்தங்கள் குறித்தும், வருடாந்திர பொதுக்குழு கூட்டுதல் குறித்தும், இது போன்ற முக்கியமான வேறு பல இனங்கள் குறித்தும் சட்ட விதிமுறைகள் ஏதும் இல்லாததால் அந்தச் சட்டத்தை அமல்படுத்துவதில் குறைபாடுகள் தென்பட்டன. இந்தக் குறைகளைப் போக்கும் விதமாக "தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975" என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. கலை இலக்கியம், அறிவியல், சமயம் மற்றும் தமிழக அரசால் சட்டம் இயற்றத்தக்க வேறெந்தப் பொருள் பற்றியும் சங்கம் அமைத்து பதிவு செய்து கொள்ள இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

பதிவுத்துறைத் தலைவர் மற்றும் அனைத்து நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் "சங்கங்கள் பதிவாளர்" ஆவர். பதிவுத்துறைத் தலைவருக்கு இச்சட்டத்தின் கீழான பணிகளை கண்காணிக்கும் அதிகாரமும், பிரிவு 44 (5) மற்றும் 45 (1)-ன் கீழான மேல்முறையீடுகளை தீர்வு செய்யும் அதிகாரம் உள்ளன.

இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முக்கியமான அதிகாரங்கள், அதாவது, சங்கம் பதிவு செய்யப்படுதல், ஆவணங்கள் கோர்வைக்கு ஏற்கப்படுதல், ஆய்வு செய்யப்படுதல், செயல்படாத சங்கங்கள் பதிவு நீக்கம் செய்யப்படுதல், கலைப்பு நடவடிக்கை எடுக்கப்படுதல் போன்ற அதிகாரங்கள் மாவட்டப் பதிவாளருக்கு உள்ளன. இச்சட்டப் பிரிவுகள் மற்றும் விதிகளிலிருந்து முழுமையாகவோ அல்லது குறிப்பிட்டோ விலக்களிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது.

தற்போது பிரிவு 54-ன் கீழ் அரசு காலதாமதமாக சங்கத்தின் ஆவணங்களை கோர்வைக்கு தாக்கல் செய்வதை அறிவிக்கையின் மூலம் விலக்களிப்பதைத் தவிர்த்து, இத்தகைய காலதாமதங்களை மாவட்டப்

[1997 மார்ச் 31

பதிவாளர்களே ஏற்று ஆணையிட பிரிவு 49-க்கு திருத்தம் செய்திட பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் 28-2-1997 முடிய 61,056 சங்கங்கள் செயலபட்டு வருகின்றன. அவைகளின் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| கல்விச் சங்கங்கள் | 4,475 |
| மருத்துவ நலச் சங்கங்கள் | 884 |
| இதர அறக்கட்டளைகள் | 3,709 |
| மகளிர் சங்கங்கள் | 16,722 |
| இளைஞர் சங்கங்கள் | 8,812 |
| நலச் சங்கங்கள் | 13,410 |
| விளையாட்டுச் சங்கங்கள் | 3,037 |
| பொழுதுபோக்கு விளையாட்டுச் சங்கங்கள் | 1,380 |
| சமயச் சங்கங்கள் | 3,170 |
| அடுக்குமாடிக் கட்டிட உரிமையாளர் சங்கங்கள் | 1,993 |
| சாதிச் சங்கங்கள் | 3,464 |
| மொத்தம் | **61,056** |

இவைகளில், 956 சங்கங்கள் அயல்நாட்டு உதவிகளையும், 2,683 சங்கங்கள் அரசின் உதவியையும் பெற்று வருகின்றன.

### 07. சீட்டு நிதிகள் சட்டம், 1982 (மைய சட்டம் 40/1982):

1982 ஆம் ஆண்டு மையச் சீட்டு நிதிச் சட்டம் 13-4-1984 அன்று முதல் நடைமுறைக்கு வந்தது. அச்சட்டத்தின்கீழ் 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டுநிதி விதிகள் வரையறுக்கப்பட்டன. பதிவுத்துறைத் தலைவர், சீட்டுப் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கூடுதல் பதிவுத்துறைத் தலைவர் நிலையில் ஒரு கூடுதல் சீட்டுப் பதிவாளரும், மாவட்டப் பதிவாளர் நிலையில் ஒரு நேர்முக உதவியாளரும் (சீட்டுகள்) சீட்டு நிதிப் பணிகளில் உதவி புரிகின்றனர்.



1997 மார்ச் 31]

துணைத் தலைவர், மாவட்டப் பதிவாளர், சார்பதிவாளர், சீட்டுநிதிச்சட்டத்தின்கீழ் முறையே இணைச் சீட்டுப் பதிவாளர், துணை சீட்டுப் பதிவாளர் மற்றும் உதவி சீட்டுப் பதிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பதிவு மாவட்டங்களிலும் அவரவர் எல்லைக்குட்பட்டு 47 சீட்டு ஆய்வாளர்கள் பணிபுரிகிறார்கள். சீட்டுகள் துவங்க அல்லது நடக்கத் தேவையான முன் அனுமதியை துணை சீட்டு பதிவாளர்கள் வழங்குகின்றனர். சீட்டுத் தொழில் சம்பந்தப்பட்ட தகராறுகளைத் தீர்த்திட மாவட்டப் பதிவாளர்கள் நடுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். கோயம்புத்தூர் மற்றும் சென்னையில் சீட்டுநிதிச் சட்டத்தின் கீழான வழக்குகள் அதிகமிருப்பதால் அரசு இவ்விடங்களில் மாவட்டப் பதிவாளர் நிலையில் இரு நடுவர்களை நியமித்துள்ளது. வட சென்னை மற்றும் தென் சென்னை சீட்டு நடுவர்கள் 1-6-1985 முதல் பணிபுரிந்து வருகின்றனர். 31-12-1996 முடிய நடுவர் வழக்குகள் 1,972 கோர்வை செய்ததில் 1,342 வழக்குகள் இவர்களால் முடிக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் சீட்டு நடுவர் அலுவலகம் நடப்பு ஆண்டில் செயல்படத் தொடங்கும். மத்திய சென்னை பதிவு மாவட்டத்தினை பொறுத்த 711 வழக்குகளில் 112 வழக்குகளுக்கு மத்திய சென்னை பதிவு மாவட்ட நடுவர் தீர்ப்பு வழங்கியுள்ளார். 31-12-1996 முடிய இன்னும் 599 வழக்குகளே நிலுவையில் உள்ளன.

31-12-1996 அன்று 4,225 நிறுவனங்கள் சீட்டுத் தொழில் புரிகின்றன. இவைகள் 37,598 சீட்டுகள் நடத்துகின்றன. சீட்டு நிறுவனங்களால் செலுத்தப்பட்டு பதிவாளர்கள் வைத்திருக்கும் வைப்பீட்டுத் தொகை 31-12-1996 முடிய ரூ.318.15 கோடி ஆகும்.

**சீட்டு விழிப்புக் குழு:**

பதிவு செய்யாமல் சீட்டு நடத்துதல் மற்றும் அதன் தொடர்பான முறைகேடுகளைக் கண்டுபிடிக்க கூடுதல் சீட்டுப் பதிவாளர் தலைமையில் ஒரு சீட்டு விழிப்புக் குழு செயல்படுகிறது. 31-12-1996 வரை 91 பதிவுறா சீட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகளின் மதிப்பு ரூ.36.48 லட்சம். இவைகள் பதிவுறாமையால் அரசுக்கு ரூ.41,485/- வருவாய் இழப்பு நேர்ந்துள்ளது. பொது மக்களிடம் இருந்து அவ்வப்போது பெறப்படும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. மண்டல அளவில் துணை பதிவுத்துறைத் தலைவர் தலைமையில் விழிப்புக் குழு செயல்படுகிறது.

**08. தமிழ்நாடு சீட்டுக் கழகம்:**

அரசின் கொள்கை முடிவின்படி அரசாணை எண் 305, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள்: 2-5-1989-ன்படி தமிழ்நாடு சீட்டுக் கழகம் கலைக்கப்பட ஆணையிடப்பட்டது. கழகத்திற்கு வரவேண்டிய ரூ.2.79 கோடியில் 31-12-1996 வரை ரூ.2.57 கோடி வசூலிக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள ரூ.22.64 லட்சத்தை வசூலிக்க சீட்டு நடுவர் நீதிமன்றத்தில் 328 வழக்குகள் கோர்வை செய்யப்பட்டு சீட்டு நடுவர்களிடம் நிலுவையில் உள்ளன. 30 வழக்குகள் சென்னை நகர உரிமையியல் நீதிமன்றத்தில் நிறைவேற்றலுக்காக நிலுவையில் இருந்து வருகின்றன.

**09. இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம், 1932:**

இந்திய கூட்டு வணிகச் சட்டத்தில் மாவட்டப் பதிவாளர்கள் அனைவரும் பதிவாளர்கள் ஆவர். இச்சட்டத்தின்கீழ் படிவம் 1-ல் அறிக்கை தாக்கல் செய்து கூட்டு வணிக நிறுவனம் பதிவு செய்யப்படலாம். நிறுவனத்தில் நிலவும் எவ்வித மாற்றமும் பதிவாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். இந்தச் சட்டத்தின்கீழ் பதியப்படும் நிறுவனங்கள் பதிவு செய்த பிறகு, தொடர்ந்து செயல்பட்டு வருவது குறித்து எவ்வித விவரங்களையும் அரசுக்குத் தெரிவிப்பதில்லை. இந்நிலையினைத் தவிர்க்கும் பொருட்டும், எத்தனை கூட்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன என அறியவும், அவைகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் சரிதானா என்பதைக் கண்காணிக்கவும், உதவி புரியும் வகையில் 1932 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டு வணிக நிறுவனம் (கூட்டு வணிக நிறுவனங்கள் பதிவு) விதிகளுக்குத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 28-2-1997 முடிய தமிழகத்தில் 3,10,110 பதிவு செய்யப்பட்ட கூட்டு வணிக நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நிறுவனமும், ஒவ்வொரு ஆண்டும் ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்யவும், அவ்வாறு ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்யாத நிறுவனங்களின் பெயர்களை பதிவேட்டிலிருந்து நீக்கவும் இச்சட்டத்துக்கு திருத்தம் செய்வது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.



## இணைப்பு 2

*(402-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**மானியக் கோரிக்கை எண் 47—ஊரகத் தொழில்கள்**

**மானியக் கோரிக்கை எண் 60—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98**

### 1. ஊரக மற்றும் சிறு தொழில்கள்

**முன்னுரை:**

ஊரக மற்றும் பின்தங்கிய பகுதிகளில் அதிக அளவில் பயன்தரக்கூடிய வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதுடன், அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவது என்ற அரசின் இரட்டைக் கொள்கைகளை எய்திடுவதற்கு தமிழ்நாடு அரசு, சிறுதொழில் பிரிவுகளை அங்கீகரித்துள்ளது. சிறுதொழில்கள் குறைந்த முதலீட்டில் அதிகபட்ச வேலைவாய்ப்பு அளிப்பதைக் கருத்தில் கொண்டு, ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு தொழில் முனைவோர் நிருவாகப் பயிற்சி அளிப்பதற்கு அரசு தலையாய முன்னுரிமை வழங்கியுள்ளது. சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் பிரிவுகளில் ஊரக மற்றும் சிறு நகர்புற முனைவோர்களால் எடுக்கப்படும் தொழில் முயற்சிகளுக்கு ஏற்றவாறு பல்வேறு உதவிகளும், சலுகைகளும் வழங்கும் வகையில், இந்த அரசின் கொள்கை அமைந்துள்ளது.

நமது நாட்டின் மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் கிராமங்களில் வசிக்கின்றனர். அவர்களில் பெரும்பான்மையினர் இன்னமும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளனர். இவ்வாறான நம் நாட்டிற்கு தொழில் வளர்ச்சியானது, மிக அவசியமாகிறது. ஊரகப் பகுதிகளில், வேலைவாய்ப்பினை பெருக்குவது மற்றும் அப்பகுதிகளில் கிடைக்கும் இயற்கை வளம், மற்றும் மனித ஆற்றலை உற்பத்தி நோக்கினை எய்திடுவதற்காக அதிகபட்சம் பயன்படுத்துவது, ஆகிய இரட்டைக் குறிக்கோள்களை எய்திடுவதே தொழில் வளர்ச்சியின் நோக்கமாகும். இவ்வாறு சிறுதொழில் மற்றும் குறுந்தொழில்களுக்குரிய சேவை மற்றும் வணிக வளர்ச்சியினை அதிகப்படுத்தும் ஒரு தெளிவான கொள்கையை தனது உந்து சக்தியாக தமிழ்நாடு அரசு கொண்டுள்ளது.

இளைஞர்கள், மாத வருவாய் பெறும் வேலையினை நம்பி இராமல், கௌரவமாக வாழ்வதற்கு, சிறுதொழில்களை சொந்தமாக அமைத்துக்

[1997 மார்ச் 31

கொள்வதற்கு ஏற்றவாறு, அவர்களை ஊக்கப்படுத்துவது, நமது தொழில் கொள்கையின் முக்கிய கூறுகளில் ஒன்றாகும். இளைஞர்கள் பெருமளவில் சொந்தமாக, சிறிய மற்றும் குறுந்தொழில்களைத் துவக்க முன்வருகின்றபொழுது. ஊரகப் பகுதிகளிலுள்ள வேலைவாய்ப்பு அற்றவர் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கு வகை செய்யும். மேலும், தொழில் முனைவோர் பயிற்சித் திட்டங்களுக்கு இது ஒரு திறவுகோலாக அமையும். இதுபோன்ற சுய உதவி அணுகுமுறைக்கு, அரசு மிகப் பெரிய அளவில் முக்கியத்துவம் அளித்துள்ளது. முதன்முதலாக, ஒரு உறுதியான முயற்சியுடன் கிண்டியில், தொழில் முனைவோரியல் பயிற்சி நிலையம் அமைப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

சிறு, நடுத்தர மற்றும் குடிசைத் தொழில்கள் மூலம் ஊரகத் தொழில் மயமாக்கத்தினை எய்திடுவதற்கு பல்வேறு அரசுத் துறைகள் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றன. அவற்றின் பணிகள் கீழே கூறப்பட்டுள்ளன.

## அட்டவணை 1(அ)

**ஊரக மற்றும் சிறு தொழில்களுக்குரிய வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு மானியக் கோரிக்கை எண் 47**

(ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்புகள் | 1996-97 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 1996-97 ஆம் ஆண்டின் திருத்தப் பட்ட வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 1997-98 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 2059 பொதுப் பணிகள் | 8,20 | 8,20 | 10,75 |
| 2551 மலைப்பகுதி | 1 | 1 | 1 |
| 2851 கிராமம் மற்றும் சிறு தொழில்கள் | 27,50,73 | 27,86,17 | 24,47,92 |
| 2852 தொழில்கள் | 3,44,65 | 3,53,00 | 3,68,53 |
| 2885 கனிமங்கள் மற்றும் தொழில்களின் மீதான இதர முதலீடுகள் | 45,25,15 | 64,25,06 | 48,23,78 |
| மொத்தம் | 76,28,74 | 95,72,44 | 76,50,99 |



1997 மார்ச் 31]

## அட்டவணை 1(ஆ)

**ஊரக மற்றும் சிறு தொழில்களுக்குரிய வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு மானியக் கோரிக்கை எண் 60**

(ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்புகள் | 1996-97 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 1996-97 ஆம் ஆண்டின் திருத்தப் பட்ட வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 1997-98 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 4425 மூலதன முதலீடு | 1,83,29 | 1,83,26 | 6 |
| 4551 மலைப் பகுதிகளின் மூலதன முதலீடு | 2 | 2 | 2 |
| 4851 கிராமம் மற்றும் சிறுதொழில்களின் மீதான முதலீடுகள் | 4,75 | 67,96 | 9 |
| மொத்தம் | 1,88,06 | 2,51,24 | 17 |

**1997-98 ஆம் ஆண்டிற்குரிய பகுதி 2 திட்டங்கள்**

| சிறு தொழில்கள் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 1. விருத்தாசலத்திலுள்ள பீங்கான் சேவை மையத்திற்கென இயந்திரமும் சாதனமும் வாங்குவது. | 10.25 |
| 2. காக்களூர் மத்திய மின் பரிசோதனை ஆய்வுக் கூடத்தை நவீனமயமாக்குதல். | 10.00 |
| 3. சென்னை தொழிற் கூட்டுறவு பகுப்பாய்வு கூடத்திற்கு அரசு பங்குத் தொகை வழங்குதல். | 3.00 |
| 4. தொழில் வணிகத் துறை தனி அலுவலர்/இணை இயக்குனருக்கு குடியிருப்பு, தொலைபேசிக்கு வகை செய்தல். | 0.09 |

| | |
|---|---|
| 5. தொழில் முனைவோர்களுக்காக, பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்ட மையம் அமைப்பது. | 25.00 |
| 6. புதிதாக ஏற்படுத்தப்பட்ட 9 மாவட்ட தொழில் மையங்களில் அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தல். | 17.40 |
| 7. புதிய மூன்று மாவட்டத் தொழில் மையங்களுக்கென மோட்டார் வாகனங்கள் வாங்கிக் கொடுத்தல். | 10.80 |
| 8. சிட்கோ நிறுவனத்தில் கொட்டகைகள்/மனைகள் மூலம் அடிப்படை வசதி மேம்பாட்டிற்கு மாநில அரசு அளிக்கும் பங்குத் தொகை. | 75.00 |
| 9. தொழில் முனைவோர்களுக்கு எளிய கடன்களை வழங்க தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு மாநில அரசு பங்குத் தொகை அளித்தல். | 50.00 |
| மொத்தம் | **201.54** |

## 2. தொழில் வணிக இயக்ககம்

தொழில் வணிக இயக்ககம், பொதுவாக தொழில்களின் மேம்பாட்டிற்காகவும், குறிப்பாக சிறு தொழில்களின் வளர்ச்சிக்காகவும் பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வரும் முதன்மை கள அமைப்பாக திகழ்கிறது. கடந்த காலங்களில், மூலப்பொருட்களின் பற்றாக்குறை உள்ளபோது அவற்றை வழங்குவது மற்றும் உரிமங்கள் அனுமதிப்பது ஆகியவற்றை சட்ட முறைப்படி அமுல்படுத்தி வந்தது. தற்போது இந்த இயக்ககத்தின் நடவடிக்கைகள் வளர்ச்சி நோக்கோடு அமைந்துள்ளன. துறைத் தலைவரின் நடைமுறை அதிகாரங்களில் பெரும்பாலானவை மாவட்டத் தொழில் மையங்களின் பொது மேலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தொழில் துவங்குவதற்கு தேவையான பல்வேறு அனுமதிகளை வழங்குவதற்குக் காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிறு தொழில் நிறுவனம் அமைப்போருக்கு உறுதுணை அளிக்கும் வகையில், மாவட்டத் தொழில் மையங்களின் செயல்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திலும் வழிகாட்டும் சேவைப் பிரிவு, 1996-97 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



### 2.1 தொழில் வணிக இயக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் பின்வருமாறு:

1. தகவல் வங்கி, தகவல் மையம் மற்றும் மாவட்டத் தொழில் மையங்களின் கீழுள்ள தொழில் நுட்பத் தகவல் நிலையங்கள் மூலமாக தொழில் முனைவோரியல் வழிகாட்டுவது.

2. சிறுதொழில்கள், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வது மற்றும் இயங்கிவரும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்துவது.

3. மூலப்பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் கிடைத்தற்கரிய மூலப்பொருட்களை இறக்குமதி செய்து கொள்ள உதவி செய்வது.

4. இரசாயனம், உலோகம், உலோகப் பொருட்கள், மின்சாதனம், மின்னணுப் பொருட்கள் போன்ற பல்வேறு பொருட்களுக்குப் பரிசோதனை வசதிகளைச் செய்து தருவது.

5. வீட்டு உபயோக மின்சாதனங்களுக்குரிய தரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவது.

6. பிரதமரின் "ரோஜ்கார் யோசனா" என்ற மைய அரசின் திட்டத்தின்கீழ் படித்து வேலையற்ற இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினை செயலாக்குவது.

7. கருத்தரங்குகள் மற்றும் தகவல் கூட்டங்கள் நடத்துவதன் மூலம் அரசின் பல்வேறு கொள்கைகள் மற்றும் திட்டங்கள், சலுகைகள் ஆகியவற்றை மக்களிடையே பரப்பி தொழில் ஆர்வத்தை ஏற்படுத்துவது.

8. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்ட நிகழ்ச்சிகளை நடத்துவது.

9. மாநில மூலதன உதவி, ஜெனரேட்டர் உதவித் தொகை, மின் கட்டணச் சலுகை, வட்டியில்லா விற்பனை வரி தள்ளிவைப்பு/தள்ளுபடி, நலிவுற்ற தொழில் நிலையங்களுக்கு துவக்ககால உதவித் தொகை போன்ற பல்வேறு உதவித் தொகைகளை ஒப்புதலளிப்பது மற்றும் வழங்குவது.

10. ஏற்றுமதி மேம்பாடு.

11. தொழில்நுட்ப பொருளாதாரப் புலனாய்வுப்பணி மேற்கொள்வது.

12. தேவையான அடிப்படை வசதிகளுடன் கூடிய மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள் அமைப்பது.

13. தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டியாக உதவி புரிவது.

14. மாதிரிக் கணக்கெடுப்பு மற்றும் ஒருங்கிணைந்த புள்ளி விவர ஆய்வுகள் மேற்கொள்வது.

15. குடிசை மற்றும் கைவினைத் தொழில்களில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வது.

16. கருவி மற்றும் அச்சு வடிவமைப்பு போன்ற எளிய பொறியியல் தொழில்களில் பயிற்சி வசதிகள் அளிப்பது.

17. நலிவுற்ற சிறுதொழில் நிலையங்களுக்கு உதவி.

## 2.2 பிரதமரின் ரோஜ்கார் யோசனாத் திட்டம்.

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கென "பிரதமரின் ரோஜ்கார் யோசனா" என்றழைக்கப்படும் ஒரு திட்டத்தை இந்திய அரசு 2-10-1993 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. (இத்திட்டம் 2-10-1993-இல் அமுலுக்கு வந்துள்ளது). ஊரகத் தொழில் மயமாக்குவது மற்றும் படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு வருவாய் அளிப்பது ஆகியவற்றை எய்திடுவதற்கு தொழில்கள், சேவை மற்றும் வர்த்தகத் துறைகளில் சுயவேலைவாய்ப்பை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு குறிப்பாக தொழில் முனைவோர்கள் பயிற்சி மற்றும் திட்டத் தொகுப்புகள் தயாரிப்பதற்கு அரசு சாரா அமைப்புகளின் உதவியும் கோரப்படுகிறது.

இத்திட்டம் 1993-94 ஆம் ஆண்டில் நகர்ப்பகுதிகளுக்கு மட்டும் பொருந்தக் கூடியதாக இருந்தது. 1994-95 முதல் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1994-95 முதல் ஏற்கனவே அமுலில் உள்ள படித்து வேலையற்ற இளைஞர்களுக்குரிய சுயவேலை வாய்ப்புத் திட்டம், பிரதமரின் ரோஜ்கார் யோசனா திட்டத்துடன் இணைக்கப்பட்டது. இதில் 18 முதல் 35 வயதுக்குட்பட்ட 10 ஆம் வகுப்பு தேறியவர்கள், அல்லது தவறியவர்கள், அல்லது ஆறு மாத தொழில் பயிற்சி முடித்தவர்கள் பயன்பெறத் தகுதியுடையவர் ஆவார்கள். இவர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 24,000-க்கு அதிகமாக இருக்கலாகாது.



இத்திட்டத்தில் ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்கு 22.5 விழுக்காடும், இதர பின்தங்கிய வகுப்பினர்களுக்கு 27 விழுக்காடும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் தனிப்பட்டவர்கள் ரூபாய் ஒரு இலட்சம் வரை உதவி பெறலாம். தகுதியுடைய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இணைந்தும் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறலாம். அப்படி கூட்டாகச் சேர்ந்த ஒவ்வொரு நபருக்கும் திட்ட மதிப்பீடு அதிகபட்சம் ஒரு இலட்சத்திற்கு மேற்படாமல் கடன் வழங்கப்படும்.

பயன்பெறுபவர் திட்ட மதிப்பில் 5 விழுக்காடு ஈட்டுத் தொகையாக செலுத்த வேண்டும். ஒவ்வொரு தொழில்முனைவோருக்கும் 15 விழுக்காடு அல்லது அதிகப்படியாக ரூ. 7,500 - அரசு மானியம் அளிக்கிறது. கடன் ஒப்பளிக்கப்பட்ட பிறகு, தொழில் முனைவோர்களுக்கு 10 முதல் 20 நாட்கள் வரை கட்டாயப் பயிற்சியளிப்பதற்கு இத்திட்டம் வழிவகுக்கிறது.

பயன்பெறுவோர் ஒவ்வொருவருக்கும் ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை பயிற்சி உதவித் தொகை, இந்திய அரசினால் அளிக்கப்படுகிறது. 1995-96 ஆம் ஆண்டில் 21,800 நபர் என நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 19,304 இனங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டிற்கு 21,800 என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 31-12-96 வரை 7,523 இனங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலரின் தலைமையில் நடைபெற்ற பிரதமரின் ரோஜ்கார் யோசனாத் திட்டத்தின் மாநில ஆய்வுக் குழுவின் முன்பு, நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை எய்திட வங்கியாளர்கள் உறுதியளித்துள்ளனர்.

## 2.3 பத்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு.

சிறுதொழில்கள் அமைப்பதின் மூலம் ஊரகப் பகுதிகளில் உரிய வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 30,000 சிறுதொழில் நிலையங்கள் ஏற்படுத்துவதெனவும், அதன் மூலம் அடுத்த ஐந்தாண்டுகளில் 1,50,000 தொழில் நிலையங்களை ஊக்குவிப்பதெனவும் அரசு அறிவித்தது. இதன் மூலம் ஊரகப் பகுதிகளில் பத்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இதற்கிணங்க, 1996-97 ஆம் ஆண்டில் (31-12-96 வரை) 22,219 சிறுதொழில்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் 1,33,744 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

[1997 மார்ச் 31

### 2.4 சிறுதொழில் குறை தீர்க்கும் குழு :

ஒருமுனைத் தீர்வுக் குழுவினை மாற்றியமைத்து வலுப்படுத்துவதென அரசு அறிவித்தது. அதனடிப்படையில் மாவட்ட அளவிலான ஒரு முனைத் தீர்வுக் குழுவும், மாவட்ட ஆலோசனைக் குழுவும், பல்வேறு துறைகளிடமிருந்து சட்ட ரீதியான அனுமதிகளை விரைவில் பெறுவதற்கு வழிவகுக்கும் வகையில் இணைக்கப்பட்டுள்ளன. இந்த புதிய குழு, "சிறுதொழில் குறை தீர்க்கும் குழு" என அழைக்கப்படுகிறது.

1996-97 ஆம் ஆண்டில் நிலுவையாக இருந்த 1,862 விண்ணப்பங்களில், 1681 விண்ணப்பங்கள், 114 ஒருமுனைத் தீர்வுக் குழு கூட்டங்களின் மூலம் தீர்வு செய்யப்பட்டன. இது 90 விழுக்காடாகும்.

### 2.5 மாவட்டத் தொழில் மையங்கள்-முதன்மைத் தகவல் அமைப்பாகச் செயல்படுதல்

புதிய தொழில் முனைவோர்கள் தாமதமின்றி குறுகிய காலத்தில் தொழில்களை அமைப்பதற்கு உதவியளிக்கும் பொருட்டு, மாவட்டத் தொழில் மையங்களில் வழிகாட்டி சேவையளிக்கும் வகையில் மாவட்டத் தொழில் மையங்கள் மாற்றியமைக்கப்படுமென அரசு அறிவித்துள்ளது. இச்சேவைப் பிரிவின் பணிகள் திட்டத் தொகுப்புகள் தேர்ந்தெடுக்கப்படுவது உள்ளிட்டதாகும். வழிகாட்டி சேவைப் பிரிவின்கீழ் அனைத்து பொது மேலாளர்கள் மண்டல இணை இயக்குநர் ஆகியோருக்கு 5,200 இனங்கள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆறு மாத காலத்தில் 440 இனங்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது.

### 2.6 தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்

படித்து வேலையற்ற மகளிர்/ஆடவர்கள், தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டு ஊக்குவிக்கும் வகையில், கிண்டியில் தொழில் முனைவோர் வளர்ச்சி மையம் ஒன்றை அமைப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

### 2.7 மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்

மகளிர் தொழில் முனைவோர்கள், குறிப்பாக, முதல் தலைமுறை மகளிர் தொழில் முனைவோர்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதில் குறிப்பாக தங்களது தொழில் நிலையங்களைத் துவக்குவதற்கு, ஈட்டுத்தொகை செலுத்த மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். இத்தொழில் முனைவோர்களுக்கு உள்ள சிரமங்களைக் களையும் பொருட்டு முதல் தலைமுறை மகளிர் தொழில் முனைவோர்களுக்கு, திட்ட மதிப்பில் 10 விழுக்காடு/அதிகபட்சம் ரூ. 50,000 ஈட்டுத் தொகையை மானியமாக வழங்குவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. இத்தொகை தவணைக் கடன் வழங்கும் நேரத்தில் நிதி நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படும்.



1997 மார்ச் 31]

### 2.8 1996-97 ஆம் ஆண்டில் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டப் பிரிவின் சாதனை

1996-97 ஆம் ஆண்டில் பின்வருகின்ற இரண்டு திட்டங்களை மகளிர் நலனுக்கென, அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

1. தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம் 1,000 மகளிர்

   திட்டத்தின் மதிப்பு - ரூ. 16 இலட்சம்

   பயிற்சி காலம் - 3 மாதங்கள்

2. தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம் 250 மகளிர்

   மின்னணுவியல், கம்ப்யூட்டர், பிளாஸ்டிக், தோல், ஆடைகள், காஸ்மொடாலஜி மற்றும் வேளாண் அடிப்படைத் தொழில்கள்.

   திட்டத்தின் மதிப்பு - ரூ. 4 இலட்சம்

   பயிற்சி காலம் - 2 மாதங்கள்

### 2.9 மூலதன மானியம் / சிறப்பு மூலதன மானியம் / கூடுதல் மூலதன மானியம் / குறைந்தழுத்த மின் கட்டணச் சலுகை / ஜெனரேட்டர் மானியம்

1996-97 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 21 கோடியில் சுமார் 4000 தொழில் நிலையங்களுக்கு உதவியளிக்கப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 29.04 கோடியில் சுமார் 5000 தொழில் நிலையங்களுக்கு மேலும் உதவியளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2.10 முத்திரை வில்லைக்கு விலக்கு அளித்தல்

அரசு ஆணை எண் 169, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 7-6-1993 மற்றும் அரசு ஆணை எண் 114, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 18-3-1996 என்பதில் புதுப்பிக்கப்பட்ட ஆணையில் முத்திரைவில்லை செலுத்துவதற்கு அளிக்கப்பட்ட விலக்கு

அரசின் மூலம் அமைக்கப்பட்ட, தொழிற்பேட்டைகளில் உள்ள தொழில் மனைகள்/தொழிற் கூடங்கள், விற்பனைக்கும் பொருந்தும் என அரசுக் கடித எண் 23520/ஜே1/95 (அரசு வணிகவரி மற்றும் அறநிலையத் துறை) நாள் 3-10-1996-இல் ஆணையிடப்பட்டுள்ளது. இச்சலுகையின் மூலம். மின்னணுத் தொழிற்பேட்டைகளில் உள்ள தொழிற்கூட ஒதுக்கீட்டாளர்கள், முத்திரை வில்லைக்கு விலக்கு அளிப்பதன் மூலம், தங்களுக்கு ஒதுக்கப்படும் மனைகளை குறைந்த விலையில் சொந்தமாக்கிக் கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.11 சிறுதொழில் பதிவு

1-4-96 முதல் 31-12-96 முடிய உள்ள சாதனைகளின் முன்னேற்ற விவரம்.

| விவரம் | 4/96 | 5/96 | 6/96 | 7/96 | 8/96 | 9/96 | 10/96 | 11/96 | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 இருபது அம்சத் திட்டம். | | | | | | | | | | |
| அம்சம் எண் 11-அ | 66 | 74 | 203 | 162 | 241 | 185 | 123 | 280 | 85 | 1419 |
| அம்சம் எண் 1-3ஆ | 279 | 600 | 1561 | 1178 | 1590 | 1253 | 1290 | 2216 | 1670 | 11637 |
| 2. சிறுதொழில் பதிவு. | | | | | | | | | | |
| நிரந்தரம்/இறுதி | 1751 | 1918 | 2748 | 2667 | 2236 | 2844 | 2707 | 2572 | 2776 | 22219 |
| தற்காலிகப்பதிவு | 3659 | 3225 | 4395 | 4707 | 4104 | 4973 | 4809 | 5474 | 6023 | 41369 |

## 2.12 பரிசுகள்

திறமை வாய்ந்த தொழில் முனைவோர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு அரசு சிறுதொழில் நிலையங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் கீழ்க்கண்ட பரிசுத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது :

அ. மாநில அளவிலான மற்றும் மாவட்ட அளவிலான பரிசுகள்.

ஆ. சிறுதொழில் துறையின்கீழ் மகளிர் தொழில் முன்னோடிகளுக்கு மாநில அளவிலான பரிசுகள்.



இ. தரமிக்க பொருள்களுக்குரிய பரிசுகள்.

ஈ. ஏற்றுமதிக்குரிய பரிசுகள்.

பரிசுக்குரிய விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

## 2.13 சிறுதொழில் நிறுவனங்களுக்கு, மற்ற நிறுவனங்களிடமிருந்து கிடைக்கவேண்டிய தொகையினை உரிய நேரத்தில் பெற்றுத் தருவதற்கு கண்காணிப்பு முறை

அரசு கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்ட மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவினை அமைத்துள்ளது :

| | | |
|---|---|---|
| 1. | செயலர், சிறுதொழில் துறை | தலைவர் |
| 2. | செயலர், நிதித் துறை | உறுப்பினர் |
| 3. | தொழில் வணிக இயக்குநர் | அமைப்பாளர் |

தொழில் துறைச் செயலர் மற்றும் சிறுதொழில் துறைச் செயலரைத் தலைவராகக் கொண்டு இதுவரை 8 கூட்டங்கள் நடத்தப்பட்டு நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

இக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் விளைவாக அரசுத் துறைகள் / அரசு நிறுவனங்கள் ரூ. 11,227 இலட்சத்திற்குரிய பட்டியல்கள் சிறுதொழில் நிலையங்களுக்கு தீர்வு செய்யப்பட்டுள்ளன.

## 2.14 நலிவுற்ற தொழில்களுக்கு உதவி

தொழில்கள், நலிவுறுவதற்கான காரணங்களை அரசு வெகுவாக அறிந்துள்ளது. இதனை முனைப்புடன் தீர்வு செய்ய வேண்டும். சிறுதொழில் துறையில் நலிவுறும் நிலைமையினை தீர்வு செய்து, அவற்றிற்கு மறுவாழ்வளிக்கும் பொருட்டு, மாநில அளவிலான குழு மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றின் மூலம் அரசினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இக்குழுக்கள் கூடி, செயல்படத்தக்கதாக உள்ள நலிவுற்ற சிறுதொழில்களின் மறுவாழ்விற்கு பின்வருகின்ற உதவிகளை அளிக்கின்றன.

1. நிலுவையிலுள்ள கடன் தொகையினை மாற்றியமைத்தல்.
2. தண்ட வட்டியினைத் தள்ளுபடி செய்தல்.

3. விற்பனை வரி தள்ளி வைப்பு.

4. சிறுதொழில் நிலையங்களுக்கு கூடுதல் கடன் உதவிகள்.

## 2.15 மின் மற்றும் மின்னணுப் பிரிவு

இந்த இயக்ககத்தின் மின் மற்றும் மின்னணுப் பிரிவானது மின் மற்றும் மின்னணுத் தொழில்களின் மேம்பாட்டிற்காக பின்வருகின்ற உதவிகளை அளிக்கிறது.

1. மின் மற்றும் மின்னணுத் தொழில்களுக்குரிய தகவல் வங்கி, தொழில் முனைவோர்களுக்கு தொழில்களை அமைப்பதற்குரிய அடிப்படைத் தகவல்கள் மற்றும் அரசின் கொள்கைகளை அளிக்கிறது.

2. மின் மற்றும் மின்னணுத் தொழில்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய 8 தொழிற்பேட்டைகளை நடத்துவது.

3. அரசு மருத்துவமனைகளிலுள்ள மின் மருத்துவ கருவிகளை செப்பனிடுதற்குரிய, மின் மருத்துவ செப்பனிடும் நிலையங்கள்.

4. வீட்டு உபயோக மின் சாதனங்களுக்குரிய தரக்கட்டுப்பாட்டு ஆணையைச் செயல்படுத்துவது.

5. திருவள்ளூருக்கு அருகில் காக்களூர், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் ஓசூர் ஆகிய இடங்களிலுள்ள பரிசோதனை நிலையங்களில் பரிசோதனை வசதிகள் அளிப்பது.

### சாதனைகள்

ரூ 32.45 இலட்சம் மதிப்பில் 6,139 மாதிரிப் பொருட்கள் பரிசோதனை செய்யப்பட்டும், மருத்துவச் சாதனங்கள் செப்பனிடப்பட்டும் உள்ளன மேலும், தொழிற்பேட்டைகளிலிருந்து வாடகை மற்றும் தவணைக் கொள்முதல் நிலுவை ஆகியவற்றில் ரூ. 45.00 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

## 2.16 இரசாயனத் தொழில்கள்

விருத்தாசலத்திலுள்ள பீங்கான் சேவை மையத்தில் ஏற்கனவே உள்ள சுரங்கச் சூளையை நவீனப்படுத்தி மாற்றியமைப்பதற்கும், தொழில் நிலையங்களின் உற்பத்திப் பொருட்களுக்கு தேவையான அளவில் வெப்பமூட்டும் வசதிகளை அளிப்பதற்கும் தமிழ்நாடு அரசு 1996-97



ஆம் ஆண்டில் இறுதி மதிப்பாக ரூ 35 இலட்சமும், 1996-97 ஆம் ஆண்டிற்கு ரூ. 14.25 இலட்சமும், பகுதி 2 திட்டத்தின்கீழ் 'பர்னர்கள்' உலைகள், 'வால்வுகள்', குழாய்கள் முதலிய வெப்பமூட்டும் சாதனங்கள் வாங்குவதற்காக ஒப்புதல் அளித்துள்ளது.

## 2.17 அரசு தொழில்நுட்பப் பயிற்சி நிலையம், கிண்டி

அனைத்திந்திய தொழில்நுட்பக் குழு தனது கடித எண் எப்.730/52/151/இ/டி 96, நாள் 4-6-1996-இல் இந்த நிலையத்தின் பின்வருகின்ற பாடமுறைக்குத் தொடர்ந்து ஒப்புதல் அளித்துள்ளது.

1. கருவிப் பொறியியல் தகுதிப் பட்டயம்.

2. அச்சு மற்றும் கருவி வடிவமைப்பு பட்டய மேற்படிப்பு.

அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமத்தின் விதிகளின்படி கருவிப் பொறியியல் தகுதிப் பட்டய பாடமுறைக்குரிய திருத்தப்பட்ட பாடத் திட்டங்கள் மற்றும் புதிய கம்ப்யூட்டர் பாடமுறையினை அறிமுகப்படுத்துவது ஆகியவற்றால் ஆய்வுக்கூட வசதிகளுடன் கம்ப்யூட்டர் முறை மாணவர்களுக்குத் தேவைப்படுகிறது. "சி.ஏ.டி. டிரெயினர்லேத்" என்பது "கேட்" (CAD) முறையின் ஓர் அங்கமாகும். எனவே சிறிய "கேட்"-காம் (CAM) மையம். இந்தத் தகுதிப் பட்டய மேற்படிப்பு மற்றும் தகுதிப் பட்டய மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதற்கு நாளது வரையிலான கம்ப்யூட்டர் அறிவு அவசியமாகும். கம்ப்யூட்டர் ஆய்வகம் மற்றும் புத்தகங்கள் வாங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## 2.18 தொழில் கூட்டுறவுகள்

*கயிறு பிரிவு.*

மாநிலத்தில் கூட்டுறவுத் துறையிலும் தனியார் துறையிலும், 85,000 டன் கொள்ளளவுத் திறன் கொண்ட 660 கயிறு உற்பத்தி நிலையங்கள் உள்ளன. உற்பத்தி செய்யப்படுகின்ற பெரும்பாலான தென்னை, நார், கயிறு தொழில் நிலையங்களில், கயிறு நூலிழை, முறுக்கும் கயிறு, தரை விரிப்பான், இரப்பர் கலந்த கயிறு மெத்தைகள், தலையணை இருக்கைகள், கம்பளங்கள் முதலியவை தயாரிப்பதற்கு மூலப்பொருள்களாக பயன்படுத்தப்படுகின்றன.

மாநிலத்தில் ரூ. 192.595 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் கூடிய 11,335 உறுப்பினர்களைக் கொண்ட 75 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. 1996-97 ஆம் ஆண்டில் நவம்பர் '96 முடிய இச்சங்கங்கள் ரூ. 486.67 இலட்சம் என்ற இலக்கிற்கு மாறாக ரூ. 543.94 இலட்சம் கயிறுப் பொருட்களை விற்பனை செய்து உள்ளன. இது சுமார் 112 விழுக்காடாகும். தமிழ்நாடு மாநில கயிறு தொழிற் கூட்டுறவு விற்பனை இணையம், சென்னை-600 034, கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு விற்பனை வசதியினை அளிக்கிறது. இக்கூட்டுறவுச் சங்கங்களை நவீனப்படுத்தி வலுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன்படி, அடுத்த மூன்று ஆண்டுகளில் செயல்படுத்துவதற்கு ரூ. 16.71 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த கயிறு வளர்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், இந்த ஆண்டில் 19 சங்கங்களுக்குரிய துணைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தினால், ரூ. 555 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் பங்காக, இத்திட்டத்தின் மதிப்பில் 25 விழுக்காடு ரூ. 138.75 இலட்சம், அரசு ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின் செயலாக்கத்தினை மேற்பார்வையிடுவதற்கு உயர்மட்ட செயலாக்கக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

கயிறு ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் ஒன்று, நிலம், இயந்திரம் மற்றும் கட்டிடம் ஆகியவற்றிற்கு ரூ. 25 இலட்சம் மொத்த மதிப்பில் தென்காசியில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்திய அரசின் ஒப்புதல் வரவேண்டியுள்ளது.

பொள்ளாச்சியில் ஒரு மண்டல அலுவலகத்தினை திறப்பதற்கு கயிறு வாரியம் இசைவு அளித்துள்ளது. இத்திட்டம் 1997-98 ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2.19 தேயிலைத் தொழில்**

1996-97 ஆம் ஆண்டில் 15 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் 93.68 இலட்சம் கிலோ மதிப்பில் தேயிலையை உற்பத்தி செய்துள்ளன. இன்கோசெர்வ் மற்றும் தேயிலை தொழிற்சாலைகள் 30-9-1996 முடிய உள்ள அரையாண்டில் ரூ. 3,296 இலட்சம் விற்பனையினை எட்டியுள்ளது. இத்தேயிலைத் தொழிற்சாலைகள் 1,363 பேருக்கு நேரிடையாகவும், ஒரு





இலட்சம் பேருக்கும் அதிகமாக மறைமுக வேலை வாய்ப்பினையும் அளிக்கின்றன.

எப்பநாடு, மற்றும் பித்தர்காடு ஆகிய இடங்களில் முறையே ரூ. 230 மற்றும் ரூ. 240 இலட்சம் மதிப்பில் இரண்டு புதிய தேயிலைத் தொழிற்சாலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன. இத்தொழிற் சாலைகள் விரைவில் உற்பத்தியினைத் துவக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்கோசெர்வ், பாதுகாப்புத் துறைக்கு கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ந்து தேயிலையினை வழங்கி வருகின்றது. 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 350 இலட்சம் மதிப்புள்ள 700 மெட்ரிக் டன் அளவிற்கு, தேயிலை விற்பனை உரிமையினை பாதுகாப்புத் துறையிடமிருந்து பெற்றுள்ளது.

தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் (NCDC) ரூ. 1088 இலட்சம் மதிப்பில் தேயிலைத் தொழிற்சாலைகளில், நவீனமயமாக்கும் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் 1997-98 ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலைகளின் ஆண்டுத் தேயிலை அரைக்கும் கொள்ளளவுத் திறன், 130 இலட்சம் கிலோ தேயிலையிலிருந்து 161 இலட்சம் கிலோ அளவிற்கு அதிகரிக்கப்படும்.

1997-98 ஆம் ஆண்டில் குன்னூரில் உள்ள இன்கோசெர்வில் நேரிடையாக தேயிலை ஏற்றுமதியினை மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மற்றும் இதர அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதி மேற்கொள்வதற்காக ஏற்றுமதிப் பிரிவு அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2.20 மற்ற பிரிவுகளில் தொழில் கூட்டுறவுகள்**

அண்ணா மாவட்டம், காரப்பாக்கம் கிராமத்தில் 70 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 355 இலட்சம் மதிப்பில் பொது பொறியியல் தொழில்களுக்கான கூட்டுறவுத் தொழிற்பேட்டை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மரவள்ளிக் கிழங்கு மாவினை நவீன முறையில் பக்குவப்படுத்தும் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்.

சவ்வரிசி மற்றும் சவ்வரிசி மாவுப் பொருட்களின் விலை, மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியாளர்களுக்குச் சென்று பயனளிப்பதை உறுதி செய்யும்பொருட்டும், மருத்துவத் தர முறையில் சவ்வரிசிப் பொருளினை

[1997 மார்ச் 31

நவீன முறையில் பக்குவப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை ரூ. 11.23 கோடி மதிப்பில அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2.21 1997-98 ஆம் ஆண்டிற்குரிய புதிய திட்டங்கள்.**

1997-98 ஆம் ஆண்டில், தொழில் வளர்ச்சி, நவீன மயமாக்குதல், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தரக்கட்டுப்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பின்வருகின்ற புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

(1) விருத்தாசலத்திலுள்ள பீங்கான் தொழில் சேவை மையம். விருத்தாசலம் பீங்கான் தொழிற்பேட்டை மற்றும் அதனைச் சுற்றி உள்ள தொழில் நிலையங்களுக்கு பரிசோதனை வசதி அளித்து வருகிறது. பரிசோதனை வசதியின் திறனை அதிகரிக்கும்பொருட்டு இந்த ஆய்வுக் கூடத்திற்கு ரூ. 10.25 இலட்சம் மதிப்பில் முக்கியமான இறக்குமதி இயந்திர சாதனங்கள் வாங்கப்படும்.

(2) காக்களூரில் உள்ள மின் ஆய்வுக்கூடம் மின் மற்றும் மின்னணுத் தொழில்களுக்கு பல்வேறு பரிசோதனை வசதிகளை வழங்கி வருகிறது. இந்தப் பரிசோதனை ஆய்வுக்கூடம், இயந்திர தர நிர்ணய நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. புதுடில்லியிலுள்ள தேசிய பரிசோதனை ஆய்வகங்களின் குழுவினால், அங்கீகரிப்பதற்காக இந்த ஆய்வுக்கூடத்திற்கு ரூ. 10 இலட்சம் மதிப்பில் இயந்திரங்கள் வாங்கப்படும்.

(3) தொழில் கூட்டுறவுத் துறையில் கிண்டியிலுள்ள சென்னை தொழில் கூட்டுறவுப் பகுப்பாய்வுக் கூடம் (மைக்கால்) மருந்துப் பொருட்களின் பரிசோதனைத் தேவையினை அதன் உறுப்பினர்களுக்கு வழங்கி வருகிறது. இந்த ஆய்வுக்கூடம் பல்வேறு நுட்பமான இயந்திர சாதனங்களைக் கொண்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் இந்த ஆய்வுக் கூடத்திற்கு பரிசோதனை நடவடிக்கைகளை அதிகரிக்கும் பொருட்டு ரூ.12 இலட்சம் மதிப்பில் 'போரியர் டிரான்ஸ்பார்மர் இன்ப்ராரெட் ஸ்பெக்டிரோ போட்டோ மீட்டர்' என்ற கருவி வாங்கப்படும். இதற்கென, இந்த ஆய்வுக்கூடத்திற்கு ரூ. 3 இலட்சம் மாநில அரசின் பங்குத் தொகை வழங்கப்படும்.

(4) ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு தொடர்ந்து பயிற்சியளிப்பதற்காக கிண்டியில் ஒரு தொழில் முனைவோர் பயிற்சி மையம் அமைக்கப்படும். 1997-98 ஆம் ஆண்டில், இந்த மையத்தினை அமைப்பதற்காக ரூ. 5 இலட்சத்தினையும், பயிற்சிக்கென ரூ. 20 இலட்சத்தினையும் அரசு அனுமதிக்கும்.



1997 மார்ச் 31]

(5) குளிர் பதனவியல் மற்றும் குளிர் சாதனவியல ஆகிய மற்ற இரண்டு பாடமுறைகளையும் துவக்குவதற்கு அரசு ஆர்வமாக உள்ளது. அனைத்திந்திய தொழில்நுட்பக் குழுமத்தின் ஒப்புதல் பெறுவதற்குரிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது

*இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள திட்டங்கள் :—*

(6) சென்னையில் இந்திய அரசின் உதவியுடன் கம்ப்யூட்டர் உதவி வடிவமைப்பு உற்பத்தி மையம் ஏற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த சி.ஏ.டி/சி.ஏ.எம். மையம் கீழ்க்கண்ட தொழில் தொகுதிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

(அ) வெப்பம் மற்றும் குளிர் உலோக உலை (இரும்பு மற்றும் இரும்பு கலவாப் பொருட்கள்).

(ஆ) அச்சு வார்ப்படத் தொழில் (இரும்பு கலவாப் பொருள்).

(இ) எந்த ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கும் முடிந்த அளவு அச்சு மற்றும் வடிவமைப்பு.

இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ. 54.03 கோடியாகும்.

(ரூ. கோடியில்)

| | | | |
|---|---|---|---|
| 1. | இயந்திர சாதனங்கள் வாங்குவதற்கு இந்திய அரசின் பங்கு | .. | 38.28 |
| 2. | நிலம் மற்றும் கட்டிடத்திற்கு தமிழ்நாடு அரசின் பங்கு | .. | 13.57 |
| 3. | மாவட்டச் சங்கத்தின் பங்கு (கொடிசியா) | .. | 2.18 |
| | மொத்தம் | .. | **54.03** |

இத்திட்டத்திற்கு இந்திய அரசிடமிருந்து ஒப்புதல் வர வேண்டியுள்ளது.

**3. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்**

**3.1 முன்னுரை**

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1949 ஆம் ஆண்டில் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டது. இது நாட்டில் உள்ள**

பழமையான நிதி நிறுவனங்களில் ஒன்றாகும். இக்கழகம் ஒரு வங்கி நிறுவனம், ஒரு மாநில நிதி நிறுவனம், வரையறுக்கப்பட்ட நிறுவனம் போன்ற தகுதிகளுடைய தனித்தன்மை வாய்ந்த ஒன்றாகும்.

3.2 தொழில்களை மேம்படுத்தவும், வளர்ச்சியடையச் செய்யவும் இக்கழகம் ஒரு கிரியா ஊக்கியாகச் செயல்படுகின்றது. குறிப்பாக தமிழ்நாட்டிலுள்ள சிறுதொழில்களை மேம்படுத்தவும், வளர்ச்சியடையச் செய்யவும் உதவுகின்றது. தமிழ்நாட்டில் வெற்றி பெற்ற பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் ஏதேனும் ஒரு காலகட்டத்தில் இக்கழகத்தில் நிதியுதவி பெற்றுள்ளது எனக் கூறலாம். கடந்த 47 ஆண்டுகளில், இக்கழகம் ஏராளமான துணி, சர்க்கரை, காகித, சிமெண்ட், இரசாயன, பொறியியல் தொழில் நிறுவனங்கள் போன்றவற்றிற்கு நிலையான சொத்துக்களை வாங்க கடனுதவி அளித்ததுடன் மட்டுமல்லாமல், அவற்றை நவீனப்படுத்துவதிலும், பங்கு மூலதனத்திற்கு தொகை வழங்குவதிலும் பங்கேற்றன. இந்நிறுவனம் திருப்பூரிலுள்ள உள்ளாடை-தயாரிப்பு ஆலைகள், கோயம்புத்தூரில் உள்ள துணி, வார்ப்பட ஆலைகள், சேலத்தில் உள்ள பட்டுப்பூச்சி வளர்ப்பு, சவ்வரிசி தயாரிப்பு ஆலைகள், சிவகாசியிலுள்ள அச்சகங்கள், தீப்பெட்டித் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் வளர்ச்சியிலும் முக்கியப் பங்கேற்கிறது. கடந்த 47 ஆண்டுகளில் இக்கழகம் 73,589 தொழிற்சாலைகளுக்கு 2,864 கோடி ரூபாய் நிதியுதவி அனுமதித்துள்ளது.

### 3.3 பங்கேற்பு

தமிழ்நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் நிறுவப்பட்டுள்ள புதிய தொழிற் பிரிவுகளுக்கு இயந்திரங்கள், சாதனங்கள் வாங்குதல், நிலம், கட்டிடம், ஆலைகள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்க இக்கழகம் உதவியளிக்கிறது. புதிய தொழில் பிரிவுகளை நிறுவுதல், விரிவுபடுத்துதல், நவீனப்படுத்துதல், தற்போதுள்ள சிறு, நடுத்தர தொழில்களை பல்திறப்படுத்துதல் போன்றவற்றிற்கும் இக்கழகம் உதவியளிக்கின்றது. தனியொரு தொழில் பிரிவிற்கு சாதாரணமாக ரூ. 150.00 இலட்சம் வரை கடனாக வழங்கப்படுகின்றது. தகுதியுள்ள தொழில் பிரிவுகளுக்கு, தெரிவு அடிப்படையில் ரூ. 250.00 இலட்சம் வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது.

### 3.4 செயல்முறைகள்

பல்திறப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, இக்கழகத்தின் நடவடிக்கைகள் விரிவான அடிப்படையில் அமைந்துள்ளன. இக்கழகம்

அதன் வழக்கமான குறித்த காலக் கடனுதவி வழங்கும் நடவடிக்கையுடன் குத்தகை, தவணைக் கொள்முதல், காலந்தாழ்த்தி தொகை செலுத்த பொறுப்புறுதி ஆகிய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது.

3.5 சிறுதொழில் பிரிவிற்கு தொடர்ந்து பெருமளவில் உதவி வழங்கப்பட்டு வருகிறது. சிறுதொழில் பிரிவுகள், தொழில் முனைவோர்களின் பயனுக்காக, இக்கழகம் ஓரிடத்தில் அனைத்து நடைமுறைகளையும் செய்து கொடுக்கும் திட்டம், முன்னாள் இராணுவத்தினருக்கான "செம்பெக்" திட்டம், தனியார் மருத்துவமனைகள் மருத்துவ சாதனங்கள் (மருத்துவர்களுக்கும், ஏனையவர்களுக்கும்) வாங்குதல், சாதனங்களுக்கான மறுநிதியுதவி, தேசிய சரிவிகிதநிதி, மகிளா உதயம் நிதி திட்டம் (பெண் தொழில் முனைவோர்களுக்கு), "தாட்கோ" திட்டம் (ஆதி/பழங்குடியினர் தொழில் முனைவோர் பயனுக்காக) மின் உற்பத்தி இயந்திரக் கடன், சிறுசாலை போக்குவரத்து உரிமையாளர் உதவித் திட்டம் போன்ற செயல்முறைகளை மேற்கொண்டு வருகின்றது. சராசரியாக மொத்தம் அனுமதிக்கப்பட்ட தொகையில் 95% சிறுதொழில் பிரிவுகள் பெற்று பயனடைந்துள்ளன. இக்கழகம், ஒவ்வோர் ஆண்டும் அதன் கடன் வழங்கு நடவடிக்கை மூலம் சுமார் 50,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

### 3.6 குத்தகை நிதியுதவி/தவணைக் கொள்முதல் திட்டங்கள்.

கடன் வழங்கும் அதன் நடவடிக்கைகளைப் பல்திறப்படுத்தும் ஒரு பகுதியாக உணவகங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்ட தற்போதுள்ள சிறிய, நடுத்தர தொழில் பிரிவுகளுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் இக்கழகம் குத்தகை நிதியுதவி, தவணைக் கொள்முதல் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இதன் முதன்மையான நோக்கம் தற்போதைய தொழில் பிரிவுகளுக்கு அவற்றை விரிவுபடுத்த, நவீனப்படுத்த பல்திறப்படுத்த உதவுவதாகும்.

### 3.7 உதவித் தொகையும், விற்பனை வரிச் சலுகைகளும்

தமிழ்நாடு அரசின் நியமிக்கப்பட்ட செயல்முறை முகவரமைப்பு என்ற வகையில், இக்கழகம், அது நிதியுதவி அளித்த தொழில் பிரிவுகளுக்கு மாநில மூலதன நிதியுதவி, விற்பனை வரிச் சலுகை போன்ற திட்டங்களைச் செயல்படுத்துகின்றது. தகுதியுடைய தொழில் பிரிவுகளுக்கு உதவித் தொகை வழங்கும் வரையில் இந்நிறுவனம் அவற்றுக்கு குறித்த காலக் கடனுடன் சேர்த்து இடைக்கால கடனுதவி அளிக்கிறது.

[1997 மார்ச் 31

### 3.8 சிறுதொழில் பிரிவுகளுக்கு நடப்பு மூலதனம்

இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கியின் ஒரே இடத்தில் அனைத்து நடைமுறைகளையும் செய்து கொடுக்கும் திட்டத்தின்கீழ் சிறுதொழில் பிரிவுகளுக்கு குறித்த காலக் கடனுடன் சேர்த்து நடப்பு மூலதன உதவித் தொகையாக ரூ.100.00 இலட்சம் வரை மூலதனமாக வழங்குகின்றது. வணிக ரீதியான வங்கிகள் சிறுதொழில் பிரிவுகளின் சாதனை செயல் முறைகளைக் கவனித்த பின்னரே நடப்பு மூலதனத் தொகைகளுக்கு அனுமதி வழங்குகின்றன. இவ்வாறு வங்கிகள் வழங்கும் கடனுதவித் தொகைக்காக காத்திராமல் சிறுதொழில் பிரிவுகள் அவை செயல்படத் தொடங்கியவுடன் அவற்றின் தேவைக்கான நடப்பு மூலதனத் தொகையைப் பெற பெரும் உதவிகளைச் செய்கிறது.

### 3.9 நலிவுற்ற தொழில் பிரிவுகளுக்கு நிவாரணமும் சலுகைகளும்

இந்திய தொழில் வளர்ச்சி வங்கி, இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் மறுநிதித் திட்டத்தின்கீழ் நலிவுற்ற தொழில் பிரிவுகளுக்கு இக்கழகம் புத்துயிரூட்டுகிறது. 31-12-1996ஆம் நாள் வரையில் இப்புத்துயிரூட்டும் திட்டத்தின்கீழ் 148 தொழில் நிலையங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிகளின் சேர்ந்து வரும் தொகை ரூ.2,108.63 இலட்சமாகும். இக்கழகம் தகுதியுள்ள தொழிற் பிரிவுகளுக்கு அவற்றின் நடவடிக்கைகளை நிலைப்படுத்துவதற்காக கடன் தொகைகளைத் திருப்பிச் செலுத்தும் தவணைகளை மாற்றியமைத்துள்ளது.

### 3.10 1997-98ஆம் ஆண்டிற்கான எதிர்காலத் திட்டம்

சிறிய, நடுத்தர தொழில் பிரிவுகளுக்கு குறித்த காலக்கடன் வழங்கும் இக்கழகம் பின்வரும் புதிய திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது.

#### (1) ஐ.எஸ்.ஓ. 9000 தொடர் சான்றிதழைப் பெறுவதற்கான திட்டம்

இக்கழகம் நடப்பு நிதியாண்டில் " சிறுதொழில் பிரிவுகள் ஐ.எஸ்.ஓ. 9000 தொடர் சான்றிதழைப் பெறும் திட்டம்'' எனும் புதிய திட்டமொன்றை அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் கடந்த காலத்தில் நல்ல செயல்திறனும், நிதி நிலவரமும் கொண்ட சிறுதொழில் பிரிவுடன் தொடர்புடைய தற்போதைய அனைத்து தொழில் பிரிவுகளும் ஆலோசனை வழங்கல், ஆவணம் தயாரிப்பு சான்றளிப்பு கட்டணம், சாதனங்கள், சான்றிதழ் பெறத் தேவைப்படும் உட்குறை கண்டறியும்

சாதனங்கள் ஆகிய வகையில் ஏற்படும் செலவுக்கான தொகையைப் பெறத் தகுதியுடையனவாகும்.

(2) சிறு தொழில் பிரிவுகளுக்கான தொழில் நுட்ப வளர்ச்சி நவீனப்படுத்தும் திட்டங்கள்

சிறுதொழில் பிரிவுகளின் தொழில் நுட்ப வளர்ச்சி. நவீனப்படுத்தும் திட்டத்திற்கான இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கியின் செயல்முறை அடிப்படையில் அண்மையில் புதிய திட்டமொன்றை அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 3 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் தொழிற்பிரிவுகள், நவீனப்படுத்தும் தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொண்டு வரும் தொழிற் பிரிவுகள் சலுகை வரம்புகளின் கீழ் நிதியுதவி பெறத் தகுதியுடையனவாகும். மேலும் இத்தொழிற் பிரிவுகள் நவீன திட்டத்தைப் பயன்படுத்தி அவற்றின் உற்பத்தியில் குறைந்தது 25% ஏற்றுமதி செய்யும் திறன் பெற்றிருக்க வேண்டும். தொழில் நுட்ப உத்தி, வடிவமைப்பு, வரைபடங்கள், எதிர்கால நாகரிகத்தை முன்னுரைத்தல், தொழில் நுட்ப நடைமுறைகளை மேம்படுத்துதல், ஐ.எஸ்.ஓ. 9000 தொடர் சான்றிதழைப் பெறுதல் போன்றவற்றிற்காக தகுதியுடைய தொழில் பிரிவுகள் நிதியுதவியினைப் பெறலாம். இத்திட்டத்தின் மதிப்பு ரூ.50 இலட்சத்திற்குள்ளாக என வரையறுக்கப்பட்டுள்ளது.

(3) சிறுதொழில் பிரிவுகளுக்கு நடப்பு மூலதனக் கடன் வழங்குதல்

தற்போதுள்ள சிறுதொழில் பிரிவுகளுக்கு குறித்த காலக் கடனுடன், குறித்த கால நடப்பு மூலதனம் வழங்கும் இன்றைய நடப்புத் திட்டத்தின் கீழ் திட்ட முதலீட்டுத் தொகை ரூ.100.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. இக்கழகத்திடமிருந்து முன்னர் குறித்த காலக் கடன் பெற்று, வணிக வங்கிகளிடமிருந்து நடப்பு மூலதனம் இனி பெற உள்ள தற்போதைய சிறுதொழில் பிரிவுகள் நடப்பு மூலதன உதவித் தொகை மட்டும் வழங்க பரிசீலிக்கப்படும்.

(4) எளிய தவணைக் கடன்

சிறப்பு மூலதன உதவி என்றழைக்கப்படும் திட்டத்தின்கீழ் சிறு தொழில் பிரிவுகள் எளிய தவணைக் கடன் பெறுவதற்கான திட்டமொன்றை இக்கழகம் செயல்படுத்தி வருகின்றது. இந்நோக்கத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகை முழு அளவிற்குப் பயன்படுத்தப்பட்டு காலியாகி விட்டதால், சிலகாலத்திற்கு இக்கழகம் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கவில்லை. எனினும், அரசு தற்போது

[1997 மார்ச் 31

சிறப்பு மூலதன நிதி ஒதுக்கீடு செய்ய முன் வந்துள்ள காரணத்தினால் சிறிய தேவையுள்ள முதல் தலைமுறை, தொழில் நுட்ப உத்தி தெரிந்த தொழில் முனைவோர்களுக்கு உதவ இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(5) தொழில் முனைவோர் வழிகாட்டுதல் பிரிவு

தற்போது இத்தொழில் முனைவோர் வழிகாட்டிப் பிரிவு குறித்த காலக் கடன் மனுக்களைக் கூர்ந்தாய்வு செய்வதுடன், கொடுக்க வேண்டிய விவரங்கள், பின்பற்ற வேண்டிய வரையறைகள், இக்கழகத்திடமிருந்து கடன்பெற பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து வழிகாட்டுகிறது. எனினும் தற்போது இப்பிரிவில் கழகத்தின் அனுபவம் வாய்ந்த தொழில் வல்லுநர்களைச் சேர்த்து தொழில்களின் தன்மை, தொழில் பிரிவுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பல்வேறு துறைகளிடமிருந்து பெற வேண்டிய பல்வேறு ஒப்புதல்கள் குறித்து தொழில் முனைவோருக்கு அறிவுறுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விண்ணப்பங்களை நிரப்புவதற்கான விவரங்களை தொழில் முனைவோர்கள் நன்முறையில் அறிய இயலும்.

(6) வட்டார ஆலோசனைக் குழு

சிறுதொழில் பிரிவுச் சங்கம், மாவட்டத் தொழில் மையம், முன்னணி வங்கி, சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், சிப்காட், மாவட்ட ஆட்சியர் போன்ற சிறுதொழில் பிரிவுகளை மேம்படுத்த சம்பந்தப்பட்ட அனைத்து முகவாமைப்புகளுடன் நல்ல உறவினை இக்குழு ஏற்படுத்த எண்ணியுள்ளது. நடப்பாண்டில், மாவட்ட அளவில் இக்கூட்டங்களை முறையாக நடத்துவதென்றும், சிறுதொழில் பிரிவுகளை மேம்படுத்த, வளர்ச்சி பெற கருத்துக்களை மனந்திறந்து பரிமாறிக் கொள்வதுடன் இக்கழகம் செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களை வெளியிடுவதென்றும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 3.11 1996-97ஆம் ஆண்டிற்கான இலக்கு

நாட்டின் இன்றைய பொருளாதார நிலைக்கு ஏற்பச் செயல்பட, தற்போதைய வளவாயில்களைக் கருத்தில் கொண்டு, தொகைகளை வசூலித்தல், பத்திரங்கள், மறுநிதியினை இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி, இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மூலம் பெற 1996-97ஆம் ஆண்டில் பின்வருமாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



1997 மார்ச் 31]

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்டவை | - | 560.00 |
| வழங்கப்பட்டவை | - | 425.00 |
| வசூல் | - | 360.00 |

## 3.12 1. செயலாக்கம்

(ரூபாய் கோடியில்)

நடப்பு ஆண்டில்

| வருடம் | எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட தொகை | வழங்கப்பட்ட தொகை | எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட தொகை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1994-95 | 3315 | 392.13 | 246.87 | 69030 | 2231.00 | 1537.00 |
| 1995-96 | 4650 | 636.75 | 320.75 | 73680 | 2864.01 | 1858.11 |
| 1996-97 (31-12-1996 வரை) | 3564 | 350.14 | 252.54 | 77244 | 3214.15 | 2110.65 |

2. சிறிய தொழில் பிரிவுகளுக்கு அனுமதிக்கப்பட்ட தொகை

(ரூபாய் கோடியில்)

| வருடம் | நடப்பு ஆண்டில் | | மொத்தத்தொகை | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| 1994-95 | 3138 | 248.98 | 67175 | 1678.73 |
| 1995-96 | 4287 | 352.99 | 71462 | 2031.72 |
| 1996-97 31-12-1996 வரை) | 3460 | 271.19 | 74922 | 2302.91 |

[1997 மார்ச் 31

### 3. மாநிலங்கள் மானியத் தொகை

(ரூபாய் கோடியில்)

| வருடம் | அனுமதிக்கப்பட்டது | வழங்கப்பட்டது |
|---|---|---|
| 1994-95 | 37.10 | 20.46 |
| 1995-96 | 49.42 | 28.05 |
| 1996-97 (31-12-1996 வரை) | 20.57 | 13.49 |

### 4. விற்பனை வரி தள்ளி வைத்தல் திட்டங்களின் கீழ் தகுதிக்கான அனுமதி

(ரூபாய் கோடியில்)

| வருடம் | வழங்கப்பட்ட தகுதிச் எண்ணிக்கை | சான்றிதழ் தொகை |
|---|---|---|
| 1994-95 | 136 | 42.95 |
| 1995-96 | 79 | 31.06 |
| 1996-97 (31-12-1996 வரை) | 47 | 24.98 |

### 5. உருவாக்கிய வேலைவாய்ப்பு

| வருடம் | வேலைவாய்ப்பு அடைந்தவர் |
|---|---|
| 1994-95 | 41610 |
| 1995-96 | 56724 |
| 1996-97 (31-12-1996 வரை) | 33998 |

### 6. வரி செலுத்திய பின் நிகர ஆதாயம்

(ரூபாய் கோடியில்)

| வருடம் | தொகை |
|---|---|
| 1993-94 | 20.05 |
| 1994-95 | 5.87 |
| 1995-96 | 9.75 |



1997 மார்ச் 31]

## 4. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்

### 4.1 முன்னுரை

தமிழக அரசால், 1970ஆம் ஆண்டு. தமிழ்நாட்டில் சிறுதொழில்களை மேம்படுத்தவும் பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் சிறுதொழில்களை பரவலாக்கி, சிறுதொழில் வளர்ச்சியைப் பல்கிப் பெருகச் செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் துவங்கப்பட்டது.

இந்நிறுவனம் சிறுதொழில் வளர்ச்சியடைய படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கும், பொறியியல் பட்டதாரிகளுக்கும், நிலமற்ற விவசாயிகளுக்கும் வேலைவாய்ப்புகள் உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அரசு சார்பாகத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழகமெங்கும் உள்ள சிறுதொழில் வளர்ச்சியில் ஆர்வமுடைய மனித வளத்தினை பயன்படுத்துவதில் தொழில் முனைவோர்க்கு உதவும் பொருட்டு சிட்கோ தனது கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. சிட்கோவின் தலையாய பணிகள் கீழே சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன.

### 4.2 தொழிற்கூடம் அமைத்தல் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல்

தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற உள்ளாற்றல் கொண்ட வளர்ச்சிப் பகுதிகளில்( Infrastructure) தொழிற்பேட்டைகள் அமைக்கத் திட்டம் தீட்டி தேவைப்படும் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் தொழிற்கூடங்களை அமைப்பது சிட்கோவின் பணிகளில் முக்கியமானதாகும். மாநிலத்திலுள்ள ஏனைய தொழிற்பேட்டைகளில் சிறுதொழில் முனைவோரின் தேவைகள் அறிந்து அவர்கள் தொழில் துவங்குவதற்கு ஏற்றவாறு தண்ணீர் வழங்கல், வடிகால் வசதி, ஒளி போன்ற உள்ளமைப்பு வசதிகள் சிறுதொழில் நிறுவனத்தால் செய்து தரப்படுகின்றன. மாநிலம் தழுவிய அனைத்துப் பகுதிகளிலும் சேர்த்து 72 தொழிற்பேட்டைகள் சிட்கோவால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1996-97ஆம் ஆண்டின் நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 225 தொழிற்கூடங்கள் மற்றும் 220 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளில், இதுவரை 141 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. 210 தொழில் மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

[1997 மார்ச் 31

**4.3 மூலப்பொருள் விநியோகம்**

சிறுதொழில்களுக்கு மிகவும் தேவைப்படுகின்ற முக்கிய மூலப் பொருட்களான இரும்பு, எஃகு, நிலக்கரி, அலுமினியம், மெழுகு போன்றவற்றை சிட்கோ விநியோகித்து வருகிறது. இவை தவிர, துத்தநாகம், ஈயம், பாலித்தீன் குருணைகள், பொட்டாசியம் குளோரேட்டு முதலியனவற்றையும் விநியோகிக்கிறது. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திற்கு முகமை அடிப்படையில் காகித விற்பனை செய்து விற்பனையில் சிட்கோ நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்நிறுவனத்தின் நடப்பு ஆண்டின் விநியோக இலக்கான 34,742 மெட்ன் எடையுள்ள ரூ.7,630 இலட்சம் மதிப்புள்ள மூலப்பொருட்களில், டிசம்பர் '96 முடிய, 18,583 மெட்ன் எடையுள்ள ரூ.4,440 இலட்சம் மதிப்புள்ள மூலப்பொருட்களை விநியோகித்திருக்கிறது. மேலும் முகமை அடிப்படையில் 744 மெட்ன் எடையுள்ள மூலப்பொருட்களையும் விநியோகித்துள்ளது.

**4.4 விற்பனை உதவி**

சிறுதொழில்கள் வெற்றிகரமாக செயல்படுவதில் விற்பனை முக்கிய அங்கம் வகிக்கிறது. சிறுதொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களை நல்ல விலைக்கு விற்பதற்காக சிட்கோ 'விற்பனை உதவித் திட்டத்தை' (Marketing Assistance Scheme) செயல்படுத்தி உதவி புரிகிறது. சிறுதொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களை வாங்கி உபயோகிக்கும் நிறுவனங்களுக்கு குறித்த காலத்தில் கிடைப்பதற்காக இத்திட்டம் வழி செய்கிறது.

மேலும் அரசு நிறுவனங்கள் விளம்பரப்படுத்தும் ஒப்பந்தங்களில் சிறுதொழில் நிறுவனங்கள் சார்பாக சிட்கோ பங்கேற்று உதவ இந்த விற்பனை உதவித்திட்டம் நல்ல வாய்ப்பினை நல்குகிறது. இதன் மூலம் அரசு நிறுவனங்களுக்கும் சிறுதொழில் நிறுவனங்களுக்கும் நல்ல தொடர்பு ஏற்படுத்தி ஒரு பாலமாக விளங்குவதில் சிட்கோ முக்கியப் பங்காற்றுகிறது.

நடப்பு ஆண்டின் குறியீடான ரூ.1,000 இலட்சம் மதிப்பிற்கு, டிசம்பர் '96 முடிய ரூ.230 இலட்சம் மதிப்புள்ள விற்பனை ஆணைகளை சிறுதொழில் நிறுவனங்களுக்குப் பெற்றுத் தந்து மேலும் 32 புதிய சிறுதொழில் நிறுவனங்களை பதிவு செய்துள்ளது.



1997 மார்ச் 31]

**1997-98-ஆம் ஆண்டிற்கான கண்ணோட்டம்**

**4.5 தொழிற்பேட்டைகளில் தொழிற்கூடங்கள் அமைத்தலும், அடிப்படை உள்ளமைப்பு வசதிகள் அளித்தலும்**

இந்த நிறுவனம் 1997-98-ஆம் ஆண்டில் ரூ.22.50 கோடி திட்ட மதிப்பீட்டில் 200 தொழிற்கூடங்களைக் கட்டவும், 250 தொழில் மனைகளை மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

**4.6 புதிய திட்டங்களுக்கான செயற்குறிப்புகள்**

பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைத்தல், சிறுதொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன், கிராமப் பகுதிகளில் விவசாயம் அல்லாத தொழிலாளர்கள், இளைஞர்கள் ஆகியோருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கவும், அதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களுக்கு உதவியாக அமையும் நோக்கோடு புதிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேலே தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் பகுதிகளில் புதிய தொழிற்பேட்டைகளை அமைக்க சிட்கோ உத்தேசித்து உள்ளது.

**4.7 தர்மபுரி மாவட்டம்**

ஒசூரில் சுமார் 7.24 ஹெக்டேர் நிலப்பரப்பில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிலம், ஒசூரில் உள்ள அரசு மின்னணு தொழிற்பேட்டைக்கு அருகில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரிக்கு அருகே உள்ள போலுப்பள்ளி என்னும் கிராமத்தில் சுமார் 26.64 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, தொழிற்பேட்டை அமைக்கப்படவுள்ளது.

**4.8 அண்ணா மாவட்டம் இருங்காட்டுக்கோட்டை**

தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) நிலம் ஆர்ஜிதம் செய்து வரும் இருங்காட்டுக் கோட்டையில் சுமார் 100 ஏக்கர் நிலம் பெறப்பட்டு தொழிற்பேட்டை அமைக்க சிட்கோ (SIDCO) நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த தொழிற்பேட்டையில் அமையப்பெறும் தொழிற்கூடங்கள் பன்னாட்டு மோட்டார் நிறுவனமான தென் கொரியாவின் 'ஹூயுண்டா' நிறுவனத்திற்குத் தேவையான உதிரி பாகங்களையும் உற்பத்தி செய்யும்.

**4.9 திருமுடிவாக்கம்**

தானியங்கி ஊர்திகளின் உதிரி பாகங்கள் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் (ACMA) கூட்டமைப்புடன் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்பேட்டை ஒன்று நிறுவப்படவுள்ளது. இதற்கென, சிட்கோ சுமார் 80 ஏக்கர் நிலத்தினை அந்தச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கும். இந்தத் தொழிற்பேட்டையில் அமையும் தொழிற்கூடம் பன்னாட்டு மோட்டார் நிறுவனங்களான 'ஹூண்டாய்' மற்றும் 'போர்டு' நிறுவனங்களின் உபதொழில் அலகுகளாக (Ancillary Units) விளங்கும். சிட்கோ 'அக்மா'வுடன் இணைந்து அதனுடைய உறுப்பினர்களுக்கு தொழில் மனைகளை ஒதுக்கீடு செய்யவும். இதன் மூலம் தொழில் வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் அடையவும் வாய்ப்புள்ளது.

**4.10 எம்.ஜி.ஆர் மாவட்டம் -ஆவடி**

ஆவடிக்கு அருகே வெள்ளாத்தூர் மற்றும் பொத்தூர் அருகே 339 ஏக்கர் அரசு நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒரு தொழிற்பேட்டை உருவாக்கப்படவுள்ளது. 1997-98-ஆம் ஆண்டில் குறைந்தது 50 தொழிற் கூடங்களும் 100 மேம்படுத்தப்பட்ட மனைகளும் அமைக்கப்படவுள்ளன.

**4.11 குறுந்தொழிற்கூடங்கள்**

ஆவடி மற்றும் ஓசூரில் குறுந்தொழில் முனைவோர்களுக்கு தொழிற்கூடங்கள் கட்ட முடிவு செய்துள்ளது. அம்பத்தூர் தொழிற்பேட்டைக்கு அருகே நிலம் தேர்வு செய்யப்பட்டு 1997-98-ஆம் ஆண்டில் 100 குறுந்தொழிற்கூடங்கள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

**4.12 அடுக்கு மாடி தொழிற்கூடங்கள்**

கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில், 2 இடங்களில் அடுக்கு மாடி தொழிற்கூடங்கள் கட்ட சிட்கோ உத்தேசித்துள்ளது. இதன் மூலம் சுமார் 100 சிறுதொழில் முனைவோர் நேரடியாக பயன்பெற்று, 500 பேருக்கு மறைமுகமாக வேலைவாய்ப்பு ஏற்படக்கூடும்.

மேலும் அம்பத்தூர் (எம்.ஜி.ஆர். மாவட்டம்) மற்றும் மலுமிச்சம்பட்டி (கோவை மாவட்டம்) முதலிய இடங்களிலும் அடுக்கு மாடி தொழிற்கூட



வளாகம் ஏற்படுத்தி இந்த இடங்களிலுள்ள தேவைக்கு ஈடு கொடுக்கும் வகையில் மேற்குறிப்பிட்ட தொழிற்கூடங்கள் அமைக்கப்படவுள்ளன. மேலும், கப்பலூர் (மதுரை மாவட்டம்) மற்றும் தூத்துக்குடி,கோவில்பட்டி (வ.உ.சி. மாவட்டம்) ஆகிய இடங்களிலும் அதிகத் தொழிற்கூடங்கள் கட்டுவதற்கு சிட்கோ உத்தேசித்துள்ளது.

**4.13 1997-98-ஆம் ஆண்டிற்கான கட்டுமானத் திட்டம்**

| வரிசை எண் | தொழிற்பேட்டையின் பெயர் | தொழிற் கூடங்களின் எண்ணிக்கை | தொழில் மனைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ஓசூர் | 25 | 25 |
| 2. | இருங்காட்டுக்கோட்டை | 50 | 50 |
| 3. | திருமுடிவாக்கம் | 20 | 30 |
| 4. | மலுமிச்சம்பட்டி | 25 | - |
| 5. | கப்பலூர் | 20 | 50 |
| 6. | தூத்துக்குடி | 10 | 10 |
| 7. | கோவில்பட்டி | 10 | 10 |
| 8. | ஆவடி | 30 | 75 |
| 9. | விச்சூர் | 10 | - |
| | மொத்தம் | 200 | 250 |

**4.14 மூலப்பொருள் விநியோகம்**

1997-98-ஆம் ஆண்டில் சுமார் 29,532 மெட்ரிக் டன் எடையுள்ள ரூ.7,018 இலட்சம் மதிப்புள்ள மூலப்பொருட்கள் விநியோகிக்கத் திட்டமிட்டுள்ளது. இவை தவிர, இரும்பு, எஃகு அல்லாத மூலப்பொருட்களான பொட்டாசியம் குளோரேட்டு, துத்தநாகம், ஈயம் மற்றும் பாலித்தின்

[1997 மார்ச் 31

மூலப்பொருட்களை முகமை அடிப்படையில் 967 மெ. டன் அளவிற்கு விநியோகிக்கவும் திட்டமிட்டுள்ளது. சிறுதொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப மிகவும் முக்கியமான சில மூலப்பொருட்களை வழங்குதலை அறிமுகப்படுத்த கிடங்கோ மிகவும் ஆர்வமாக உள்ளது.

### 4.15 விற்பனை உதவித் திட்டம்

இந்த நிறுவனமானது, 1997-98-ஆம் ஆண்டில் ரூ.500 இலட்சம் மதிப்புள்ள சிறுதொழில் உற்பத்திப் பொருட்களை விற்பதற்கு உதவி செய்ய திட்டமிட்டுள்ளது.

## 5. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

### 5.1 அமைப்பு

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) பல சிறுதொழிற்கூடங்களைக் கொண்டு ஆரம்ப ஐந்து ஆண்டு திட்ட காலத்தில் தமிழ்நாடு முழுவதும் பரவலாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமாகும். இந்த நிறுவனம் தமிழ்நாட்டின் தலைநகரம் மற்றும் குறிப்பிட்ட நகரங்களில் விற்பனைக் கூடங்களைக் கொண்ட பல்பொருள் உற்பத்தி நிறுவனமாகும். டான்சி மாநில/மத்திய அரசுத் துறைகள், அரசு சார்ந்த பொது நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்து வழங்கியும் மற்றும் செயல்முறை சேவை நிலையமாகவும் விளங்குகிறது.

டான்சி தற்பொழுது 27 உற்பத்திக் கூடங்களையும் 6 விற்பனை நிலையங்களையும் தன்னகத்தே வைத்து நடத்தி வருகிறது. இது தவிர, தமிழ்நாடு மாநில பொறியியல் மற்றும் சேவை நிறுவனம் (செஸ்காட்) மற்றும் தமிழ்நாடு வண்ணங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் (டாபாப்) ஆகிய இரு துணை நிறுவனங்களையும் கொண்டுள்ளது.

### 5.2 உற்பத்திப் பொருட்கள்

டான்சியின் உற்பத்திப் பொருட்களை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.



1997 மார்ச் 31]

| வகைகள் | உற்பத்தி பொருட்களின் விபரம் |
|---|---|
| 1. கட்டுமானப் பொருட்கள் | சர்க்கரை ஆலைகளுக்கும், சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கும் மற்றும் அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான உயர் கட்டுமான பொருட்கள், நுண் அலை கோபுரங்கள் மற்றும் உயர் அழுத்த மின் கடத்தி கோபுரங்களுக்குத் தேவையான துத்தநாகம் பூசிய கோபுரப் பாகங்கள். |
| பொறியியல் | தொழிற்கூடங்கள், திரை அரங்குகள், பள்ளிக்கூடங்கள் மற்றும் கிடங்குகளுக்குத் தேவையான சிறு கட்டுமானங்கள், மின்வாரியத்திற்குத் தேவையான மின் கடத்திப் பொருட்கள், சிறு கடைகள் தயாரிக்கத் தேவையான் தகடு உலோகப் பொருட்கள். |
| வார்ப்படம் | இயந்திரம் மற்றும் இயந்திரத்தினால் அல்லாது தயாரிக்கப்படும் உதிரி பாகங்கள், இரும்புக் குழாய்கள். |
| அறைகலச் சாமான்கள் | மரத்தாலான அறைகலன்கள், தடுப்பு மற்றும் உள்ளறை வேலைப்பாடுகள், வீடு, அலுவலகம், மருத்துவமனைகளுக்குத் தேவையான எஃகுப் பொருட்கள் மற்றும் அறைகலச் சாமான்கள். |
| பலவகைகள் | ஆழ்குழாய் பம்புகள் மற்றும் கைப் பம்புகள், சாராவிவை (Spirit) மூலப் பொருளாகக் கொண்ட பொருட்கள், காஸ்கெட், செல்லாக், பீக்சர் வார்னிஷ், லைசால், பெனாயில். |
| | டைட்டன் நிறுவனத்திற்கு கடிகாரக் கருவிகள் இணைத்துக் கொடுப்பது. |

[1997 மார்ச் 31

### 5.3 செயலாக்கம்

1996-97-ஆம் ஆண்டிற்கு அரசாங்கம் உற்பத்தி இலக்காக ரூபாய் முப்பத்தி ஏழு கோடி நிர்ணயித்தது. 1996-97-ஆம் ஆண்டு செயல்பாடும் கடந்த ஆண்டின் செயல்பாடும் கீழே ஒப்பிடப்பட்டுள்ளது.

| | 31-12-1996 வரை | 31-12-1995வரை |
|---|---|---|
| | (ரூபாய் | இலட்சத்தில்) |
| விற்பனை | 1868.96 | 2316.89 |
| உற்பத்தி | 1846.05 | 2139.50 |
| விற்பனை விலையில் செலவினங்களுக்கான பங்கு | 401.02 | 380.56 |
| இலாபம்/இழப்பு | (-)303.82 | (-)234.67 |

1996-97-ல் அரசு நிர்ணயித்த உற்பத்தி இலக்கை அடைய எல்லா முழு முயற்சியும் எடுக்கப்பட்டுள்ளது. 1997-98-ஆம் ஆண்டிற்கு உற்பத்தி இலக்கு ரூ.40.00 கோடி என எதிர்நோக்கப்படுகிறது.

### 5.4 தொழில் உறவுகள்

தற்போது 1,364 பணியாளர்கள் தொழிலாளர்களையும் சேர்த்து பணிபுரிகிறார்கள். சுமூகமான தொழில் உறவுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

### 5.5 டான்சியின் மேம்பாட்டுத் திட்டத்திற்கு அரசாங்கத்தின் முயற்சி

பொது நிறுவனங்களுக்கான செயலாளர்களின் குழு (SCOPE) மற்றும் SCOPE அமைத்த குழுவினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட முடிவுகளினால் டான்சியின் நிலையை மேம்படுத்த ஏதுவாயிற்று.

1. அதிக நட்டத்தில் இயங்கும் தொழிற்கூடங்களை மூடிவிடல்

2. தன்னிச்சை ஓய்வு பெறும் திட்டத்தை அமல்படுத்துவதன் மூலம் உபரியான தொழிலாளர்கள், பணியாளர்கள் மற்றும் அலுவலர்களை குறைத்தல் மற்றும் அதற்கான நிதி வழங்குதல்.

3. மூடப்பட்ட நிலையங்களின் சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் நிதிநிலையை உயர்த்துதல்.



1997 மார்ச் 31]

4. நிதி சீரமைப்பின்கீழ் பழைய கடன்களை மானியமாக்குதல், இதுவரை கடன்களுக்காக செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டியை நீக்கிவிடுதல் மற்றும் சில ஆண்டுகளுக்கு வட்டியை ரத்து செய்தல்.

5. விற்பனை வரி மானியம் வழங்குதல்.

### 5.6 டான்சியின் இரு துணை நிறுவனங்களின் செயல்பாடுகள் பின்வருமாறு

(i) தமிழ்நாடு மாநில பொறியியல் மற்றும் சேவை நிறுவனம் (SESCOT) (முன்பு - தமிழ்நாடு மொபட் நிறுவனம் என்று அழைக்கப்பட்டது) -

இந்த துணை நிறுவனம் 1977-ஆம் ஆண்டு மொபட் வாகனங்கள் தயாரிப்பதற்காக நிறுவப்பட்டது. சில நிர்வாக சுமையினால் மொபட் வாகனங்கள் உற்பத்தி 1981-ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது. அதன் பிறகு மனித சக்தி மற்றும் இயந்திரங்களின் ஆற்றலை பயன்படுத்துவதற்காக, கிடைக்கப்பெறும் பணி ஆணைகளை செய்து தரத்தொடங்கியது. இத்தகைய தொழில் நிறுவனங்களின் நடவடிக்கைகள் மேம்படைந்து வருவதால் இவற்றை டான்சி நிறுவனத்திடமிருந்து தனியாக வைத்திருக்க முடிவு செய்யப்பட்டது.

செஸ்காட் நிறுவனம், டான்சி பிளேம் (TANSI FLAME) என்ற துருவுறா எஃகு திரவ பெட்ரோலிய எரிவாயு அடுப்பினை தயாரித்து அதற்கு இந்திய தரக்கட்டுப்பாட்டுச் சான்றிதழையும் பெற்றுள்ளது. இத்துணை நிறுவனம் துவக்க காலத்திலிருந்து இதன் திரண்ட இழப்பு ரூ. 1,089.25 இலட்சம் ஆகும்.

(ii) தமிழ்நாடு வண்ணங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் (டாபாப்)

இத்துணை நிறுவனம் 1985-இல் நிறுவப்பட்டு 1-4-86 முதல் உற்பத்தியை தொடங்கியது. இந்நிலையம் சிவப்பு ஆக்ஸைடு வண்ணம், சாலைகளில் போக்குவரத்து அடையாளக்குறி இடுகின்ற இரப்பர் கலந்த வண்ணம், மெழுகுத்தன்மை கொண்ட வண்ணம் மற்றும் இது போன்ற வண்ணங்கள் உற்பத்தி செய்து வருகிறது. இந்த வண்ணங்கள் டான்சியில் தயாராகும் பொருட்களுக்கு உபயோகப்படுத்தவும், மற்றும் காவல்துறை, சென்னை மாநகராட்சி போன்ற அரசுத்துறை நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. இந்நிறுவனத்தின் நாளது வரையிலான திரண்ட இலாபம் ரூ. 0.58 இலட்சமாகும்.

[1997 மார்ச் 31

## 6. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ)

6.1 ரூ.10 கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன், தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம், 1983-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அரசு நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டது. இதற்கு அரசு சம பங்கு மூலதனமாக ரூ. 250 இலட்சம் வழங்கியுள்ளது. இதன் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

தமிழ்நாட்டில் தோல் மற்றும் தோல் பதனிடு தொழிற்சாலைகள் வளர்ச்சி அடைவதற்கு அதன் பணிகளாவன:

1. மூலப்பொருட்கள், இரசாயனப் பொருட்கள் முதலியவற்றை நியாயமான விலையில் சிறு தோல் பதனிடுபவர்களுக்கு வழங்குவது.

2. காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு விற்பனை உதவி அளிப்பது.

3. காலணி மற்றும் இதர தோல் பொருட்கள் தயாரிப்பதில் சிறு கைவினைஞர்களின் திறனை மேம்படுத்துவது.

4. தோல் தொழிலில் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு அடிப்படை வசதிகள் அளிப்பது.

5. தமிழ்நாட்டில் ஆறு இடங்களில் பொது சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதன் மூலம் தோல் தொழிற்களால் ஏற்படும் மாசு மற்றும் சுற்றுப்புறக் கேட்டினை நீக்குவதற்கு உதவியளிப்பது.

### 6.2 நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் தொழிற்பேட்டைகள்

மாதவரத்திலுள்ள தோல் தொழிலகளுக்குரிய இத்தனித் தொழிற்பேட்டை சிட்கோ நிறுவனத்திடமிருந்து 18-6-1986-இல் தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் எடுத்துக் கொள்ளப்பட்டது. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனமானது, இத்தொழிற் பேட்டையினை பராமரிப்பது மற்றும் கொள்முதல் தவணைத் தொகையினை வசூலிப்பது போன்றவற்றை மேற்கொள்கிறது. தற்சமயம் தவணைக் கொள்முதல் அடிப்படையில் 35 தொழிற்கூடங்கள் சொந்த உரிமை அடிப்படையில் தொழில் முனைவோர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.



1997 மார்ச் 31]

தோல் பதனிடும் மற்றும் உற்பத்தி மேற்கொள்ளும் தோல் தொழில் முனைவோர்களுக்கு காலியாக உள்ள நிலங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 6.3 மூலப்பொருள் வழங்குவதில் தோல் தொழில் வளர்ச்சி கழகத்தின் பங்கு

சிறுதோல் பதனிடுவோர்க்கு, இரசாயனப் பொருட்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனப் பசைப் பொருள் (WATTLE EXTRACT) நியாயமான விலையில் வாங்கும் பொருட்டு, திண்டுக்கல், ஈரோடு, போணாம்பட்டு, வாணியம்பாடி, திருச்சிராப்பள்ளி மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் "டால்கோ" நிறுவனத்தின் மூலப்பொருள் விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

### 6.4 சிறு கைவினைஞர்களுக்கு உதவி

சிறு கைவினைஞர்களுக்கு உதவிடும் வகையில், பொம்பூரில் ஒன்றும், சேலத்தில் ஒன்றும், ஆக இரு பொருட்கள் சேகரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களில் கைவினைஞர்களிடமிருந்து தூயமான காலணிகளைச் சேகரித்து சீரான வேலைவாய்ப்பினை அளித்து வருகின்றன.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட பொருட்கள் "டால்கோ" வின் விற்பனைக் கூடங்கள் மற்றும் பொருட்காட்சிகளில் பங்கு பெறுவதன் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. 31-12-96 வரை பொருட்கள் சேகரிப்பு நிலையங்கள் மூலம் ரூ.24.95 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் வாங்கப்பட்டன.

"டால்கோ" நிறுவனம், இவ்விதம் பெறப்படும் கொள்முதல் அளவினை உயர்த்தி அதே சமயம், இப்பொருள்களுக்கு மேலும் அதிகப்படியான, சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளது.

### 6.5 தோல் பதனிடும் தொழில்களுக்கான கழிவுகள் சுத்திகரிப்புக்கான உதவிகள்

தமிழ்நாட்டில் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரால் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படும் கேடு நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வருகிறது. மாநிலத்தில், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் நிறைந்துள்ள சில இடங்களில் "டால்கோவின்" உதவியுடன் பொது சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

[1997 மார்ச் 31

இத்திட்டத்திற்கு மத்திய மாநில அரசுகளின் பங்குத் தொகையாக ஒவ்வொன்றும் ரூ.409.00 இலட்சம் வீதம் உதவித் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது. ஆறு திட்டங்களுக்கு அவற்றின் செலவு அதிகரித்து உள்ளமையால் தமிழ்நாடு அரசு ரூ.268.00 இலட்சம் கூடுதல் பங்காக ஒப்புதலளித்துள்ளது. டால்கோ நிறுவனம் ஆறு பொது சுத்திகரிப்பு மையங்கள் கட்டுவதற்கு உதவி செய்கிறது. இவற்றில் நான்கு முடிக்கப்பட்டு விட்டன. எஞ்சிய இரண்டும் விரைவில் முடிக்கப்படும்.

### 6.6 தோல் தொழிற்கூடங்கள்

டான்சி நிறுவனத்தின் கீழ் இயங்கி வந்த 4 தோல் தொழிற்கூடங்கள் ஏப்ரல் 1986 முதல் "டால்கோ"-விற்கு மாற்றப்பட்டன. அவை பின்வருமாறு:

1. டால்கோ தோல் பதனிடுதல் தொழிற்சாலை, விண்ணமங்கலம்.
2. டால்கோ தோல் பதனிடும் தொழிற்சாலை, மாதவரம்.
3. டால்கோ தொழிற்கூடம், பல்லாவரம்.
4. டால்கோ தொழிற்கூடம், பெரம்பூர்.

மாதவரத்திலுள்ள டால்கோ தோல் பதனிடும் தொழிற்கூடம் 1-10-1993 முதல் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. விண்ணமங்கலத்தில் உள்ள மற்றொரு தோல் பதனிடும் தொழிற்சாலை, பதப்படுத்தப்பட்ட தோல் உற்பத்தி மற்றும் சேவைப் பணி மேற்கொண்டு வருகிறது.

மற்ற இரண்டு தோல் தொழிற்கூடங்கள், பாத அணிகள் காலணிகள் உதிரி பாகங்கள், கையுறை, நடத்துனர் பைகள், இடுப்புப் பட்டைகள் முதலியவைகள் உற்பத்தி செய்து மாநிலத்தின் அரசு சார்பு நிறுவனங்களின் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.

7. மொத்தத்தில் தற்போதைய அரசு தமிழ்நாட்டில் சிறுதொழில்கள் மற்றும் குறுந்தொழில்களை ஊக்குவிப்பதற்கு உதவித் திட்டம் ஒன்றை அமல்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. படித்து வேலையற்றுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு தன்னை அர்ப்பணித்துள்ளது.

>< >< >< 
சென்னை-600 009